𑌨 𑌭𑌵𑌤𑍍𑌯𑌮𑍃𑌤𑌂 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌂 𑌨 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌮𑌮𑍃𑌤𑌂 𑌤𑌥𑌾 ।
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑌨𑍍𑌯𑌥𑌾𑌭𑌾𑌵𑍋 𑌨𑌕𑌥𑌂𑌚𑌿𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥ 134 ॥

अमृतं 𑌅𑌮𑍃𑌤𑌂=மரணதர்மமில்லாதது
मर्त्यं 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌂=மரணதர்மமுள்ளதாக
नभवति 𑌨𑌭𑌵𑌤𑌿=ஆகமாட்டாது
तथा 𑌤𑌥𑌾 =அப்படியே
मर्त्यं 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌂=மரணதர்மமுள்ளது
अमृतं 𑌅𑌮𑍃𑌤𑌂=மரணதர்மமில்லாததாக
नभवति 𑌨𑌭𑌵𑌤𑌿=ஆகமாட்டாது.
प्रकृतेः 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃=ஸ்வபாவத்துக்கு
अन्यथाभावः 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾𑌭𑌾𑌵𑌃=வேறு பாவம்
कथंचित् 𑌕𑌥𑌂𑌚𑌿𑌤𑍍=எவ்விதத்திலும்
नभविष्यति 𑌨𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿=உண்டாகமாட்டாது.

IV 8-வது சுலோகம்.

स्वभावेनामृतोयस्य धर्मोगच्छतिमर्त्यताम् ।
कृतकेनाऽमृतस्तस्यकथं स्थास्यति निश्चलः ॥ 135 ॥

𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨𑌾𑌮𑍃𑌤𑍋𑌯𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑍋𑌗𑌚𑍍𑌛𑌤𑌿𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ।
𑌕𑍃𑌤𑌕𑍇𑌨𑌾𑌽𑌮𑍃𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌥𑌂𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌯𑌤𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌃 ॥ 135 ॥

यस्य 𑌯𑌸𑍍𑌯=எந்த பரிணாம வாதியின் மதத்தில்
स्वभावेन 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨=ஸ்வபாவத்தில்
अमृतः धर्मः 𑌅𑌮𑍃𑌤𑌃𑌧𑌰𑍍𑌮𑌃=மரணதர்மமில்லாத பரமாத்மா
मर्त्यतां 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑌾𑌂=காரியபாவத்தை அடைவதால் மரண தர்மத்தை
गच्छति 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿=அடைகிறதோ
तस्य 𑌤𑌸𑍍𑌯=அந்த வாதி மதத்தில்
कथं 𑌕𑌥𑌂 =எப்படி
कृतकेन 𑌕𑍃𑌤𑌕𑍇𑌨=கர்மம் உபாஸ்தி இவைகளை சேர்த்து அனுஷ்டானம் பண்ணுவதினால்
अमृतः 𑌅𑌮𑍃𑌤𑌃=மரணரகிதமாயும்
निश्चलः 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌃=சலனமற்றதாயும்
स्थास्यति 𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌯𑌤𑌿=இருக்கக்கூடும்.

தா - ம்:— (6-7-8) மூன்றாவது பிரகரணம் 20.21-22-வது சுலோகங்களில் இவைகளின் தாற்பரியம்வந்திருந்தாலும், த்வைதிகளின் விருத்தங்களை ஒரு விடத்தில் சேகரம் செய்து காட்

ஒன்பொருட்டு மறுபடியும் இவ்விடத்தில் இந்த ச்லோகங்கள் எழுதப்பட்டன.

IV 9-வது ச்லோகம்

सांसिद्धिकी स्वभाविकी सहजा अकृताच्चया ।
प्रकृतिः सेति विज्ञेया स्वभावं न जहातिया ॥ 136 ॥

ஸாம்ஸித்திகீ ஸ்வாபாவிகீ ஸஹஜா அக்ருதாசயா ।
ப்ரக்ருதிஸ் ஸேதிவிஜ்ஞேயா ஸ்வபாவம் நஜஹாதியா ॥ 136 ॥

या யா = எது

सांसिद्धिकी ஸாம்ஸித்திகீ = யோகிகளுக்கு யோகஸித்தியினால் உண்டான அணிமாதிகள் போல் ஸித்தியால் உண்டாயிருக்கிறதோ

स्वाभाविकी ஸ்வாபாவிகீ = எப்படி அக்னியின் உஷ்ணமும் பிரகாசமும் ஸ்வபாவமாயிருக்கிறதோ எக்காலத்திலும் எந்த இடத்திலும் வித்தியாஸமில்லாமல் அப்படி ஸ்வாபாவிகமாயிருக்கிறதோ

सहजा ஸஹஜா = பக்ஷிகளுக்கு ஆகாசத்தில் பறக்கிற ஸ்வபாவம் ஸஹஜமாயிருப்பதுபோல் ஆத்மாவுடன் கூடியிருப்பதால் ஸஹஜமாயிருக்கிறதோ

अकृता அக்ருதா = பள்ளத்தில் ஓடும் ஜலத்தின் குணம் ஒருவனாலும் செய்யப்படாததுபோல் அப்படி செய்யப்படாமலிருக்கிறதோ

या யா = எது

स्वभावं ஸ்வபாவம் = ஸ்வபாவத்தை

नजहाति நஜஹாதி = விடுகிறதில்லையோ

सा ஸா = அது எல்லாம்

प्रकृतिः ப்ரக்ருதி: = ப்ரக்ருதி

इति இதி = என்று

विज्ञेया விஜ்ஞேயா = அறியத்தக்கது.

தாத்பர்யம்:— இந்த ச்லோகத்தில் பிரகிருதி என்றால் இன்னதென்பது சொல்லப்படுகிறது. ஸாதாரணமாய் பிராபஞ்சிக வியவஹாரத்திலேயே ஒரு பதார்த்தத்தின் பிரகிருதி என்றால் எக்காலத்திலும் மாறாமல் அதனுடைய ஸ்வபாவம் என்று அறியப்படுகிறது. அப்படியிருக்க பரமார்த்த ஸத்தியமான பரமாத்மாவின் அமிர்தப்ரகிருதி ஒரு விக்ரியாத்தையும் அடைய மாட்டாது என்று சொல்லவேண்டுமோ? ॥ 136 ॥

முகவுரை.

கிரமபிராப்தமான மாண்டூக்கியோபநிஷத்து இப்போது ஆரம்பிக்கப்படுகின்றது. இந்த உபநிஷத்துக்கு இப்பெயர் வந்த காரணம் வியக்தமாய் தெரியவில்லை. இந்த உபநிஷத்தின் ரிஷியானவர் மாண்டூகரானதால் இதற்கு அப்பெயர் கிடைத்தது என்று சிலர் சொல்லுகிறார்கள். பண்டித் பீதாம்பரஜி அவர்கள்:—மண்டூகம் என்றால் தப்பளை, இது மூன்று தாவு தாண்டி நான்காவது தடவையில் ஜலத்தில் விழுந்து விடுவதுபோல், ஜீவனானவன் ஜாக்கிற ஸ்வப்ந சுஷுப்திகளாகிய மூன்று அவஸ்தைகளைத் தாண்டி நான்காவதான துரீயத்தை அடைந்து பிரம்ம பாவத்தை அடைகிறபடியால், ஜீவன் தப்பளை (மண்டூகம்) போலிருக்கிறான். ஆகையால் உபநிஷத்திற்கு மாண்டூக்கியம் என்று பெயர் கிடைத்தது என்று சொல்லுகிறார்கள்.

இது அதர்வவேதத்தைச் சேர்ந்தபடியால், இதற்கு அவ்வேதத்தின் சாந்தி மந்திரம் ஏற்பட்டிருக்கிறது.

இதில் அடங்கிய 12 மந்திரங்களையும் நான்கு பாகங்களாகப் பிரிக்கலாம். முதலில் 6 மந்திரங்களும், இரண்டில் 7-வது மந்திரமும், மூன்றில் 8, 9, 10, 11-வது மந்திரங்களும், நான்கில் 12-வது மந்திரமும் அடங்கியிருக்கின்றன.

இந்த உபநிஷத்தின்பேரில் ஸ்ரீ கௌடபாதாசாரியர் அவர்கள் காரிகை என்னும் வியாக்கியானத்தை எழுதியிருக்கிறார்கள். இந்த காரிகையில் 4 அத்தியாயங்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவது அத்தியாயத்தின் சுலோகங்களை விசிஷ்டாத்வைதிகளும் துவைதிகளும் உபநிஷத்தாகவே பாவிக்கிறார்கள். மற்ற அத்தியாயங்களை இவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

அத்வைதம்.

இந்த உபநிஷத்திற்கும் இதின்பேரில் ஏற்பட்ட காரிகைக்கும் ஸ்ரீ சங்கராசாரியார் அவர்கள் பாஷ்யம் எழுதியிருக்கிறார்கள். அத்வைத மதப்படி ஜீவன் இந்திரிய விஷயங்களையும் இந்திரியத்துக்கு விஷயமாகாதவைகளையும் அறிய சாமர்த்தியமுள்ளவன். ஜீவனுக்கு ஜாக்கிற, ஸ்வப்ந, சுஷுப்தி துரீயமாகிற நான்குவித அவஸ்தைகளிருக்கின்றன. ஜாக்கிராவஸ்தையில் ஜீவன் இந்திரியங்கள் மூலமாக பாஹ்ய விஷயங்களை அறிகிறான். ஸ்வப்நாவஸ்தையில் வாஸனா ரூபமாயிருக்கிற விஷயங்களை அந்தரிந்திரியமான மனதால் ஜீவன் அறிகிறான். சுஷுப்தி அவஸ்தையில் விஷயங்களாவது அவைகளின் வாசனையாவது இருக்கிறதில்லை. ஞானமும் ஆநந்த

முகவுரை.

கிரமபிராப்தமான மாண்டூக்கியோபநிஷத்து இப்போது ஆரம்பிக்கப்படுகின்றது. இந்த உபநிஷத்துக்கு இப்பெயர் வந்த காரணம் வியக்தமாய் தெரியவில்லை. இந்த உபநிஷத்தின் ரிஷியானவர் மாண்டூகரானதால் இதற்கு அப்பெயர் கிடைத்தது என்று சிலர் சொல்லுகிறார்கள். பண்டித் பீதாம்பரஜி அவர்கள்:—மண்டூகம் என்றால் தவளை, இது மூன்று தாவு தாண்டி நான்காவது தடவையில் ஜலத்தில் விழுந்து விடுவதுபோல், ஜீவனானவன் ஜாக்கிர ஸ்வப்ந சுஷுப்திகளாகிய மூன்று அவஸ்தைகளைத் தாண்டி நான்காவதான துரீயத்தை அடைந்து பிரம்ம பாவத்தை அடைகிறபடியால், ஜீவன் தவளை (மண்டூகம்) போலிருக்கிறான். ஆகையால் உபநிஷத்திற்கு மாண்டூக்கியம் என்று பெயர் கிடைத்தது என்று சொல்லுகிறார்கள்.

இது அதர்வவேதத்தைச் சேர்ந்தபடியால், இதற்கு அவ்வேதத்தின் சாந்தி மந்திரம் ஏற்பட்டிருக்கிறது.

இதில் அடங்கிய 12 மந்திரங்களையும் நான்கு பாகங்களாகப் பிரிக்கலாம். முதலில் 6 மந்திரங்களும், இரண்டில் 7-வது மந்திரமும், மூன்றில் 8, 9, 10, 11-வது மந்திரங்களும், நான்கில் 12-வது மந்திரமும் அடங்கியிருக்கின்றன.

இந்த உபநிஷத்தின்பேரில் ஸ்ரீ கௌடபாதாசாரியர் அவர்கள் காரிகை என்னும் வியாக்கியானத்தை எழுதியிருக்கிறார்கள். இந்த காரிகையில் 4 அத்தியாயங்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவது அத்தியாயத்தின் சுலோகங்களை விசிஷ்டாத்வைதிகளும் துவைதிகளும் உபநிஷத்தாகவே பாவிக்கிறார்கள். மற்ற அத்தியாயங்களை இவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

அத்வைதம்.

இந்த உபநிஷத்திற்கும் இதின்பேரில் ஏற்பட்ட காரிகைக்கும் ஸ்ரீ சங்கராசாரியார் அவர்கள் பாஷ்யம் எழுதியிருக்கிறார்கள். அத்வைத மதப்படி ஜீவன் இந்திரிய விஷயங்களையும் இந்திரியத்துக்கு விஷயமாகாதவைகளையும் அறிய சாமர்த்தியமுள்ளவன். ஜீவனுக்கு ஜாக்கிர, ஸ்வப்ந, சுஷுப்தி துரீயமாகிற நான்குவித அவஸ்தைகளிருக்கின்றன. ஜாக்கிராவஸ்தையில் ஜீவன் இந்திரியங்கள் மூலமாக பாஹ்ய விஷயங்களை அறிகிறான். ஸ்வப்நாவஸ்தையில் வாஸனா ரூபமாயிருக்கிற விஷயங்களை அந்தரிந்திரியமான மனதால் ஜீவன் அறிகிறான். சுஷுப்தி அவஸ்தையில் விஷயங்களாவது அவைகளின் வாசனையாவது இருக்கிறதில்லை. ஞானமும் ஆநந்த

மும் தானிருக்கின்றன. நான்காவது அவஸ்தையில் ஜீவன் தன்னுடைய அகண்ட பரிபூர்ண ஸ்வரூபத்தை அறிகிறான். ஓங்காரமானது பிரம்மத்துக்குப் பிரதீகமென்றும் இந்த ஓங்காரத்தியானத்தினால் பிரம்மம் சுலபமாய் அறியப்படுமென்றும் அதமாதிகாரிகளுக்கு இந்த உபநிஷத்து உபதேசிக்கிறது. உத்தம மத்தியமாதிகாரிகளுக்கு நாந்த: பிரஜ்ஞம் என்பதாய் தத்வோபதேசம் செய்கிறது.

காரிகையில் நான்கு அத்தியாயங்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவது அத்தியாயத்தில் சுருதிகளின் ஆதாரத்தின்பேரில் அத்வைதம் ஸ்தாபிக்கப்படுகிறது. இரண்டாவது அத்தியாயத்தில் துவைதம் ஸ்வப்நம்போல் என்பதாய் நிரூபிக்கப்படுகின்றது. மூன்றாவது அத்தியாயத்தில் அத்வைதமானது யுக்தியாலும் ஸ்தாபிக்கப்படுகின்றது நான்காவது அத்தியாயத்தில் அத்வைதத்திற்கு விரோதமான மதங்களிலுள்ள பரஸ்பர விரோதங்கள் காண்பிவிக்கப்பட்டு அத்வைத விசாரம் முடிக்கப்படுகின்றது.

விசிஷ்டாத்வைதம்,

இந்த உபநிஷத்திற்கு ஸ்ரீ ரெங்கராமானுஜாசாரியாரும் ஸ்ரீ கூரநாராயண சுவாமிகளும் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். ரெங்கராமானுஜாசாரியார் பனிரெண்டு மந்திரங்களைமட்டும் உபநிஷத்தாக பாவித்து வியாக்கியானம் செய்திருக்கிறார். கூரநாராயணர் காரிகையின் முதல் அத்தியாயத்தின் சுலோகங்களையும் உபநிஷத்தாகவே பாவித்து வியாக்கியானம் செய்திருக்கிறார். பாஷ்யகாரரான ஸ்ரீ இராமானுஜாசாரியரவர்கள் பாஷ்யம் எழுதவில்லை. ஆயினும் அவர்களுடைய சூத்திர பாஷ்யத்திலும் அதின் வியாக்கியானமான சுருதப்பிரகாசிகையிலும் சில மந்திரங்களுக்கு அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதை பின்பற்றிக் கொள்ளலாம். ஓங்கார துவாராபிரம் மோபாசனையே இந்த உபநிஷத்தின் முக்கிய கருத்து.

துவைதம்.

முந்தின உபநிஷத்துக்களுக்குப்போல் இந்த மாண்டூக்கிய உபநிஷத்துக்கும் பாஷ்யம் முதலியவைகள் ஏற்பட்டிருக்கின்றன ஸ்ரீ ஆநந்ததீர்த்தாசாரியார் அவர்கள் பாஷ்யம் எழுதியிருக்கிறார்கள். தான் செய்யும் அர்த்தத்துக்கு ஆதாரமாக பத்மம், பிரஹ்மசம்ஹிதா நைர்குண்ணியம், ஹரிவம்சம், மகாயோகம், வராஹம், பிரகாசிகா, காருட, பிரத்திய, பிர்ம்மதர்க்கம், பிரம்மார்த்தம், ஆத்மசம்ஹிதை முதலிய கிரந்தங்களினின்றும் சம்மதிவாக்கியங்களை எடுத்து எழுதியிருக்கிறார்கள்.

வியாசதீர்த்தர் சுருக்கமான டீகையையும் ஸ்ரீநிவாச தீர்த்தர் விஸ்தாரமான டீகையையும் எழுதி யிருக்கிறார்கள். இராகவேந்திர சுவாமிகள் கண்டார்த்தத்தை எழுதி யிருக்கிறார்கள். பலவிடங்களில் காணப்படும் விஷயங்களெல்லாம் இந்த மொழிபெயர்ப்பில் சேர்வையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆதனமாய் த்வைத பாஷ்யங்களைப் பார்க்கிறவர்களுக்கு இந்த சேர்வை வெகு உபயோகமுள்ளதாக இருப்பதுமன்றியில் டீகைமுதலியவைகளைத் தனித் தனியே பார்த்தவர்களுக் கூட உபயோகமாயிருக்கலாம்.

கௌடபாதரால் ஏற்படுத்தப்பட்ட காரிகையின் முதலாவது அத்தியாயத்தின் சுலோகங்களை த்வைதிகள் உபநிஷத்தைச் சேர்ந்த மந்திரங்களாகவே பாவித்து வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். இந்தமதப்படி ஓம் பதவாச்சியமான பிரம்மம்பூர்ணம். இந்தபிரம்மம் சகலஜீவர்களையும் நியமனம் செய்கிறதாய் ஒவ்வொரு சரீரத்திலும் நான்குரூபமா யிருக்கிறது, அந்தரூபங்கள் விசுவ தைஜஸ பிராஞ்ஞ துரீயங்களாம். இவைகளின் ஸ்தானங்கள் வியாபாரங்கள் முதலியவை கூறப்படுகின்றன.

ஷட்விதலிங்க தாற்பரிய நிரூபணம்.

வேதாந்தத்தின் தாற்பரியத்தை நிச்சயிப்பவை ஷட்வித லிங்கங்களாம். அவைகளின் சாமானிய ஸ்வரூபம் ஈசாவாஸ்யத்தின் தமிழ் மொழிபெயர்ப்பில் விவரிக்கப்பட் டிருக்கிறது. பிரகிருத மாண்டூக்கிய உபநிஷத்தில் அடியிற்கண்ட மந்திரங்களில் அந்த லிங்கங்கள் காணப்படுகின்றன. ओमित्येतदक्षरमिदं सर्वं 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 (இது எல்லாம் ஓம் என்கிற அக்ஷரம்) என்கிற முதல் வாக்கியத்தில் உபக்கிரமலிங்கம் காணப்படுகின்றது.

(b) अमात्रश्चतुर्थः 𑌅𑌮𑌾𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 (அமாத்திரம் நான்காவது பாதம்) என்கிற 12-வது மந்திரத்தில் உபசம்ஹார லிங்கம் காணப் படுகின்றது.

II. प्रपञ्चोपशमं शान्तं 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋𑌪𑌶𑌮𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 (நிஷ்பிர பஞ்சம், சாந்தம்) என்கிற 12-வது மந்திரம் அப்பியாசத்தைக் கூறுகிறது.

III. अदृष्टमव्यवहार्यं 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯𑌂 (பார்க்கப்படாதது விவகரிக்கக்கூடாதது) என்கிற 7-வது மந்திரத்தில் இதர பிரமாணங்களுக்கு விஷயமாகாமை என்றும் அபூர்வதை என்றும் லிங்கம் காணப்படுகிறன்து.

IV. संविशत्यात्मनाऽत्मानं य एवंवेद ஸம்விஶத்யாத்மநாऽத்மாநம் ய ஏவம்வேத (ஆத்மாவை எவன் இப்படி அறிகிறானோ அவன் ஆத்மாவை பிரவேசிக்கிறான்) என்கிற 12 வது மந்திரத்தின் வாக்கியம் பலத்தைக் கூறுகிறது.

V. आप्नोतिहवै सर्वान् कामान् ஆப்நோதிஹவை ஸர்வாந் காமாந் (சகல இச்சைகளையும் அடைகிறான்) என்கிற 9 வது மந்திரமும் 10 வது மந்திரத்திற் கூறிய அவாந்திர பலமும் அர்த்த வாதத்தைக் கூறுகின்றன.

VI, அத்வைத பிரம்மத்தைப் பிரவேசிக்கும் பொருட்டு ஒன்று முதல் 12 வரையிலுள்ள வாக்கியங்களிற் செய்யப்பட்ட நான்கு பாதங்களின் கற்பனையானது உபபத்தி அதாவது யுக்தி என்னும் லிங்கமாயிருக்கிறது.

இந்த லிங்கங்களால் மாண்டூக்கிய உபநிஷத்தின் தாற்பரியம் அத்வைத பரமாக இருக்கிறதென்று நிச்சயமாகிறது.

ओं तत्सद्ब्रह्मणेनमः

𑌓𑌂 𑌤𑌤𑍍𑌸𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇𑌨𑌮𑌃 ।

प्रज्ञानांशु प्रतानैः स्थिरचरनिकरव्यापिभिर्व्याप्य लोकान्भुक्त्वा भोगान्स्थविष्ठान्पुनरपि धिषणोद्भासितान्कामजन्यान् । पीत्वा सर्वान्विशेषान्स्वपिति मधुरभुङ्मायया भोजयन्नो मायासंख्यातुरीयं परममृतमजं ब्रह्म यत्तन्नतोऽस्मि ॥

𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂𑌶𑍁 𑌪𑍍𑌰𑌤𑌾𑌨𑍈𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌚𑌰𑌨𑌿𑌕𑌰𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌸𑍍𑌥𑌵𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍍𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌧𑌿𑌷𑌣𑍋𑌦𑍍𑌭𑌾𑌸𑌿𑌤𑌾𑌨𑍍𑌕𑌾𑌮𑌜𑌨𑍍𑌯𑌾𑌨𑍍 । 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌨𑍍𑌸𑍍𑌵𑌪𑌿𑌤𑌿 𑌮𑌧𑍁𑌰𑌭𑍁𑌙𑍍𑌮𑌾𑌯𑌯𑌾 𑌭𑍋𑌜𑌯𑌨𑍍𑌨𑍋 𑌮𑌾𑌯𑌾𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌤𑍁𑌰𑍀𑌯𑌂 𑌪𑌰𑌮𑌮𑍃𑌤𑌮𑌜𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌯𑌤𑍍𑌤𑌨𑍍𑌨𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 ॥

स्थिरचरनिकरव्यापिभिः 𑌸𑍍𑌥𑌿𑌰𑌚𑌰𑌨𑌿𑌕𑌰𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌭𑌿𑌃=ஸ்தாவர ஜங்கமங்களின் ஸமூகத்தை வியாபிக்கிற

प्रज्ञानांशु प्रतानैः 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂𑌶𑍁 𑌪𑍍𑌰𑌤𑌾𑌨𑍈𑌃 = பிரம்மத்தின் கிரணங்களாகிற சிதா பாசங்களின் (விஸ்தாரமான) கூட்டங்களால்

लोकान् 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍=விஷயங்களை

व्याप्य 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯=வியாபித்து

स्थाविष्ठान् 𑌸𑍍𑌥𑌵𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍍=ஸ்தூலமான

भोगान् 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍=போகங்களை

भुक्त्वा 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾=அநுபவித்து

पुनरपि 𑌪𑍁𑌨𑌰𑌪𑌿=மறுபடியும் இன்னும்

धिषणोद्भासितान् 𑌧𑌿𑌷𑌣𑍋𑌦𑍍𑌭𑌾𑌸𑌿𑌤𑌾𑌨𑍍 =புத்தியால் பிரகாசம் செய்யப்பட்டு

कामजन्यान् 𑌕𑌾𑌮𑌜𑌨𑍍𑌯𑌾𑌨𑍍=இச்சையால் உண்டாயிருக்கிற

भोगान् 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍=போகங்களை

भुक्त्वा 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾=அநுபவித்து

सर्वान् 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍=ஸமஸ்தமான

विशेषान् 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌨𑍍=விசேஷங்களையும்

पीत्वा 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾=தன்னிடம் லயம் செய்துகொண்டு

स्वपिति 𑌸𑍍𑌵𑌪𑌿𑌤𑌿=தூங்குகிறதும்

मधुरभुक् 𑌮𑌧𑍁𑌰𑌭𑍁𑌕𑍍=ஆநந்தபோக்தாவாய்

नः 𑌨𑌃=எங்களை

मायया 𑌮𑌾𑌯𑌯𑌾=மாயையால்

भोजयन् 𑌭𑍋𑌜𑌯𑌨𑍍=புஜிப்பித்துக்கொண்டும்

मायासंख्यातुरीयं 𑌮𑌾𑌯𑌾𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌤𑍁𑌰𑍀𑌯𑌂=கல்பிதமான ஜாக்கிராதிகளை அபேக்ஷித்து துரீயம் நான்காவதென்று சொல்லப்படும்.

परं பரம்=சிரேஷ்டமாயும்

अमृतं அம்ருதம்=மரணதர்மமில்லாமலும்

अजं அஜம்=ஜனனமில்லாமலும்

यत् யத்=யாதொரு

ब्रह्म ப்ரஹ்ம=பிரம்மம் உண்டோ

तत् தத்=அதை

नतोऽस्मि நதோஸ்மி=நமஸ்காரம் பண்ணுகிறேன்

ச-பா:—[1] ஜனன மரணங்களற்ற பிரம்மத்தைநான் நமஸ்கரிக்கிறேன். இந்தப் பிரம்மம் எப்படி இருக்கிறதெனின்.

प्रज्ञांशु......लोकान् ப்ரஜ்ஞாம்ஶு......லோகாந் :—ஜன்மாதி விகாரங்களற்ற [2] உத்கிருஷ்டமான ஞானரூபம் பிரம்மம். இதினுடைய கிரணங்கள் அதாவது சூரியனிடமிருந்துண்டாகும் கிரணங்கள்போல் பிம்பமாகிற பிரம்மத்தினின்றும் உண்டாகி பிரம்மத்தைவிட்டு வேருக இல்லாத சிதாபாசர்கள் கிரணங்களாம். விருக்ஷாதி ஸ்தாவரங்கள், மனுஷ்யாதி ஜங்கமங்கள், இவைகளின்

குறிப்புக்கள்.

1. ஸ்ரீ கௌடபாதாசாரியாருக்கு நாராயணப்பிரசாதத்தால் கிடைத்தும், மாண்டூக்கிய உபநிஷத்தின் அர்த்தத்தைவெளியாக்குகிறதாயுமிருக்கிற கௌடபாதாசாரியாருடைய சுலோகங்களை வியாக்கியானம் செய்ய இச்சிக்கும் பாஷ்யகாரர் செய்யப்போகிற பாஷ்யம் விக்கினமன்றியில் முடியும்பொருட்டு பிரம்மத்தின் ஸ்வரூபத்தை ஸ்மரித்து. சிஷ்டஜனங்களுடைய ஆசாரப்படி பிரம்மத்தின் நமஸ்கார ரூபமங்களத்தைச்செய்து, அதில் அர்த்தத்திருல் இந்த கிரந்தாரம்பத்தில் விஷயம்முதலிய நான்கு அனுபந்தங்களையும் சூசிப்பிக்கிருர். பிரம்மத்தின் ஸ்வரூபம் இப்படிப்பட்டதென்று காண்பித்து அதை நமஸ்கரிக்கிறேன் என்று சொல்லுகிருர். பிரம்மத்தை நான் நமஸ்கரிக்கிறேன் என்று சொல்லுவதினுல் நானும் அதுவும் ஒன்று என்னும் நினைவாகிற நமஸ்காரத்தை சூசிப்பிக்கிற ஆசாரியர் பிரம்மம் பிரத்தியகாத்மரூபம் என்று சூசிப்பித்து தத்பதத்வம்பதங்களின் ஐக்கியார்த்தமான கிரந்தத்தின் விஷயத்தை சூசிப்பிக்கிருர். பிரம்மம் அத்விதீயமானதால் ஜனனமரணகாரணமற்றது, ஆகையால் अमृतं अजन्म அம்ருதம் அஜந்ம என்று சொல்லப்பட்டது - ஜனனமரணமே சம்சாரம்-அதை நிஷேதிக்கிறதினுல் சம்சாரத்தின் அநர்த்தநிவர்த்தியாகிற பிரயோசனம் வெளியிடப்பட்டது.

2. வேதாந்த பிரமாணத்தால் பிரசித்தமான பிரம்மம் அசம்சாரியானுல், மூன்று அவஸ்தைகளுடன் கூடினபோக்தாவான ஜீவன் எப்படி அனுபவங்களை அடைவான்? அனுபவிக்கும்படி ஈசுவரன்செய்வதாக எப்படி ஏற்படும்? அனுபவிக்கக் கூடிய விஷயகூட்டம் எப்படிவேருகக்காணப்படலாம்? இவைகளெல்லாம் அத்வைத விஷயத்தில் விருத்தப்படுமே எனின்—பிரம்மத்தினிடத்திலேயே ஜகத்து, ஜீவன், ஈசுவரன், எல்லாம் கற்பிக்கப்பட்டிருக்கின்றன என்னும் அபிப்பிராயத்தால் சொல்லுகிருர்.

சமூகத்தில் வியாபிக்கிற மேற்சொல்லிய சிதாபாசர்களால் போகங்களை வியாபித்து [3] (அதாவது விஷயங்களை கிரகித்து)

भुक्त्वाभोगान् स्थविष्ठान् புக்த்வாபோகாந் ஸ்தவிஷ்டாந்:—ஸ்தூல போகங்களை அநுபவித்து पुनरपि...जन्यान् புநரபி...ஜந்யாந்:—புத்தியால் பிரகாசித்தும்[5] அவித்தியாகாம கர்மங்களால் உண்டாகியுமிருக்கிற அநுபவங்களை அநுபவித்து

पीत्वा...भुक् பீத்வா...புக்:—சகல விசேஷங்களையும் [6] தன்னிடத்தில் லயப்படுத்திக்கொண்டு ஆநந்தத்தை [7] அநுபவித்துத் தூங்குகிறது.

मायया भोजयन्न: மாயயாபோஜயந்ந:=இந்த பிரம்மமே பிரதிபிம்பசமானமான நம்மிடத்தில் மாயையால் [8] செய்யப்பட்ட மித்தையான மூன்று அவஸ்தைகளை சம்பந்தப்படுத்து வதுபோல் செய்து நம்மைமாயையால் போகங்களை அநுபவிக்கும்படிச்செய்து விளங்குகிறது.

मायासंख्यातुरीयं மாயாஸம்க்யாதுரீயம்=மாயையால் கற்பிக்கப்பட்ட சங்கியையை அபேக்ஷித்து [9] நான்காவதாயிருக்கிறது.

---

3. இதனால் ஜீவனுக்கும் விஷயத்துக்கும் சம்பந்தம் சொல்லப்பட்டது.

4. அதிஷ்டாதாக்களான தேவதைகளால் அநுக்கிரகிக்கப்பட்ட பாஹ்ய இந்திரியங்கள்மூலமாக விஷயசம்பந்தத்தை புத்தி அடைந்து விஷயாகாரமாகி அதினாலுண்டாகும் ஸ்தூலஅநுபவங்களை அநுபவித்து, இந்த (அநுபவித்து என்னும்) பதம் இனி வரப்போகிற "தூங்குகிறது" என்னும் பதத்துடன் சம்மந்தப்படுகிறது - அநுபவித்து என்பதினால் பிரம்மத்தினிடத்தில் ஜாக்கிராவஸ்தைகற்பிக்கப் பட்டது.

5. இதனால் ஸ்வப்நம் கற்பிக்கப்படுகிறது - ஜாக்கிரக்காலத்தில் இந்திரியங்களால் விஷயங்கள் பிரகாசிக்கின்றன. ஸ்வப்னத்தில் இவைகளில்லாதபடியால் வாசனாரூபமானவிஷயங்கள் தோன்றுகின்றன.

6. சகல ஸ்தூலசூக்ஷ்மங்களும் ஜாக்கிரஸ்வப்நரூபங்களாயிருக்கின்றன. அவைகளை சுஷுப்திகாலத்தில் தன்னிடத்தில் பிரம்மம் லயப்படுத்தி தான் காரணரூபமாக யிருக்கிறது. இதனால்சுஷுப்தி அவஸ்தைகற்பிக்கப்படுகிறது.

7. சுஷுப்தியில் ஆனந்தமே பிரதானமானதால் பிர்மத்துக்கு விசேஷணமாக கூறப்பட்டது.

8. மூன்று அவஸ்தைகள், இவைகளையுடைய ஜீவன், மாயாவியான ஈசுரன், இவைகளெல்லாம் சுத்தப்பிரம்மத்தில் கற்பிதங்கள் என்னும் அபிப்பிராயத்துடன் சொல்லுகிருர்.

9. கற்பிதமான மூன்று அவஸ்தைகளை அபேக்ஷித்து நான்காவது என்று சொல்லப்படுகிறது வாஸ்தவத்தில் அது இரண்டற்றது இவைகளுக்கு வேருனதால் கேவலம் ஞானஸ்வரூபம் என்று கூறப்படுகிறது.

परं பரம்=10 பரமமாயிருக்கிறது.

यो विश्वात्मा विधिजविषयान्प्राश्य भोगान्स्थविष्ठान्पश्चाच्चान्यान्स्वमति विभवाञ्ज्योतिषा स्वेनसूक्ष्मान् । सर्वानेतान्पुनरपि शनैः स्वात्मनिस्थापयित्वा हित्वा सर्वान्विशेषान्विगतगुणगणः पात्वसौ नस्तुरीयः ॥

யோ விஶ்வாத்மா விதிஜவிஷயாந்ப்ராஶ்ய போகாந்ஸ்தவிஷ்டாந்பஶ்சாச்சாந்யாந்ஸ்வமதி விபவாஞ்ஜ்யோதிஷா ஸ்வேநஸூக்ஷ்மாந் । ஸர்வாநேதாந்புநரபி ஶநை: ஸ்வாத்மநிஸ்தாபயித்வா ஹித்வா ஸர்வாந்விஶேஷாந்விகதகுணகண: பாத்வஸௌ நஸ்துரீய: ॥

यः ய:=எவன்

विधिजविषयान् விதிஜவிஷயாந்=விதியால் உண்டாயிருக்கிற விஷயங்களாகிற

स्थविष्ठान् ஸ்தவிஷ்டாந்=அத்தியந்த ஸ்தூலமாயிருக்கிற

भोगान् போகாந்=போகங்களை

प्राश्य ப்ராஶ்ய=அனுபவித்து

विश्वात्मा விஶ்வாத்மா=வைசுவாநரனாகவும்

पश्चाच्च பஶ்சாச்ச=பிறகு

स्वमतिविभवान् ஸ்வமதிவிபவாந்=தன்னுடைய புத்திப்பிரபாவத்தால் உண்டானவைகளாயும்

स्वेन ஸ்வேந=தன்னுடைய

ज्योतिषा ஜ்யோதிஷா=தேஜஸால்

(विषयीकृतान् விஷயீக்ருதாந்=விஷயீகரிக்கப்பட்ட)

सूक्ष्मान् ஸூக்ஷ்மாந்=சூட்சுமங்களான

अन्यान् அந்யாந்=அன்னிய விஷயங்களை

प्राश्य ப்ராஶ்ய=அனுபவித்துக்கொண்டு

(तैजसः தைஜஸ:=தைஜஸனாயும்)

सर्वान् एतान् ஸர்வாந் ஏதாந்=இந்த எல்லாவிஷயங்களையும்

पुनरपि புநரபி=மறுபடியும்

शनैः ஶநை:=மெள்ளமெள்ள

स्वात्मनि ஸ்வாத்மநி=தன்னிடத்திலேயே

स्थापयित्वा ஸ்தாபயித்வா=நிறுத்திக்கொண்டு

(प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராஞ்ஞனாயும்)

सर्वान् ஸர்வாந்=ஸமஸ்தமான

10. பிரம்மம் மாயாவியானால் நிகிருஷ்டமாகுமே எனின் அது உத்கிருஷ்டமாயிருக்கிறது. மாயை மூலமாக மாயையின் சம்பந்தம் உண்டானாலும் சுவரூபத்தில் சம்பந்தமில்லாதபடியால் அது நிகிருஷ்டமன்று.

विषयान् விஷயாந் = விஷயங்களையும்
हित्वा ஹித்வா = விட்டுவிட்டு
विगतगुणगण: விகதகுணகண: = குணகணங்க ளற்று
तुरीय: துரீய: = துரீயன் என்று சொல்லப்படுகிற
असौ அஸௌ = இந்த பிரம்மம்
न: ந: = எங்களை
पातु பாது = ரக்ஷிக்கட்டும்

அ-கை :—முதல் சுலோகத்தில் விதிமுகமாக பிரதிபாதிக்கப் படும் பிரம்மத்தின் ஸ்வரூபமும், அதுவே த்வம் பதத்தின் அர்த்த மான பிரத்தியகாத்மா வென்றும் சொல்லப் பட்டது. மேலும் விஷயத்தையும் பலத்தையும் சொன்னதினால் சம்பந்தத்தையும் அதிகாரியையும் சூசிப்பித்திருக்கிறது. இந்த இரண்டாவது சுலோகத்தில் நிஷேதமுகமாக த்வம் பதத்தின் அர்த்தமே தத்பத த்தின் அர்த்தமாகிற அசம்சாரி பிரம்மம் என்று கூறப்படுகிறது. த்வம் பதார்த்தத்தின் அர்த்தமாயும் ஸ்வத: சித்தமாயும் சிதாத்மா வினிடத்தில் ஆரோபிக்கப்பட்டு மிருக்கிற ஜாக்கிரா வஸ்தையை உதாகரிக்கிறார்,

विश्वात्मा விஸ்வாத்மா = பஞ்சீகிருத பஞ்சமஹா பூதங்களும் அவைகளின் காரியங்களுமான ஸ்தூல ஜகத்தானது விச்வமெனப் படும். இந்த விச்வமே விராட் புருஷனுடைய சரீரம். அந்த ஜாக் கிரதஸ்தானமான விசுவத்தினிடத்தில் நான் என்னுடையது என்னும் அபிமான முள்ளவன் விச்வாத்மா.

विधिजविषयान् விதிஜவிஷயாந் = அவித்தியாகாமங்களால் உண் டாகும் தர்மாதர்மங்களால் சப்தாதி விஷயங்கள் உண்டாகின்றன.

भोगान् போகாந் = போக போக்கியமான स्थविष्ठान् ஸ்தவிஷ்டா ந் = சூரியன் முதலான தேவதைகளால் அனுக்கிரகிக்கப்பட்ட பாஹ்ய இந்திரியங்கள் மூலமாக புத்திபரிணமத்துக்கு விஷயமான ஸ்தூல விஷயங்களை प्राश्य ப்ராச்ய = சாக்ஷாத்தாய் அனுபவிக்கிற வன் இந்த பிரத்திய காத்மா என்பது கருத்து.

पश्चात्...सूक्ष्मान् பச்சாத்...ஸூக்ஷ்மாந் = ஜாக்கிரத்துக்கு ஹே துவான கர்மம் நாசமடைந்து 11 ஸ்வப்நத்திற்கு ஹேதுவான கர்ம முண்டான வளவில், (1) ஸ்தூல விஷயங்களுக்கு வேறாயும், (2) அக்காரணத்தாலேயே சூட்சுமமாயும் (3) பாஹ்ய இந்திரி

11. இந்த சிதாத்மாவினிடத்தில் ஸ்வப்நாவஸ்தை ஆரோபிக்கப்பட்டி ருக்கிறதென்று கூறுகிறார்.

யங்கள் ஒழிவடைந்தபடியால் அவித்தியா காமகர்மங்களால் பிரேரணை செய்யப்பட்ட தன்னுடைய புத்திப் பிரபாவத்தாலேயே உண்டான அந்தக்கரணத்தின் வாசனுமயமாயும், (4) ஸ்வப்நத்தில் சூரியாதிப் பிரகாசங்களில்லாததால் ஆத்மாவின் பிரகாசத்தாலேயே விளங்கும் விஷயங்களை அனுபவித்து, அபஞ்சீகிருத பஞ்சமஹா பூதங்கள், அவைகளின் காரியங்கள், இவைகளாகிற சூட்சுமபிரபஞ்சமென்னும் ஹிரணிய கர்ப்பனுடைய சரீரமாகிற ஸ்வப்நஸ்தானத்தை அபிமானிக்கிறவனுய் இந்த பிரத்திய காத்மா தைஜஸனுயிருக்கிறுன்.

सर्वान्···स्थापयित्वा ஸர்வாந்... ஸ்தாபயித்வா :—ஸ்தூல சூட்சும சரீரங்களாகிற இரண்டு உபாதிகள் மூலமாக ஜாக்கிர ஸ்வப்நங்களில் சஞ்சரிப்பதாலுண்டாகும் சிரமத்துக்குப்பிறகு அந்த சிரமத்தைப் போக்கடிக்க இச்சை [12] உண்டான வளவில் ஜாக்கிர ஸ்வப்நங்களுக்குரிய சகல போகங்களை கிரமமாகவாவது அக்கிரமமாகவாவது, அறியப்படாத தன்னுடைய ஸ்வரூபத்தில் லயபடுத்தி, அவ்வியாகிருத மென்னும் உபாதியை பிரதானமாக உடையவனுய் இந்தப்பிரத்திய காத்மா பிராஞ்ஞனுகிறுன்.

हित्वा···तुरीयः ஹித்வா... துரீய: :—சகல குணங்களற்றவராயும் நித்திய ஞானஸ்வபாவ முள்ளவராயு மிருக்கிற பரமாத்மா [13] சகலகாரிய காரணங்களாகிற அநர்த்தங்களை பிரமாண ஜன்னிய ஞானப்பிரபாவத்தாலேயே விலக்கி, வியாக்கியானம் செய்கிறவராயும் சுரோதாவாயு மிருக்கிற எங்களுக்கு புருஷார்த்தம் கிடைப்பதில் விக்கினங்கள் வாராமற் செய்து மோக்ஷத்தைக்கொடுத்து, அதற்குக் காரணமான ஞானத்தையும் கொடுத்து எங்களை இரக்ஷிக்கட்டும்.

---

12. இந்த சிதாத்மாவினிடத்தில் சுஷுப்தியின் கற்பனை காண்பிவிக்கப்படுகிறது.

13. ஜாக்கிரத்முதலிய மூன்று அவஸ்தைகளுள்ளதும் नान्तः प्रज्ञः நாந்த: ப்ரஜ்ஞ: (16 வது சுலோகம்) முதலிய நிஷேதசாஸ்திரங்களால் ஜனிக்கும் ஞானத்துக்கு விஷயமாயுமிருக்கிற பிரத்தியகாத்மாவே நிருபாதிக பரிபூர்ணஞானமாகிற பரமாத்மஸ்வரூபம் என்னும் தத்துவத்தைச் சொல்லி அதின் பிரார்த்தனையை கூறுகிறுர்.

சாந்திமந்திரம்.

ओं तत्सद्ब्रह्मणेनमः

ओं भद्रं कर्णेभिः शृणुयामदेवाः ।
भद्रं पश्येमाक्षभिर्यजत्राः ।
स्थिरैरङ्गैस्तुष्टुवाꣳसस्तनूभिः ।
व्यशेम देवहितं यदायुः ।
स्वस्तिन इन्द्रो वृद्धश्रवाः ।
स्वस्तिनः पूषा विश्ववेदाः ।
स्वस्तिनस्तार्क्ष्यो अरिष्टनेमिः ।
स्वस्तिनो वृहस्पति र्ददातु ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ।

𑍐 𑌤𑌤𑍍𑌸𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇𑌨𑌮𑌃.

𑍐 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌕𑌰𑍍𑌣𑍇𑌭𑌿𑌃 𑌶𑍃𑌣𑍁𑌯𑌾𑌮 𑌦𑍇𑌵𑌾𑌃 ।
𑌭𑌦𑍍𑌰𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌮𑌾𑌕𑍍𑌷𑌭𑌿𑌰𑍍𑌯𑌜𑌤𑍍𑌰𑌾𑌃 ।
𑌸𑍍𑌥𑌿𑌰𑍈𑌰𑌙𑍍𑌗𑍈𑌸𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑍁𑌵𑌾𑌂𑌸𑌸𑍍𑌤𑌨𑍂𑌭𑌿𑌃 ।
𑌵𑍍𑌯𑌶𑍇𑌮 𑌦𑍇𑌵𑌹𑌿𑌤𑌂 𑌯𑌦𑌾𑌯𑍁𑌃 ।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌨 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌵𑍃𑌦𑍍𑌧𑌶𑍍𑌰𑌵𑌾𑌃 ।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌨𑌃 𑌪𑍂𑌷𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌃 ।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌨𑌸𑍍𑌤𑌾𑌰𑍍𑌕𑍍𑌷𑍍𑌯𑍋 𑌅𑌰𑌿𑌷𑍍𑌟𑌨𑍇𑌮𑌿𑌃 ।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌨𑍋 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿 𑌰𑍍𑌦𑌦𑌾𑌤𑍁 ॥

𑍐 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃.

ओं 𑍐 = ஓம்
तत्सद्ब्रह्मणेनमः 𑌤𑌤𑍍𑌸𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇𑌨𑌮𑌃 = சத்ரூப பிரம்மத்துக்கு நமஸ்காரம்
हेदेवाः 𑌹𑍇𑌦𑍇𑌵𑌾𑌃 = தேவதைகளே
भद्रं 𑌭𑌦𑍍𑌰𑌂 = க்ஷேமகரமாயிருப்பதை
कर्णेभिः 𑌕𑌰𑍍𑌣𑍇𑌭𑌿𑌃 = காதுகளால்
शृणुयाम 𑌶𑍃𑌣𑍁𑌯𑌾𑌮 = கேட்போமாக
यजत्राः 𑌯𑌜𑌤𑍍𑌰𑌾𑌃 = பூஜார்ஹர்களே
भद्रं 𑌭𑌦𑍍𑌰𑌂 = க்ஷேமகரமாயிருப்பதை
अक्षभिः 𑌅𑌕𑍍𑌷𑌭𑌿𑌃 = கண்களால்
पश्येम 𑌪𑌶𑍍𑌯𑍇𑌮 = பார்ப்போமாக
स्थिरैः 𑌸𑍍𑌥𑌿𑌰𑍈𑌃 = ஸ்திரமான
अंगैः 𑌅𑌂𑌗𑍈𑌃 = அங்கங்களால்
तुष्टुवांसः 𑌤𑍁𑌷𑍍𑌟𑍁𑌵𑌾𑌂𑌸𑌃 = ஸ்தோத்திரம் செய்துகொண்டு

तनूभिः தநூபி: = (இந்த நம்முடைய) சரீரங்களுடன்

देवहितं தேவஹிதம் = தேவதைகளால் கொடுக்கப்பட்ட

यदायुः யதாயு: = எவ்வளவு ஆயுஸோ அவ்வளவு ஆயுளை

व्यशेम வ்யசேம = அனுபவிப்போமாக

वृद्धश्रवाः வ்ருத்தச்ரவா: = வெகு கீர்த்தியுள்ள

इन्द्रः இந்த்ர: = இந்திரன்

नः ந: = எங்களுக்கு

स्वस्ति ஸ்வஸ்தி = க்ஷேமத்தை

ददातु ததாது = கொடுக்கட்டும்

विश्ववेदाः விச்வவேதா: = சகலத்தையும் அறிந்த

पूषा பூஷா = போஷிக்கிறவர்

नः ந: = எங்களுக்கு

स्वस्ति ஸ்வஸ்தி = க்ஷேமத்தை

ददातु ததாது = கொடுக்கட்டும்

अरिष्टनेमिः அரிஷ்டநேமி: = தங்கு தடையளியாத சக்கிரத்தை யுடைய

तार्क्ष्यः தார்க்ஷ்ய: = சூரியனுடைய இரதத்திலிருக்கிற தேவதை

नः ந: = எங்களுக்கு

स्वस्ति ஸ்வஸ்தி = க்ஷேமத்தை

ददातु ததாது = கொடுக்கட்டும்

बृहस्पतिः ப்ருஹஸ்பதி: = பிரகஸ்பதியானவர்

नः ந: = எங்களுக்கு
स्वस्ति ஸ்வஸ்தி = க்ஷேமத்தை
ददातु ததாது = கொடுக்கட்டும்

ॐ शान्तिः शान्तिः शान्तिः ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: மூன்று வித சாந்திகள் சித்திக்கட்டும்,

உபநிஷத்தின் முதலாவது மந்திரம். (அத்வைதம்.)

हरिः ओं । ओमित्येतदक्षरमिदं सर्वं तस्योप व्याख्यानं भूतं भवद्भविष्यदिति सर्वमोंकारएव । यच्चान्यत् त्रिकालातीतं तदप्योंकार एव ॥ I ॥

𑌹𑌰𑌿𑌃 𑌓𑌂 । 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 𑌭𑍂𑌤𑌂 𑌭𑌵𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌦𑌿𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌮𑍋𑌂𑌕𑌾𑌰𑌏𑌵 । 𑌯𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌤𑍍 𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌲𑌾𑌤𑍀𑌤𑌂 𑌤𑌦𑌪𑍍𑌯𑍋𑌂𑌕𑌾𑌰𑌏𑌵 ॥ I ॥

ओं 𑌓𑌂=ஓங்காரம்
इति 𑌇𑌤𑌿=என்கிற
एतत् 𑌏𑌤𑌤𑍍=இந்த
अक्षरं 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂=அக்ஷரம்
इदं 𑌇𑌦𑌂= இந்த
सर्वं 𑌸𑌰𑍍𑌵𑌂=சமஸ்தமும்
तस्य 𑌤𑌸𑍍𑌯=அந்த ஓங்காரத்தின்
उपव्याख्यानं 𑌉𑌪𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂=ஸ்பஷ்டமாய் சொல்லுதல்
प्रस्तुतं 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌂=பிரகிருதத்தில் இந்த உபவியாக்கியானம்
(वेदितव्यं 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌂=அறியத்தக்கது)
भूतं भवद्भविष्यत् 𑌭𑍂𑌤𑌂 𑌭𑌵𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑍍=சென்ற காலம் செல்லும் காலம் வருங்காலம்
इति 𑌇𑌤𑌿=என்கிற
सर्वं 𑌸𑌰𑍍𑌵𑌂=சமஸ்தமும்
ओंकारएव 𑌓𑌂𑌕𑌾𑌰𑌏𑌵=ஓங்காரமே
त्रिकालातीतं 𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌲𑌾𑌤𑍀𑌤𑌂=மூன்றுகாலத்தையும் அதிக்கிரமித்த
अन्यत् 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍=வேறு
यच्च 𑌯𑌚𑍍𑌚=எதுவோ
तदपि 𑌤𑌦𑌪𑌿=அதுவும்
ओंकारएव 𑌓𑌂𑌕𑌾𑌰𑌏𑌵=ஓங்காரமே

"ஓங்காரமாகிற அக்ஷரம்" என்பது முதல் வேதாந்தார்த்தத்தின் சாரமாகிற ஜீவப்பிரம்ம ஐக்கியத்தின் உபதேசத்தை அடக்கிக்கொண்டிருக்கும் நான்கு அத்தியாயமுள்ள இந்தப் பிரகரணம் ஆரம்பிக்கப்படுகிறது. வேதாந்தத்துக்கு விஷய சம்பந்தப்பிரயோஜனங்கள் எவையோ அவையே இந்த கிரந்தத்துக்கும் இருப்பதால் அவைகள் வியக்தமாய் எடுத்துச் சொல்லப்படவில்லை. பிகரணத்தில் அவைகளைச் சொல்லாவிட்டாலும் பாஷியகாரர் அவைகளை சுருக்கமாய் சொல்லுவது யுக்தம். ஆத்மாவை அறியச்

சாதகங்களான உபாயங்களைச் சொல்லுவதினால் இந்தப்பிரகரணமே விஷய சம்பந்தப் பிரயோசனங்களுடன் கூடினதாக ஆகிறது. இந்தப்பிரயோஜனம் இன்னும் வியக்தமாய்ச் சொல்லப்படுகிறது. எப்படியெனில், ரோகத்தால் பீடிக்கப்பட்டவன் ரோகம் நிவிர்த்தியின்பேரில் முந்தின ஸ்திதியை அடைவதுபோல், துக்கியான ஆத்மாவுக்கும் [14] துவைத பிரபஞ்ச நிவிர்த்தியின் பேரில் அத்வைதமான முந்தின ஸ்திதி கிடைக்கிறது. இதுவே (அத்துவைத பாவமே) பிரயோசனம். அஞ்ஞானத்தால் உண்டாகும் துவைதப் பிரபஞ்சம் ஞானத்தால நிவிர்த்தியாகுமாதலால், அந்த பிரம்ம வித்தையை வெளிப்படுத்தும் பொருட்டு இந்த கிரந்தம் ஆரம்பிக்கப்படுகிறது. இந்த அர்த்தம் அடியில் கண்ட சுருதிகளாலும் விளங்குகிறது.

यत्रहि द्वैतमिवभवति यत्र वाऽन्यदिवतत्रान्यो ऽन्यत्पश्येदन्यो ऽन्यद्विजानीयात् । यत्रत्वस्य सर्वमात्मैवाभूत्तत्केन कं पश्येत्केन कं विजानीयात् ॥बृ-II-4-14॥

𑌯𑌤𑍍𑌰𑌹𑌿 𑌦𑍍𑌵𑍈𑌤𑌮𑌿𑌵𑌭𑌵𑌤𑌿 𑌯𑌤𑍍𑌰𑌵𑌾𑌽𑌨𑍍𑌯𑌦𑌿𑌵𑌤𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑍇𑌦𑌨𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 । 𑌯𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑍈𑌵𑌾𑌭𑍂𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑍇𑌨 𑌕𑌂𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍𑌕𑍇𑌨 𑌕𑌂𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 ॥

𑌬𑍃-II-4-14 ॥

துவைதம் போலவும் தனக்கு வேறானது போலவும் இருக்குமிடத்தில் ஒன்றை ஒருவன் பார்க்கவும் அறியவும் இடமுண்டாகிறது. ஞானியின் ஞானாவஸ்தையில் கர்த்தா காரணம் முதலிய எல்லாம் ஆத்மாவாய்ப் போகுமிடத்தில் எந்த காரணத்தால் எவன் எந்த விஷயத்தைப் பார்க்கவும் அறியவும் முடியும். ஆகையால் துவைதப் பிரபஞ்சம் அவித்தையின் காரியமே. அது ஞானத்தால் நிவிர்த்தியாகிறது,

இவ்விடத்தில் [15] ஆகமப் பிரதானமாயும் ஓங்காரத்தின் அர்த்தத்தை நிச்சயிக்கிறதாயுமிருக்கிற இந்த முதலாவது பிரகரணம் ஆத்மதத்துவத்தை அடைய உபாயமாயிருக்கிறது.

---

14. ஸ்வத: துக்கரகிதமாயும் நிரதிசயானந்த ரூபமாயுமிருக்கிற ஆத்மாவுக்குங்கூட தன்னுடைய அவித்தையாலுண்டான அஹங்காரமுதலிய துவைத பிரபஞ்ச சம்பந்தத்தால், ஆத்மாவினிடத்தில் துக்கம் ஆரோபிக்கப்பட்டு நான் துக்கி, சுகம் அடையத்தகுந்தது என்று நினைக்கிறவனுக்கு பரமகாருணிகரான ஆசாரியருடைய அத்வைத உபதேசத்தால் உண்டாகும் அத்வைதஞானத்தால் துவைதம் நிவிர்த்தியாகி பிரதிபந்தங்கள் நாசமடைந்தபின் ஸ்வபாவமான பரமானந்த ஸ்வரூபம், சமஸ்த துக்கரகிதமும் நன்றாய் விளங்குகின்றது.

15. விஷயப் பிரயோஜனங்கள் முதலிய அனுபந்தத்தைச்சொல்லித்தான் கிரந்தத்தை ஆரம்பிக்கவேண்டுமாகையால், இந்த கிரந்தத்திலடங்கிய நான்கு பிரகரணங்களின் விஷயங்களை சுலபமாய் தெரிந்து கொள்ளும்பொருட்டு முதலில் பிரகரணத்தின் விஷயத்தைக் கூறுகிறார்.

இரஜ்ஜுவில் சர்ப்பபிராந்தி நிவிர்த்தியானவுடன் இரஜ்ஜு ஸ்வரூபம் அறியப்படுவது போல் துவைதப் பிரபஞ்சம் நிவர்த்தியானவுடன் அத்வைதம் சித்திக்கிறது. இந்த துவைதம் பொய் என்பது காரண பூர்வகமாக இரண்டாவது அத்தியாயத்தில் பிரதிபாதிக்கப்படுகிறது.

அத்வைதமே பொய் என்னும் பக்ஷத்தில் மூன்றாவது அத்தியாயத்தில் அத்வைதமே பரமார்த்தமென்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

அத்வைதத்தின் பரமார்த்த தத்துவ நிச்சயத்துக்கு விரோதமாயிருக்கிற வேத விருத்தங்களான இதரசாஸ்திரங்கள் பரஸ்பர விரோதமாயிருப்பதால் அவைகள் நான்காவது அத்தியாயத்தில் நிராகரிக்கப்படுகின்றன.

ஓங்கார நிர்ணயமானது ஆத்மதத்துவத்தை அடைய எப்படி[16] உபாயமாயிருக்கிறது என்பது இனி விவரிக்கப்படுகிறது.

(1) ओं इत्येतत् ஓமித்யேதத் = இது ஓங்காரம்[17]

(2) एतदालंबनं ஏததாலம்பனம் = இது ஆதாரம்[18]

(3) एतद्वै सत्यकाम ओमित्यात्माने उपासीत ஏதத்வை ஸத்யகாம ஓமித்யாத்மானம் உபாஸீத = சத்ய இச்சையுள்ளவன் ஆத்மஸ்வரூபமான ஓங்காரத்தால் ஆத்மாவை தியானம் செய்யவேண்டியது[19]

(4) ओमितिब्रह्म ஓமிதிப்ரஹ்ம = ஓம் என்பது பிரம்மம்[20]

---

16. ஓங்கார ஞானத்தால் ஆத்மாவை எப்படி அறியலாம் என்பது சந்தேகம் - ஓங்காரம் ஆத்மாவின் காரியமன்று. ஆத்மாவைப்போல் அது சர்வவியாபி. ஆகவே எப்படி முதலாவது பிரகரணத்தின் அர்த்தம் சித்திக்கும்.

17. இந்த வாக்கியத்தினால் யமன் நசிகேதசனுக்கு ஓங்காரமே பிரம்மம் என்று உபதேசிக்கிறார். ஒருவன் சித்தநிரோதம்செய்து ஓங்காரத்தை உச்சரிப்பதில் எந்த சைதன்னியம் விளங்குகிறதோ அது ஓங்காரத்துக்குச் சமீபத்திலிருப்பதால் தான் சாகாரந்திரியாயப்படி ஓங்காரத்தால் அது இலட்சிக்கப்படுகிறது. பிரம்மபுத்தி உண்டாவதற்குச் சமீபகாரணம் ஓங்காரமாயிருப்பதால் ஓங்காரமே பிரம்மம் என்று சொல்லப்படுகிறது.

18. விஷ்ணுபுத்தியுடன் உபாசிக்கப்பட்ட பிரதிமைபோல் பிரம்மபுத்தியுடன் உபாசிக்கப்பட்ட ஓங்காரம் பிரம்மபிராப்திக்கு உபாயமாயிருக்கிறது.

19. இதனால் பரஅபரபிரம்மதிருஷ்டியுடன் ஓங்காரத்தைஉபாசித்தால், அவைகளின் ஞானம் உண்டாகிறது என்று ஏற்படுகிறது மேலும் சமாதிநிஷ்டன் ஓங்காரத்தை அநுஸந்தானம் செய்துகொண்டு ஸ்தூலமான அகாரத்தை சூட்சுமமான உகாரத்திலும், அதை காரணமான மகாரத்திலும், அதை காரியகாரணரகிதமான பிரத்தியகாத்மாவினிடத்திலும் உபசம்ஹாரம் செய்து, பிரத்திய காத்மாவாகவே இருந்துவிடுகிறான். ஆனதால் ஓங்காரம் அந்தஸ்திதியை அடைய உபாயமாயிருக்கிறது.

20. இந்த கட்டையையே புருஷன் என்பது போல், சாமானாதிகரண்யத்தினால் இந்த ஓங்காரமே பிரம்மம் என்று சுருதி கூறுகிறது.

(5) **ॐकारएवेदं सर्वं** ஓங்கார ஏவேதம் ஸர்வம் ஓங்காரமே இது எல்லாம் [21]

இவ்விதமாய் ஓங்காரமும் பிரம்மம் அல்லது ஆத்மாவும் ஒன்று என்று சொல்லுவதினால் ஆத்மாவை அடைய ஓங்காரம் சாதகமாயிருக்கிறது என்று மேற்கூறிய சுருதிகளும் இன்னும் அநேக சுருதிகளும் ஸ்பஷ்டமாய் கூறுகின்றன. பழுதை கிளிஞ்சல் முதலியவைகள் சர்ப்பம் வெள்ளி முதலிய கற்பனைகளுக்கு ஆஸ்பதமாயிருக்கின்றன. இது போல் அத்வயமான பரமார்த்த சத் ஸ்வபாவமுள்ள ஆத்மா பிராணாதிகற்பனைகளுக்கு ஆஸ்பதமாயிருக்கிறது. இப்படியே பிராணாதிகற்பனைகளை விஷயமாக்கும் சர்வவாக்கு பிரபஞ்சத்துக்கு ஓங்காரம் ஆஸ்பதமாயிருக்கிறது. (அதாவது வாக்கு பிரபஞ்சமே ஓங்காரம்). இந்த ஓங்காரம் ஆத்மாவாகவே யிருக்கிறது. ஏனெனின் ஓங்காரம் ஆத்மாவைக்கூறும் பதம். ஆத்மாவில் கற்பிக்கப்பட்ட பிராணாதிகள் எவ்விதத்திலாவது விளங்காமல் இருக்க முடியாது. இந்த விளக்கம் ஓங்காரத்தினின்று முண்டாகிற வாசகபதங்களால் தான் சாத்தியம். நாமதேயத்துக்கு வேறாக யாதொன்றுமில்லை என்று சுருதிகள் கூறுகின்றன. "வாக்கினால் உச்சரிக்கப்பட்ட விகாரங்களெல்லாம் நாமமாத்திரமே" விகாரங்களெல்லாம் வாக்கு ஆகிற நூலாலும் நாமமாகிற கயிறாலும் கட்டப்பட்டிருக்கின்றன. "எல்லாம் நாமத்திலேயே இருக்கின்றன". இப்படி ஓங்காரமே சகலத்துக்கும் ஆசிரயமாயிருப்பதால் பிரகிருதத்தில் இது எல்லாம் ஓங்காரம் என்று **ओमित्येतदक्षरमिदं सर्वं** ஓமித்யேதத் அக்ஷரமிதம் ஸர்வம் என்று சுருதி கூறுகிறது. நாமங்களால் குறிப்பிடவேண்டிய விஷய விகாரங்கள் நாமமன்றியிருக்கமாட்டா. நாமங்கள் ஓங்காரத்துக்கு வேறாக இல்லை. ஆகையால் எல்லாம் ஓங்காரமே. பரப்பிரம்மமும் நாமோச்சாரண உபாயத்தாலேயே அறியத்தக்கதாயிருப்பதால் அதுவும் ஓங்காரமாகவே இருக்கிறது.

तस्य उपव्याख्यानं தஸ்ய உபவ்யாக்யாநம்:—பராபர பிரம்மமாகிய ஓங்காரத்துக்கு இந்த கிரந்தம் உபவியாக்கியானம். (அதாவது பிரம்மத்தை அறிய உபாயமாயிருப்பதால் பிரம்மத்துக்குச் சமீபத்திலிருக்கிற ஓங்காரத்தின் அர்த்தத்தைச்சொல்லுகிற இந்த கிரந்தம் இபபோது ஆரம்பிக்க வேண்டியது தான்.

---

21. ஓங்காரம் சர்வத்துக்கும் ஆதாரம். அப்படியே பிரம்மமும் சர்வத்துக்கு ஆதாரம். ஆகையால் ஓங்காரபிராப்தியே பிரம்மபிராப்தி என்று இந்த சுருதிகூறுகிறது.

22. ஏனெனின் ஓங்காரத்தினின்றும் தான் சர்வவசனங்களுமுண்டாகின்றன. ஆகையால் ஓங்கார சமஸ்தத்துக்கும் ஆதாரம்.

भूत......பூதம்......:—மேற் சொல்லிய நியாயப்படியே பூத பவிஷ்யத் வர்த்தமானங்களிலுள்ள யாவற்றும் ஓங்காரமே

सर्वं ओंकारएव ஸர்வம் ஓங்கார ஏவ:—காலாதீதமாயும் காரியத்தால் அனுமானிக்கக் கூடியதாயுமிருக்கிற அவ்வியாகிருதம் முதலியவை யாவற்றும் ஓங்காரமே.

மாண்டூக்ய உபநிஷத்தின் விசிஷ்டாத்வைத பாஷிய தமிழ் மொழிபெயர்ப்பு.

முதலாவது கண்டம். 1 - வது மந்திரம்.

கூரநாராயண பாஷ்யம் :—

முமுக்ஷுவான அதிகாரி சகலதுக்க நிவிர்த்தியுடன் பரமானந்தத்தை அடையும் பொருட்டு சமஸ்த வியஸ்தமான பிரணவத்தால் (அதாவது அகார, உகார, மகார, அர்த்தமாத்திரை இவைகளின் சேர்க்கையாலும், தனிமையாலும்) பிரதிபாதிக்கப்படுகிற பகவதுபாசனத்தை அவனுக்கு கற்பிப்பதற்காக இந்த உபநிஷத்து ஆரம்பிக்கப்படுகிறது.

ओं ஓம்=ஓம்முதலில் சமஸ்தப் பிரணவத்தால் கூறப்படும் உபாசனத்தைக் வேதம் கூறுகிறது. ஓதம் + ஜகத்து + அஸ்மின் (அதாவது ஜகத்தானது இதனிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கிறது) என்னும் வியுத்பத்தியால் ஓம் என்று கூறப்பட்ட யாதொரு பிரம்ம முண்டோ

एतत् तत् ஏதத் தத்=அந்த பிரம்மமானது

अक्षरं அக்ஷரம்=சத்தியம்

इदं सर्वं இதம் ஸர்வம்=இந்த விசிஷ்டமான பிரபஞ்சம் இதில் கோர்க்கப்பட்டிருப்பதால் இதுவே சர்வம். ஓங்கார வாச்சியமான பிரம்மம் என் அக்ஷரமென்று கூறப்பட்டதெனின் ந + க்ஷரதீதி = அக்ஷரம் என்கிற வியுத்பத்தியால் மூன்று காலங்களிலும் ஒரேவிதமாய் நித்தியமாயிருக்கிறது என்னும் அபிப்பிராயத்தால் சப்த பிரவிர்த்திக்குக் காரணத்தை பிரதிக்ஞையுடன் சுருதி கூறுகிறது.

तस्य उपव्याख्यानं தஸ்ய உபவ்யாக்யானம் :—

तस्य தஸ்ய=ஓம் என்கிற பதத்தால் கூறப்பட்ட வஸ்துவை அக்ஷரமென்று கூறுவதில்

उपव्याख्यानं உபவ்யாக்யானம் = உபபன்னம் + வியாக்கியாணம் அதாவது உசிதமான வியாக்கியானம் சொல்லப்படுகிறது. வியாக்கியானம் என்றால் எதிலே விவரமாய் சொல்லப்படுகிறதோ அது என்று அர்த்தம். இது சப்தப்பிரவிர்த்திக்குக் காரணம்

அந்த சப்தப் பிரவிர்த்திக்குக் காரணம் எதுவெனின்

भूतं பூதம்=பிரம்மமானது சென்ற காலத்திலும் இருக்கிறது

भवत् பவத்=வர்த்தமான காலத்திலுமிருக்கிறது.

भविष्यत् பவிஷ்யத்=வரப்போகிற காலத்திலுமிருக்கிறது. எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கிறதென்று அர்த்தம். ஆகையால் அக்ஷரமென்று கூறப்பட்டது.

इति இதி=இந்த பதத்தை உபவியாக்கியானத்தோடு சேர்த்துக் கொள்ளவேண்டும்.

सर्वं ओंकार एव ஸர்வம் ஓங்கார ஏவ=எந்த அக்ஷரமானது சர்வமாக இருக்கிறதென்று கூறப்பட்டதோ அந்த அக்ஷரத்தை விட வேறானது சர்வமாக இருக்கிறதா என்ற கேள்விக்கு இல்லை என்று உத்தரம் சொல்லுகிறார்.

सर्वं ஸர்வம்=சமஸ்தமும்

ओंकार एव ஓங்கார ஏவ=ஓம் என்கிற பதத்தால் கூறப்படும் அக்ஷரமே சர்வம். அதைத் தவிர வேறு சர்வம் இல்லை என்று அர்த்தம்.

यच्च யச்ச:—அக்ஷர சப்தப் பிரவிர்த்திக்குக் காரணமான, மூன்று காலங்களிலும் ஒரேவிதமாயிருக்கிற தன்மை வேறு ஒன்றிற்கும் ஏற்படமாட்டாதென்கிறார்.

त्रिकालातीतं த்ரிகாலாதீதம் = மூன்று காலங்களிலுண்டாகும் விகாரமற்ற

यत् अन्यत् யத் அந்யத்=வேறான எந்த வஸ்து உண்டோ

तदपि ओंकार एव ததபி ஓங்கார ஏவ=அந்த வஸ்துவும் ஓங்காரத்தால் கூறப்படும் பிரம்மமே. அதைவிட வேறான இயம்பப்பட்ட வஸ்து இல்லை என்பது கருத்து.

இரங்க ராமானுஜ பாஷ்யம்.

अतसीगुच्छ सच्छायमञ्चितोरस्थलं श्रिया ।
अञ्जनाचल श्रृंगारमञ्जलि र्ममगाहतां ॥
व्यासं लक्ष्मणयोगीद्रं प्रणम्यान्यान्गुरूनपि ।
मांडूक्योपनिष द्व्याख्यां करिष्येविदुषांमुदे ॥

அதஸீகுச்ச ஸச்சாயமஞ்சிதோரஸ்தலம் ஶ்ரியா ।
அஞ்ஜநாசல ஶ்ருங்காரமஞ்ஜலிர்மம காஹதாம் ॥
வ்யாஸம் லக்ஷ்மணயோகீந்த்ரம் ப்ரணம்யாந்யாந்குரூநபி ।
மாண்டூக்யோபநிஷத்வ்யாக்யாம் கரிஷ்யே விதுஷாம்முதே ॥

காசாம்பூங் கொத்துப்போல் கறுப்பாயும் இலக்ஷ்மியால் அலங்கரிக்கப்பட்ட மார்பையுடையவராயும் மைமலைக்குச் சமானமாயுமிருக்கிற பகவானை என்னுடைய அஞ்சலி பந்தம் அடையட்டும்.

வியாசனையும் இலக்ஷ்மண யோகீந்திரனையும், இதர குருக்களையும் நமஸ்கரித்து, வித்துவான்களுடைய சந்தோஷத்தின் பொருட்டு மாண்டூக்கிய உபநிஷத்திற்கு வியாக்கியானம் செய்கிறேன்.

அகார உகார மகார அர்த்தமாத்திரை ஸ்வரூபமான நாலு பாதங்களோடு கூடின ஓங்காரமே அநிருத்த பிரத்யும்ன சங்கரஷண, வாசுதேவ என்னும் பெயரையுடைய விசுவ, தைஜஸ பிராஞ்ஞ, துரீய என்று பெயருள்ள நாலு பாதங்களோடு கூடின பிரம்மமென்று அறிக்கவேண்டியதற்காக இந்தப் பிரகாரணம் ஆரம்பிக்கப்படுகிறது.

इदं सर्वं இதம் ஸர்வம்=சேதநாசேதன ஸ்வரூபமாகிய இந்த சமஸ்த ஜகத்து

ओमित्येतदक्षरं ஓமித்யேதத்க்ஷரம்=ஓங்காரமே.

तद्यथाशंकुना सर्वाणि पर्णानि संतृण्णानि
एवमोंकारेण सर्वा वाक् संतृण्णा - ओंकारएवेदं सर्वम्

தத்யதா சங்குநா ஸர்வாணி பர்ணாநி ஸந்த்ருண்ணாநி
ஏவமோங்காரேண ஸர்வா வாக் ஸந்த்ருண்ணா
ஓங்காரஏவேதம் ஸர்வம்

(ஒரு கிளையில் இலைகள் தொத்திக்கொண்டிருப்பதுபோல் ஓங்காரத்தில் சகல சப்தங்களும் கோர்க்கப்பட்டிருக்கின்றன.) என்கிற சுருதி இதற்குப் பிரமாணம்.

तस्य उपव्याख्यानं தஸ்ய உபவ்யாக்யானம்=ஓங்காரத்தின் குணம் மகிமை, உபாசனம், இவைகள் விஸ்தாரமாய் கூறப்படுகின்றன.

மூன்று காலத்தால் பரிச்சின்னமாகவும் அதாவது அநித்தியமாகவும் மூன்று காலத்தால் அபரிச்சின்னமாகவும் அதாவது நித்தியமாகவு மிருக்கிறதெல்லாம் ஓங்காரமென்று அர்த்தம். ஓங்காரத்தினின்று முண்டான பூ: ஸுவ: முதலிய வியாஹிருதிகளிடத்திலுண்டாகிய வேதங்களால் சகல ஜகத்தும் சிருஷ்டிக்கப்பட்டது.

த்வைத பாஷ்ய மொழி பெயர்ப்பு.

ஓம். ஹயக்கிரீவருக்கு நமஸ்காரம். இஹபர லோகங்களின் போகத்தில் விரக்தனும் சமதமாதி சாதனங்களுடன் கூடியுமிருக்கிற முமுக்ஷுவுக்கு அநிஷ்ட நிவிர்த்தி சுகப்பிராப்தி இவைகளுக்குக் காரணமான பகவத் ஸ்வரூப ஞானத்தைக் கொடுக்க இந்த மாண்டூக்கிய உபநிஷத்து ஏற்பட்டிருந்தாலும், அது சரியாக வியாக்கியானம் செய்யப்படவில்லை என்றும், உள்ளபடி வியாக்கியானம் செய்யப்படாததினால் அந்த பகவத்ஸ்வரூபம் தெரியமாட்டாதென்றும் நினைத்து அதற்குச் சரியான வியாக்கியானம் செய்ய இச்சிக்கிறவராகிய பகவான் பாஷ்யகாரரான ஸ்ரீ ஆநந்த தீர்த்த முனிவர் செய்யப்போகிற கிரந்தம் நிர்விக்கினமாய் முடியும் பொருட்டும், சிஷ்யர்களுக்கு பகவத் ஸ்வரூபம் தெரியும் பொருட்டும் பகவானை உபநிஷத்திற் சொல்லிய விசேஷணங்களாலேயே அதாவது (1) आनन्दमयः ஆநந்தமய: (I-6) என்பதினால் பூர்ணாநந்தரூபம் (2) एषसर्वज्ञः ஏஷ ஸர்வஜ்ஞ: (I-6) என்பதினால் பூர்ணமான ஞான ஸ்வரூபம் (3) एषयोनिः सर्वस्य ஏஷ யோநி: ஸர்வஸ்ய (I-6) என்பதினால் சகல சிருஷ்டிக்கும் சாதகமான சக்தியுடன் கூடியிருத்தல், (4) त्रिकालातीतं த்ரிகாலாதீதம் (I-1) என்பதினால் நித்தியமாயிருத்தல் (5) प्रणवोऽव्ययः ப்ரணவோ(அ)வ்யய: என்பதினால் நாசமில்லாமை (6) स्थूलभुक् प्रविविक्तभुक् आनन्दभुक् ஸ்தூலபுக் ப்ரவிவிக்தபுக் ஆநந்தபுக் (I-1, 2, 3,) என்பதினால் விசுவன் முதலிய நான்கு ரூபங்களால் சகலத்தையும் புஜித்தல். (7) तुरीयं पदमश्नुते துரீயம் பதம் அஶ்நுதே என்பதினால் அடையத்தகுந்த சிரேஷ்டமான ஸ்தானம். இப்படிப்பட்ட விசேஷணங்களாலேயே பகவானை அடியில் கண்ட மங்களாசரண சுலோகத்தினால் ஸ்துதிக்கிறார்.

पूर्णानन्द ज्ञानशक्तिस्वरूपं नित्यमव्ययम् ।
चतुर्धा सर्वभोक्तारं वंदेविष्णुं परंपदम् ॥

பூர்ணாநந்த ஜ்ஞாநஶக்திஸ்வரூபம் நித்யமவ்யயம் ।
சதுர்தா ஸர்வபோக்தாரம் வந்தேவிஷ்ணும் பரம்பதம் ॥

இந்த உபநிஷத்துக்கு விசுவன் முதலான ரூபங்களுடன் கூடின விஷ்ணுவே விஷயம். அவரை அடைவதே பிரயோஜனம் அவரை அறிகிற யோக்கியனே அதிகாரி. பிரயோஜனத்தால் சம்பந்தமும் ஏற்படுகிறது. விஷயாதி நான்கும் சித்திக்கிறபடியால் இந்த கிரந்தம் ஆரம்பிக்கத்தக்கதே. தேவதை ரிஷி முதலான

வர்களை அறியாவிட்டால் அநர்த்தம் சம்பவிக்கும் என்று சுருதி சொல்லுவதால் அவைகளை அறியவேண்டியது அவசியம். இந்த உபநிஷத்துக்கு மண்டூக ரூபியான வருணன் ரிஷி- சங்கஸ் அனுஷ்டுப் நான்கு அவஸ்தைகளுடன் கூடின ஜீவன் விஷயம் அல்ல வென்பதும் நாராயணன் தான் விஷயமென்பதும் வருணன் ரிஷி என்பதும் அடியிற்கண்ட பிரமாண வசனத்தால் தெரியவருகிறது.

ध्यायन्नारायणं देवं प्रणवेनसमाहितः ।
मंडूकरूपी वरुणस्तु ह्यावहारिमव्ययम् ॥ (इति पाद्मे)

த்யாயந் நாராயணம் தேவம் ப்ரணவேநஸமாஹித꞉
மண்டூகரூபீ வருணஸ்து ஹ்யாவஹாரிமவ்யயம் ॥
(இதி பாத்மே)

இந்த உபநிஷத்தானது, விஷயத்தில் விரக்தனும் சமதமாதிகளுடன் கூடியுமிருக்கிற முமுக்ஷுவான அதிகாரிக்கு சமஸ்த துக்கத்தையும் நிவர்த்தி செய்து பரமாநந்தத்தைக் கொடுக்கும் பொருட்டு சமஸ்த வியஸ்த (அதாவது அகார உகார மகாரங்கள் சேர்ந்தும் தனித்தனிமையிலும்) பிரணவத்தால் அடையக்கூடிய பகவானுடைய உபாசனையைக் கூறுகிறது.

முதலில் சமஸ்தப்பிரணவப் பிரதிபாத்தியனைதயை ओं इति ஓம் இதி வாக்கியம் முதல் अयमात्मा ब्रह्म அயமாத்மா ப்ரஹ்ம (2) வரையிலுள்ள பதங்களால் கூறுகிறார். एतत् ஏதத் என்று சொல்லியிருப்பதால் यत् யத் என்கிற பதத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ओं इति ஓம் இதி :—ओतं + अस्मिन् + जगत् यस्मात् तस्मात् ओं हरिः
ஓதம் அஸ்மிந் ஜகத் யஸ்மாத் தஸ்மாத் ஓம் ஹரி꞉— இந்த பிரம்மத்தினிடத்தில் ஜகத்தானது கோக்கப்பட்டிருப்பதால் ஓம் என்று சொல்லப்பட்ட

(यत् யத்=எந்தப் பிரம்மமோ)

एतत् अक्षरं ஏதத் அக்ஷரம் = அந்த பிரம்மமானது அக்ஷரமென்று கூறப்படுகிறது.

அதாவது மூன்று காலத்திலும் நாசமடையாதது.

इदं இதம்= இந்த அக்ஷரமானது

सर्वं ஸர்வம்= பூர்ணகுணமுள்ளது.

तस्य தஸ்ய :=(அ-தை) என் ஓங்கார வாச்சியமான பிரம்மம் அக்ஷரமென்று கூறப்பட வேண்டுமெனின் மூன்று காலத்திலும்

அது நாசமற்றதாக இருப்பதால் அக்ஷர சப்தம் பிரவிர்த்தித்திருக்கிறதென்கிறார்.

तस्य उपव्याख्यानं தஸ்ய உபவ்யாக்யாநம்=ஓம் என்கிற அக்ஷரத்தால் பிரதிபாதித்தியமான பிரம்மத்தை அக்ஷர சப்தம் கூறுகிறதென்பதில் வியாக்கியானம் (அதாவது विशिष्य आख्यायते अनेन इति விசிஷ்ய ஆக்யாயதெ அநேந இதி=) சரியான வியாக்கியானம் அதாவது அந்த சப்தப்பிரவிர்த்திக்குக் காரணமானது சொல்லப்படுகிறது என்பது அர்த்தம். அது என்னவெனின்

भूतं பூதம்=ஓம் என்று கூறப்பட்ட பிரம்மம் சென்ற காலத்திலு மிருக்கிறது.

भवत् பவத்=இப்போது மிருக்கிறது.

भविष्यत् பவிஷ்யத்=வரப்போகிற காலத்திலுமிருக்கிறது. எப்போதும் ஒரே ரீதியா யிருக்கிறதேன்பது கருத்து. ஆகவே அது அக்ஷரமென்று சொல்லப்படுகிறது.

इति இதி என்கிற பதத்தை உபவியாக்கியானத்தோடு சேர்க்க வேண்டும்.

सर्वं ओंकार एव ஸர்வம் ஓம்கார ஏவ :-இதம் சர்வம் என்கிற வாக்கியத்தால் அக்ஷரத்துக்கு பூர்ணத்தன்மை சொல்லப்பட்டது. அது வேறு எதற்காவது பொருந்துமாவெனின் பொருந்ாது என்று கூறுகிறார். ओंकारः एव ஓம்கார: ஏவ ஓம் என்று கூறப்படும் அக்ஷரமே

सर्वं ஸர்வம்= பூர்ணமாயிருக்கிறது. மற்றது இல்லை என்பது கருத்து.

यच्च யச்ச :-அ-கை:—பூதம் முதலிய பதங்களால் கூறப்பட்டு, எப்போதும் ஏகரூபமாயும் மூன்று காலத்தையும் அதிக்கிரமித்து யிருப்பதும் அக்ஷர சப்தத்துக்குக் காரணம். அதுவும் அன்னிய வஸ்துவுக்கு இல்லை என்கிறார்.

यच्चान्यत् त्रिकालातीतं யச்சாந்யத் த்ரிகாலாதீதம்=மூன்று காலத்துக்குறிய விகார மற்றதாகவும் மூன்று காலத்திலு மகப்படாததாகவும் சித்ஸ்வ பாவமாகவும் எது இருக்கிறதோ

तदपि ओंकार एव ததபி ஓம்கார ஏவ = அதுவும் அதாவது இலக்ஷ்மியின் ரூபமும் ஓங்காரமே. ஓம் என்று கூறப்படுகிற அக்ஷர மென்று பெயருள்ள பிரம்மமே- அதைவிட வேறான அப்படிப்பட்ட வஸ்து யாதொன்று மில்லை என்பது கருத்து. மூன்று காலங்களுக்குறிய விகாரங்கள் லக்ஷ்மியிடத்தில் காணப்படா

மை ஈசுவரப்பிரசாதத்தாலே தான் த்விர லக்ஷ்மியின் சாமர்த்தியத்தால் ஏற்படவில்லை என்பது கருத்து.

एत् என்ற சப்தம் பிரம்மம் ஸ்ரீதத்துவம் இவைகளோவிட வேறு வஸ்து யாதொன்றும் காலத்திரயாதீதமல்ல வென்பதைக் கூறுகிறது.

பிரமாண வாக்கியங்கள் :—

ध्यायन्नारायणं देवं प्रणवेन समाहितः ।
मण्डूकरूपी वरुणस्तुष्टावहरि मव्ययम् ॥ (पाद्मे).
ओमित्युक्तं तुयद्ब्रह्मतदक्षर मुदाहृतम् ।
ओतमस्मिन्जगद्यस्मादों तस्माद्भगवान्हरिः ॥
तदिदं गुणपूर्त्यैव सर्वमित्येव शब्दितम् ।
भाविभूत भवत्कालेष्वेकरूप तयाहरिः ।
सर्वदानित्य इत्येषाव्याख्योंकारस्य कीर्त्तिता ॥ (इति बृहत्संहितायां).
ओमित्याक्रियते यस्मादोंकारो सर्वत परः ।
सर्वत्वमिति पूर्णत्वं तन्नान्यस्यहरेः क्वचित् ॥ (इति नैर्गुण्ये).

𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌣𑌵𑍇𑌨 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 ।
𑌮𑌣𑍍𑌡𑍂𑌕𑌰𑍂𑌪𑍀 𑌵𑌰𑍁𑌣𑌸𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌾𑌵𑌹𑌰𑌿𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥ (𑌪𑌾𑌦𑍍𑌮𑍇)
𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑍁𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ।
𑌓𑌤𑌮𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌜𑌗𑌦𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍋𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌹𑌰𑌿𑌃 ॥
𑌤𑌦𑌿𑌦𑌂𑌗𑍁𑌣𑌪𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵𑌶𑌬𑍍𑌦𑌿𑌤𑌮𑍍 ।
𑌭𑌾𑌵𑌿𑌭𑍂𑌤𑌭𑌵𑌤𑍍𑌕𑌾𑌲𑍇𑌷𑍍𑌵𑍇𑌕𑌰𑍂𑌪𑌤𑌯𑌾𑌹𑌰𑌿𑌃 ॥
𑌸𑌰𑍍𑌵𑌦𑌾𑌨𑌿𑌤𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑍇𑌷𑌾𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑍋𑌂𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌤𑌾 ॥
(𑌇𑌤𑌿 𑌬𑍃𑌹𑌤𑍍𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂)
𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍋𑌂𑌕𑌾𑌰𑍋 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌪𑌰𑌃 ॥
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌤𑍍𑌵𑌂 𑌤𑌨𑍍𑌨𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌹𑌰𑍇𑌃 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 ॥
(𑌇𑌤𑌿 𑌨𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑍍𑌯𑍇)

உபநிஷத்தின் இரண்டாவது மந்திரம்.

सर्वं ह्येतद्ब्रह्मायमात्मा ब्रह्म सोयमात्मा चतुष्पात् ॥ 2 ॥

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑍋𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌾𑌤𑍍 ॥ ௨ ॥

एतत् 𑌏𑌤𑌤𑍍 = இந்த
सर्वं हि 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌹𑌿 = சமஸ்தமும்
ब्रह्म 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 = பிரம்மம்
अयं 𑌅𑌯𑌂 = இந்த
आत्मा 𑌆𑌤𑍍𑌮𑌾 = ஆத்மா

ब्रह्म ப்ரஹ்ம=பிரம்மம்

सः ஸ:=அந்த

अयं அயம்=இந்த

आत्मा ஆத்மா=ஆத்மா

चतुष्पात् சதுஷ்பாத்=நான்கு பாதமுள்ளது.

ச-பா :—வாச்சியமும் வாசகமும் ஒன்றாக இருந்தாலும் வாசகமே பிரதானமாக முந்தின மந்திரத்திற் கூறப்பட்டது. "எல்லாம் ஓம்" என்று சொன்னது வாசக பிரதானத்தை உத்தேசித்துத்தான். இந்த மந்திரத்தில் வாச்சியத்தைப் பிரதானமாக கூறுதலானது வாச்சியமும் வாசகமும் பிரிக்கப்படாத ஒன்று என்று அறியும் பொருட்டாம். அப்படி வாச்சியத்தைப் பிரதானமாய்க் கூறுவிடின் "பதார்த்த மானது அதின் பெயரை அனுசரித்திருப்பதால் பெயரும் பெயருள்ளதும் ஒன்று என்று சொன்னது ஔபசாரம்" என்று நினைக்கும்படியிருக்கும். வாச்சியமும் (பதார்த்தமும்) வாசகமும் (பெயரும்) அபேதம் (ஒன்று) என்று சொன்னதின் கருத்து யாதெனின், ஒரே பிரயத்தினத்தினால் இரண்டையும் தள்ளிவிட்டு இரண்டுக்கும் விலக்ஷணமான பிரம்மத்தை அறிவதேயாம். இனிவரும் 8-வது உபநிஷத்து வாக்கியத்தில் पादा मात्रा: मात्रा: च पादा: பாதா: மாத்ரா: மாத்ரா: ச பாதா:= அதாவது பாதங்கள் ஓங்காரத்தின் மாத்திரைகள், மாத்திரைகளே பாதங்கள் என்று சொல்லியிருப்பதில் முற்கூறிய கருத்து விளங்குகிறது. இந்த வாச்சிய வாசக அபேதத்தைத்தான் பிரிருக்கத்தில் காரிய காரண ரூபமான இது எல்லாம் பிரம்மம் सर्वं ह्येतत् ब्रह्म ஸர்வ-ஹ்யேதத்-ப்ரஹ்ம என்கிற சுருதி கூறுகிறது. ஓங்காரமென்று சொன்னதெல்லாம் பிரம்மம்.

अयमात्मा ब्रह्म அயமாத்மாப்ரஹ்ம=இப்படி. பரோக்ஷமாய் கூறப்பட்ட பிரம்மத்தை பிரத்தியக்ஷமாய் காண்பிக்கும் பொருட்டு "இந்த ஆத்மா பிரம்மம்" என்று சுருதி கூறுகிறது. விசுவதைஜஸ பிராஞ்ஞ துரீய என்கிற விபாகங்களோடு கூடின ஆத்மாவே பிரம்மம் என்று காட்டும் பொருட்டு விரலை இருதயத்தில் வைப்பதாகிய அபிநயத்தால अयं அயம் இந்த ஆத்மா வென்று குறிப்பிடப்படுகிறது.

सोयमात्मा चतुष्पात् ஸோயமாத்மா சதுஷ்பாத் :—இந்த ஆத்மா நான்கு பாதங்களுள்ளது. ஓங்கார வாச்சியமான ஆத்மா சர்வத்துக்கும் அதிஷ்டானமாயிருப்பதால் பர (சிரேஷ்டமாயும்) பிரத்

தியகாத்மாவாயிருப்பதால் அபரமாயும் இருக்கிறது. இப்படி காரிய காரண ரூபத்தால் சர்வத்துக்கும் ஸ்வரூபமாயிருக்கிற ஆத்மாவை சுலபமாய் அறியும் பொருட்டு ஆத்மா நான்கு பாதங்களுடன் கூடியிருப்பதாய் கற்பிக்கப்படுகிறது. நிரவயமா யிருக்கிற இந்த ஆத்மாவின் பாதங்கள் மிருகங்களின் பாதங்கள் போலில்லை. ஆனால் வியவஹாரத்துக்காக கார்ஷாபணம் என்னும் நாணயத்துக்கு பாதங்கள் கற்பிக்கப் பட்டிருப்பதுபோல் ஆத்மாவுக்கும் கற்பிக்கப்படுகின்றன. விசுவனை தைஜஸனிடத்திலும் தைஜஸனை பிராஞ்ஞனிடத்திலும், பிராஞ்ஞனை துரீயத்திலும் லயம் செய்வதினால் துரீயம் நிச்சயம் செய்யப்படுகிறது. ஆகையால் பாதசப்தத்தால் துரீயத்தை அறிய சாதகமான கருவியாக அறிய வேண்டியது. துரீயன் அடையத்தகுந்த ஸ்தான மாகையால் அதை அடைய சாதகமானது பாதம் என்று சொல்லப்படுகிறது.

I - 2 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்·)

ரூ பா :—

एतत् ஏதத்=மூன்று காலத்தால் பரிச்சின்னமான

सर्वं ஸர்வம்=எல்லா வஸ்துக்களும்

ब्रह्म ப்ரஹ்ம=பிரம்மமென்று அர்த்தம். அதினால் யாது பிரயோஜனம் சித்தித்ததெனின்

अयं அயம்=இந்த ஓங்காரமானது

आत्मा ब्रह्म ஆத்மா ப்ரஹ்ம=எல்லாருக்கும் ஆத்மாவான பிரம்மமே. ஆகையால் ஓங்காரத்தை சர்வத்துக்கும் ஆத்மாவான பிரம்மமென்று அறியவேண்டியது.

सोयमात्माचतुष्पात् ஸோயமாத்மா சதுஷ்பாத்=ஓங்கார ரூபமாக பாவிக்கப்பட்ட இந்த ஆத்மா நாலு பாதங்களோடு கூடினவனென்று அர்த்தம்.

கூ—பா :

சர்வம் ஓங்கார ஏவ என்கிற இடத்தில் ஓம் பதத்தால் கூறப்படும் பிரம்மம் பரிபூர்ணமென்று சொல்லப்பட்டது. அந்த பிரம்மம் எப்படி பரிபூர்ணமாக இருக்கும் என்கிற சங்கையை பிரமாணத்தால் நிவிர்த்திக்கிறார்.

एतत् ஏதத்=இந்த ஓங்காரத்தால் கூறப்படும் அக்ஷரமென்று பெயருள்ள

ब्रह्म ப்ரஹ்ம=பிரம்மமானது

सर्वं ஸர்வம்=பூர்ணமாக இருக்கிறது.

हि ஹி :—परमं योमहद्ब्रह्म, तदेतद्ब्रह्म परमं कवीनां, पूर्णमदः पूर्णमिदं பரமம் யோமஹத்ப்ரஹ்ம, ததேதத்ப்ரஹ்ம பரமம் கவீநாம், பூர்ணமத: பூர்ணமிதம் முதலிய சுருதிகளில் இது பிரசித்தம்,

अयं அயம்=ஜீவர்களுக்கும் கிரியைகளில் ஸ்வாதந்திரியானுபவமிருப்பதால் அவ்விடத்திலும் நியமனஞ் செய்கிறவன் ஒருவன் இருக்கவேண்டுமே எனின் சொல்லுகிறார்.

अयमात्मा ब्रह्म அயம் ஆத்மா ப்ரஹ்ம = பிரம்மாதிகளிடத்தில் ஆதான கர்த்தாவாக ஆத்மா இருந்தபோதிலும், இந்த ஆத்மா அயம்பிரம்ம அதாவது முன் சொன்ன ஓம்பதவாச்சியமான பிரம்மமே, வேறல்லவென்று அர்த்தம்.

सोयं ஸோயம்:—இப்படி சமஸ்த பிரணவத்தால் கூறப்பட்டதை உபாசனையின் பொருட்டு நிரூபித்து, இனி அகார, உகார, மகார நாதங்களால் பிரதிபாதிக்கப்பட்ட விசுவாதி பகவத் ரூபங்களின் உபாசனையை மூன்ருவது கண்டத்தில் நிரூபிக்கும் பொருட்டு அந்த ரூபங்களைக் கூறுகிருர்.

सोयं ஸோயம்=சமஸ்த ஓங்காரத்தால் கூறப்பட்டும், அக்ஷரனென்று பெயருள்ளவராயும்; பிரம்மாதிகளில் நியாமகருக இருக்கிற ஆத்மா

चतुष्पात् சதுஷ்பாத=நான்கு பாதங்கள் அதாவது ஸ்வரூபங்களான அம்சங்கள் எவனுக்கிருக்கின்றனவோ அவன் சதுஷ்பாத் சகல ஜீவர்களையும் நியமனஞ் செய்கிறதினுல் அந்தந்த சரீரத்தில் நான்கு ரூபமாக இருக்கிறவன் என்று அர்த்தம்.

இப்படி மாண்டூக்கிய உபநிஷத்தின் முதல் கண்டத்தின் விசிஷ்டாத்வைத பாஷ்யத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு
முற்றிற்று.

I - 2 - வது மந்திரம். (துவைதம்.)

सर्वं हि एतत् ब्रह्म ஸர்வம் ஹி ஏதத் ப்ரஹ்ம :—சர்வம் ஓங்கார ஏவ என்கிற இடத்தில் ஓம் பதத்தால் கூறப்படும் பிரம்மம பூர்ணம் என்று சொல்லப்பட்டது. அது எப்படி பூர்ணமாக இருக்கலாமென்னும் சங்கைக்கு பிரமாண பூர்வமாக உத்தரம் சொல்லுகிருர்.

एतत् ஏதத்=அக்ஷரம் என்று சொல்லப்பட்ட

ब्रह्म ப்ரஹ்ம=பிரம்மம்

सर्वं ஸர்வம்=பூர்ணமாக இருக்கிறது

हि ஹி=இது பிரசித்தியைக் கூறுகிறது.

परमं योमहद्ब्रह्म, तदेवब्रह्मपरमं कवीनां, पூர्णमदः पூर्णमिदं பரமம் யோ மஹத் ப்ரஹ்ம, ததேவப்ரஹ்மபரமம் கவீநாம், பூர்ணமத: பூர்ணமிதம் முதலியவைகளில் பிரம்மம் பூர்ண மென்பது பிரசித்தமாயிருக்கிறது.

अयमात्माब्रह्म அயமாத்மாப்ரஹ்ம :—(அ-கை) ஜீவர்களுக்கு ஹிதாஹிதமான காரியங்களில் ஸ்வாதந்திரிய மில்லாததால் அவர்களுக்குள் ஒருவன் நியந்தாவாக இருக்கவேண்டும். அவனுக்கும் பூர்ண குணங்களும் வேண்டியதாகையால் எப்படி ஓம் பதவாச்சியமான பிரம்மமே பூர்ணமென்று சொல்லலாமெனின் இவனே அவ்விடத்திலும் நியந்தா, வேறு ஒருவனுமில்லை என்று சொல்லுகிறார். பிரம்மாதிகளை நியமனஞ் செய்கிறவனும் விஷ்ணுவே தவிர வேறில்லை.

अयं आत्मा அயம் ஆத்மா= ஸ்ரீ பிரம்மா இவர்களிடத்தில் ஆதாரதி கர்த்தாவாக (கிரகித்தல் முதலிய காரியங்களைச் செய்விக்கிற) ஆத்மா எவனோ அவன் ब्रह्म ப்ரஹ்ம=மேற் கூறிய ஓம் பதவாச்சியமான பிரம்மமே. வேறு ஒன்று மல்ல என்பது கருத்து.

सोयमात्माचतुष्पात् ஸோயமாத்மாசதுஷ்பாத்:—(அ-கை) இவ்விதமாக சம்பூர்ண பிரணவத்தால் பிரதிபாதிக்கக்கூடிய பிரம்மத்தை உபாசனையின் பொருட்டு நிரூபணஞ் செய்து, இந்த மந்திரத்தில் அந்த பிரணவத்தின் அம்சங்களான அகார உகார மகார நாதங்களால் பிரதிபாத்தியமான விசுவன், தைஜஸன், பிராஞ்ஞன், துரீயன் இவர்களாகிற பகவத் ரூபங்களின் உபாசனையை மூன்றுவது கண்டத்தில் கூறுவதற்காக அந்த ரூபங்களை இவ்விடத்தில் கூறுகிறார்.

सोयं ஸோயம் =சம்பூர்ணமான ஓம் பதத்தால் கூறப்படும் அக்ஷரமென்னும் பொருளா ஸ்ரீ பிரம்மா முதலானவர்களிடத்தில் நியாமகனாக இருக்கிற

आत्मा ஆத்மா=ஆத்மா

चतुष्पात् சதுஷ்பாத்=நான்கு அம்சங்களை யுடையவன். சர்வ ஜீவநியாமகனாக அந்த தேகங்களில் விசுவாதி நான்கு ரூபமாக இருக்கிறான் என்று அர்த்தம்.

பிரமாண வாக்கியம் :—

पूर्णस्तु हरिरेवैको नान्यत्पूर्णं कदाचन ।
विनाचप्रकृतिं नान्यत्कालातीतं परात्मनः ।
कालश्चैव दिशोवेदाः प्रकृत्यात्मान ईरिताः ।

अभिमानात्तु जीवानां न कालातीता भवेत् ।
मुक्ताना मपिपूर्वत्र कालसंबन्ध ईरितः ।
पूर्णत्वेच सदाविष्णोः प्रसिद्धं सर्ववेदतः ।
सोये विष्णूरमाब्रह्म रुद्रानन्तादि नस्सदा ।
आदा नादनकर्तृ त्वादात्मा तेषामगोचरः ।
इति मंडूकरूपी सन्ददर्शवरुणः श्रुतिम् ॥ (इति हरिवंशेषु)·

அபிமாநாத்து ஜீவாநாம் ந காலாதீதா
பவேத் । முக்தாநா மபிபூர்வத்ர காலஸம்பந்த ஈரித: ।
பூர்ணத்வேச ஸதாவிஷ்ணோ: ப்ரஸித்தம் ஸர்வவேதத: ।
ஸோயம் விஷ்ணூரமாப்ரஹ்ம ருத்ராநந்தாதி நஸ்ஸதா ।
ஆதா நாதநகர்த்ருத்வாதாத்மா தேஷாமகோசர: ।
இதி மண்டூகரூபீ ஸந்ததர்ஸவருண: ஸ்ருதிம் ॥
(இதி ஹரிவம்ஸேஷு)

உபநிஷத்தின் மூன்றுவது மந்திரம். (அத்வைதம்.)

जागरितस्थानो बहिः प्रज्ञः सप्ताङ्ग एकोनविंशतिमुखः स्थूलभुग्वैश्वानरः प्रथमः पादः ॥ 3 ॥

ஜாகரிதஸ்தாநோ பஹி: ப்ரஜ்ஞ: ஸப்தாங்க ஏகோநவிம்ஸதிமுக: ஸ்தூலபுக்வைஸ்வாநர: ப்ரதம: பாத: ॥ 3 ॥

प्रथमः ப்ரதம:=முதலாவதான
पादः பாத:=பாதம்
वैश्वानरः வைஸ்வாநர:=வைசுவாநரன்
(सः ஸ:= இந்த வைசுவாநரன்)

जागरितस्थानः ஜாகரிதஸ்தாந:=ஜாக்கிராவஸ்தையை உடையவன்.

बहिः प्रज्ञः பஹி: ப்ரஜ்ஞ:=தனக்கு பின்னமான பாஹிய விஷயங்களில் பிரஞ்ஞையுடையவன்

सप्ताङ्गः ஸப்தாங்க:= ஏழு அங்கங்களுள்ளவன்

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஸதிமுக: = பத்தொன்பது முகங்களுடையவன்

स्थूलभुक् ஸ்தூலபுக்=ஸ்தூல சப்தாதி விஷயங்களை அநுபவிக்கிறவன்

ச-பா :—ஆத்மா நான்கு பாதங்களுள்ளது எப்படி [23] என்பது இனி கூறப்படுகிறது.

जागरितस्थानः ஜாகரிதஸ்தாநஃ=இவன் ஜாக்கிராவஸ்தையில் அபிமான முள்ளவன்.

बहिःप्रज्ञः பஹிஃப்ரஜ்ஞஃ = மேலும் தனக்கு பின்னமான பாஹ்ய விஷயங்களில் பிரஞ்ஞையுள்ளவன், [24] அதாவது அவித்தையாலுண்டான [25] பிரஞ்ஞை பாஹ்ய விஷயங்களை விஷயமாக்குகிறது போல் காணப்படுகிறது.

सप्तांगः ஸப்தாங்கஃ=இவன் ஏழு அங்கங்களோடு கூடினவன் (1) தேஜோமயமான ஸ்வர்க்கலோகம் சிரசு (2) அநேக வர்ணங்களுடன் கூடின சூரியன் கண் (3) அநேகபிரகாரமாய் வீசும் காற்று பிராணன் (4) விஸ்தார குணமுடைய ஆகாசம் தேகத்தின் மத்திய பாகம் (5) அன்னத்திற்கு ஹேதுவான ஜலமே மூத்திரஸ்தானம் (6) பூமியே பாதம் (7) அக்கினி ஹோத்திர கற்பனைக்கு அங்கமான ஆஹவனீயாக்கினியே முகம் ஆக ஆத்மா இவ்வேழு அங்கங்களோடு கூடியிருக்கிறான்.

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஶதிமுகஃ=இவன் 19-முகங்களுள்ளவன். அதாவது ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, மனது, புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகிய அந்தக்கரண பேதம் நான்கு ஆக இந்த பத்தொன்பது வழிகள் மூலமாக ஞானமும் அனுபவமும் சித்திக்கிறபடியால் இவைகள் முகங்கள் போலிருக்கின்றன.

---

23. ஆத்மாவுக்கு இரண்டுபாதங்களே யில்லையே, நான்கு பாதங்களிருப்பதாக எப்படிச்சொல்லலாம். வாஸ்தவத்தில் பாதங்களே யில்லாவிட்டாலும் சாத்தியசாதனரூபமாக அவைகளை கற்பிப்பதில் விரோதமில்லை என்னும் அபிப்பிராயத்துடன் முதல் பாதத்தை பிரதிபாதிக்கிறார்.

24. பிரஞ்ஞை என்பது புத்தி. அது உள்ளே யிருக்கிறது என்பது பிரசித்தம். பாஹ்ய விஷயங்களில் இருக்கிறதாக எப்படிச் சொல்லலாம். சைதன்னிய ரூபமான பிரஞ்ஞை வெளிவிஷயத்தில் விளங்குகிறதில்லை ஏனெனின் அது விஷயத்தை அபேக்ஷிக்கிறதில்லை. ஆனால் புத்தி ரூபமான பிரஞ்ஞை பாஹ்யவிஷயத்தில் விளங்குகிறது.

25. பாஹ்ய விஷயமே வாஸ்தவத்திலில்லாமலிருக்க அந்த பிரஞ்ஞை பாஹ்யவிஷயத்தில் விளங்குவதாகஎப்படிச் சொல்லலாம் ? ஸ்வரூபமான பிரஞ்ஞை வாஸ்தவத்தில் வெளிவிஷயத்திலில்லாவிட்டாலும் புத்திவிருத்திரூபமான பிரஞ்ஞை அஞ்ஞானத்தால் பாஹ்யவிஷயத்தை விஷயமாக்குகிறது. இந்த புத்திவிருத்தியும் வாஸ்தவத்தில் பாஹ்யவிஷயத்தை விஷயமாக்கவில்லை. ஏனெனின் தானுமில்லை, விஷயமும் கற்பிதம். ஆகையால் புத்திவிருத்தியானது பாஹ்ய விஷயத்தை பிரகாசிப்பிக்கிறதாகச் சொல்லுவது கற்பனையே.

स्थूलभुक् ஸ்தூலபுக் :—மேற்கூறிய முகங்கள் மூலமாக ஸ்தூல சப்தாதிகளை அனுபவிக்கிறபடியால் ஆத்மா (வைசுவாநரன்) ஸ்தூலபுக் எனப்படுகிறான்.

वैश्वानर: வைஶ்வாநர: =(விசுவ) சமஸ்தமான (நரர்களுக்கும் அவர்களுடைய நாநாவிதமான தர்மாதர்மகர்மானுசாரமாக கர்மபலனைக் கொடுக்கிறவன். ஆகையால் விசுவாநரன் என்று பெயருள்ளவன் அல்லது விசுவ=சகலமான, நர=மனிதன் (பிண்டம்) அதாவது சகலஸ்வரூபத்தைவிட வேறாகாத விராட் விசுவாநரன். 26 விசுவாநரனே வைசுவாநரன்.

प्रथम: पाद: ப்ரதம: பாத: := இந்த வைசுவாநரன் முதல் பாதம். இனிவரும் மூன்று பாதங்களின் ஞானம் இதனால் தான் உண்டாவதால் இவன் முதல் 27 பாதமாக சொல்லப்பட்டான்.

अयमात्मा ब्रह्म चतुष्पात् அயமாத்மா ப்ரஹ்ம சதுஷ்பாத் என்கிற வாக்கியத்தினால் பிரத்தியகாத்மாவை நான்கு பாதங்களுடன் கூடியிருப்பதாக சொன்ன சந்தர்ப்பத்தில் சுவர்க்க லோகாதிகளுக்கு சிரசு முதலிய அங்கங்களை எப்படி பிரஸ்தாபிக்கலாம். இந்த விவரத்தை கூறினதில் தோஷமில்லை. ஏனெனின் ஆத்தியாத்மிக ஆதிதெய்விக பிரபஞ்சமெல்லாம் விராட் முதலான நான்கு பாதங்களுடன்கூடியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. இப்படி சமஸ்தப் பிரபஞ்சமும் நாசமடைந்தபின் அத்வைதமே சித்திக்கிறது. சமஸ்தத்திலுமிருக்கிற ஆத்மா ஒன்றே என்று பார்க்கப் பட்டவனாவான். சமஸ்த பூதங்களும்ஆத்மாவி லிருக்கின்றன என்று அறியப்பட்டதாக ஆகும் यस्तु सर्वाणिभूतानि आत्मन्येवानुपश्यति யஸ்து ஸர்வாணி பூதாநி ஆத்மந்யேவாநுபஶ்யதி = (ஈசாவாசியம் 6-வது மந்திரம் முதலிய சுருதிகளின் அர்த்தம் சொன்னதாக ஆகும். இல்லாவிடின் ஆத்மா ஒவ்வொரு சரீரத்திலும் வெவ்வேறு என்று சாங்கியர்கள் சொல்லுவது போல் பாவிக்கவேண்டியதாக வரும். அப்போது சகல சுருதிகளால் பிரதிபாதிக்கப்

---

26. ஜாக்கிராவஸ்தையுடன் கூடின மனிதர்கள் அநேக ருபமாயிருப்பதால் ஆத்மாவை வைசுவாநரன் என்று எப்படிச் சொல்லலாம்? சமஸ்தமான பிண்டங்களின் ஸ்வரூபத்துக்கு சமஷ்டியான விராட் என்று பெயர். அந்த விராட்டைவிட ஜீவர்கள் வேறாகாததால் ஆத்மாவை வைசுவாநரன் என்று சொல்லலாம்.

27. விசுவன் தைஜஸனிடமிருந்து உண்டாவதால் தைஜஸனை முதல் பாதமாகச் சொல்லவேண்டுமே எனின், லயசிந்தனக்கிரமப் பிரகாரத்தில் விசுவனை தைஜஸனிடத்தில் லயம் செய்யவேண்டியதாக இருப்பதால் வைசுவாநரன் முதல் பாதம் என்று கூறப்பட்டது. உற்பத்திக்கிரமத்தை உத்தேசித்து கூறப்படவில்லை.

பட்ட அத்வைதம் சித்திக்காமற்போகும். ஆனால் சகல உபநிஷத்துக்களுக்கும் சகல தேகங்களிலுமிருக்கிற ஆத்மா ஒன்று என்று பிரதிபாதிக்கிறதில் இஷ்டம். ஆகையால் ஆத்யாத்மிகமான பிரத்தியகாத்மாவும், ஸ்வர்க்கலோகம் முதலியவைகளை அங்கங்களாக உடைய ஆதிதைவிகமான விராடாத்மாவும் ஒன்று என்ற அபிப்பிராயத்தால் சப்தாங்க வசனத்தைக் கூறினது யுக்தமே मुर्धाते व्यप तिष्याति மூர்தாதே வ்யபதிஷ்யதி = (சாந்தோக்கியம்) என்னையும் ஆத்மாவுக்குத் தனியாக உபதேசித்தால் உன் தலை விழுந்து போகும் என்றும் சுருதியும் இதையே சொல்லுகிறது. விராட்டும் விச்வனும் ஒன்று என்று சொன்னதினால் ஹிரண்ணிய கர்ப்பனும் தைஜஸனும் ஒன்று என்றும் அவ்வியாகிருதனும் பிராஞ்ஞனும் ஒன்று என்றும் அறிய வேண்டியது[28]

மதுப்பிராமணத்தில் (பி - IV - 5) यश्चायमस्यां पृथिव्यां तेजोमयोऽमृतमय: पुरुषो यश्चायमध्यात्मम् யஶ்சாயமஸ்யாம் ப்ருதிவ்யாம் தேஜோமயோ(அ)ம்ருதமய: புருஷோ யஶ்சாயமத்யாத்மம் (பிருதிவியிலிருக்கிறதே தேஜோமயமும், அமிருதமய புருஷன், பிரத்தியகாத்மாவும் இதுவே) என்று சொல்லியிருப்பதால் இந்த ஐக்கியம் அவ்விடத்திலும் கூறப்பட்டிருக்கிறது. சுஷுப்திக்கும் அவ்வியாகிருதத்துக்கும் வித்தியாசமில்லாதபடியால் இரண்டுமொன்றுதான் ஆகையால் சகல துவைத நாசத்தால் அத்துவைதமே சித்திக்கிறது. ஆகையால் தத்துவ ஞானத்தாலும் ஆசாரியோபதேசத்தாலும் தத்துவ ஞானத்திற்கு பிரதி பந்தங்களாகிய மானஸப்பிரபஞ்சமாகிய துவைதம் நிவிர்த்தியானவுடன் அத்வைதமே சித்திக்கிறதென்கிறது சித்தம்.

2 - வது கண்டம். 1 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்.)

ஈ—பா :—

அ-கை :—மேற்சொன்ன நான்கு பாதங்களை விஸ்தாரமாக கூறுகிறார்.

जागरितस्थान: ஜாகரிதஸ்தாந:=ஜாக்கிரதசையை உண்டுபண்ணுகிறவன் என்று அர்த்தம். ஏனெனின் =जागरिते ब्रह्म ஜாகரிதே ப்ரஹ்ம என்கிற சுருதியில் பிரம்மசப்தம் அநிருத்தனை ஜாக்கிரதசையின் நிர்வாஹகன் என்று கூறுகிறது.

---

28. விச்வனும் விராட்டும் ஸ்தூலப்பிரபஞ்சத்தின் அபிமானிகளானதால் ஒன்று என்றும் தைஜஸனும் ஹிரண்ணிய கர்பனும் சூக்ஷ்ம பிரபஞ்ச அபிமானிகளானதால் ஒன்று என்றும் பிராஞ்ஞன் சுஷுப்தியில் தன்னிடத்தில் சகலத்தையும் லயப்படுத்தி தான் நிர்விசேஷமா யிருப்பதாலும் பிராஞ்ஞனும் அவ்வியாகிருத பிரளய காலத்தில் சகலத்தையும் தன்னிடத்தில் லயப்படுத்தி தான் நிர்விசேஷமா யிருப்பதாலும் பிராஞ்ஞனும் அவ்வியாகிருதனும் ஒன்று என்று அறியவேண்டும்.

बहिः प्रज्ञः பஹிஃ ப்ரஜ்ஞஃ=வெளியிலுள்ள ரூபாதி விஷயமான ஞானமுடையவன்.

सप्ताङ्गः ஸப்தாங்கஃ=ஏழு அங்கங்களோடு கூடினவன். அதாவது வைசுவாநர வித்தையில் சொல்லப்பட்ட சுவர்க்கம், சூரியன், வாயு, ஆகாசம், ஜலம், பிருதிவீ, இவைகளாகிற தலை, கண், பிராணன், நடுஉடல், உபஸ்தம், கால் ஆகிய ஆறு அங்கங்களும் ஜீவனுமாகிய ஏழாவது அங்கமும் ஆக இவைகளையுடையவன்.

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஶதிமுகஃ=ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, பிராணன் ஐந்து, அந்தக்கரணம் நாலு, ஆக பத்தொன்பது முகங்களோடு கூடினவன் இவைகளெல்லாம் ஜீவன் மூலமாக அதிஷ்டானங்கள் என்று அறியவேண்டியது.

स्थूलभुक् ஸ்தூலபுக்=ரூபாதி விஷயங்களை அனுபவிக்கிறவன், **ऋतं पिबन्तौ** ருதம் பிபந்தௌ (கட-I-3-1) என்கிற சுருதியில் ஜீவன் கர்மபலத்தை அனுபவிக்கும்படி செய்கிற பரமாத்மாவை பானம் பண்ணுகிறவன் என்று சொல்லியிருப்பதுபோல். ஜாக்கிறதபிமானிக்கு ரூபாதி விஷய ஞானத்தைக் உண்டுபண்ணுகிறபடியால் அதிருத்தனே ஸ்தூலபுக் என்று அறியவும்.

वैश्वानरः வைஶ்வாநரஃ=எல்லாரையும் பிரேரணை செய்கிறவனாக எவனிருக்கிறானோ அவன் ஓங்காரத்தின் முதலாவது பாதம் ௩.

௯—பா.

அ—ஸ்கை:—அந்த பாதங்களுக்கு ஸ்தானங்கள் எவை வியாபாரமென்ன. ரூபங்கள் எப்படிப்பட்டவை. புதிக்கத்தக்கவை எவை, பெயரென்ன இந்த கேள்விகளுக்கு கிரமமாக உத்தரந் சொல்லுகிறார்.

जागरितस्थानः ஜாகரிதஸ்தாநஃ=எந்த விடத்திலிருந்து ஜீவன் விழித்துக்கொண்டிருக்கிறானோ அந்த ஸ்தானத்துக்கு ஜாகரிதமென்று பெயர். அதுவே சக்ஷுஸ் அந்த சக்ஷுஸை ஸ்தானமாக உடையவன்.

बहिः प्रज्ञः பஹிஃ ப்ரஜ்ஞஃ=வெளியிலுள்ள விஷயங்களை தெரியப்படுத்துகிறவனும் அறிகிறவனுமாயிருக்கிறவன்

सप्ताङ्गः ஸப்தாங்கஃ=நாலு கைகள், இரண்டு பாதங்கள், யானைமுகமாயிருப்பதால் துதிக்கை ஆக ஏழு அங்கங்களையுடையவன்.

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஶதிமுகஃ = மத்தியில் யானைமுகமும், இரண்டு பக்கங்களிலும் ஒன்பது ஒன்பது மனுஷியமுகங்களும் ஆக பத்தொன்பது முகங்களையுடையவன்.

स्थूलभुक् ஸ்தூலபுக் = ஸ்தூலமான போகங்களை புஜிக்கிறவனும், புஜிக்கும்படி செய்கிறவனுமாயிருக்கிறவன்.

वैश्वानरः வைஶ்வாநர:=(विश्यते=गम्यते, ज्ञायते सर्वैः விஶ்யதே=கம்யதே, ஜ்ஞாயதே ஸர்வை:) எல்லாராலும் அடையத் தகுந்தவனும் அறியத்தகுந்தவனுமாயிருக்கிறவன். அல்லது विश्वं விஶ்வம் என்றால் எல்லாராலும் அறியக்கூடிய ஸ்தூலவஸ்து. அதை புஜிக்கிறபடியால் அதின் சம்பந்தத்தோடு கூடினவன் वैश्वः வைஶ்வ: नरः நர: = नरीयते நரீயதே = நாசத்தை அடையாதவன் ஆகவே वैश्वश्चासौ नरश्च=वैश्वानरः வைஶ்வஶ்சாஸௌ நரஶ்ச=வைஶ்வாநர: இப்படிப்பட்ட வைசுவாநரன் प्रथमः पादः ப்ரதம: பாத: = சகல தேசங்களிலும் ஆதாரகர்த்தாவாக இருக்கிற ஆத்மாவுக்கு முதல் ரூபமென்று அர்த்தம். ॥ 3 ॥

3-வது மந்திரம். துவைதம்.

அ-கை:—அந்த அம்சங்கள் எவை அவர்களுடைய ஸ்தானங்கள் எவை. வியாபாரங்கள் எவை. ரூபங்கள் எப்படிப்பட்டவை. அவர்களுக்கு போக்கியம் எது. இவைகளையெல்லாம் இப்போது சொல்லுகிறார்.

जागरितस्थानः ஜாகரிதஸ்தாந:=எந்த இடத்திலிருந்து விழித்துக்கொண்டிருக்கிறாரோ அந்த இடம் ஜாகரிதம் அதாவது சக்ஷுஸ். அதையே ஸ்தானமாக உடையவன் ஜாகரிதஸ்தானः கண்ணை ஸ்தானமாக உடையவன்.

बहिः प्रज्ञः பஹி: ப்ரஜ்ஞ: பஹி: என்கிற சப்தம் பாஹ்ய பதார்த்தத்தைக் கூறுகிறது. பிரஞ்ஞः என்னும் பதம் பிரஞ்ஞையை உண்டுபண்ணுகிறவனைக் கூறுகிறது. ஆகவே பாஹ்ய பதார்த்தத்தின் ஞானத்தை உண்டு பண்ணுகிறவன் என்பது அர்த்தம்.

सप्ताङ्गः ஸப்தாங்க:=நான்கு கைகள், இரண்டு பாதங்கள், யானை முகமுள்ளவனானபடியால் துதிக்கை ஒன்று ஆக ஏழு அங்கங்களுடன் கூடினவன்.

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஶதிமுக: = நடுவிலிருக்கிற முகம் யானை முகம்போலிருக்கிறது. ஒவ்வொரு பக்கத்திலும் ஒன்பது மனுஷ்ய முகம்போலிருக்கிறது. ஆகவே பத்தொன்பது முகங்களுள்ளவன்.

स्थूलभुक् ஸ்தூலபுக் = ஸ்தூலமான ஸ்தூலபோகங்களை புஜிக்கிறவன்.

वैश्वानरः வைஶ்வாநர:=விசுவமென்றால் எல்லாராலும் அறி யத்தகுந்த ஸ்தூல வஸ்து. அதை புஜிக்கிறவன் வைசுவன். நர வென்றால் நாசமற்றவன். ஆகவே ஸ்தூல வஸ்துவை புஜிக்கிறவனும் நாசமற்றவனுமு மிருக்கிறவன்.

प्रथमः पादः ப்ரத²ம: பாத³:=முதலாவது அம்சம் சர்வ தேகங் களில் ஆதாரம் முதலிய காரியங்களைச் செய்து கொண்டிருக்கிற ஆத்மாவின் முதல் ரூபம் என்று அர்த்தம். ॥ 3 ॥

உபநிஷத்தின் 4-வது மந்திரம் அத்வைதம்.

स्वप्नस्थानोऽन्तःप्रज्ञः सप्ताङ्ग एकोनविंशतिमुखः प्रविविक्तभुक्तैजसो द्वितीयः पादः ॥ 4 ॥

ஸ்வப்நஸ்தா²நோऽந்த:ப்ரஜ்ஞ: ஸப்தாங்க³ ஏகோநவிம்ஶதிமுக²: ப்ரவிவிக்தபு⁴க்தைஜஸோ த்³விதீய: பாத³: ॥ 4 ॥

स्वप्नस्थान; ஸ்வப்நஸ்தா²ந:=ஸ்வப்நவஸ்தையை ஸ்தானமாயுடையவன் (அதாவது அதில் அபிமான முடையவன்)

अन्तः प्रज्ञः அந்த:ப்ரஜ்ஞ:=உள்ளே பிரக்ஞையை யுடையவன்

सप्ताङ्गः ஸப்தாங்க³:=ஏழு அங்கங்களுடையவன்

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஶதிமுக²:=பத்தொன்பது முகங்களுடையவன்

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபு⁴க்=மிகவும் சூட்சுமங்களான பதார்த்தங்களை அனுபவிக்கிறவன்

तैजसः தைஜஸ:=தைஜஸன்

द्वितीयः த்³விதீய:=இரண்டாவதான

पादः பாத³:=பாதம்

ச-பா:—स्वप्नस्थानः ஸ்வப்நஸ்தா²ந:=இந்த தைஜஸனென்கிற திரஷ்டா வுக்கு [29] ஸ்வப்நம் ஸ்தானமாயிருப்பதால் அதாவது நான் என்னு டையது என்கிற அபிமானத்திற்கு விஷயமாயிருப்பதால ஆத்மா ஸ்வப்நத்தை அறிகிறான்.

अन्तः प्रज्ञः அந்த:ப்ரஜ்ஞ:=ஜாக்கிரத் காலத்திலிருக்கிற பிரக்ஞையானது அநேக சாதனங்களுடன் கூடியும், விஷயங்கள் மனதின் கற்பனையாகமட்டுமிருந்தும் அவைகள் தனக்கு வெளியே யிருப்பதாக பாவித்தும், அவைகளின் சம்ஸ்காரத்தை தன் மனதில் சேர்ப்பிவிக்கிறது. சித்திரமடங்கிய வஸ்திரம் [30] போல் இர

29. ஆத்மாவின் விசுவனென்கிய முதல் பாதத்தைக் கூறி இனி தைஜஸனென கிய இரண்டாவது பாதத்தைக் கூறுகிறான்.

30. ஜாக்கிரத்தின் வாசனையுடன் கூடின மனது ஸ்வப்நத்தில் ஜாக் கிறத் போலிருக்கிற தென்பதற்கு திருஷ்டாந்தம். துணியில் சித்திரத்தை எழுதிருந்தால் துணியானது சித்திரம்போல் காணப்படுகிறது. அப்படியே மனதும் ஜாக்கிறத் போல் காணப்படுகிறது.

படி ஸம்ஸ்காரமடைந்த மனதானது பாஹ்ய ஸாதனங்களை அபேக்ஷிக்காமல் அவித்தை காமங்களால் பிரேரணை செய்யப்பட்டு ஜாக்கிரத்போல் விளங்குகிறது.

अस्य लोकस्य सर्ववतो मात्रामापादेयत्

𑌅𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌤𑍋 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌮𑌪𑌾𑌦𑌾𑌯

அதாவது இந்த லோகத்தின் சமஸ்தமான அனுபவங்களின் வாசனைகளை கிரகித்துத் தூங்குகிறான் என்று பிருஹதாரண்யக ச்ருதி சொல்லுகிறது.

முண்டகோபநிஷத்தும் परेदेवेमनसि एकीभवति 𑌪𑌰𑍇𑌦𑍇𑌵𑍇𑌮𑌨𑌸𑌿 𑌏𑌕𑍀𑌭𑌵𑌤𑌿 முதல் अत्रएषदेवः स्वप्नेमहिमानं अनुभवति 𑌅𑌤𑍍𑌰𑌏𑌷𑌦𑍇𑌵𑌃 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌂 𑌅𑌨𑍁𑌭𑌵𑌤𑌿 வரையில் இந்த அர்த்தத்தையே கூறுகிறது.

இந்திரியங்களை அபேக்ஷித்து உள்ளிருக்கும் மனதின் வாசனா ரூபமான பிரஞ்ஞை ஸ்வப்நத்தில் எவனுக்கு இருக்கிறதோ அவன் அந்த: பிரஞ்ஞன்.

तैजसः 𑌤𑍈𑌜𑌸𑌃=விஷயங்களில்லாமலிருக்க கேவல பிரகாசஸ்வரூபமான பிரஞ்ஞையில் விஷயங்களின் வாசனை எவனுக்குத் தோன்றுகின்றதோ அவன் தைஜஸன்.

प्रविविक्तभुक् 𑌪𑍍𑌰𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌭𑍁𑌕𑍍=விச்வனுக்கு விஷயத்தோடு கூடின ஸ்தூல பிரஞ்ஞை போஜ்ஜியமாயிருக்கிறது. இவ்விடத்தில் கேவலம் வாசனாமயமான பிரஞ்ஞை போஜ்ஜியமாயிருக்கிறது. ஆகையால் வாசனாமயமான சூக்ஷ்மபோகத்தை யுடையவன் என்று அர்த்தம். மற்றது எல்லாம் முன்சொன்னபடியே. இரண்டாவது பாதம் தைஜஸன். ॥ 4 ॥

2-வது கண்டம் 2-வது மந்திரம் (விசிஷ்டாத்வைதம்.)

ரா° பா:—

स्वप्नस्थानः अन्तः प्रज्ञः 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑌃 𑌅𑌨𑍍𑌤𑌃𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃=ஸ்வப்நத்தில் உண்டான வஸ்துக்கள் ஜாக்கிர காலத்திலிருக்கிற வஸ்துக்கள்போல் பிறருடைய அனுபவத்துக்கு விஷயமாகமாட்டா. ஆகையால் அந்த வஸ்துக்களை அனுபவிக்கும்படி செய்கிறவன் பிரத்யும்நன் அவன் அந்த: பிரஞ்ஞன் எனப்படுகிறான்.

सप्ताङ्गः 𑌸𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑌃=ஸ்வப்நத்தில் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட ஸ்வர்க்கம் சூரியன் முதலிய ஏழு அங்கங்களோடு கூடினவன்.

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஸதிமுகஃ = ஸ்வப்நத்தில் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட பிராணங்கள், கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள், அக்காலத்தில் லயத்தை அடையாமலிருக்கிற அந்தக்கரணங்கள் நான்கு ஆக பத்தொன்பது முகங்களை உடையவன்.

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபுக் = தனியே அநுபவிக்கிறவன் ஸ்வப்நபதார்த்தங்கள் அந்தந்த புருஷனால் மட்டும் அநுபவிக்கப்படுகிறபடியால் ஸ்வப்ந தசையை அடைந்த ஜீவன் தனிமையில் அநுபவிக்கிறவனாயிருக்கிறான். அந்த ஜீவனுக்கு அதிஷ்டாதாவான तैजसः தைஜஸஃ தைஜஸ சப்தத்தால் கூறப்படும் பிரத்யும்னனையும் பிரவிவிக்தபுக் என்று அறியவேண்டும். மற்றவர்களால் அறியப்படாததாயும் அதிசூக்ஷ்மமாகவுமிருக்கிற பதார்த்தங்களை சொப்பனத்தின் அதிஷ்டாதாவான பிரத்யும்னன் தேஜஸ்போல் பிரகாசம் செய்கிறபடியால் தைஜஸன் என்று சொல்லப்படுகிறான். (4)

கூ. பா.

स्वप्नस्थानः ஸ்வப்நஸ்தாநஃ = ஜீவன் எந்த இடத்திலிருந்து ஸ்வப்நத்திலுண்டான பதார்த்தங்களை பார்க்கிறானோ அது ஸ்வப்நத்திலுள்ள ஸ்தானம். அதையே ஸ்தானமாக உடையவன் கண்ட தேசத்திலிருக்கிறவன்.

अन्तः प्रज्ञः அந்தஃ ப்ரஜ்ஞஃ = உள் பிரஜ்ஞையுள்ளவன். அதாவது வெளியிலிருக்கிற விஷயானுபோகத்தின் வாசனையாலுண்டான பதார்த்தங்களை அறியப்படுத்துகிறவனாயும் அறிகிறவனாயுமிருக்கிறவன்.

दृष्टञ्चा दृष्टञ्च श्रुतञ्चाश्रुतञ्चानुभूतञ्चा ननुभूतञ्च सर्वं पश्यति த்ருஷ்டஞ்சா த்ருஷ்டஞ்ச ஸ்ருதஞ்சாஸ்ருதஞ்சாநுபூதஞ்சா நநுபூதஞ்ச ஸர்வம் பஸ்யதி = பார்க்கப்பட்டதையும் பார்க்கப்படாததையும் கேட்கப்பட்டதையும் கேட்கப்படாததையும் அநுபவித்ததையும் அநுபவிக்கப் படாததையும் எல்லாவற்றையும் பார்க்கிறான் என்று சுருதி சொல்லியிருப்பதால் இவ்விடத்தில் ஸ்வப்ந பதார்த்தங்கள் ஜாக்கிறத்வாசனையால் உண்டாகின்றனவென்று பெரும்பான்மையாகச் சொல்லப்பட்டது.

सप्तांगः ஸப்தாங்கஃ = ...

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஸதிமுகஃ = முன்போலவே அர்த்தம்.

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபுக் = பாஹ்ய விஷயங்களை விட வேறான சொப்பன பதார்த்தங்களை புஜிக்கிறவன், புஜிக்கும்படி செய்கிறவன்.

तैजसः தைஜஸ: = தேஜோமயமான சித்தத்திலிருப்பதால் அப்பெயருள்ளவன்.

द्वितीयः पादः த்விதீய: பாத: = அவன் ஆத்மாவுக்கு இரண்டாவது பாதம் அதாவது ரூபம் எனப்படுகிறான். ॥ 4 ॥

I - 4 - வது மந்திரம். (துவைதம்)

स्वप्नस्थानः ஸ்வப்நஸ்தாந: = எந்த இடத்திலிருந்து ஜீவன் ஸ்வப்நத்திலுண்டாகும் பதார்த்தங்களைப் பார்க்கிறானோ அது ஸ்வப்நம். அதை ஸ்தானமாக உடையவன் ஸ்வப்நஸ்தானன் கண்ட தேகத்திலிருக்கிறவன் என்று அர்த்தம்.

अन्तः प्रज्ञः அந்த: ப்ரஜ்ஞ: = அந்த: என்னும் பதம் பாஹ்ய வஸ்து விஷய ஞானத்தாலுண்டாகும் வாசனா பரிணாமத்தைக் கூறுகிறது. பிரஞ்ஞ: என்னும் பதம் ஞானத்துடன் கூடினவனைக் கூறுகிறது. ஆகவே வாஸனாமய பதார்த்தத்தை அறியும்படிச் செய்கிறவனும் அறிகிறவனுமான தானும், அந்த: பிரஞ்ஞன் என்பதின் அர்த்தம்.

सप्तांग एकोनविंशति मुखः ஸப்தாங்க ஏகோநவிம்சதிமுக: = முன் போலவே அர்த்தம். ॥ 4 ॥

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபுக் = பாஹ்ய பதார்த்தங்களை விட வேறான வாசனாமய ஸ்வப்ந வஸ்துக்களை ஜீவனை புஜிக்கும்படி செய்கிறான். தானும் புஜிக்கிறான் (அறிகிறான்)

तैजसः தைஜஸ: = தேஜோமயமான சித்தத்திலிருப்பதால் தைஜஸன் என்கிற பெயருள்ளவன்.

द्वितीयः पादः த்விதீய: பாத: = ஆத்மாவின் இரண்டாவது ரூபம் என்று அர்த்தம். ॥ 4 ॥

உபநிஷத்தின் 5-வது மந்திரம். (அத்வைதம்).

यत्र सुप्तो न कंचन कामं कामयते न कंचन स्वप्नं पश्यति तत्सुषुप्तम् सुषुप्तस्थान एकीभूतः प्रज्ञानघन एवा ऽनन्दमयो ह्यानन्दभुक्चेतोमुखः प्राज्ञस्तृतीयः पादः ॥ 5 ॥

யத்ர ஸுப்தோ ந கஞ்சந காமம் காமயதே ந கஞ்சந ஸ்வப்நம் பச்யதி தத்ஸுஷுப்தம் । ஸுஷுப்தஸ்தாந ஏகீபூத: ப்ரஜ்ஞாநகந ஏவாऽநந்தமயோ ஹ்யாநந்தபுக் சேதோமுக: ப்ராஜ்ஞஸ் த்ருதீய: பாத: ॥

यत्र யத்ர=எந்த ஸ்தானத்தில் காலத்திலாவது.
सुप्तः ஸுப்த꞉=தூங்கினவன்
कञ्चन கஞ்சந=ஒரு
कामं காமம்=காமிய விஷயத்தையும்
न कामयते நகாமயதே=விரும்பமாட்டானோ
कञ्चन கஞ்சந= ஒரு
स्वप्नं ஸ்வப்நம்=ஸ்வப்நத்தையும்
न पश्यति ந பஶ்யதி=பார்க்கிறதில்லையோ
तत् தத்=அது
सुषुप्तं ஸுஷுப்தம்=காடநித்திரை ஸ்வப்நமில்லாத தூக்கம்
तृतीयः த்ருதீய꞉=மூன்றாவதான
पादः பாத꞉=பாதம்
प्राज्ञः ப்ராஜ்ஞ꞉=பிராஞ்ஞன்
(सः ஸ꞉=அவன்)
सुषुप्तस्थानः ஸுஷுப்தஸ்தாந꞉=சுஷுப்திஸ்தான முடையவன்
एकीभूतः ஏகீபூத꞉=ஒன்றாக இருக்கிறவன்
प्रज्ञानघनः एव ப்ரஜ்ஞாநகந꞉ ஏவ=அவிவேக ரூபமாயிருப்பதால் பிராஞ்ஞானகநன் எனப்படுகிறான்
आनन्दमयः हि ஆநந்தமய꞉ ஹி=ஆநந்தப்பிராயம்
आनन्दभुक् ஆநந்தபுக்=ஆநந்தத்தை அனுபவிக்கிறவன்
चेतोमुखः சேதோமுக꞉=ஜாக்கிரத் ஸ்வப்ந மனதுக்கு துவாரம்போலிருக்கிறவன்

ச-பா:—ஆத்மாவின் மூன்றாவது பாதம் இந்த மந்திரத்தில் கூறப்படுகிறது. இந்த மூன்றாவது பாதம் பிராஞ்ஞன். இவன் சுஷுப்தி அபிமானி. சுஷுப்தியாவது எந்த ஸ்திதியில் அல்லது காலத்தில் ஸ்தூலவிஷயவிருத்தியும் அதற்குவேறான வாசநா மாத்திரத்தின் விருத்தியும் இல்லையோ அதுவேயாம். தத்துவத்தை அறியாமையாகிய நித்திரை ஜாக்கிரத் ஸ்வப்நாவஸ்தைகளிலு மிருக்கிறது. இந்த அவஸ்தைகளுக்கு வேறான சுஷுப்தி அவஸ்தையின் லக்ஷணத்தைச் சொல்லும்பொருட்டு மேற்சொல்லிய இரண்டு விசேஷணங்களும் உபயோகிக்கப்பட் டிருக்கின்றன. அல்லது, தத்துவத்தைஅறியாமையாகிய தூக்கம் மூன்று அவஸ்தைகளுக்கும் சமானமாயிருப்பதால் ஜாக்கிரத்ஸ்வப்நங்களினின்றும் சுஷுப்தியைப் பிரித்துக் காண்பிக்கும் பொருட்டு மேற் சொல்லிய விசேஷணங்களை அதாவது யாதொரு கோறிக்கையையும் கோறாமலிருப்பது, ஸ்வப்நம் பார்க்காமலிருப்பது, இவைகளை உபயோகித்திருக்கலாம்.

அல்லது, இந்த சுஷுப்தி அவஸ்தையில் அல்லது காலத்தில் தூங்கும் மனிதன் யாதொரு காம்மியத்தையும் இச்சிக்கிறதில்லை. சுஷுப்தியில் மற்ற இரண்டு ஸ்திதிகளிற்போல் அன்னியதாகிரஹண ரூபமான ஸ்வப்ந தர்சனமாவது இச்சையாவது யாதொன்றுமில்லை. இந்த காடமான நித்திரையை ஸ்தானமாயுடையவன் அதாவது சுஷுப்தி ஸ்தானாபிமானியாக சொல்லப்படுகிறான்.

एकीभूत: ஏகீபூத:=ஜாக்கிர ஸ்வப்நங்களால் பிரிக்கப்பட்ட துவைத வியவஹாரங்களெல்லாம் மனதாற் கற்பிக்கப்பட்டவைகளாக யிருக்கின்றன. பகல் காலத்திலுள்ள சகலபதார்த்தங்களும் தங்கள் தங்கள் குணவிசேஷங்களை இழந்து போகாமலும் இறவில் பிரித் தறியப்படாமல் ஒரே அந்தகாரத்தில் முழுகிப் போவது போல் இருக்கின்றன. அப்படியே ஜாக்கிர ஸ்வப்ந வியவஹாரங்களும் தங்கள் தங்கள் விசேஷங்களை விடாமல் சுஷுப்தியில் ஒன்றாய்விட்டதுபோல் சொல்லலாம். அதாவது காரியங்களெல்லாம் காரணத்தை அடைந்து காரணமென்றே சொல்லப்படலாம். அந்த அவஸ்தையில் அந்த உபாதியுடைய ஆத்மா ஏகீபூதனாகிறான் அதாவது இவ்விடத்தில் எல்லாம் ஒன்றாய் விடுகிறது. ஆகையாற்றான் ஸ்வப்நாஜாக்கிரங்களின் மனோ கற்பனைகளான பிரஞ்ஞைகளும் சுஷுப்தி காலத்தில் மொத்தளாகாரம் போல் ஆய்விடுகிறது. இந்த அவஸ்தை அவிவேக ரூபமாயிருப்பதால் பிரஞ்ஞானகனமென்று சொல்லப்படுகின்றது. இராத்திரியில் இரவின் இருட்டால் பிரித்தறியப்படாத சர்வமும் கனம் அதாவது மொத்தளாகாரமாயிருப்பதுபோல் ஆத்மாபிரஞ்ஞான கனமாகவேயிருக்கிறான். एव ஏவ சப்தத்தால் பிரஞ்ஞையைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்று அர்த்தம்.

आनन्दमय: ஆநந்தமய:=மனது விஷய விஷயி ஆகாரமாக பரிணமிக்கிறதினால் உண்டாகும் சிரமமில்லை. அதனால் துக்கமில்லை. ஆனதால் ஆத்மா ஆநந்த மயன். அதாவது வெகு ஆநந்த முள்ளவன் என்று அர்த்தம். ஆநந்த ரூபமன்று. ஏனெனின் நாசமாகாத ஆநந்த மற்றவனாக இருக்கிறான்.

आनन्दभुक् ஆநந்தபுக்=உலகத்தில் சிரமமன்றியில் சுகியாயிருக்கிற புருஷன் ஆநந்தத்தை புஜிக்கிறதாகச் சொல்லப்படுகிறான். யாதொரு சிரமமில்லாத இந்த ஸ்திதி இவனால் அனுபவிக்கப்படுகிறபடியால் இவன் ஆநந்தபுக். एषोऽस्यपरम आनन्द: ஏஷோऽஸ்ய பரம ஆநந்த: என்கிற சுருதியும் சுஷுப்தியிலிருக்கிற புருஷனுக்கு தன் ஸ்வரூபமான நிரதிசயாநந்தம் விளங்குகிறதென்று கூறுகிறது.

चेतोमुखः சேதோமுக:=ஜாக்கிர ஸ்வப்நங்களை அறிய எவன் துவாரம் அதாவது காரணமாயிருக்கிறானோ. அதாவது ஜாக்கிர ஸ்வப்நங்களின் விஷயங்களை அறிய சேதஸ் துவாரம். அதாவது காரணமாயிருப்பதால் இவன் சேதோ முகன் எனப்படுகிறான்.

प्राज्ञः ப்ராஜ்ஞ:=சென்றவைகளையும், வரப்போகிற வைகளையும் அறியும் தன்மையும், சர்வவிஷயங்களை அறியும் தன்மையும் இவனுக்கே யிருப்பதால் இவன் பிராஞ்ஞன், சுஷுப்தியிலிருக்கிறவனும் ஜாக்கிர ஸ்வப்நங்களின் பிரஞ்ஞையுடன் கூடியிருந்தபடியால் இப்போது பிராஞ்ஞன் எனப்படுகிறான். ஞான மாத்திரம் இவனுக்கே ஏற்பட்ட ரூபமாயிருப்பதால் இவன் பிராஞ்ஞன். மற்றவர்களுக்கு ஞானமும் ஞானவிஷயமான விஷயங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

तृतीयः पादः த்ருதீய: பாத:=இந்த பிராஞ்ஞன் மூன்றாவது பாதம். ॥ 5 ॥

II - 3 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்.)

ஸம் பாம் :—

यत्र யத்ர=எந்த ஸ்தானத்தில்

सुप्तः ஸுப்த:=ஜீவன் தூங்கிக்கொண்டு

नकञ्चनकामं कामयते நகஞ்சந காமம் காமயதே = இராக முதலிய தோஷமற்றவனாக இருந்துகொண்டு, ஒன்றையும் இச்சிக்காமலும்

स्वप्नं ஸ்வப்நம்=ஸ்வப்நத்தை

नपश्यति நபஶ்யதி=பார்க்கவில்லையோ

तत् தத்=அந்த ஸ்தானத்தை

सुषुप्तं ஸுஷுப்தம்=சுஷுப்தி என்கிறார்கள்.

सुषुप्तस्थाने एकीभूतः ஸுஷுப்தஸ்தாநே ஏகீபூத:=சுஷுப்தி ஸ்தானத்தில் ஒன்றாக ஆகி அதாவது தான் சுஷுப்தி ஸ்தானமாக இருந்தான் என்று அர்த்தம். तदभावोनाडिषुतच्छ्रुतेरात्मनिच ததபாவோ நாடிஷு தச்ச்ருதேராத்மநிச=(III-2-7) என்கிற பிரம்ம சூத்திர அதிகரணத்திற் சொல்லியபடி சுஷுப்தஸ்தானனாக இருந்துகொண்டு

प्रज्ञानघनः ப்ரஜ்ஞாநகந:=ஞான ஸ்வரூபனாக இருக்கிறான்.

आनन्दमयः ஆநந்தமய:=ஆநந்த ஸ்வரூபன். ஜீவனுக்கு சுஷுப்தி காலத்திலுண்டான ஆநந்தானுபவத்தை உண்டுபண்ணுகிறவன் என்பது கருத்து.

चेतोमुख: சேதோமுகஃ=சுத்த மனதால் கிரகிக்கத்தகுந்தவ ஞயும் ஞானாநந்த ஸ்வரூபனுகவு மிருக்கிறவன்.

आनन्दभुक् ஆநந்தபுக் = ஆநந்தத்தை அனுபவிக்கிறவனுக இருக்கிறுன். இப்படி

प्राज्ञ: ப்ராஜ்ஞஃ=எந்த பிராஞ்ஞனிருக்கிருனே, சங்கர்ஷணன் என்று பெயருள்ள அந்த பிராஞ்ஞன்

तृतीय: पाद: த்ருதீயஃ பாதஃ=மூன்ருவது பாதமாக இருக்கிருன்

கூ. பா.

அ-கை :—மூன்ருவது பாதத்தின் ஸ்தானத்தைச் சொல்லுவதற்காக அந்த ஸ்தானத்தின் ஸ்வரூபத்தைக் கூறுகிருர்.

यत्र யத்ர=எந்த இடத்தில்

सुप्त: ஸுப்தஃ = அஞ்ஞானத்தால் மறைபட்டவன் அல்லது

प्राज्ञेनात्मनासंपरिष्वक्त : ப்ராஜ்ஞேநாத்மநாஸம்பரிஷ்வக்தஃ=சுஷுப்தி காலத்தில் ஜீவன் பிராஞ்ஞனை பரமாத்மாவுடன் சம்பந்தத்தை அடைகிருன் என்று சுருதியில் சொல்லியிருப்பதால் சுகரூபனை பகவானை அடைந்தவன்.

कञ्चनकामं கஞ்சநகாமம்=இச்சிக்கக்கூடிய யாதொன்றையும்

नकामयते நகாமயதே= இச்சிக்கிறதில்லை

कञ्चनस्वप्नं கஞ்சநஸ்வப்நம் = ஸ்வப்நத்திலுண்டான யாதொரு பதார்த்தத்தையும்

नपश्यति நபச்யதி=பார்க்கிறதில்லை. தன்னைவிட வேருன்றையும் பார்க்கிறதில்லை என்பது கருத்து.

तत् தத்=அந்த ஸ்தானத்தை

सुषुप्तं ஸுஷுப்தம்=சுஷுப்தமென்று சொல்லுகிருர்கள்.

सुषुप्तस्थान: ஸுஷுப்தஸ்தாநஃ = சுஷுப்தத்தை ஸ்தானமாக உடையவன் அதாவது ஹிருதய தாமரைப்பூவின் நடுவிலிருக்கும் காயின் நுணியிலிருக்கிறவன் என்பது தாத்பரியம்

एकीभूत: ஏகீபூதஃ=வைசுவாநரன், தைஜஸன், இவர்கள் போல் இவனும் ஞானம் ஆநந்தம் முதலான ரூபங்களுள்ளவன்.

प्रज्ञानघन: ப்ரஜ்ஞாநகநஃ=தர்மத்தால் சூழப்பட்ட ஜீவன் கனம் எனப்படுகிருன். சுஷுப்தி காலத்தில் ஜீவஸ்வரூபத்தை அறிகிறவன் கனப்பிரஞ்ஞன். மேல் கனப்பிரஞ்ஞன் என்று சொல்லியிருப்பதால் இவ்விடத்தில் பிரஞ்ஞானகனத்தை கனப்பிரஞ்ஞனுகவே சொல் மாற்றியிருப்பதுபோல் அறியலாம். அல்லது பிரஞாபிஃ+கன:+ஏன+ஸ:=எவனுல் ஜீவன் போதிக்கப்படுகிருனே அவன் என்று அறியவும்.

आनन्दमयः ஆநந்தமய:=பூர்ணாநந்தத்தை உடையவன் என்பது கருத்து.

हि ஹி=**यतोवाचोनिवर्त्तन्ते** யதோவாசோநிவர்த்தந்தே என்கிற சுருதியில் பிரசித்தமாயிருக்கிறவன்.

आनन्दभुक् ஆநந்தபுக்=விஷய போகங்களை விட்டு ஆநந்தத்தை அனுபவிக்கிறவனும் அனுபவிக்கும்படி செய்கிறவனுமாயிருக்கிறவன் என்று அர்த்தம். ஆகையால் ஸ்தூலத்தை புஜிக்கும் தன்மையும், பிரவிவிக்தமாக புஜிக்கும் தன்மையும் நித்திய பூர்ணாநந்தானுபவமுள்ளவனுக்கு கிரீடாரூபம் என்பது கருத்து.

चेतोमुखः சேதோமுக: = ஞானரூப முகத்தையுடையவன் முகமென்பது உபலக்ஷணம். ஞானரூப சகல அவயவங்களை உடையவனென்று அர்த்தம். ஆநந்தமய: சேதோமுக: என்கிற இரண்டு விசேஷணங்கள் மேற்சொன்ன இரண்டு ரூபங்களுக்குமுண்டு. நாந்த: பிரஜ்ஞ: என்று இனி வரும் விசேஷணம் நான்காவது ரூபத்துக்கும் இதற்கும் என்றும் அறியவும்**प्राज्ञः** ப்ராஜ்ஞ: ப்ரகர்ஷேண ஞாபயதி=ஜீவன் விசேஷமாய் பாஹ்ய ஸ்வாப்நிக பதார்த்தங்களை அறியும்படி செய்யாதவன். ஆகையால் பிராஜ்ஞன் என்று பெயருடையவன் அவன்

तृतीयः पादः த்ருதீய: பாத:=ஆத்மாவுக்கு மூன்றாவது ரூபம்
॥ 5 ॥

I - 5 - வது மந்திரம். (துவைதம்)

அ-கை:—மூன்றாவது பாதத்தின் ஸ்தானத்தை குறிப்பிடுவதற்காக ஸ்தான ஸ்வரூபத்தைக் கூறுகிறார்.

यत्र யத்ர = எந்த இடத்தில்

सुप्तः ஸுப்த:=सुं+(सुखरूपं)भगवन्तं प्राप्तः = सुप्तः ஸும் (ஸுகஸ்வரூபம் பகவந்தம்)+ப்ராப்த:=ஸுப்த:=அஞ்ஞானத்தால் சூழப்பட்டவன் அல்லது ஸுகஸ்வரூபியான பகவானை அடைந்தவன், இதற்கு

प्राज्ञेनात्मनासंपरिष्वक्तः ப்ராஜ்ஞேநாத்மநா ஸம்பரிஷ்வக்த: முதலிய சுருதிகள் பிரமாணம்.

नकञ्चन कामं कामयते நகஞ்சந காமம் காமயதே =இச்சிக்கக்கூடிய யாதொரு வஸ்துவையும் இச்சிக்கிறதில்லையோ

नकञ्चनस्वप्नं पश्यति நகஞ்சநஸ்வப்நம் பச்யதி =ஸ்வப்னத்திலுண்டான யாதொரு வஸ்துவையும் பார்க்கிறதில்லையோ, தான், தன்னுடைய காலம், அஞ்ஞானம், இவைகளைவிட வேறு ஒன்றையும் அறிகிறதில்லை என்பது கருத்து,

तत् सुषुप्तं தத் ஸுஷுப்தம் = அந்த ஸ்தானமானது சுஷுப்த மென்று சொல்லப்படுகிறது.

सुषुप्तस्थान: ஸுஷுப்தஸ்தாந: = சுஷுப்தத்தை ஸ்தானமா யுடையவன். ஹிருதய தாமரை பூவின் நுனியிலிருக்கிறவனெ ன்று அர்த்தம்.

एकीभूत: ஏகீபூத: = வைசுவாநரன் தைஜஸன் இவர்களு டன் சேர்ந்து ஒன்றாக ஆனவன்.

प्रज्ञान घन: ப்ரஜ்ஞாநகந: = அவித்தையால் சூழப்பட்ட ஜீவன் घन கநனென்று சொல்லப்படுகிறான். சுஷுப்தி காலத் தில் ஜீவனுடைய ஸ்வரூபம், அஞ்ஞானம், அத்துடன் கூடின கா லம் இம்மூன்றையும் ஜீவன் அறியும்படி செய்கிறபடியால் பிரஞ் ஞானகனனென்று சொல்லப்படுகிறான். प्रज्ञापित: + घन: (जीव:) येनस:=प्रज्ञानघन: ப்ரஜ்ஞாபித: + கந: (ஜீவ:) யேநஸ:=ப்ரஜ்ஞாந கந: அல்லது घनप्रज्ञ: கநப்ரஜ்ஞ: என்று இனி சொல்லப்போ கிறபடியால் பிரஞ்ஞானகன என்பதை கனப்பிரஞ்ஞன் என்பதின் மா றுதலாக அறியலாம்.

आनन्दमय: ஆநந்தமய: = மிகுந்த ஆநந்தமுள்ளவன். यतोवाचो निवर्त्तन्ते யதோவாசோ நிவர்த்தந்தே முதலிய சுருதிகளில் இது பிரசித்தம் என்பதை हि ஹி என்பது காட்டுகிறது.

आनन्दभुक् ஆநந்தபுக் விஷயானுபவ மன்றியில் ஆநந்தத் தை அனுபவிக்கிறவன். அனுபவிக்கும்படி செய்கிறவன். இவ் விடத்திற் சொல்லிய ஸ்தூலபுக், பிரவிவிக்தபுக், ஆநந்தபுக், இவைகள் நித்திய பூர்ணாநந்தானுபவ ரூபத்துக்கு விபரீதரூபமாயிருக்கிற தாக அறியவும்.

चेतोमुख: சேதோமுக: = ஞான ஸ்வரூபமான முகமுள்ளவன். ஞானஸ்வரூபமான வாயையுடையவன் என்பது கருத்து இந்த ஆநந்தமயத்வமும் சேதோமுகத்வமும் மேற் சொன்ன இரண்டு ரூபங்களிலுமுண்டு.

प्राज्ञ: ப்ராஜ்ஞ: = அதிகமான ஒன்றையும் அறியும்படிச் செய் யாதவன். ஜீவஸ்வரூபம், காலம், அஞ்ஞானம் இவைகளைத்தவிர வேறு ஒன்றையும் அறியும்படி செய்யாததால் பிராக்ஞன் என்று பெயர் சித்தித்தது.

तृतीय: पाद: த்ருதீய: பாத: = ஆத்மாவினுடைய மூன்றாவது ரூபம் இதுவே. ॥ 5 ॥

உபநிஷத்தின் 6-வது மந்திரம். (அத்வைதம்)

एष सर्वेश्वर एष सर्वज्ञ एषोऽन्तर्याम्येष योनिः सर्वस्य प्रभवाप्ययौ हि भूतानाम् ॥ 6 ॥

𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰 𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑍇𑌷 𑌯𑍋𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌪𑍍𑌯𑌯𑍌 𑌹𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 ॥ 6 ॥

एष: 𑌏𑌷𑌃=இந்த பிராஞ்ஞன்
सर्वेश्वर: 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃=சமஸ்தத்துக்கும் ஈசுவரன்
एष: 𑌏𑌷𑌃=இந்த பிராஞ்ஞன்
सर्वज्ञ: 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃=சமஸ்தத்தை அறிந்தவன்
एष: 𑌏𑌷𑌃=இந்த பிராஞ்ஞன்
अन्तर्यामि 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍀=உள்ளே இருந்து நியமனம் செய்பவன்.
एष: 𑌏𑌷𑌃=இவன்
सर्वस्य 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯=சமஸ்தத்துக்கும்
योनि: 𑌯𑍋𑌨𑌿𑌃=உபாதான காரணம்
भूतानां 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂=பூதங்களின்
प्रभवाप्ययौ हि 𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌪𑍍𑌯𑌯𑍌 𑌹𑌿=உத்பத்திப் பிரளயங்களும்

(एष एव 𑌏𑌷 𑌏𑌵=இவனே)

ச-பா:—एष सर्वेश्वर: 𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃=இந்த சுஷுப்தியிலே அபிமானியான பிராஞ்ஞன் தன் ஸ்வரூபத்திலிருந்து கொண்டு அதாவது உபாதியற்ற சைதன்னிய ஸ்வரூபமாயிருந்துகொண்டு சகல பிரபஞ்சத்துக்கும் ஈசுவரனாயிருக்கிறான். அதாவது சகலத்தையும் நியமனம் செய்கிறான். மற்றவர்கள் சொல்லுவதுபோல ஈசுவரனை இதைவிட வேறாக பாவிக்கமுடியாது. प्राणबन्धनं हि सोम्यमन: 𑌪𑍍𑌰𑌾𑌣𑌬𑌨𑍍𑌧𑌨𑌂 𑌹𑌿 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌮𑌨𑌃 = அதாவது "மனஸ் சப்தத்தால் கூறப்படும் ஜீவன் பிராண சப்தத்தால் கூறப்படும் பிரம்மமாகவே ஆய்விடுகிறான்" என்கிற கருத்தும் மேற்கூறிய அர்த்தத்தையே விவரிக்கிறது.

एष सर्वज्ञ: 𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃=இவனே சர்வ பேதங்களுமுள்ளவனாய் சகலத்தையும் அறிகிறான்.

एष: अन्तर्यामी 𑌏𑌷𑌃 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍀=சமஸ்தபூதங்களின் உள்ளே பிரவேசித்து சமஸ்தத்தையும் நியமனஞ்செய்கிறபடியால் இவன் அந்தர்யாமி.

एषयोनि: सर्वस्य 𑌏𑌷𑌯𑍋𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯=சமஸ்தமான ஜகத்தும் இவனிடத்தினின்றும் உண்டாவதால் இவனே சமஸ்தத்துக்கும் காரணம். ॥ 6 ॥

II - 4 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்)

ரு० பா०:—

योनिः யோநிঃ=ஸ்தானம். மற்ற பதங்கள் ஸ்பஷ்டம். விசுவன் தைஜஸன் பிராஜ்ஞன் மூன்று பேர்களும் பகவானுடைய சரீரமாகையால் சர்வேச்வரத்வாதி குணங்கள் இம்மூன்று பேர்களுக்கும் சமானமாயிருந்தாலும் அவரவர்களுக்குத் தனித்தனியே ஏற்பட்ட மேற்சொன்ன குணங்களுடன் அவரவர்களிருப்பதாக தியானம் செய்யவேண்டியது என்பது கருத்து. (6)

கூ. பா.

அ-கை :—இந்தப்பிரகாரம் மூன்று பாதங்களையும் நிரூபணம் செய்து நான்காவது பாதத்தை நாந்த: பிரஞ்ஞ 8 என்கிற மந்திரத்தில் நிரூபணம் செய்ய இச்சிக்கிறவராய், வைசுவாநராதிகளுடைய ஸ்தானம், வியாபாரம் முதலியவைகளைச் சொல்லுவதற்குமுன் நான்கு ரூபங்களுடைய மஹிமையைக் கூறுகிறார்.

एषः ஏஷঃ=மேற்சொன்ன ரூபங்களுடனும் இனி சொல்லப்போகிற ரூபத்துடனும் கூடின ஆத்மா. एषः என்னும் பதத்தின் ஆவிர்த்தியானது ரூபங்களில் இந்த வேதத்துக்கிருக்கும் தாற்பரியத்தைக் கூறுகிறது. இதனால் (அதாவது இந்த ரூபங்களை வேதம் ஒப்புக்கொள்ளுகிறபடியால்) இந்த குணங்கள் அஜ்ஞானத்தால் கற்பிக்கப்பட்டவை என்று சொல்லும் பக்ஷம் தள்ளப்படுகிறது.

सर्वेश्वरः ஸர்வேச்வரঃ=ஜாக்கிரதாதி நான்கு அவஸ்தைகளுடன் கூடின சகல வஸ்துக்களுக்கும் சேஷி அதாவது பிரதானமாயிருக்கிறவன்.

सर्वज्ञः ஸர்வஜ்ஞঃ=சகல பிரபஞ்சத்தின் தன்மையையும் ஸ்வரூபத்தையும் அறிகிறவன்.

अन्तर्यामि அந்தர்யாமீ=சரீரத்துக்குள்ளிருந்துகொண்டு நியமனம் செய்கிறவன்.

हि ஹி=எக்காரணத்தால்

भूतानां பூதாநாம்=பிராணிகளுடைய

प्रभवाप्ययौ ப்ரபவாப்யயௌ=உற்பத்தி விநாசங்களுக்கு ஹேதுவாயிருக்கிறாரோ அக்காரணத்தால்

सर्वस्य ஸர்வஸ்ய=சகல ஜகத்துக்கும்

योनिः யோநிঃ=காரணமாயிருக்கிறவன் ॥ 6 ॥

I - 6 - வது மந்திரம் (துவைதம்)

அ-கை :—இந்தப்படி விசுவாதி மூன்றின் மஹிமையை நிரூபணம் செய்து नान्तः प्रज्ञं நாந்த: ப்ரஜ்ஞம்= என்கிற வாக்கியத்தால் நான்காவது ரூபத்தின் மஹிமையை சொல்ல இச்சித்து, நான்கின் மஹிமையையும் ஒரே காலத்தில் கூறுகிறார்.

एषः ஏஷ:= முன் கூறப்பட்டும் இனி கூறப்படப் போகிறது மான ரூபங்களுடன் கூடின ஆத்மா (ஏஷ: என்று அடிக்கடி கூறுவதானது தாற்பரியத்தைக் கூறுகிறது.)

सर्वेश्वरः ஸர்வேஶ்வர:= சகலத்துக்கும் அதிபதி

एषः ஏஷ:= இந்த ஆத்மா.

सर्वज्ञः ஸர்வஜ்ஞ:= சகல விஷயங்களின் ஞானமுடையவன்

एषः ஏஷ:= இந்த ஆத்மா

अन्तर्यामि அந்தர்யாமீ = பிராணிகளுக்குள் இருந்துகொண்டு சகலத்தையும் நியமனம் செய்கிறவன்

एषः ஏஷ:= இந்த ஆத்மா

सर्वस्ययोनिः ஸர்வஸ்யயோநி:= சகலத்துக்கும் காரணம்.

भूतानां प्रभवाप्ययौ பூதாநாம் ப்ரபவாப்யயௌ = இந்த வாக்கியம் முன் சொல்லிய யோனி என்பதற்கு வியாக்கியான ரூபம் பூதங்களின் அதாவது பிராணிகளின் உற்பத்தி விநாசங்கள் ஆத்மாவிடமிருந்து உண்டாவதால் யோனி அதாவது காரணமாயிருக்கிறான் என்று அர்த்தம்.

चतुर्धावस्थितो देहे परमात्मा सदानतः ।
वैश्वानरो जागरितस्थानगो गजवक्त्रकः ॥
निर्माता बाह्यसंवित्तेर्जीवानां तदगोचरः ।
अष्टादशमुखान्यस्य पुमाकाराणि सर्वशः ॥
मध्यमंतु गजाकारं चतुर्बाहु धरः पुमान् ।
पादौ हस्ता इति सप्तांग ईरितः ॥
स्थूलान्भोगानिंद्रियैः चशुभान्भुंक्तेन चाशुभान् ।
विश्वं स्थूलं समुद्दिष्टं सर्वगम्यत्व हेतुतः ॥
तत्संबंधी नरोनाशाद्वैश्वानर उदाहृतः ।
विनायकस्तु विश्वस्य ध्यानादैंद्रजवक्त्रतां ॥
तथैव तैजसध्यानात्तिध्याना दिंद्रतां ।
चतुध्यानात्तु रुद्रत्वं रुद्र आपजनार्दनात् ॥
एवं भूतगुणो विष्णुश्चतुरात्मा परात्परः । (इति महायोगे)·
जाग्रद्दर्शन संस्काररूपत्वात्स्वप्नगंतुयत् ॥
प्रविविक्तं तु तज्ज्ञान कारणोंतर्ज्ञ उच्यते ॥ (इति वाराहे)·

सुषुप्तंतु तमा ज्ञेयं हरिं प्राप्यतदावृतः ।
न कामयेन्नैव पश्येज्जीवः स्वात्मतमोविना ॥
कालेचतस्य स्थानस्य पतिः प्राज्ञो हरिः स्वयं ।
चित्तस्थो दर्शयेद्यस्मात्तैजसः स्वप्नकृद्धरिः ॥
न बाह्यं ज्ञापयेद्यस्मात्प्राज्ञस्तेन जनार्दनः ।
एकीभावं व्रजतां च तेन विश्वतैजसः ॥
एकीभूतस्ततः प्राज्ञो घनो जीवस्तमो वृतः ।
तन्मात्रस्य सकालस्य यतः प्रज्ञः प्रदर्शनात् ॥ (इति प्रकाशिकायां)·

[illegible] ॥
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ।

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
([illegible]

[illegible] ॥
[illegible] ॥
([illegible]

𑌸𑍁𑌷𑍁𑌪𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌤𑌮𑍋 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌹𑌰𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌤𑌦𑌾𑌵𑍃𑌤𑌃 ।
𑌨 𑌕𑌾𑌮𑌯𑍇𑌨𑍍𑌨𑍈𑌵 𑌪𑌶𑍍𑌯𑍇𑌜𑍍𑌜𑍀𑌵𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌤𑌮𑍋𑌵𑌿𑌨𑌾 ॥
𑌕𑌾𑌲𑍇𑌚 𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌥𑌾𑌨𑌸𑍍𑌯 𑌪𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌹𑌰𑌿𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 ।
𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌥𑍋 𑌦𑌰𑍍𑌶𑌯𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍈𑌜𑌸𑌃 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌕𑍃𑌦𑍍𑌧𑌰𑌿𑌃 ॥
𑌨 𑌬𑌾𑌹𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌪𑌯𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍇𑌨 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 ।

𑌏𑌕𑍀𑌭𑌾𑌵𑌂 𑌵𑍍𑌰𑌜𑌤𑌾𑌂 𑌚 𑌤𑍇𑌨 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍈𑌜𑌸𑌃 ॥
𑌏𑌕𑍀𑌭𑍂𑌤𑌸𑍍𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌘𑌨𑍋 𑌜𑍀𑌵𑌸𑍍𑌤𑌮𑍋𑌵𑍃𑌤𑌃 ।
𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌕𑌾𑌲𑌸𑍍𑌯 𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ॥
(𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌕𑌾𑌯𑌾𑌂)

|| अथ गौडपादीयकारिकाः ||

|| अत्रैते श्लोका भवन्ति ||

बहिः प्रज्ञो विभुर्विश्वो ह्यन्तः प्रज्ञस्तु तैजसः ।
घनप्रज्ञस्तथा प्राज्ञ एक एव त्रिधा स्मृतः || 7 ||

|| அத கௌடபாதீயகாரிகா: ||

|| அத்ரைதே ச்லோகா பவந்தி ||

பஹி: ப்ரஜ்ஞோ விபுர்விச்வோ ஹ்யந்த: ப்ரஜ்ஞஸ்து தைஜஸ: ।
கநப்ரஜ்ஞஸ்ததா ப்ராஜ்ஞ ஏக ஏவ த்ரிதா ஸ்ம்ருத: || 7 ||

अत्र அத்ர=இவ்விடத்தில் இந்த உபநிஷத்தின் அர்த்தத்தில்
एते ஏதே=இந்த
श्लोकाः ச்லோகா:=சுலோகங்கள்
भवन्ति பவந்தி=இருக்கின்றன
विश्वः விச்வ:=விசுவன்
विभुः விபு:=எங்கும் வியாபகன்
बहिःप्रज्ञः பஹி:ப்ரஜ்ஞ:=வெளியில் பிரக்ஞையுள்ளவன்
तैजसः தைஜஸ:=தைஜஸன்
अन्तःप्रज्ञः तु அந்த:ப்ரஜ்ஞ: து=உள் பிரக்ஞையுள்ளவன்
तथा ததா=அப்படியே இந்தப்பிரகாரம்
प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராக்ஞன்
घनप्रज्ञः கநப்ரஜ்ஞ:=கனப்பிரக்ஞன்
एक एव ஏக ஏவ=ஒரு ஆத்மாவே
त्रिधा த்ரிதா=மூன்றுவிதமாக
स्मृतः ஸ்ம்ருத:=நினைக்கப்படுகிறது சொல்லப்படுகிறான்

காரிகையின் 2-வது சுலோகம்.

दक्षिणाक्षिमुखे विश्वो मनस्यन्तस्तु तैजसः ।
आकाशे च हृदि प्राज्ञस्त्रिधा देहे व्यवस्थितः || 8 ||

தக்ஷிணாக்ஷிமுகே விச்வோ மநஸ்யந்தஸ்து தைஜஸ: ।
ஆகாசே ச ஹ்ருதி ப்ராஜ்ஞஸ்த்ரிதா தேஹே வ்யவஸ்தித: || 8 ||

दक्षिणाक्षिमुखे தக்ஷிணாக்ஷிமுகே=வலது கண்ணின் அக்ர பாகத்தில்
विश्वः விச்வ:=விசுவரூபமாயும்
अन्तः அந்த:=உள்ளே
मनसि மநஸி=மனதில்
तैजसश्च தைஜஸச்ச=தைஜஸரூபமாயும்
हृदि ஹ்ருதி=ஹிருதயத்திலிருக்கிற
आकाशे ஆகாசே=ஆகாசத்தில்

प्राज्ञश्च ப்ராஜ்ஞஶ்ச=பிராஞ்ஞரூபமாயும்

(आत्मा ஆத்மா=ஆத்மா)

त्रिधा த்ரிதா=மூன்றுவிதமாக

देहे தேஹே=தேகத்தில்

व्यवस्थितः வ்யவஸ்தித:=இருக்கிறான்

இந்த உபநிஷத்தின் மூன்றின் ஆறு மந்திரங்களின் அர்த்தத்தைக் ஸ்ரீகௌட பாதாசாரியருடைய ஒன்பது சுலோகங்கள் கூறுகின்றன.

बहिःप्रज्ञः...... பஹி:ப்ரஜ்ஞ:...... = பதவுரையிற் சொல்லியது போலவே.

இதற்கு அபிப்பிராயம் :—ஒரே ஆத்மா மூன்று ஸ்தானங்களிலும் கிரமமாக இருப்பதினாலும், "அவனே நான்" என்னும் ஸ்மரணையால் உண்டாகும் பிரத்தியக்ஷ ஞானத்தாலும் ஆத்மா மூன்று ஸ்தானங்களைவிட வேறு என்றும், ஒன்று என்றும், சுத்தமென்றும், அசங்கமென்றும் சித்திக்கிறது. மஹாமத்சியாதி திருஷ்டாந்தத்தைக் கூறும் சுருதி இதற்குப் பிரமாணம்.

ஜாக்கிராவஸ்தையிலேயே விசுவாதி மூன்றின் அனுபவத்தையும் காண்பிக்கும் பொருட்டு இந்த சுலோகம் ஆரம்பிக்கப்படுகின்றது. வலது கண்ணில் முக்கியமாயிருந்து கொண்டு ஸ்தூல பதார்த்தங்களைப் பார்க்கிறவன் விசுவன் என்று தியானநிஷ்டையிலிருக்கிறவர்கள் அறிகிறார்கள். இதற்குச் சுருதிப்பிரமாணம் :—"इन्धोह वै नामैष योऽयं दक्षिणेऽक्षन्पुरुष" "இந்தோஹ வை நாமைஷ யோऽயம் தக்ஷிணேऽக்ஷன்புருஷ:"(பிரஹ IV-2-2) இதற்கு அர்த்தம்:—வலது கண்ணிலிருக்கிற விசுவனே சூரியாந்தர்கதனும் பிரகாச ஸ்வரூபமாயிருக்கிற விராட் புருஷன்.

ஆக்ஷேபம் :—சூட்சுமப் பிரபஞ்சாபிமானியாயும் சூரிய மண்டலாந்தர்கதனும், சமஷ்டி-சூட்சுமதேகத்தோடு கூடியும், கண்ணிலிருக்கிற இந்திரியத்தை அனுக்கிரகிக்கிறவனுமாயிருக்கிற ஹிரண்யகர்ப்பன் சம்சாரியான ஜீவனைவிட வேறு. ஸ்தூலப் பிரபஞ்சாபிமானியாயும், சூரிய மண்டலத்திலிருக்கிறவனும், சமஷ்டி ஸ்தூல தேகத்தோடுகூடியும், கண்ணுக்கிற கோளகத்துக்கு அனுக்கிரகிக்கிறவனுமிருக்கிற விராட் ஆத்மாவும் ஜீவனைவிட வேறு. க்ஷேத்திரஞ்ஞனே வியஷ்டிதேக முள்ளவன் வலது கண்ணிலிருந்துகொண்டு பார்க்கிறவன், சக்ஷுரிந்திரியத்தை நியமனம் செய்கிறவன், சரீர இந்திரியங்களுக்கு ஸ்வாமி ; மேற் சொல்லிய சமஷ்டி ஸ்தூல

சூட்சுமதேகாபிமானிகளை விடவேறு. ஆகவே சமஷ்டியான ஹிரணிய கர்பனும் விராட்டும், வியஷ்டியான ஜீவனும் வெவ்வேறுயிருப்பதால் ஒன்று என்று சொல்லுவது அயுக்தம்.

சமாதானம் :—இந்த ஆக்ஷேபம் சரியன்று. ஏனெனின் கற்பிக்கப்பட்ட பேதமிருந்தாலும் வாஸ்தவத்தில் பேதம் அங்கீகரிக்கப்படவில்லை. சுருதிப் பிரமாணம் :—

(1) एकोदेवःसर्वभूतेषुगूढः ஏகொதெவஃஸவபூதேஷுகூடஃ (சுவே VI-11) பிரகாசஸ்வரூபமான ஒன்றே சகல பூதங்களிலும் மறைபட்டிருக்கிறது.

(2) क्षेत्रज्ञं चापिमांविद्धि सर्वक्षेत्रेषुभारत க்ஷேத்ரஜ்ஞம் சாபிமாம்வித்தி ஸர்வக்ஷேத்ரேஷுபாரத (கீதை XIII-3) "என்னை சகலபிராணிகளிலு மிருக்கிற ஆத்மாவாக அறி"

(3) अविभक्तं च भूतेषु विभक्तमिव च स्थितं அவிபக்தம் ச பூதேஷு விபக்தமிவ ச ஸ்திதம் (கீதை XIII-17) பூதங்களில் விபாகமடையாமலிருந்தாலும் விபாகம் அடைந்தது போல் அது இருக்கிறது. (இதுவரையில் சமஷ்டியான ஹிரணியகர்பாதிகளும் வியஷ்டியான ஜீவனும் வேறல்லவென்று நிரூபிக்கப்பட்டது. இனி வலதுகண்ணைக் குறிப்பிட்டதின் பிரயோசனத்தைக் காட்டுகிறார்.) சகல இந்திரியங்களும் ஞானசாதகமாயிருந்தாலும் வலது கண்ணில் ஞான சாமர்த்தியம் விசேஷமாய்க் காணப்படுவதால், அதில் விசுவன் இருக்கிறான் என்று குறிப்பிடப்பட்டது.

मनस्यन्तस्तु तैजसः மநஸ்யந்தஸ்து தைஜஸஃ :—வலதுகண்ணிலிருக்கிற விசுவன் ரூபத்தைப் பார்த்து, பிறகு கண்ணைமூடி, பார்த்ததையே மனதில் ஸ்மரித்து, ஸ்வப்நத்தில் போல் வாசனா ரூபமாய் விளங்கும் அந்த ரூபத்தையே உள்ளே பார்க்கிறான். ஜாக்கிறத் காலத்தில் விஷயங்களை எப்படி பார்க்கிறானோ அப்படி ஸ்வப்நத்திலும் வாசனா விஷயங்களைப் பார்க்கிறான். ஆகையால் மனதிற்குள்ளிருக்கும் தைஜஸனும் விசுவனே.

आकाशे च हृदिप्राज्ञः ஆகாஶே ச ஹ்ருதிப்ராஜ்ஞஃ:—மேலும் எந்த விசுவன் தைஜசபாவத்தை அடைந்திருக்கிறானோ அவன் ஸ்மரணை என்னும் வியாபாரத்தினின்றும் நிவிர்த்தி அடைந்து, மனோவியாபாரமில்லாததால் ஹிருதயத்திலிருக்கிற ஆகாசத்திலிருந்து கொண்டு பிராஞ்ஞனாகி கனப்பிரஞ்ஞனாகி விடுகி

றான். அதாவது பிராஞ்ஞனுடைய லக்ஷணத்துடன் கூடினவனாகிறான். தர்சனம், ஸ்மரணை இவைகள் மனதின் கற்பனைகள். இவைகளில்லாத சமயத்தில், ஹிருதயத்தில யாதொரு விசேஷமன்றியல் அவ்வியாகிருதபிராணனாக இருக்கிறதே ஜாக்கிரத்தில் சுஷுப்தி எனப்படும். "प्राणो ह्येवैतान्सर्वान्संवृङ्क्ते" "ப்ராணோ ஹ்யேவைதான் ஸர்வான் ஸம்வ்ருங்க்தே" (சா IV-3-3) பிராணனே சகலத்தையும் தன்னிடத்தில் இழுத்துக் கொள்ளுகிறது என்று சுருதி சொல்லுகிறது. ஆகையால் பிராஞ்ஞன் ஜாக்கிரத்திலுள்ள சுஷுப்தியில் அவ்வியாகிருதமான பிராணனாக இருக்கிறான் என்று சொன்னது யுக்தமே. மேலும் தைஜஸனே ஹிரணியகர்ப்பன். ஏனெனின் ஹிரணியகர்ப்பன் சமஷ்டி மனதிலிருக்கிறவன். தைஜஸன் வியஷ்டி மனதிலிருக்கிறவன். சமஷ்டி வியஷ்டி மனது ஒன்றானதால் அவைகளிலிருக்கிற ஹிரணிய கர்ப்பனும் தைஜஸனும் ஒன்று என்று கூறுவது யுக்தமே. மேலும் मनोमयोऽयं पुरुषः மநோமயோऽயம் புருஷோ பா⁴ஸ்ஸத்ய: என்கிற (பி V-6-1) சுருதிப்படி புருஷன் மனோமயன் ஹிரணியகர்ப்பன், புருஷரூபம். ஆகையால் ஹிரணியகர்ப்பனுக்கும் மனது சித்திக்கிறது. ஆகையால் இந்த மனதிலிருக்கிற தைஜஸனே ஹிரணியகர்ப்பன் என்று சொல்லுவது யுக்தம்.

ஆக்ஷேபம் :—தூங்குகிறவன் சமீபத்திலிருக்கிற ஜனங்கள், பிராண வியாபாரத்தை வியக்தமாய் பார்க்கிறதினால் சுஷுப்தியில் பிராணன் இருக்கிறான், அவன் நாம ரூபங்களால் வியக்தமாயிருக்கிறான். மேலும் तएतस्यैव सर्वे रूपमभवन् த ஏதஸ்யைவ ஸர்வே ரூபமபவன் என்கிற (பி I-5-21) சுருதிப்படி சுஷுப்தி அவஸ்தையில் வாகாதி இந்திரியங்களும் பிராணரூபமாகவே இருக்கின்றன ; ஆகையால் பிராணன் வியாகிருதன் (ஸ்பஷ்டம்) என்றுசொல்லுவது யுக்தம். ஆகையால் பிராணன் அவ்வியாகிருதன் என்று எப்படிச் சொல்லலாம்.

சமாதானம் :—(அவ்வியாகிருதமும் பிராணனும் ஒரு லக்ஷணத்துடன் கூடியிருப்பதால இரண்டும் ஒன்று என்று சொல்லுவதில் தோஷமில்லை என்றார்) இது தோஷமன்று. ஏனெனின் அவ்வியாகிருதத்திற்கு (மாயைக்கு) தேசகாலவிசேஷங்களில்லை. அவ்வியாகிருதமோ தேசத்தாலும் காலத்தாலும் வஸ்துவாலும் பரிச்சேதமற்றது. சுஷுப்தியில் திரஷ்டாவான பிராஞ்ஞனுடைய பிராணனும் அப்படியே. ஏனெனின் பிராஞ்ஞனுடைய திருஷ்டிக்கு அக்காலத்திலுள்ள பிராணன் தேசகாலவஸ்து பரிச்சேதம

டைந்திருப்பதாகக் காணப்படுகிறதில்லை. ஆகவே இருவருக்கும் இலக்ஷணம் ஒன்ருக இருப்பதால் இருவரும் சமம் என்று சொல்லுவதில் விரோதமில்லை.

ஆ :—“ இந்த பிராணன் என்னுடையது” “ இந்த பிராணன் அவனுடையது” என்பதாய் தேசப்பரிச்சேதம் காணப்படுவதால் இருவருக்கும் ஒரு இலக்ஷணம் ஏற்படவில்லை. ஆகையால் இருவரும் ஒன்று என்று சொல்லக்கூடாது.

ச :—ஜாக்கிராவஸ்தையில் பிரதி ஸ்தூல சரீரத்தை உத்தேசித்து “ என்னுடையது” “அவனுடையது” என்கிற அபிமானத்தால் பிராணன் வியாகிருதன் என்று தோன்றினாலும், சுஷுப்தி அவஸ்தையில் சரீர பரிச்சேதம் காணப்படாததால் நான் என்னுடையது என்னும் அபிமானமும் காணப்படவில்லை. ஆகையால் பிராணன் அவ்வியாகிருதம் என்று சொல்லுவதில் விரோதமில்லை. நான் என்னுடையது என்னும் அபிமானமுள்ளவர்களுக்கு மரண காலத்தில் அபிமானமிராமற் போவதால் பிராணன் நாமரூபங்களை இழந்து அவ்வியாகிருதனுகிறுன். அப்படியே பிராணுபிமானமுள்ளவர்களுக்கும் சுஷுப்தியிலும் அபிமானமில்லாமற் போய் விடுகிறது. இப்படி அபிமானமில்லாமையால் பிராணன் அவ்வியாகிருதன் என்று சொல்லலாம்.

மேலும் तद्धेदं तर्ह्यव्याकृत मासीत्तन्नामरूपाभ्यामेव व्याक्रियते தத்தேதம் தர்ஹ்யவ்யாக்ருத மாஸீத்தந்நாமரூபாப்யாமேவ வ்யாக்ரியதே என்கிற (பி I-4-7) சுருதிப்படி அநிதைவமான அவ்வியாகிருதம் ஜகத் சிருஷ்டிக்குக்காரணமாயிருக்கிறதுபோல் பிராணன் என்கிற பிராஞ்ஞனும் ஜாக்கிர ஸ்வப்நங்களின் உற்பத்திக்குக் காரணமாயிருக்கிறுன் ஆகவே காரியத்தை உத்தேசித்து காரணமாயிருக்குந்தன்மை இருவர்களுக்கும் சமமாயிருப்பதால் இவர்களும் ஒன்று என்று சொல்லலாம்.

மேலும் உபாதியை உத்தேசித்து இருவரும் ஒன்று என்று சொன்னதுபோல் உபாதியுடன் கூடினதையும் உத்தேசித்து ஒன்று என்று ஏற்படுகிறது. எப்படி எனின் அவ்வியாகிருதத்துடன் கூடினவன் ஈசுவரன். சுஷுப்தியில் பிராணனுடன் கூடினவன் ஜீவன். இருவர்களுக்கும் அதிஷ்டாதா சித்ஸ்வரூபம். ஆகையால் இரண்டு பேர்களும் ஒன்று.

ஆகவே முன் சொன்ன யுக்திகளால் பிராணனும் அவ்வியாகிருதனும் ஒன்றாக இருப்பதால் பிராணனுக்குக்கூறிய விசேஷணங்களான एकीभूतः प्रज्ञानघनः ஏகீபூத: ப்ரஜ்ஞாநகந: இவைகள் பொருந்தும்.

ஆ:—பிராண சப்தம் ஐந்து விருத்திகளுடன் கூடின வாயுவை கூறுகிறதினால் எப்படி அவ்வியாகிருதத்தை பிராண சப்தத்தால் கூறலாம்.

ச:—மற்ற இடங்களில் பிராண சப்தம் பஞ்சப் பிராணன்களைக்கூறினாலும் இவ்விடத்தில் प्राणबन्धनं हि सोम्यमनः ப்ராணபந்தநம் ஹி ஸோம்யமந: என்கிற சுருதியில் மனது சுஷுப்தியில் தன்னுடைய லயத்துக்கு ஆதாரமான பிராணனுடன் கட்டப்பட்டுப்போகிறது என்று சொல்லியிருப்பதால் அவ்வியாகிருதத்திற்கு பிராண சப்தத்தை உபயோகிக்கலாம்.

ஆ:—நீ சொன்ன சுருதியானது सदेवसोम्य ஸதேவஸோம்ய என்று சத் அதாவது பிரம்மத்தைக் கூறும் பிரகரணத்திலிருப்பதால், பிராண சப்தம் பிரம்மத்தைத் தான் கூறும், அவ்வியாகிருதத்தை கூறமாட்டாது.

ச:—இதில் தோஷமில்லை. ஏனெனின் அந்த பிரகிரணம் சுத்தப் பிரம்மத்தைக் கூறாமல் மாயா சபளித பிரம்மத்தைக் கூறுகிறது. ஆகையால் அவ்வியாகிருதத்தை பிராண சப்தத்தால் கூறலாம். அவ்விடத்தில் சுத்தப் பிரம்மத்தைப் பிராணன் கூறினாலும் சகல காரியங்களுக்கும் காரணமாயிருக்குந்தன்மையை விடாமலே அதைக்கூறுகிறது. சுத்தப்பிரம்மத்தை அந்த ஸத் சப்தமும் பிராண சப்தமும் கூறும் பக்ஷத்தில "नेति नेति" "நேதி நேதி" (பிIII-2-11) "यतोवाचो निवर्त्तन्ते" "யதோவாசோ நிவர்த்தந்தே" (தை II-4-9) "अन्यदेवतद्विदितादथो अविदितात्" "அந்யதேவ தத் விதிதாதயோ அவிதிதாத்" (கே I-3) என்று சொல்லியிருக்கவேண்டும். नसत्तन्नासत् நஸத்தந்நாஸத் என்கிற வாக்கியப்படி சுத்தப் பிரம்மமே கூறப்பட்டிருக்கும் பக்ஷத்தில் சுஷுப்தியிலும் பிரளய காலத்திலும் பிரம்மத்தில் லயமடைந்து பிரம்மத்துடன் ஒன்றாகப்போகும் ஜீவர்கள் மறுபடியும் வெளிக்கிளம்ப மாட்டார்கள். அல்லது முக்தி தசையில் சத்பிரம்மத்தை அடைந்த முக்தர்களும் மறுபடியும் உண்டாகும்படி நேரிடும். ஏனெனின் அஞ்ஞானமாகிற காரணம் ஒருவருக்கு மில்லை. மேலும் ஞானத்தால் தஹிக்கக்கூடிய காரணமில்லாததினால் ஞானம் வியர்த்தமாகும். ஆகையால், சகல சுருதிகளிலும் சபள (அஞ்ஞானசகித) பிரம்மம் ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதால் ஸத்தானது பிராணன் என்றும் காரணமென்றும் சொல்லப்

படுகின்றது. அனுதியாயும் அநிர்வாச்சியமாயுமிருக்கிற அஞ்ஞானத்துடன் கூடின பிரம்மமே காரணமென்று சொல்லியிருப்பதால் சுத்தப் பிரம்மம் (1) अक्षरात् परत: पर: அக்ஷராத் பரத: பர: (முII-1-2) அதாவது சிரேஷ்டமான அக்ஷரத்தைவிட சிரேஷ்டம் (2) सबाह्याभ्यन्तरो ह्यज: ஸபாஹ்யாப்யந்தரோஹ்யஜ: (முII-1-2) அதாவது காரணரூபமாயும் உண்டாகாதவர், காரிய ரூபமாயு முண்டாகாதவர் (3) यतो वाचो निवर्त्तन्ते யதோ வாசோ நிவர்த்தந்தே (தைII-4-9) எதினிடனின்றும் வாக்கு திரும்பி விடுகிறதோ (வாக்குக்கு எட்டாதது என்பது கருத்து) (4) नेति नेति நேதி நேதி (பி III-2-11) இல்லை இல்லை முதலிய சுருதி வசனங்களால் அஞ்ஞான (காரண) சகிதமற்றதாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்த பிராஞ்ஞ சப்தத்தால் கூறப்பட்டவனுக்கே துரியனுகையால் தேகாதி சம்பந்த மற்றதாயும் பாரமார்த்திகமாயு மிருக்கிற அபீஜாவஸ்தையை அதாவது அஞ்ஞான சம்பந்த மற்ற அவஸ்தையை சுருதி இனிதனியேகூறுகிறது. தூங்கிஎழுந்திருந்தவனுக்கு "நான் ஒன்றும் அறிய வில்லை" என்னும் ஸ்மரணை காணப்படுவதால் அஞ்ஞான சகிதகாரணுவஸ்தை தேகத்தில் அனுபவிக்கப் படுகிறது. ஆகவே தேகத்தில மூன்றுவிதமாக தேகத்திலிருக்கிறுன் என்று மூலத்தில் கூறப்பட்டிருக்கிறது.

II - 5 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்.)

அ-கை :—உபநிஷத்தானது, தான் ஸ்வயம் பிரமாணமாக இருந்தாலும் தான் சொன்ன அர்த்தத்தை திடப்படுத்துவதற்காக தன்னுல் சொல்லப்பட்ட விஷயத்தை மந்திரங்களாலும் கூறுகிறது.

अत्र அத்ர=மேற்சொன்ன அர்த்தங்களில்

(संवादिन: ஸம்வாதிந:=சொன்ன அர்த்தத்தை அனுசரித்துச் சொல்லுகிற)

एते श्लोका: ஏதே ஶ்லோகா:=இந்த மந்திரங்கள்

भवन्ति பவந்தி=ஏற்பட்டிருக்கின்றன. வைசுவாநரனே பஹி பிரஞ்ஞன் என்றும் தைஜஸனே அந்த: பிரஞ்ஞன் என்றும் பிராஞ்ஞனே பிரஞ்ஞானகனனென்றும் சொல்லிய அர்த்தத்தை பிரதிபாதிக்கும் மந்திரங்களையே அடியில் வரும் சுலோகங்களும் விவரிக்கின்றன.

विश्व: விஶ்வ:=வைசுவாநரன். மற்ற பதங்களின் அர்த்தத்தை முன்போலவே செய்துகொள்ளவும்.

एकएव तृधास्मृत: ஏகஏவ த்ருதாஸ்ம்ருத:=மந்திரதிர்ஷ்டாவான பிரம்மாவானவர் இந்த பகவத் ரூபங்கள் ஒன்று என்றுதான் சொன்னார்.

I - 7 - வது மந்திரம். (த்வைதம்.)

அ-கை :—உபநிஷத்தைப் பிரமாணமாக இருந்தாலும், அதினால் கூறப்பட்ட அர்த்தத்தை ஸ்திரப்படுத்தும்பொருட்டு பிரமாவால் பார்க்கப்பட்ட மந்திரங்களும் கூறப்படுகின்றன.

अत्र एतेश्लोकाः அத்ர ஏதெச்லோகா:= மேற்சொன்ன விஷயத்தில் பிரமாவால் பார்க்கப்பட்ட சுலோகங்கள் அனுசரித்துச் சொல்லுகிறதாக இருக்கின்றன. வைசுவாநரன் பஹி: பிரஞ்ஞன் என்றும், தைஜஸன் அந்த: பிரஞ்ஞன் என்றும், பிராஞ்ஞன் பிரஞ்ஞானகன னென்றும் சொல்லிய அர்த்தத்தை இந்த மந்திரம் கூறுகிறது.

विश्व: விச்வ:=வைசுவாநரன் என்றும் ரூபம்

विभु: விபு:=சர்வ வியாபகமா யிருந்துகொண்டு

बहि: प्रज्ञ: பஹி: ப்ரஜ்ஞ: =வெளியிலுள்ள பதார்த்தங்களின் ஞானத்தை உண்டு பண்ணுகிறது

तैजस: தைஜஸ:=தைஜஸ்ரூபம்

अन्त: प्रज्ञ: அந்த: ப்ரஜ்ஞ:=ஸ்வப்நத்திலுள்ள பதார்த்தங்களின் ஞானத்தை உண்டு பண்ணுகிறது.

तथा। ததா=அப்படியே

प्राज्ञ: ப்ராஜ்ஞ:=பிராஞ்ஞ ஸ்வரூபம்

घन:प्रज्ञ: கந:ப்ரஜ்ஞ:=அஞ்ஞானத்தால் மூடப்பட்ட ஜீவனுக்கு ஆத்மா, காலம், அஞ்ஞானம் இவைகளின் ஞானத்தை உண்டு பண்ணுகிறது.

एकएव त्रिधास्मृत: ஏகஏவ த்ரிதாஸ்ம்ருத:=ஒரே பரமாத்மா 3 விதமாக இருக்கிறதாக பிரம்ம தேவர் சொல்லி யிருக்கிறார்.

பிரமாண வாக்கியம் :—

प्रमाणस्य प्रमाणं च बलवद्दृश्यते मुने ।
ब्रह्मदृष्टाह्यतोमन्त्रान् प्रमाणं सलिलेश्वर: ।
अत्रश्लोका भवन्तीति चकारैव पृथक् पृथक् ॥ (इति गारुडे)·

ப்ரமாணஸ்ய ப்ரமாணஞ்ச பலவத்த்ருச்யதே முநே ।
ப்ரஹ்மத்ருஷ்டாஹ்யதோமந்த்ராந் ப்ரமாணம் ஸலிலேச்வர: ।
அத்ரச்லோகாபவந்தீதி சகாரைவ ப்ருதக் ப்ருதக் ॥
(இதி காருடே)

II - 6 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்)

அ-ரை:—இது ஜாக்கிறத் ஸ்வப்ந ஸுஷுப்தி ஸ்தானங்கள் விஷயமாய் சுலோகம்.

दक्षिणाक्षिमुखे தக்ஷிணாக்ஷிமுகே=வலதுகண்ணின் முன் பக்கத்தில்

मनसि மநஸி=இது அந்த: என்பதற்கு வியாக்கியானம்

आकाशेचहृदि ஆகாஶேசஹ்ருதி=ஹிருதயாகாசத்தில் ஹிருதய தாமரையின் நுனியில் என்பது கருத்து.

तृधादेहेव्यवस्थित: த்ரிதாதேஹேவ்யவஸ்தித:=அந்த பகவான் ஒருவரே. இந்த தேகத்தில் மூன்று விதமாக இருக்கிறார் என்பது கருத்து. (8)

I - 8 - வது மந்திரம். (துவைதம்)

ஜாகரிதஸ்தானம், ஸ்வப்நஸ்தானம், ஸுஷுப்தி ஸ்தானம் இவைகளை யுடையவன் என்று கூறிய அர்த்தத்தை இந்த மந்திரம் கூறுகிறது.

दक्षिणाक्षिमुखे தக்ஷிணாக்ஷிமுகே=வலது கண்ணின் முன் பக்கத்தில்

विश्व: விஶ்வ:=விசுவனும்

मनसि अन्त: மநஸி அந்த:=மனதில்

तैजस: தைஜஸ:=தைஜஸனும்

आकाशेहृदि ஆகாஶே ஹ்ருதி: = ஹிருதயத்திலுள்ள ஆகாசத்தின் முன் பக்கத்தில்

प्राज्ञ: ப்ராஜ்ஞ:=பிராஞ்ஞனும் இவ்விதமாக

त्रिधादेहे व्यवस्थित: த்ரிதாதேஹே வ்யவஸ்தித: = பரமாத்மா சரீரத்தில் மூன்றுவிதமாயிருக்கிறான்.

காரிகையின் 3-வது சுலோகம்.

विश्वो हि स्थूलभुङ् नित्यं तैजस: प्रविविक्तभूक् ।
आनन्द भुक्तथा प्राज्ञस्त्रिधा भोगं निबोधत ॥9॥

விஶ்வோ ஹி ஸ்தூலபுங் நித்யம் தைஜஸ: ப்ரவிவிக்தபுக்
ஆநந்தபுக்ததா ப்ராஜ்ஞஸ்த்ரிதா போகம் நிபோதத॥

विश्वो हि விஶ்வோ ஹி=விசுவனும்

नित्यं நித்யம்=எப்போதும்

स्थूलभुक् ஸ்தூலபுக்=ஸ்தூலங்களான சப்தாதி விஷயங்களை அனுபவிக்கிறவன்

तैजस: தைஜஸ:=தைஜஸன்

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபுக்=வாஸனாமயமான ஸூக்ஷ்மபோகங்களை அனுபவிக்கிறவன்

तथा ததா=அந்தப்பிரகாரம்

प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராஜ்ஞனும்

आनन्दभुक् ஆநந்தபுக்=ஆநந்தத்தை அனுபவிக்கிறவன்

(एवं ஏவம்=இந்தப்பிரகாரம்)

भोगं போகம்=அனுபவத்தை

त्रिधा த்ரிதா=மூன்றுவிதமாக

निबोधत நிபோதத=அறிந்துக்கொள்ளுங்கள் இந்த சுலோகத்தின் அர்த்தம் வது பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. ‖ 9 ‖

II - 7 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்.)

அ-கை:—ஸ்தூலபுக் பிரவிவிக்தபுக் ஆநந்தபுக் என்ற அர்த்தத்தை இந்த சுலோகம் விவரிக்கிறது.

निबोधत நிபோதத=இந்தப் பிரகாரம் அறியுங்கள் என்று மந்திரதிர்ஷ்டாவான பிரம்மாவானவர் தன்னால் உபதேசிக்கத் தகுந்தவர்களுக்கு சொல்லுகிறார். ‖ 9 ‖

I - 9 - வது மந்திரம். (துவைதம்.)

அ-கை:...ஸ்தூலபுக் என்று கூறிய அர்த்தத்தை இந்த சுலோகம் விவரிக்கிறது. விசுவாதிகளுக்கு உபயோகமான பதார்த்தங்களைச் சொல்லுகிறார்.

हि ஹி இது பாதத்தை பூரிக்க உபயோகப்பட்டிருக்கிறது.

नित्यं நித்யம்=எப்போதும்

स्थूलभुक् ஸ்தூலபுக்=சிருஷ்டியிலுள்ள பாஹ்ய பதார்த்தங்களை புஜிக்கிறவன்

तैजसः தைஜஸ:=தைஜஸ்ரூபம்

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபுக்=பர்ஹிய பதார்த்தங்களுக்கு வேறான ஸ்வப்ந பதார்த்தங்களை புஜிக்கிறது.

प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராஜ்ஞரூபம்

आनन्दभुक् ஆநந்தபுக்=ஆநந்தத்தை புஜிக்கிறது.

त्रिधाभोगं த்ரிதாபோகம்=இவ்விதமாக மூன்று விதமான போக்கிய பதார்த்தங்கள் இருப்பதாக

निबोधत நிபோதத=மந்திரதிர்ஷ்டாவான பிரம்மா தன்னுடைய சிஷ்யர்களை உத்தேசித்து கவனியுங்கள் என்று சொல்லுகிறார். இப்படியே विजानत விஜாநத என்கிற இடத்திலும் அறியவும். ‖ 9 ‖

காரிகையின் 4-வது சுலோகம்.

स्थूलं तर्पयते विश्वं प्रविविक्तं तु तैजसम् ।
आनन्दश्च तथा प्राज्ञं त्रिधा तृप्तिं निबोधत ॥10॥
ஸ்தூலம் தர்பயதே விஶ்வம் ப்ரவிவிக்தம் து தைஜஸம் ।
ஆநந்தஶ்ச ததா ப்ராஜ்ஞம் த்ரிதா த்ருப்திம் நிபோதத ॥10॥

स्थूलं ஸ்தூலம்= ஸ்தூலபதார்த்தம்
विश्वं விஶ்வம்=விசுவனை
तर्पयते தர்பயதே=திருப்திசெய்கிறது
प्रविविक्तन्तु ப்ரவிவிக்தந்து=சூட்சும போகம்
तैजसं தைஜஸம்=தைஜஸனை
तर्पयते தர்பயதே=திருப்திசெய்கிறது
तथा ததா=அப்படி
आनन्दश्च ஆநந்தஶ்ச=ஆநந்தம்
प्राज्ञं ப்ராஜ்ஞம்=பிராஞ்ஞனை
तर्पयते தர்பயதே=திருப்திசெய்கிறது
(एवं ஏவம்=இந்தப்படி)
तृप्तिं த்ருப்திம்=திருப்தியை
त्रिधा த்ரிதா=மூன்று விதமாக
निबोधत நிபோதத=அறிந்துக்கொள்ளுங்கள் இந்தசுலோகத்தின் அர்த்தம் -வது பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது

II - 8 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்.)

அ-கை :—மேற்சொன்ன அர்த்தத்தையே இதுவும் கூறுகிறது.

स्थूलं ஸ்தூலம்=ஸ்தூலமான போக்கிய வஸ்துவானது

विश्वं விஶ்வம்=விசுவனை அதாவது மேற்சொன்ன பிரதமபாதத்தை

तर्पयते தர்பயதே=திருப்தி செய்விக்கிறது. இப்படியே மற்ற இடங்களிலும் அறியவும். நித்திய திருப்தியுள்ள பரமாத்மாவுக்கு ஸ்தூலாதிகளாலுண்டாவதாகச் சொன்ன திருப்தியானது க்ரீடாரூபமென்று அறியவும். ॥ 10 ॥

I - 10 - வது மந்திரம். (துவைதம்.)

அ-கை :...மேற் சொன்ன அர்த்தத்தையே வேறு மந்திரம் கூறுகிறது.

स्थूलं ஸ்தூலம்=போக்கிய வஸ்துவானது அதாவது பாஹ்ய சிருஷ்டியிலிருக்கிற வஸ்து

विश्वं விஶ்வம்= விசுவரூபத்தை

तर्पयते 𑌤𑌰𑍍𑌪𑌯𑌤𑍇 = திருப்தி செய்கிறது.

இப்படியே மேலும் அறியவேண்டியது. நித்திய திருப்தனுக்கு ஸ்தூல முதலியவைகளாலுண்டாகும் திருப்தி க்ரீடாரூபம் என்று அறியத்தக்கது ॥ 10 ॥

காரிகையின் 5-வது சுலோகம்.

त्रिषु धामसु यद्भोज्यं भोक्ता यश्च प्रकीर्तितः ।
वेदैतदुभयं यस्तु स भुञ्जानो न लिप्यते ॥11॥

𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌧𑌾𑌮𑌸𑍁 𑌯𑌦𑍍𑌭𑍋𑌜𑍍𑌯𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌯𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ।
𑌵𑍇𑌦𑍈𑌤𑌦𑍁𑌭𑌯𑌂 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸 𑌭𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑍋 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 ॥11॥

त्रिषु 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁=மூன்று
धामसु 𑌧𑌾𑌮𑌸𑍁=ஸ்தானங்களிலும்
यत् 𑌯𑌤𑍍=எது
भोज्यं 𑌭𑍋𑌜𑍍𑌯𑌂=அனுபவிக்கத்தகுந்த விஷயமோ
भोक्ता 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾=அனுபவிக்கிறவனாக
यः 𑌯𑌃=எவன்
वेद 𑌵𑍇𑌦=அறிகிறானோ
सः 𑌸𑌃=அவன்
भुञ्जानः 𑌭𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌃=அனுபவிக்கிறவனானாலும்
न लिप्यते 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇=சம்பந்தப்படுகிறதில்லை.

त्रिषु...प्रकीर्तितः 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁...𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 :—ஜாக்கிரத் முதலிய மூன்று அவஸ்தைகளில் ஸ்தூலம், சூட்சுமம், ஆநந்தம் என்று பெயருள்ள போஜ்ஜியம் ஒன்றே மூன்றுவிதமாக இருக்கிறது. விசுவன் தைஜஸன் பிராஞ்ஞன் என்று பெயருள்ள போக்தா ஒருவன் என்று கூறப்படுகிறான். ஏனெனின் சுஷுப்தி அடைந்தநானே ஸ்வப்நத்தையும் அடைகிறேன். எவன் ஸ்வப்நமடைகிறானோ அவனே நான், ஜாக்கிராவஸ்தையிருக்கிறவன். இப்படி ஒன்றாயிருக்குந் தன்மை அனுபவிக்கப்படுகின்றது. மேலும் அஞ்ஞானம், அதின் காரியம் இவைகளை உத்தேசித்து பிராஞ்ஞாதிகளுக்கு பார்க்குந்தன்மை சமானமாயிருக்கிறது. மேலும் பார்க்கிறவன் வெவ்வேறு என்பதற்கு பிரமாணமில்லை. ஆகையால் போக்தா ஒருவன் என்று கூறினது யுக்தமே.

वेद...लिप्यते 𑌵𑍇𑌦...𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 :— போஜ்யம் போக்தா இப்படி அநேகவிதமாக இரண்டையும் எவன் அறிகிறானோ அவன் எதை அனுபவித்தாலும் அத்துடன் சம்பந்தப்படுகிறதில்லை. ஏனெனின் போஜ்ஜியமானசர்வமும் போக்தாவான ஒருவனுக்கே விஷயமாயிருக்கிறது. எவனுக்கு எது விஷயமோ அவன் அதினால் குறைவும் அடைகிறதில்லை, விருத்தியையும் அடைகிறதில்லை. அக்கினியானது தனக்கு விஷயமான காஷ்டத்தை தகித்து விருத்தி க்ஷயங்களை அடையாததுபோலும்.11

II - 9 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்.)

அ-கை:—விசுவம் முதலிய மூன்று ரூபங்களையும் அவைகளின் ஸ்தானங்களையும் போஜ்ஜிய ஸ்வரூபத்தையும் அறிந்தவனுக்கு பிரயோசனத்தை இந்த சுலோகம் கூறுகிறது.

त्रिषुधामसु த்ரிஷுதாமஸு = கண், மனது, ஹிருதயாகாசம், இம்மூன்று ஸ்தானங்களில்

यत् भोज्यं யத் போஜ்யம் = ஸ்தூல, பிரவிவிக்த, ஆனந்த ரூபங்களான போஜ்ஜிய வஸ்து எதுவோ

यः चभोक्ता யச் ச போக்தா = விசுவ தைஜஸ பிராஜ்ஞர்களான போக்தா எவனோ

एतदुभयं ஏதத் உபயம் = போக்தா. போஜ்ஜியம் இவ்விரண்டையும்

यःतु யஸ் து = எந்த அதிகாரி

वेद வேத = அறிகிறானோ

सः ஸ: = அவன்

भुञ्जानः புஞ்ஜாந: = விஷயங்களை அனுபவித்தாலும்

नलिप्यते நலிப்யதே = அந்த பல சம்பந்தத்தை அடையமாட்டான். அதாவது விஷயானுபவத்தாலுண்டான தாழ்ந்த, உயர்ந்த ஸ்திதிகளை அடைகிறதில்லை. அந்தந்த ஸ்தானங்களில் அந்தந்த போகபலன்களைக் கொடுக்கிறவரும் எனக்கும் மற்ற ஜீவர்களுக்கும் கர்மபலனைக் கொடுக்கிறவரும் ஈசுவரனே. தனக்காவது மற்ற ஜீவர்களுக்காவது கர்மபல போகத்தில் ஸ்வாதந்திரியமில்லை என்று நினைத்து அதிகாரி புருஷன் விகாரமடைகிறதில்லை என்பது கருத்து.

---

11 - வது மந்திரம். (அத்வைதம்.)

அ-கை:—விசுவாதிகளின் ஸ்வரூபத்தையும் அந்த ஸ்தானங்களிலிருக்கிற அவர்களின் போஜ்ஜிய ஸ்வரூபத்தையும் அறிந்தவனுக்கு பலனைச் சொல்லுகிறார்.

त्रिषुधामसु த்ரிஷுதாமஸு = கண், மனது, ஹிருதயாகாசம், இம்மூன்று ஸ்தானங்களில்

यत् भोज्यं யத் போஜ்யம் = ஸ்தூலம் முதலியவைகளை

यः च भोक्ता யச் ச போக்தா = விசுவன் முதலான மூன்று ரூபமான ஆத்மா எவர்.

एतदुभयं ஏதத் உபயம் = போக்தா, போஜ்ஜியம் இவ்விரண்டையும்

यः तु யஸ் து = எந்த அதிகாரி

वेद वேத=அறிகிறானோ
सः ஸ:=அந்த ஞானியானவன்
भुञ्जानः பு⁴ஞ்ஜாந:=விஷயங்களை அனுபவித்தாலும்
सोऽयमात्मा चतुष्पात् ஸோயமாத்மா சதுஷ்பாத்= இந்த ஆத்மாவானவர் நான்கு ரூபத்தோடு கூடினவர் என்று வேதத்தால பிரதிஞ்ஞை செய்யப்பட்டது. விசுவன், தைஜஸன், பிராஜ்ஞன், துரியம் என்று பெயருள்ள நான்கு ரூபங்களையும் விஸ்தாரமாக நிரூபணம் செய்து மூன்று ரூபங்களை விளங்கச்செய்யும் மந்திரங்களை உதாகரித்து நான்காவது ரூபத்தை விளங்கச்செய்யும் மந்திரங்களை உதாகரிக்கப் போகிறவராயிருந்துகொண்டு, இப்போது நான்காவது ரூபமான ஆத்மா அறியத்தகுந்தவரென்று சொல்லி முடிக்கிறார்.

(य. யஃ=எவர் நான்காவது ரூபமான)
आत्मा ஆத்மா=ஆத்மாவோ
स: ஸஃ=அந்த ஆத்மா
विज्ञेयः விஜ்ஞேயஃ=நான்கு ரூபமாக முமுக்ஷுக்களால் அறியத் தகுந்தவர். ॥16॥

இரண்டாவது கண்டம் முதலாவது மந்திரம்.

அ-கை:—இவ்விதமாக விசுவாதி மூன்றின் மஹிமையைக்கூறி துரீயத்தின் மஹிமையைக் கூறுகிறார்.

अन्तः प्रज्ञ न அந்த:ப்ரஜ்ஞம் ந=**अन्तःप्रज्ञापयतीति अन्तःप्रज्ञः** அந்த:ப்ரஜ்ஞாபயதீதி அந்த:ப்ரஜ்ஞ: ஆத்மாவின் நான்காவது ரூபமானது உள்ளே ஞானமுண்டுபண்ணுகிறதில்லை. அதாவது ஸ்வப்நபதார்த்தங்களை காண்பிக்கிறதில்லை.

बहिःप्रज्ञ न பஹி:ப்ரஜ்ஞம் ந=ஜாக்கிரத் பதார்த்தங்களின் ஞானத்தை உண்டுபண்ணுகிறதில்லை.

பிரமாண வாக்கியம்:—

अन्तर्बहिश्च सौख्यंच समाधिज्ञानमेवच ॥ ब्रह्मांडे ॥

அந்தர்பஹிஶ்ச ஸௌக்யம்ச ஸமாதிஜ்ஞாநமேவச ॥

॥ ப்ரஹ்மாண்டே ॥

उभयतः प्रज्ञ न உபயத: ப்ரஜ்ஞம் ந=வெளியேயிருக்கிற பதார்த்தங்களைத் தெரிந்துகொண்டு ஸ்வப்நத்திலுண்டான பதார்த்தங்களையும் எப்போது பார்க்கிறானோ அந்த அவஸ்தை உபயத: என்பதால் கூறப்படுகிறது. ஆகவே பாஹ்ய ஆந்தர பதார்த்தங்களை அறியும்படி செய்கிறதில்லை.

பிரமாண வாக்கியம்:—

बहिः शब्दादिकं ज्ञानमन्तःस्वप्नं तथैव च ।
यदाभवति सावस्था उभयज्ञान शब्दिता ।
एतत्सर्वं तुरीयेण नकरोत्यज. ॥

பஹி: ஶப்தாதிகம் ஜ்ஞாநமந்த:ஸ்வப்நம் ததைவ ச ।
யதாபவதி ஸாவஸ்தா உபயஜ்ஞாநஶப்திதா ॥
ஏதத்ஸர்வம் துரீயேண நகரோத்யஜ:

प्रज्ञानघनं न ப்ரஜ்ஞாநகநம் ந=**घनप्रज्ञानं** கநப்ரஜ்ஞாநம் என்று மாற்றிக்கொள்ளவும் சுஷுப்தியை அடைந்த ஜீவஸ்வரூபத்தையாவது அஞ்ஞானத்தையாவது ஜீவன் அறியும்படி செய்கிறதில்லை

प्रज्ञ न ப்ரஜ்ஞம் ந=மனோவாஸனையாலுண்டான வஸ்துக்களை அறியும்படி செய்கிறதில்லை. விசுவதைஜஸ பிராஞ்ஞனென்று பெயருள்ள மூன்று ரூபங்களின் வியாபாரங்களையும், பாஹ்யவஸ்து, ஸ்வப்நவஸ்து, சுஷுப்தி ஸ்வரூபம், இவைகளை அறியும்படி செய்கிற வியாபாரத்தையும் சமாதியில் எப்போதும் ஞானமுண்டாகும்படி செய்யும் வியாபாரத்தையும் செய்கிறதில்லை என்பது அர்த்தம்.

அப்படியானால் இந்த நான்காவது ரூபத்துக்கு வியாபாரமே யில்லையாவெனின் சொல்லுகிறார்.

अप्रज्ञं न 𑌅𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌨=பிரஜ்ஞையை உண்டுபண்ணுகிறதில்லை என்பதில்லை. முக்தர்களுக்கு அவரவர்களுக்குத் தகுதியான பூர்ணஞானத்தை உண்டுபண்ணுகிறதென்பது கருத்து.

பிரமாண வாக்கியம் :—

सर्वज्ञान प्रदश्चापि मुक्तस्यैवतुरीयकः ॥ ब्रह्मांडे॥

𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨 𑌪𑍍𑌰𑌦𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑌤𑍁𑌰𑍀𑌯𑌕𑌃 ॥

॥ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑍇 ॥

अदृष्टं 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌂=விசுவன் முதலிய மூன்று ரூபங்கள் பாஹ்ய ஆந்தர ஞானத்தை உண்டுபண்ணுவதால் ஊஹிக்கப்படுவது போல் நான்காவது ரூபம் ஊஹிக்கப்படவில்லை. அல்லது (2) அமுக்தர்களின் திருஷ்டிக்குக் காணப்படாததால் அதிர்ஷ்டம்.

பிரமாணம் :—

अमुक्तस्यत्व दृश्यत्वात्षोडशीं वाकलामृते ॥

𑌅𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌷𑍋𑌡𑌶𑍀𑌂 𑌵𑌾𑌕𑌲𑌾𑌮𑍃𑌤𑍇 ॥

பதினாறு கலைகளுடைய முக்கிய பிராணனுடைய அனுக்கிரகமன்றியில் ஜீவன் முக்தியில்லாததால் அப்படிப்பட்டவர்களால் அதிர்ஷ்டம்.

अव्यवहार्यं 𑌅𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯𑌂=முக்தியன்றியில் அந்த ரூபத்தின் ஞானமும் அதின் வியவஹாரமுமிராததால் அவ்வியவஹார்யம்.

பிரமாணம் :—

तुरीयोदृष्ट इत्युक्तो ग्रहणादेरगोचरः ।
विनामुक्तिं यतस्तेना व्यवहार्य इतीरितः ॥

𑌤𑍁𑌰𑍀𑌯𑍋𑌽𑌦𑍃𑌷𑍍𑌟 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌦𑍇𑌰𑌗𑍋𑌚𑌰𑌃 ।
𑌵𑌿𑌨𑌾𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌂 𑌯𑌤𑌸𑍍𑌤𑍇𑌨𑌾𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯 𑌇𑌤𑍀𑌰𑌿𑌤𑌃 ॥

अग्राह्यं 𑌅𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂=முன் சொல்லிய அர்த்தமே

अलक्षणं 𑌅𑌲𑌕𑍍𑌷𑌣𑌂=ஜாக்கிரதாதி அவஸ்தைகளில் ஜீவர்களை பிரவிர்த்திக்கும்படி செய்தல் எப்படி விசுவாதி ரூபங்களை அனுமானிக்கக் காரணமாயிருக்கிறதோ அப்படி இதை அனுமானிக்கக் காரணமில்லை. அப்படிப்பட்டது. ஆகவே

अचिन्त्यं 𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌂=சிந்திக்கக்கூடாத சக்தியுள்ளது.

பிரமாண வாக்கியம் :—

जाग्रदादि प्रवृत्तिस्तु लक्षणं ह्यनमापकं ।
अलक्षणस्त द्राहित्याद चिन्त्यस्ततएवच ॥

ஜாக்ரதாதி வ்யாவ்ருத்தி ஶூந்ய லக்ஷணம் சிந்தாவகம் ।
அலக்ஷணத்வாத் க்ராஹித்ராதி த்ருஶ்ய ஏவ ஸ:॥

अव्यपदेश्यं அவ்யபதேஶ்யம்=பிறருக்குச் சொலலமுடியாதது

பிரமாணம் :—

ततएवह्य निर्देश्य श्चिदानन्दैक लक्षणः ।
मुक्तस्य सर्वव्यापार हेतुरेव तुरीयकः ॥

தத ஏவாஹ்யநிர்தேஶ்யஶ்சிதாநந்தைக லக்ஷண: ॥
முக்தஸ்ய ஸர்வவ்யாபார ஹேதுரேவ துரீயக: ॥

ऐकात्म्य प्रत्ययसारं ஐகாத்ம்ய ப்ரத்யயஸாரம்=பிரதானமாகவும், பூர்ணமாகவும் ஞானரூபமாகவும், ஆநந்த ரூபமாகவும் இருக்கிறது.

பிரமாணம் :—

एक:प्रधान उद्दिष्टः आत्मापूर्णत्वतः श्रुतः ।
तदेवास्यस्वरूपं यदैकात्म्यं नामकीर्त्तितः ।
प्रत्ययोज्ञानरूपत्वात्सार आनन्दरूपतः ॥

ஏக: ப்ரதாந உத்திஷ்ட: ஆத்மாபூர்ணத்வத: ஶ்ருத: ।
ததேவாஸ்யஸ்வரூபம் யதைகாத்ம்யம் நாமகீர்த்தித: ॥
ப்ரத்யயோஜ்ஞாநரூபத்வாத்ஸார ஆநந்தரூபத: ॥

प्रपञ्चोपशमं ப்ரபஞ்சோபஶமம்=பிரபஞ்சரூபமாகவும் அதாவது வியாபகமாகவும், உத்கிருஷ்டமான ஆநந்தரூபமாகவுமிருக்கிறது. அல்லது தேகசம்பந்த முதலிய அநிஷ்ட பிரபஞ்சத்தை நிவிர்த்திக்கிறதென்று அர்த்தம்.

பிரமாணம் :—

प्रपंचो विस्तृते विंष्णुः शम आनन्दरूपतः ।
उत्कृष्टानन्दरूप त्वादुपशब्दः प्रकीर्त्तितः ।
प्रपंचं देहबन्धाख्यं तुरियं शमयेद्यतः ।
प्रपंचोप शमस्तेनाप्युक्तः सभगवान्प्रभुः ॥

ப்ரபஞ்சோ விஸ்த்ருதே விஷ்ணு: ஶம ஆநந்தரூபத: ।
உத்க்ருஷ்டாநந்தரூபத்வாதுபஶப்த: ப்ரகீர்த்தித: ॥
ப்ரபஞ்சம் தேஹபந்தாக்யம் துரீயம் ஶமயேத்யத: ।
ப்ரபஞ்சோபஶமஸ்தேநாப்யுக்த: ஸபகவாந்ப்ரபு: ॥

शिवं ஶிவம்=துக்கமன்றியிலும் சுகரூபமாயுமிருக்கிறது.

பிரமாணம் :—

निर्दुःख सुखरूपत्वाच्छिवः शब्दः श्रुतौ श्रुतः ॥ माहात्म्ये ॥
நிர்து:க ஸுகரூபத்வாச்சிவ: ஶப்த: ஶ்ருதௌ ஶ்ருத:
॥ மாஹாத்ம்யே ।

अद्वैतं அத்வைதம்=द्वितं த்விதம்=என்றால் அறியப்பட்ட வஸ்து. द्वितस्य इदं द्वैतं த்விதஸ்ய இதம் த்வைதம் அதாவது மித்தியாஞானம். எதினிடமிருந்து அன்னியதா ஞானம் திரும்புகிறதோ (नाविद्यते द्वैतं यस्मात्=अद्वैतं நவித்யதே த்வைதம் யஸ்மாத்=அத்வைதம்) அது அத்வைதம், நான் என்னுடையது முதலிய மித்தியாஞானத்தை நிவிர்த்திக்கிறது.

பிரமாணம் :—

अन्यथा प्रत्ययो द्वैतं शमयेत्तं यज्ञोहरिः ।
अद्वैतस्ते न चोद्दिष्टस्तुरीयः पुरुषोत्तमः ॥ माहात्म्ये ॥
अपेक्ष्यवस्तु याथार्थ्या द्वित्वमन्यस्वरूपता ।
इणुगता वितिधातोश्च तद्ज्ञानं द्वैतमुच्यते ॥ संकल्पे ॥

அந்யதா ப்ரத்யயோ த்வைதம் ஶமயேத்தம் யஜ்ஞோஹரி꞉ ।
அத்வைதஸ்தே ந சோத்திஷ்டஸ்துரீய꞉ புருஷோத்தம꞉ ॥
॥ மாஹாத்ம்யே ॥
அபேக்ஷ்யவஸ்து யாதார்த்யா த்வித்வமந்யஸ்வரூபதா ।
இணுகதா விதிதாதோஶ்ச தத்ஜ்ஞாநம் த்வைதமுச்யதே ॥
॥ ஸங்கல்பே ॥

இணு என்னும் பகுதிக்கு அறிவு என்று அர்த்தம். இதி னின்றும் இத: என்னும் பதம் உண்டாகிறது. வஸ்துவின் யதார்த் தத்தை அபேக்ஷித்து இரண்டாவது பிரகாரமான ஞானம் த்விதம் எனப்படும்.

चतुर्थं मन्यन्ते சதுர்த்தம் மந்யந்தே = இப்படிப்பட்டதை பரமாத்மாவின் நான்காவது பாதமாக பிரம்மாதி ஞானிகள் அறிகிறார்கள்.

விசுவாதிகளுக்கு ஸ்தானம் ஏற்பட்டதுபோல் இதற்கு ஸ்தானம் துவாதசாந்தம் அதாவது மூக்கின் நுனிமுதல் பனிரெண்டு விரல் இடம் என்று மாஹாத்மிய கிரந்தத்தை அனுசரித்து பாஷ்யகாரர் சொல்லுகிறார்.

सः आत्मा सः विज्ञेयः ஸ꞉ ஆத்மா ஸ꞉ விஜ்ஞேய꞉=விசுவாதிகளின் ரூபத்தை நன்றாக நிரூபித்து மந்திரங்களையும் உதாஹரித்து, நான்காவது ரூபவிஷயமாய் மந்திரங்களைச் சொல்லப்போகிறவர், நான்காவது ரூபமான ஆத்மா அவசியம் அறியத்தக்கவர் என்று முடிக்கிறார்.

(यः ய꞉=நான்கு ரூபமுள்ள எந்த ஆத்மாவோ)
स आत्मा ஸ꞉ ஆத்மா=அந்த ஆத்மா

विज्ञेयः விஜ்ஞேயஃ=முமுக்ஷுக்களால் நான்கு விதமாக அறியத் தக்கவர்.

பிரமாணம் :—

विश्वादिरूपो यस्यात्मा स विज्ञेयो मुमुक्षुभिः ।
निर्विशेषोपि भगवांश्चतुर्धा समुदीरितः ॥ प्रत्यये ॥

விஶ்வாதிரூபோயஸ்யாத்மா ஸவிஜ்ஞேயோமுமுக்ஷுபிஃ ।
நிர்விஶேஷோபி பகவாம்ஶ்சதுர்தாஸமுதீரிதஃ ॥
॥ ப்ரத்யயே ॥16॥

अत्र एत श्लोका:भवन्ति (அத்வைதம்·)
அத்ர ஏதெ ஶ்லோகாஃபவந்தி

निवृत्तेः सर्वदु:खानामीशान: प्रभुरव्ययः ।
अद्वैत: सर्वभावानां देवस्तुर्यो विभु स्मृतः ॥17॥
நிவ்ருத்தேஃ ஸர்வதுஃகாநாமீஶாநஃ ப்ரபுரவ்யயஃ ।
அத்வைதஃ ஸர்வபாவாநாம்தேவஸ்துர்யோவிபுஃஸ்ம்ருதஃ॥

अत्र एते श्लोका: भवन्ति அத்ரஏதெஶ்லோகாஃபவந்தி = அந்த பிராஞ்ஞன் அல்லவென்று முந்தின சுருதியில் சொல்லிய தாத்பரியத்தை ஸ்ரீ கௌடபாதாசாரியர் இனிவரும் சுலோகங்களில் விவரிக்கிறார்.

सर्वदु:खानां ஸர்வதுஃகாநாம் = பிராஞ்ஞ தைஜஸ விசுவரூப ஜீவர்களின் சகல துக்கங்களின்

निवृत्तेः நிவ்ருத்தேஃ=நிவர்த்திக்கு
तुर्यः துர்யஃ = நான்காவதான
ईशान: ஈஶாநஃ = சுவாமியாயும்
प्रभुः ப்ரபுஃ=காரணமாயும்
अव्ययः அவ்யயஃ=ஸ்வரூபத்தில் வியபிசாரத்தை அடையாதவனாயும்
सर्वभावानां ஸர்வபாவாநாம்=சகல பதார்த்தங்களுக்குள்
अद्वैत: அத்வைதஃ=அத்வைத ஸ்வரூபமாயும்
देवः தேவஃ=பிரகாச ஸ்வரூபமாயும்
विभुः விபுஃ=விவிதமான ஸ்தானத்திரயங்கள் இவரிடத்திலிருந்து உண்டாவதால் விபு, அதாவது வியாபகமான ஆத்மா,
स्मृतः ஸ்ம்ருதஃ=சொல்லப்பட்டிருக்கிறது.
निवृत्तेः...ईशान: நிவ்ருத்தேஃ...ஈஶாநஃ = பிராஞ்ஞதைஜஸவிசுவங்களாகிற ரூபங்களிலிருக்கிற சகல துக்கங்களும் நான்காவதை சாக்ஷாத்கரிப்பதினால் நிவிர்த்தியாய் விடுவதால் அது சகலதுக்க

நாசகமாயிருக்கிறது. துரீயத்தை சாக்ஷாத்கரித்த மாத்திரத்தில் துக்கம் காணாமல் போவதால், அப்படிபட்ட துக்கத்தை துரீயமே நிவிர்த்திக்கிறதாகச் சொல்லப்படுகின்றது.

अव्यय: அவ்யய:=ஸ்வரூபத்தினின்றும் மாறுதலை அடைகிறதில்லை. ஏனெனின்,

अद्वैत: सर्वभावानां அத்³வைத: ஸர்வபா⁴வாநாம்=சகல பதார்த்தங்களும் ரஜ்ஜுவில் காணப்படும் சர்ப்பம்போல் மித்தையாயிருப்பதால் இது ஒன்றே மாறுதலை அடையாததாக இருக்கிறது; ஒன்ருக இருக்கிறது.

देव: தே³வ:=பிரகாச ஸ்வரூபம், சகலபதார்த்தங்களினிருப்புக்கு இது காரணம்.

स्मृत: ஸ்ம்ருத: = அவஸ்தாத்திரயாதீதமான துரீயத்துக்குச் சொன்ன லக்ஷணம் வித்வான்களுடைய அனுபவசித்தம் என்பதை இப்பதம் சூசிப்பிக்கிறது. ॥17॥

II - 15 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்.

அ-கை :—மேற் சொன்ன நான்காவது ரூபத்தின் மகாத்மியத்தை பிரமாணத்தால் கூறுவதாகச் சொல்லுகிருர்.

अत्र அத்ர=நான்காவதுக்குச் சொன்ன விஷயத்தில்

एतेश्लोका: ஏதே ஶ்லோகா:=இந்தமந்திரங்கள்

भवान्ति ப⁴வந்தி=அனுசரித்துச் சொன்னதாக இருக்கின்றன.

அ-கை :-பிரபஞ்சோபசமம் முதலியதால் கூறப்பட்ட சர்வ அனர்த்த நிவிர்த்தியாகிற அர்த்தத்தை இந்த மந்திரம் கூறுகிறது.

तुर्य: துர்ய:=பிரம்மத்தின் நான்காவது ரூபம்

सर्वदु:खानां ஸர்வது³:கா²நாம்=சகல துக்கங்களுடைய

निवृत्ते: நிவ்ருத்தே:=நாசத்திற்கு

(**कारण** காரணம்=ஹேது.)

ईशान: ஈஶாந:=பிரம்மாதிகளை பிரேரணை செய்கிறவர்

प्रभु: ப்ரபு⁴:=சுவாமி

अव्यय: அவ்யய:=எப்போதும் ஒரே ரூபத்தை உடையவர்

अद्वैत: அத்³வைத:=மித்தியா ஞானத்தை நிவிர்த்தி செய்கிறவர்.

सर्वभावानां ஸர்வபா⁴வாநாம்=**भवान्ति इति भाव:** ப⁴வந்தி இதி பா⁴வ:=உண்டாகிறவர்கள் என்று அர்த்தம். அதாவது பகவத் ஞானத்தால் சத்தையை அடைந்தவர்கள். அதாவது சகல அதிகாரிகளான ஜீவாத்மாக்கள் என்பது கருத்து.

देव: தே³வ: = உபாசிக்கத்தகுந்தவர்

विभु: விபு⁴:=சமர்த்தர்.

स्मृत: ஸ்ம்ருத:=இப்படி ரிஷிகளால் சொல்லப்பட்டவர். ॥17॥

II - ல் 2 - வது மந்திரம். (துவைதம்.)

அ-கை:—अत्र एते श्लोकाभवन्ति அத்ர ஏதே ஶ்லோகாபவந்தி= இந்த நான்காவது ரூப விஷயத்தில் அடியில் வரும் சுலோகங்களிருக்கின்றன. நான்காவது ரூபம் சர்வ அநிஷ்டத்தையும் நிவிர்த்திக்கிறதென்றும் प्रपंचोपशमं ப்ரபஞ்சோபஶமம் என்பதால் முன் கூறப்பட்ட அர்த்தத்தை இந்த சுலோகமும் கூறுகிறது.

तुर्यः துர்ய:=நான்காவது ரூபம்
सर्वद्ःखानां ஸர்வது:கா நாம்=சகல துக்கங்களின்
निवृत्तेः நிவ்ருத்தே:=நிவிர்த்திக்கு
(कारणं காரணம்=காரணம்)
ईशानः ஈஶாந:=முக்தர்களை பிரேரணை செய்கிறவர்
प्रभुः ப்ரபு:=சகலத்துக்கும் சுவாமி
अव्ययः அவ்யய:=எப்போதும் ஒரே ரீதியாக இருக்கிறவர்
अद्वैतः அத்வைத:=மித்தியா ஞானத்தை நிவிர்த்திக்கிறவர்
सर्वभावानां देवः ஸர்வபாவாநாம்தேவ:= சகல ஜீவர்களுக்கு அதாவது சகல ஜீவர்களால் அடையத் தகுந்தவர்
विभुः விபு:=சமர்த்தர்
स्मृतः ஸ்ம்ருத:=இப்படி இருக்கிறதாக மந்திரதிர்ஷ்டாவான பிரம்மாவால் வர்ணிக்கப்பட்டவர்

பிரமாண வாக்கியம் :—

हरिस्तुरीयरूपेण मोक्षदः संप्रकीर्त्तितः ।
देवः ससर्ज जीवानां गम्यत्वात्समुदीरितः ।
भावाज्जीवाः समुद्दिष्टा भवन्त्येते यतोविभोः ।
ईशानामपि मुक्ताना मीशानः सोननात् श्रुतः ॥ प्रत्याहारे ॥

ஹரிஸ்துரீயரூபேண மோக்ஷத: ஸம்ப்ரகீர்த்தித: ।
தேவ: ஸஸர்ஜ ஜீவாநாம் கம்யத்வாத்ஸமுதீரித: ॥
பாவாஜ்ஜீவா: ஸமுத்திஷ்டா பவந்த்யேதே யதோவிபோ: ।
ஈஶாநாமபி முக்தாநாமீஶாந: ஸோநநாச்ச்ருத: ॥
॥ ப்ரத்யாஹாரே ॥ 17 ॥

அத்வைதம் - காரிகை.

कार्यकारणबद्धौ ताविष्यते विश्वतैजसौ।
प्राज्ञः कारणबद्धस्तु द्वौ तौ तुर्ये न सिध्यतः ॥18॥

கார்யகாரணபத்தௌ தாவிஷ்யேதே விஶ்வதைஜஸௌ ।
ப்ராஜ்ஞ: காரணபத்தஸ்து த்வௌ தௌ துர்யே ந ஸித்யத: ॥18॥

तौ தௌ=இந்த பிரசித்தர்களான

विश्वतैजसौ விஶ்வதைஜஸௌ=விசுவதைஜஸர்கள்

कार्यकारणबद्धौ கார்யகாரணபத்தௌ=காரியமாகிற பலபாவத்தாலும் காரணமாகிற பீஜாவத்தாலும் கட்டப்பட்டதாய்

इष्येते இஷ்யேதே=சொல்லப்படுகிறார்கள்

प्राज्ञः तु ப்ராஜ்ஞ: து=பிராஞ்ஞனோ

कारणबद्धः காரணபத்த:= பீஜபாவத்தால் கட்டப்பட்டவன்

तुर्ये துர்யே=துரியமான ஆத்மாவினிடத்தில்

द्वौ तौ த்வௌ தௌ=இந்த இரண்டும்

न सिध्यतः நஸித்யத:=சம்பவிக்கவில்லை.

துரியத்தின் யதார்த்த ஸ்வரூபம் ஸ்பஷ்டமாய்த் தெரியும் பொருட்டு விசுவாதிகளின் சாமான்னிய விசேஷ குணங்கள் நிரூபிக்கப்படுகின்றன.

कार्यकारणबद्धौ கார்யகாரணபத்தௌ=எது செய்யப்படுகிறதோ அது காரியம் அதாவது பலம் எது செய்கிறதோ அது காரணம் அதாவது பீஜம்.

कार्य...तैजसै கார்ய...தைஜஸௌ :—தத்துவத்தை அறியாமை, தத்துவத்தை விபரீதமாய் அறிதல், ஆகிய காரண (அஞ்ஞான) காரிய (பிராந்தி) குணங்களால் முன்சொன்ன விசுவதைஜஸர்கள் கட்டப்பட்டிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறார்கள்.

प्राज्ञः कारण बद्धःतु ப்ராஜ்ஞ: காரணபத்த:து=பிராஞ்ஞன் காரணகுணத்தால் மட்டும் கட்டப்பட்டிருக்கிறான். ஏனெனின் தத்துவத்தை அறியாமை மட்டும்தான் பிரஞ்ஞன் சித்திக்கிற விஷயத்தில் காரணமாயிருக்கிறது.

द्वौ...सिध्यतः த்வௌ...ஸித்யத: = ஆகையால் காரணமாயும் காரியமாயிருக்கிற தத்துவத்தை அறியாமையும் விபரீதகிரகணமும் துரீயனிடத்தில் சம்பவிக்கவில்லை. துரீயம் சித் ஸ்வரூபமாயிருப்பதால் அதினிடத்தில் இவைகளிருப்பதாகச் சொல்லக்கூடாது. ॥ 18 ॥

II - 16 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்.

அ-கை :—नान्तःप्रज्ञः न बहिःप्रज्ञं நாந்த:ப்ரஜ்ஞம் ந பஹி:ப்ரஜ்ஞம் என்கிற (16) வாக்கியத்தால் துரியமானது விசுவன் முதலிய மூன்று ரூபங்களைவிட வேறு என்று சொன்ன விஷயத்தை இந்த மந்திரம் கூறுகிறது.

द्वौविश्व तैजसौ த்வௌவிஶ்வ தைஜஸௌ = இந்த விசுவதைஜஸர்களான இருவர்களும்

कार्यकारण बद्धौ காய-காரண பத்தௌ :—அஞ்ஞானத்தின் காரியமான நான் என்னுடையது என்கிற பிராந்தியானது காரியமெனப்படும். இந்த பிராந்திக்குக் காரணமான அவித்தையானது காரண பந்தமெனப்படும். ஜீவனுக்கு ஜாக்கிறத் காலத்திலுண்டாகிற பிராந்தியாகிற காரிய பந்தத்துக்கும் அவித்தையாகிற காரணபந்தத்துக்கும் சுவாமி விசுவன். அதாவது பந்தத்தை பண்ணுகிறவனை விசுவன் என்கிறார்கள். அவித்தியாகாரியமான ஸ்வப்நகாலத்தில் உண்டாகிற நான் என்னுடையது என்கிற பிராந்தி அதின் காரணமான அஞ்ஞானம் இவைகளாகிற ஜீவபந்தத்துக்கு தைஜஸன் சுவாமி. இப்படி விசுவன் தைஜஸன்.

इष्यते இஷ்யதே=சொல்லப்படுகிறார்கள்.
प्राज्ञः तु ப்ராஜ்ஞ: து=பிராஞ்ஞனோ வென்றால்
कारणबद्धः காரணபத்த:=மேற் சொன்ன ஜாக்கிற ஸ்வப்நதிகளுக்குக் காரணமான அஞ்ஞானமாகிற சுஷுப்தியாலுண்டான பந்தத்துக்கு ஸ்வாமி என்று கூறப்படுகிறான்.

तुर्ये துர்யே=நான்காவது ரூபத்தில்
द्वौ तौ த்வௌ தௌ=இந்த இரண்டு பந்தங்களும்
नाध्यितः நஸித்யத:=சித்திக்கிறதில்லை. ॥ 18 ॥

II - ல் 3 - வது சுலோகம். (துவைதம்)

அ-கை :—அந்த: பிரஞ்ஞன் அன்று, பஹிபிரஞ்ஞனன்று என்பதால் விசுவதைஜஸ ரூபங்களைவிட வேறான ரூபம் என்று யாதொன்று கூறப்பட்டதோ அந்த அர்த்தத்தை இந்த சுலோகம் கூறுகிறது,

विश्वतैजसौ விஶ்வதைஜஸௌ=விசுவதைஜஸர்கள்

कार्यकारणबद्धौ கார்யகாரணபத்தௌ :—ஜீவனுக்கு ஜாக்கிறத் காலத்தில் நான், என்னுடையது என்கிற பிரமை, அவைகளின் காரணமான அவித்தை, இவைகளாகிற பந்தத்தை விசுவன் உண்டுபண்ணுகிறான், ஸ்வப்ந காலத்தில் உண்டான பிரமை, அதின் காரணமான அஞ்ஞானம், இவைகளை உண்டுபண்ணுகிறவன் தைஜஸன் இப்படி இவர்கள் காரியகாரணங்களால் ஜீவனை கட்டுகிறார்கள்

प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராஞ்ஞன்

कारणबद्धः காரணபத்த:=அஞ்ஞானமாகிற காரணத்தை உண்டுபண்ணுகிறவன். அப்படியே तदधीनत्वादर्थवत् தததீநத்வாதர்த்தவத் (I-4-3) என்கிற பிரம்ம சூத்திரம் ஏற்பட்டிருக்கிறது. ॥ 18 ॥

காரிகை அத்வைதம்·

नाऽऽत्मानं न परांश्चैव न सत्यं नापि चानृतम् ।
प्राज्ञः किंचन संवेत्ति तुर्यं तत्सर्वदृक् सदा ॥19 ॥

நாऽऽத்மாநம் ந பராம்ஶ்சைவ ந ஸத்யம் நாபி சாந்ருதம்।
ப்ராஜ்ஞ: கிம்சந ஸம்வேத்தி துர்யம் தத்ஸர்வத்ருக் ஸதா॥19॥

प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராஞ்ஞன்
आत्मानं ஆத்மாநம்=தன்னை
न संवेत्ति ந ஸம்வேத்தி=நன்ருக அறிகிறதில்லை
परांश्च एव பராம்ஶ்சைவ=தனக்கு அன்னியமானதையும்
न ந=அறிகிறதில்லை
सत्यं ஸத்யம்=சத்தியத்தையும்
न ந=அறிகிறதில்லை
अनृतमपिच அந்ருதமபிச=அசத்தியத்தை
न ந=அறிகிறதில்லை
किंच கிம்ச=எதையும்
न ந=அறிகிறதில்லை
तत् தத்=அந்த
तुरीयं துரீயம்=நான்காவதான ஆத்மா
सर्वदा ஸர்வதா=எப்போதும்
सर्वदृक् ஸர்வத்ருக்=எல்லாம் பார்க்கிறவன்

அகை :—பிராஞ்ஞனுக்கு காரணபந்தம் சித்திக்கிறதென்றும் துரீயத்துக்கு தத்துவத்தை அறியாமை தத்துவத்தை விபரீதமாய் அறியுந்தன்மை ஆகிய பந்தங்கள் சித்திக்கவில்லை என்றும் எப்படிச்சொல்லலாம். ஆத்மாவைவிட வேருயும் அவித்தியாபீஜத்தினின்றும் உண்டாவதாயு மிருக்கிற பாஹ்ய துவைதப்பிரபஞ்சத்தை பிராஞ்ஞன் விசுவன் தைஜஸன் அறிவதுபோல் கொஞ்சங்கூட அறியாததால் இவன் விபரீதமாய் அறிவதற்குக் காரணமான தத்துவாஞ்ஞானமாகிற இருட்டால் கட்டப்பட்டவனுயிருக்கிருன்.

तुर्यं...सदा துர்யம்...ஸதா— துரீயமானது சகலமாயிருப்பதாலும், எப்போதும் பார்க்கிறதினுலும் அதைவிட வேறு ஒன்று மில்லாததாலும், தத்துவத்தை அறியாமை என்னும் கார

तुर्ये துர்யே=நான்காவது ரூபத்தில்

द्वौ த்வௌ=மேற்சொல்லிய காரியகாரண நிபந்தன வியாபாரம், காரணநிபந்தன வியாபாரம், இவ்விரண்டு வியாபாரங்களும்

नसिद्धतः நஸித்த்யத:=இருக்கவில்லை.

ணமும் ஏற்படவில்லை ; அதினல் உண்டாகிற விபரீத கிரகணமும் ஏற்படவில்லை. எப்போதும் பிரகாச ஸ்வரூபமாயிருக்கிற சூரியனிடத்தில் பிரகாசிக்காமலிருக்கும் தன்மையானது வேறுவிதமாய் பிரகாசிக்கும் தன்மையாவது உண்டாகிறதில்லை.

नहिद्रष्टुर्दृष्टेर्विपरिलोपोविद्यते நஹி த்ரஷ்டுர்த்ருஷ்டேர்விபரிலோபோவித்யதெ திரஷ்டாவின் திருஷ்டிக்கு நாசம் இல்லை என்னும் சுருதி பிரமாணமாயிருக்கிறது. அல்லது துரீயனே ஜாக்கிர ஸ்வப்நங்களின் ஸகல பதார்த்தங்களிலிருந்து சகல வஸ்துக்களையும் பார்க்கிற சிதாபாசன்தானுகையால் சர்வதிர்க்கு எனப்படுகிறன். नान्यदतोस्तिद्रष्टृ நாந்யதொஸ்தித்ரஷ்ட்ரு=இவனைவிடவேறுதிரஷ்டாவில்லை என்பது சுருதிப்பிரமாணம். ॥ 19 ॥

II - 7 - வது மந்திரம் விசிஷ்டாத்வைதம்.

नप्रज्ञानघनं नाप्रज्ञं ந ப்ரஜ்ஞா நகநம் நாப்ரஜ்ஞம்என்கிற வாக்கியத்தால் கூறப்பட்ட துரீய பிராஞருடைய பேதத்தை இந்த மந்திரம் கூறுகிறது.

प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராஞ்ஞன்

आत्मानं ஆத்மாநம் = தூங்குகிற ஜீவனை

न संवेत्ति ந ஸம்வெத்தி= அறியும்படி செய்கிறதில்லை.

अपरान् च एव அபராந் ச ஏவ=இதர ஜீவர்களையும்

न ந= அறியும்படி செய்கிறதில்லை.

सत्यं ஸத்யம்=கடம் முதலிய வஸ்துக்களையும்

न ந= அறியும்படி செயகிறதில்லை.

अनृतंचापि அந்ருதம்சாபி = சுக்திரஜத முதலியவைகளையும்

न ந= அறியும்படி செய்கிறதில்லை.

किञ्चन கிஞ்சந=ஜீவஸ்வரூப சுகத்தைத்தவிர வேறு ஒன்றையும்

न ந= அறியும்படி செய்கிறதில்லை.

तुरीयन्तु துரீயந்து = (இது விசிஷ்டாத்வைத பாடம்) நான்காவது ரூபமானது

सदा ஸதா=எப்போதும்

सर्वदृक् ஸர்வத்ருக்=சகலத்தையும் காண்பிவிக்கிறது. முக்தி காலத்தில் அவரவர்களுக்கு யோக்கியமான சகல வஸ்துக்களையும் எப்போதும் காண்பிவிக்கிறதென்பது கருத்து. ॥ 19 ॥

II - ல் 4 - வது சுலோகம். (துவைதம்)

அ-கை :—பிரஞ்ஞானகனமன்று, அப்பிரஞ்ஞன் அன்று என்பதால் துரீயத்துக்கும் பிராஞ்ஞனுக்கும் பேதம் சொல்லப்பட்டது. அந்த அர்த்தத்தில் இந்த சுலோகம் கூறப்படுகிறது.

प्राज्ञः 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃=பிராஞ்ஞன்

आत्मानं 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂=தன்னுடைய ஸ்வரூபத்தையும்

न संवेत्ति 𑌨 𑌸𑌂𑌵𑍇𑌤𑍍𑌤𑌿=அறிகிறதில்லை

अपरान् 𑌅𑌪𑌰𑌾𑌨𑍍=பிறர்களையும்

न 𑌨=அறிகிறதில்லை

सत्यं न 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌨=சத்தியத்தை அறிகிறதில்லை

अनृतं न 𑌅𑌨𑍃𑌤𑌂 𑌨=பொய்யானதையும் அறிகிறதில்லை

किंचन 𑌕𑌿𑌂𑌚𑌨=ஜீவஸ்வரூபம், சுகம், காலம், அஞ்ஞானம் இவைகளைவிட வேறொன்றையும்

न 𑌨=அறியும்படி செய்கிறதில்லை

तुर्यं तु 𑌤𑍁𑌰𑍍𑌯𑌂 𑌤𑍁=நான்கு ரூபமோ என்றால்

सदासर्वदृक् 𑌸𑌦𑌾𑌸𑌰𑍍𑌵𑌦𑍃𑌕𑍍=எப்போதும், முக்தியில் அவர்களுக்கு யோக்கியமான யெல்லாவற்றையும் காண்பிவிக்கிறது என்பது கருத்து.

சர்வத்தையும் பார்க்கிறபடியால் சர்வதிர்க்கு என்று சொல்லப்பட்டது. சர்வப்பிரதர்சகர் என்று சொல்லவேண்டியதாயிருக்க சர்வதிர்க்கு என்று சொன்னதானது எல்லா விஷயத்திலும் ஸ்வாதந்திரியம் இருக்கிறதென்பதை காண்பிவிக்கிறது.

பிரமாணவாக்கியம் :—

नात्मानं न परांश्चैव न सत्यं नापिचानृतं ।
प्राज्ञः संवेदयेत्किंचि जीवकालतमोविना ।
सुप्त्यवस्थां सुखं चापिविना ऽन्यत्प्रदर्शयेत ।
सर्वं तु दर्शयेन्मुक्तो तुरीयः परमेश्वरे ॥ इति प्रत्यये ॥
स्वतंत्र कर्तृशब्दः स्यात्प्राज्ञस्यावेदनं ।
यथा सर्वप्रदर्शके चैव तुरीये सर्वदर्शनं ॥ ब्रह्मतर्के ॥

𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌨𑌪𑌰𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌵 𑌨𑌸𑌤𑍍𑌯𑌂 𑌨𑌾𑌪𑌿𑌚𑌾𑌨𑍃𑌤𑌂 ।
𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌸𑌂𑌵𑍇𑌦𑌯𑍇𑌤𑍍𑌕𑌿𑌂𑌚𑌿𑌜𑍍𑌜𑍀𑌵𑌕𑌾𑌲𑌤𑌮𑍋𑌵𑌿𑌨𑌾 ॥
𑌸𑍁𑌷𑍁𑌪𑍍𑌤𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌂 𑌸𑍁𑌖𑌂𑌚𑌾𑌪𑌿𑌵𑌿𑌨𑌾𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌯𑍇𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑍁𑌦𑌰𑍍𑌶𑌯𑍇𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑍌 𑌤𑍁𑌰𑍀𑌯𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍇 ॥
॥ 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑍇 ॥
𑌸𑍍𑌵𑌤𑌂𑌤𑍍𑌰𑍇 𑌕𑌰𑍍𑌤𑍃𑌶𑌬𑍍𑌦𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌸𑍍𑌯𑌾𑌵𑍇𑌦𑌨𑌂 ।
𑌯𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌕𑍇 𑌚𑍈𑌵 𑌤𑍁𑌰𑍀𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 ॥
॥ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑌰𑍍𑌕𑍇 ॥ 19 ॥

காரிகை. (அத்வைதம்)

द्वैतस्याग्रहणं तुल्यमुभयोः प्राज्ञतुर्ययोः ।
बीजनिद्रायुतः प्राज्ञः सा च तुर्ये न विद्यते ॥20॥

த்வைதஸ்யாக்ரஹணம் துல்யமுபயோ: ப்ராஜ்ஞதுர்ய யோ: । பீஜநித்ராயுத: ப்ராஜ்ஞ: ஸாச துர்யே ந வித்யதே॥

उभयोः உபயோ:=இருவரான
प्राज्ञतुर्ययोः ப்ராஜ்ஞதுர்யயோ:=பிராஞ்ஞ துரியாளுக்கு
द्वैतस्य த்வைதஸ்ய=துவைதத்தை
अग्रहणं அக்ரஹணம்=கிரகிக்காமலிருத்தல்
तुल्यं துல்யம்=சமம்
प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராஞ்ஞன்
बीजनिद्रायुतः பீஜநித்ராயுத:=காரணமான அஞ்ஞான நித்திரையுடன் கூடினவன்
सा च ஸாச=அந்த நித்திரை
तुर्ये துர்யே=துரியத்தினிடத்தில்
न विद्यते நவித்யதே=இல்லை

அ-கை :—துரீயனும் காரணத்தால் கட்டப்பட்டிருக்கிறான் என்னும அநுமான சங்கையை நிவிர்த்திக்கும் பொருட்டு இந்த சுலோகம் ஏற்பட்டிருக்கிறது. எப்படியெனின்? துரியனுக்கும் பிராஞ்ஞனுக்கும் துவைதத்தைக் கிரகிக்காமை (அறியாமை) சமமாயிருப்பதால பிராஞ்ஞன் தான் காரணபத்தன் என்றும துரீயம் அல்லவென்றும் சொல்லுவானேன்.

बीजनिद्रायुतः பீஜநித்ராயுத:=தத்துவத்தை அறியாமையே நித்திரை. அதுவே விசேஷ ஞானமுண்டாவதற்குக் காரணம். இதனுடன கூடினவன்

प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராஞ்ஞன்

सा...विद्यते ஸா...வித்யதே=துரீயன் எப்போதும் ஞான ஸ்வரூபனானதால் தத்துவத்தை அறியாமை என்னும நித்திரை துரீயனிடத்தில் சம்பவிக்கவில்லை. ஆகவே காரணபந்தம் அவனிடத்திலில்லை என்பது கருத்து. ॥20॥

II - 18 - வது மந்திரம் விசிஷ்டாத்வைதம்.

அ-கை :—शिवं अद्वैत ஶிவம் அத்வைதம்=என்கிற மந்திரத்தால் எந்த துரியமானது மித்தியாஞானத்தை நிவிர்த்திக்கிற தென்று சொல்லப்பட்டதோ அந்த விஷயத்தில் பிராஞ்ஞனும் சமம் என்று சொல்லி, அவனைவிட துரீயன் வேறு என்பதை இந்த மந்திரம் கூறுகிறது.

द्वैतस्य த்வைதஸ்ய=வீடு தேகம் முதலியவைகளின் சுவாதந் திரியத்தை அதாவது இவைகளின் பிரமையை

अग्रहणं அக்ரஹணம்=கிரகிக்காமையானது

उभयोः प्राज्ञतुर्ययोः உபயோ: ப்ராஜ்ஞதுர்யயோ:= பிராஞ்ஞன் துரியன் இருவர்களுக்கும்

तुल्यं துல்யம்=சமமாக இருக்கிறது.

प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராஞ்ஞன்

बीजनिद्रायुतः பீஜநித்ராயுத: = தேகாதிகளில் ஸ்வாதந்திரி யத்துக்குக் காரணமான மூலாவித்தையோடு கட்டுக்கொண்டிருக் கும் தன்மையைக் கொடுக்கிறவன்.

सा च ஸாச=இந்த தன்மை

तुर्ये துர்யே=துரியத்தில்

नविद्यते நவித்யதே=இல்லை. ॥ 20 ॥

II - ல் 5 - வது சுலோகம். துவைதம்.

அ-கை :—துரியத்துக்கு சிவம் அத்வைதம் என்கிற வாக்கியத் தால் மித்தியஞானத்தை நிவிர்த்திக்கிறது என்று கூறப்பட்டது. அது பிராஞ்ஞ ரூபத்துக்கும் பொருந்தியிருக்கிறது. இவ்விரண் டுக்கும் வேறு வைலக்ஷணியம் இம்மந்திரம் கூறுகிறது. அது வைலக்ஷணியம் முந்தின சுலோகத்தில் கூறப்பட்டிருக்கிறது.)

द्वैतस्य த்வைதஸ்ய=தேகம், கிரகம, முதலியவைகளின் ஸ்வா தந்திரியத்தை

अग्रहणं அக்ரஹணம்=கிரகிக்கும்படி செய்யாமலிருப்பதானது

प्राज्ञतुर्ययोः उभयोः ப்ராஜ்ஞதுர்யயோ: உபயோ:=பிராஞ்ஞனும், துரியன், இவ்விரண்டு பேர்களுக்கும்

तुल्यं துல்யம்=சமமாக இருக்கிறது

बीजनिद्रायुतः प्राज्ञः பீஜநித்ராயுத: ப்ராஜ்ஞ=சரீரம், கிரகம், முதலியவைகளில் தனக்கு சுவாதந்திரியம் இருக்கிறது என்ப தான பிரமை உண்டாவதற்கு காரணமான அஞ்ஞானத்துடன் ஜீவன் இருக்கும்படி பிராஞ்ஞன் செய்கிறான்.

तुर्ये துர்யே=நான்காவது ரூபத்தில்

सा च ஸாச=அது

नविद्यते நவித்யதே=இல்லை துரியரூபம்அப்படி செய்யவில்லை என்பது கருத்து.

பிரமாண வாக்கியம் :—

निद्रायुतस्तु विश्वाद्यास्तद धीनायतोहिसा ।
यथाभृत्ययतः स्वामी नह्यज्ञाने परात्मनः ॥ ब्रह्मतर्के ॥
अभेदमपि तद्ब्रह्म बहुरूप विशेषतः ।
करोतिन करोतीति व्यवहार्यं स्वशक्तितः ॥ ब्रह्मतर्के ॥
न संवेदयती त्यस्वीकारं तुरियं तत्सर्वदृक् ।
सदाद्वै तस्याग्रहणं तुल्यमुभयोः प्राज्ञतुर्ययो- ॥ ब्रह्मतर्के ॥
द्वैतं न ग्राहयेत्तुर्यो न च प्राज्ञः कथंचन ।
द्वैतग्रहण बीजन्तुनिद्रा प्राज्ञं समाश्रिता ॥ प्रकटश्रुतिः ॥

நித்ராயுதஸ்து விஶ்வாத்யாஸ்தத தீநாயதோஹிஸா ।
யதாப்ருத்யயத: ஸ்வாமீ நஹ்யஜ்ஞாநே பராத்மந:
॥ ப்ரஹ்மதர்கே ॥
அபேதமபி தத்ப்ரஹ்ம பஹுரூபம் விஶேஷத:
கரோதி ந கரோதீதி வ்யவஹார்யம் ஸ்வஶக்தித: ॥
॥ ப்ரஹ்மதர்கே ॥
நஸம்வேதயதீ த்யஸ்வீகாரோ துரீயம் தத்ஸர்வத்ருக் ।
ஸதாத்வை தஸ்யாக்ரஹணம் துல்யமுபயோ: ப்ராஜ்ஞ
துர்யயோ:॥ ப்ரஹ்மதர்கே ॥
த்வைதம் ந க்ராஹயேத்துர்யோ ந ச ப்ராஜ்ஞ: கதம்சந ।
த்வைதக்ரஹண பீஜந்து நித்ரா ப்ராஜ்ஞம் ஸமாஶ்ரிதா ॥
॥ ப்ரகடஶ்ருதி:॥20॥

காரிகை. (அத்வைதம்)

स्वप्ननिद्रायुतावाद्यौ प्राज्ञस्त्वस्वप्ननिद्रया ।
न निद्रां नैवच स्वप्नं तुर्यं पश्यन्ति निश्चिताः ॥21॥

ஸ்வப்நநித்ராயுதாவாத்யௌ ப்ராஜ்ஞஸ்த்வஸ்வப்நநித்ரயா ।
ந நித்ராம் நைவ ச ஸ்வப்நம் துர்யம் பஶ்யந்தி நிஶ்சிதா: ॥

आद्यौ ஆத்யௌ = விச்வ தைஜஸர்கள்

स्वप्ननिद्रायुतौ ஸ்வப்நநித்ராயுதௌ = அன்னியதா கிரகணமாகிய ஸ்வப்நத்துடனும், அஞ்ஞானமாகிற நித்திரையுடனும் கூடியிருக்கிறார்கள்

प्राज्ञस्तु ப்ராஜ்ஞஸ்து = பிராக்ஞனோ

अस्वप्ननिद्रया (युतः) அஸ்வப்நநித்ரயா (யுத:) = அன்னியதாகிரகண மன்றியில் கேவலம் அஞ்ஞானமாகிற நித்திரையுடன் மட்டும் கூடியிருக்கிறான்

निश्चिताः நிஶ்சிதா: = பரப்பிரம்ம ஸ்வரூபத்தை நிச்சயமாய் தெரிந்துகொண்ட ஞானிகள்

तुर्ये துரீயே = துரீயத்தினிடத்தில்
निद्रां நித்ராம் = அஞ்ஞான நித்திரையை
न पश्यति நபச்யதி = பார்க்கிறதில்லை
स्वप्नंच ஸ்வப்நஞ்ச = அன்னியதா கிரகணரூப ஸ்வப்நத்தையும்
नैव पश्यन्ति நைவபச்யந்தி = பார்க்கிறதில்லை.

स्वप्ननिद्रायुतौ आद्यौ ஸ்வப்நநித்ராயுதௌ ஆத்யௌ :—ரஜ்ஜுவில் சர்ப்பம்போல் ஒன்றிருக்க ஒன்றை கிரகித்தல ஸ்வப்நமாம். தத்துவத்தை அறியாமை என்னும் இருட்டே நித்திரை என்று முன் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஸ்வப்ந நித்திரைகளுடன் கூடியவர்கள் விசுவதைஜஸர்கள். ஆகையால் அவர்கள் காரியகாரணங்களால கட்டப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறார்கள்.

प्राज्ञस्त्वस्वप्ननिद्रया ப்ராஜ்ஞஸ்த்வஸ்வப்நநித்ரயா = பிராஞ்ஞனோ ஸ்வப்நமன்றியில கேவல நித்திரையுடன் கூடியிருப்பதால காரணபத்தன் என்று கூறப்பட்டது.

नानिद्रा...निश्चिता: நநித்ராம்... நிஸ்சிதா: :— சூரியனிடத்தில இருட்டானது ஒருக்காலத்திலும் பார்க்கப்படாததுபோல் துரியனிடத்தில் நிச்சய புத்தியுள்ள பிரம்ம ஞானிகள் காரணத்தையாவது காரியத்தையாவது துரியத்தில பார்க்கிறதில்லை. ஏனெனின் சூரியனும இருட்டும் பரஸ்பரம் விருத்தர்களாயிருப்பதுபோல் துரியனும் காரியகாரணங்களும் பரஸ்பரம் விருத்தங்கள் ஆகையால துரியன் காரிய காரணங்களால் கட்டப்பட்டவனல்ல. என்று கூறப்பட்டது. ||21||

II - 19 - வது மந்திரம் விசிஷ்டாத்வைதம்.

அ-கை :—வேறு பிரகாரமாக விசுவன் முதலியவர்களுக்கு பேதாபேதத்தை இந்த மந்திரம் கூறுகிறது.

आद्यौ ஆத்யௌ = விசுவனும் தைஜஸனும்

स्वप्ननिद्रायुतौ ஸ்வப்நநித்ராயுதௌ = ஸ்வப்ந சப்தம் ஜாக்கிரத்தையும் கூறுகிறது ஜாக்கிரத் காலத்திலுண்டான பிராந்தி ஸ்வப்நத்திலுண்டான பிராந்தி இவைகளின் காரணமான நித்திரா சப்தத்தால்கூறப்படும் அவித்தை இவைகளின் சம்பந்தத்தை உடையவனானுகிறார்கள்.

प्राज्ञस्तु ப்ராஜ்ஞஸ்து = பிராஞ்ஞனோவென்றால்

अस्वप्ननिद्रया அஸ்வப்நநித்ரயா = இரண்டுவித பிரமைகளற்ற அவித்தையுடன்

(युतः யுத:=கூடினவன்) அதாவது கேவலம் அவித்தையா லுண்டான பந்தத்தைச் செய்கிறவன் என்று அர்த்தம்

निश्चिताः நிஶ்சிதா:=திருட நிச்சயத்தோடு கூடினவர்கள்

तुरीये துரீயே=துரீயத்தை

निद्रां நித்ராம்=நித்திரையிலுண்டான பந்தத்துக்கு எஜமானனாக

नपश्यन्ति நபஶ்யந்தி=அறிகிறதில்லை.

स्वप्नं ஸ்வப்நம்=ஜாக்கிரத் ஸ்வப்ந பிரமையாலுண்டான பந்தத்துக்குக் காரணமாக

न ந=அறிகிறதில்லை. ॥ 21 ॥

II - ல் 6-வது சுலோகம். (துவைதம்)

அ-கை :— விசுவாதிகளின் சாம்மியத்தையும் பேதத்தையும் வேறு விதமாகச் சொல்லுகிறார்.

आद्यौ ஆத்யௌ=விசுவதைஜஸர்களில்

स्वप्ननिद्रायुतौ ஸ்வப்நநித்ராயுதௌ=ஜாக்கிறத் காலத்தில் உண்டான பிரமை என்ன அதற்குக் காரணமான அவித்தை என்ன, இவைகளாகிற பந்தத்தை உண்டுபண்ணுகிறவன் விசுவன். ஸ்வப்நகாலத்திலுண்டான பிரமை என்ன, அதற்குக்காரணமான அவித்தை என்ன இவைகளாகிற பந்தத்தை உண்டுபண்ணுகிறவன் தைஜஸன்

प्राज्ञः तु ப்ராஜ்ஞ:து=பிராஞ்ஞனோவென்றால்

अस्वप्ननिद्रयायुतः அஸ்வப்நநித்ரயாயுத:=இரண்டுவித பிரமைகளின்றியில் கேவல அவித்தையாகிற பந்தத்தை உண்டுபண்ணுகிறவன்.

निश्चिताः நிஶ்சிதா:=நிச்சயம் அடைந்த சத்துக்கள்

तुर्ये துர்யே=துரீயனிடத்தில்

निद्रां स्वप्नं நித்ராம் ஸ்வப்நம்=ஜாக்கிறத் ஸ்வப்நங்களுக்குறிய பிரமைக்குக் காரணமான பந்தத்தை உண்டுபண்ணுதல் என்ன. அதற்குக் காரணமான அஞ்ஞானபந்தத்தை உண்டுபண்ணுதல என்ன, இவ்விரண்டும் பார்க்கிறதில்லை.

न पश्यन्ति ந பஶ்யந்தி=பார்க்கிறதில்லை. ॥21॥

காரிகை (அத்வைதம்.)

अन्यथा गृण्हतः स्वप्नो निद्रा तत्वमजानतः ।
विपर्यासे तयोः क्षीणे तुरीयं पदमश्नुते ॥ 22 ॥

அந்யதா க்ருண்ஹத: ஸ்வப்நோ நித்ரா தத்வமஜாநத:।
விபர்யாஸே தயோ: க்ஷீணே துரீயம் பதமஶ்நுதே ॥ ௧௫ ॥

अन्यथा அந்யதா=ஒன்று இருக்கவேறு ஒன்றாக
गृण्हत: க்ருண்ஹத:=கிரகிக்கிறவனுக்கு
स्वप्नः ஸ்வப்ந:=ஸ்வப்நம்
(भवति பவதி=உண்டாகிறது)
तत्वं தத்வம்=தத்வத்தை
अजानतः அஜாநத:=அறியாதவனுக்கு
निद्रा நித்ரா=அஞ்ஞானமாகிற நித்திரை
(भवति பவதி=உண்டாகிறது)
तयोः தயோ:=இந்த ஸ்வப்ந நித்திரைகளின்
विपर्यासे விபர்யாஸே=விபரீதமாகிற அந்யதாக்ரஹணரூப பந்தங்கள்.
क्षीणे க்ஷீணே=நசிக்கும்போது
तुरीयं துரீயம்=நான்காவதான
पदम् பதம்=ஸ்தானத்தை
(जीवः ஜீவ:=ஜீவன்)
अश्नुते அஶ்நுதே=அநுபவிக்கிறான்.

அ-கை :—துரீயனிடத்தில் நிச்சய புத்தி எப்போது ஜீவனுக்கு உண்டாகும் என்பது இனி சொல்லப்படுகிறது.

अन्यथागृण्हतः स्वप्नः அந்யதாக்ருண்ஹத: ஸ்வப்ந:=ஸ்வப்ந ஜாக்கிரங்களுக்குள், ரஜ்ஜுவில் சர்ப்பத்தைப்போல் தத்துவத்தை வேறுவிதமாக கிரகிக்கிறவனுக்கு ஸ்வப்நம் உண்டாகிறது.

निद्रातत्वमजानतः நித்ரா தத்வமஜாநத:—தத்துவத்தை அறியாதவனுக்கு நித்திரை உண்டாகிறது. இந்த நித்திரை மூன்று அவஸ்தைகளிலும் சமமாயிருக்கிறது.

विपर्यासे...अश्नुते விபர்யாஸே...அஶ்நுதே :—ஸ்வப்ந நித்திரைகள் விசுவனுக்கும் தைஜஸனுக்கும் சமமாயிருப்பதாலும், அந்நியதா கிரகணம் இருவருக்கும் பிரதானமாயிருப்பதாலும், இருவரும் ஒருவகுப்பில் சேர்ந்தவர்கள். இந்த வகுப்பில் அந்நியதா கிரகணம் பிரதானமாயும் தத்துவத்தை அறியாமை என்னும் நித்திரை ஸ்வல்பமாயுமிருப்பதால், இந்த வகுப்புக்குப் பிரதானமான அந்நியதா கிரகணமே ஸ்வப்நம் என்று கூறப்படுகின்றது. மூன்றுவது ஸ்தானமான பிராஞ்ஞன் இரண்டாவது வகுப்பில் சேர்ந்தவன். இந்த வகுப்பில் தத்துவத்தை அறியாமை என்னும் நித்தி

ரையே விபர்யாசம் அதாவது அந்நியதாவாக இருக்கும் தன்மை. ஆகையால் காரியகாரணங்களின் ரக்ஷணங்களான அந்நியதா கிரகணம், அறியாமை இவைகளாகிற விபரீதங்கள் பரமார்த்த தத்துவ ஞானத்தால் நாசமான வளவில் நான்காவது ஸ்தானத்தை ஒருவன் சாக்ஷாத்தாய் அடைகிறான். காரியகாரணங்களின் பந்தரூபங்களை துரீயத்தில் பார்க்காதவன் தத்துவம் அறியப்பட்டு விபரீதம் நசித்த சமயத்தில் துரீயத்தினிடத்தில் நிச்சய புத்தியை அடைகிறான் என்பது கருத்து. || 22 ||

II - 20 - வது மந்திரம் விசிஷ்டாத்வைதம்.

அ-கை :—இப்படி துரீயத்தின் தர்சனம் பிராப்தி இவைகள் எப்போது உண்டாகும் என்னும் கேள்விக்கு இந்த மந்திரம் உத்தரம் கூறுகிறது.

अन्यथागृण्हतः அந்யதாக்ருண்ஹத:= பகவதாதீனமான கிரகதேசாதிகளை தனக்கு ஸ்வாதீனம் என்று அறிந்தவனுக்கு

स्वप्नः ஸ்வப்ந:=பிரமபாரம்பரையானது

(भवति பவதி=உண்டாகிறது)

तत्वे தத்வே=பகவானுடைய சுவாதந்திரியம் முதலிய தத்துவத்தை

अजानतः அஜாநத:=அறியாதவனுக்கு

निद्रा நித்ரா=மூலாவித்தையாலுண்டான பந்தமானது உண்டாகி விடுகிறது.

तयोः தயோ:=நித்திரை பிரமம் இவைகளின்

विपर्यासे விபர்யாஸே=சுற்றுதல்

क्षीणेसति க்ஷீணேஸதி=நசித்திருக்கும்போது

तुरीयेपदं துரீயம்பதம்=நான்காவது ரூபத்தை

अश्नुते அச்நுதே=பிரத்தியக்ஷமாகபார்த்து அடைகிறான். ||22||

II-ல் 7-வது சுலோகம். துவைதம்.

அ-கை:—இப்படிப்பட்ட நான்காவது ரூபத்தின் தரிசனமும் பிராப்தியும் எப்போது உண்டாகுமெனின் உத்தரம் கூறுகிறார்.

अन्यथागृण्हतः அந்யதாக்ருண்ஹத:=ஈசுவராதீனமான கிரகம் முதலியவைகளை தனக்கு ஸ்வாதீனமென்று அறிந்தவனுக்கு

स्वप्नः ஸ்வப்ந:=ஸ்வப்நம் அதாவது மித்தியாஞானம் உண்டாகிறது.

तत्वं தத்வம்=பகவானுடைய சுவாதந்திரிய முதலியவைகளை

अजानतः அஜாநத꞉=அறியாதவனுக்கு
निद्रा நித்³ரா=அவித்தியாடம்தம் உண்டாகிறது.
तयोः विपर्यासे क्षीणे தயோ꞉ விபர்யாஸே க்ஷீணே=மித்தியா யாகிற பிரமை, அஞ்ஞானம் இவைகள் நாசமடையும்போது
तुरीयं துரீயம்=துரீயத்தை
अश्नुते அஶ்நுதே=பிரத்தியக்ஷமாக அடைகிறான். ॥22॥

காரிகை

अनादिमायया सुप्तो यदा जीवः प्रबुध्यते ।
अजमनिद्रमस्वप्नमद्वैतं बुध्यते तदा ॥ 23 ॥

அநாதி³மாயயா ஸுப்தோ யதா³ ஜீவ꞉ ப்ரபு³த்⁴யதே ।
அஜமநித்³ரமஸ்வப்நமத்³வைதம் பு³த்⁴யதே ததா³ ॥23॥

अनादिमायया அநாதி³மாயயா= ஆதியில்லாத மாயையால்
सुप्तः ஸுப்த꞉= தூங்கும்
जीवः ஜீவ꞉=ஜீவன்
यदा யதா³ =எப்போது
प्रबुध्यते ப்ரபு³த்⁴யதே=விழித்துக்கொள்ளுகிறானோ
तदा ததா³= அப்போது
अजं அஜம்=பிறப்பில்லாமலும்
अनिद्रं அநித்³ரம்= நித்திரையில்லாமலும்
अस्वप्नं அஸ்வப்நம்=ஸ்வப்ந மில்லாமலிருக்கிற
अद्वैतं அத்³வைதம்= அத்வைத ஸ்வரூபமான துரீயத்தை
बुध्यते பு³த்⁴யதே =அறிகிறான்

அ-கை :...முற்கூறிய விபரீத ஞானத்திற்குக் காரணமான தத்துவபோதம் எப்போதும் உண்டாகிற தென்பதை இந்த மந்திரத்திற் கூறுகிறார்.

अनादिमायया सुप्तोजीवः அநாதி³மாயயா ஸுப்தோஜீவ꞉ :—தத்துவத்தை அறியாமை என்னும் காரணம், அந்யதாக்ரஹணம் ஆகிய இவ்விரண்டு விதமான, அநாதிகாலமாய் பிரவிர்த்தித்திருக்கிற, மாயையாகிற ஸ்வப்நத்தால், இந்த சம்சாரியான ஜீவன், "இவன் என்னுடைய பிதா, இவன் புத்திரன், பேரன், இது என்னுடைய பூமி, இவை என்னுடைய மிருகங்கள், நான் இவைகளின் சுவாமி நான் சுகீ, துக்கீ, இதனால் நான் க்ஷேமத்தையடைந்திருக்கிறேன், இதனால் நான் விர்த்தி அடைந்திருக்கிறேன்" இப்படிப்பட்ட ஸ்வப்நங்களை ஜாக்கிர ஸ்வப்நங்களாகிற இரண்டு அவஸ்தைகளி லும் பார்த்துக்கொண்டு தூங்குகிறான்.

यदाप्रबुध्यते யதாப்ரபுத்யதே:— இவன் எப்போது வேதாந்த தத்துவார்த்தத்தை அறிந்த பரம தயாளுவான குருவால் "நீ இன்னாருடைய பிள்ளை, இன்னாருடைய தகப்பன் இப்படிப்பட்ட காரிய காரண ரூபமாயிருக்கவில்லை. ஆனால் அந்த பிரம்மமே நீ இப்படி போதிக்கப்படுகிறானோ அப்போது அவன் விழித்துக்கொள்ளுகிறான். அதாவது அடியில் வருமாறு அறிகிறான்.

अजं அஜம்:— இந்த ஆத்மாவினிடத்தில் உள்ளும் வெளியுமில்லை; ஜன்மம் முதலிய விகாரங்களில்லை. ஆகையால் ஆத்மா அஜம் அதாவது காரியகாரணங்களற்றது. ஜன்மாதி சகல விகாரங்களுமற்றது என்பது கருத்து.

अनिद्रं அநித்ரம்:— ஜன்மாதிகளுக்குக் காரணமான அவித்தையாகிய தமஸ் என்னும் காரணமாகிய நித்திரை இல்லாததால் அது அநித்ரம் அதாவது எப்போதும் விழித்துக்கொண்டிருக்கிறது.

अस्वप्नं அஸ்வப்நம்:— துரீயமானது நித்திரையற்றதாகையால் ஸ்வப்நமற்றதாயிருக்கிறது. ஏனெனின், அந்யதா கிரகணம் என்ற ஸ்வப்நம் அஞ்ஞான நித்திரையால் உண்டாகிறது.

अद्वैतं बुध्यतेतदा அத்வைதம்புத்யதே ததா:— நித்திரையும் ஸ்வப்நமுமில்லாததால பிறப்பற்றதாயும அத்வைதமாயுமிருக்கிறது. இப்படி துரீயனே நான் என்று அறிகிறான். ॥ 23 ॥

II - 21 - வது மந்திரம் விசிஷ்டாத்வைதம்.

அ·கை:—நித்திரை பிராந்திகளின் நாசம் எதினாலுண்டாகிறது எது நாசத்தை அடைந்திருக்கும்போது பகவானுடைய பிரத்தியக்ஷஞானமுண்டாகிறது என்கிறகேள்விக்கு பகவத் பிரஸாதத்தாலேயே உண்டாகிறதென்று இந்தமந்திரம் உத்தரம் கூறுகிறது.

अनादिमायया அநாதிமாயயா = மாயை என்றால் பகவதிச்சையும் அதின் அதீனமான அவித்தையுமாம். அநாதியான விஷ்ணுவின் கர்மரூப அவித்தையால

सुप्तः ஸுப்த: = சம்சாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற

जीवः ஜீவ: = ஜீவன்

यदा யதா = எப்போது

अनादिमायया அநாதிமாயயா = பகவானுடைய இச்சையால் அதாவது பகவத் பிரசாதத்தால் (இவ்விடத்தில மாயா சப்தம் இச்சையை கூறுகிறது. மற்றொரு இடத்தில அவித்தையை கூறுகிறது.

प्रबुद्ध्यते ப்ரபுத்யதே = பகவானே சுவதந்திரம் மற்றதெல்லாம் அவருடைய ஆதீனம் என்கிற தத்துவஞானத்தோடு கூடினவனாக ஆய்விடுகிறானோ

तदा ததா = அப்போது

अजं அஜம் = ஜனனாதி தோஷமற்றவனும்

अनिद्रं अस्वप्नं அநித்ரம் அஸ்வப்நம் = விருவன் முதலானவர்களின் வியாபாரத்தை உண்டுபண்ணுதவனும்,

अद्वैतं அத்வைதம் = மித்தியாஞானத்தை நிவிர்த்திக்கிறவனாகவும் (இது உபலக்ஷணம்) சகல அநிஷ்டங்களையும் நிவிர்த்திக்கிறவனாகவும் இருக்கிற பகவானை

बुद्ध्यते புத்யதே = சாக்ஷாத்தாய் பார்க்கிறான் அதாவது பிரத்தியக்ஷமாய் பார்க்கிறார். ॥ 23 ॥

II - ல் 8-வது சுலோகம் துவைதம்.

அ-கை:—எந்த பிரமம், அஞ்ஞானம், இவைகளின் நாசத்தால் பகவானுடைய அபரோக்ஷஞான முண்டாகிறதோ அவைகளின் நாசம் எதினாலுண்டாகிற தென்னின் பகவத் பிரசாதத்தால் என்கிறார்.

अनादिमायया அநாதிமாயயா = அநாதியான விஷ்ணுவின் மாயையால் அதாவது இச்சையாலும் அதற்கு வசமான அவித்தையாலும்

सुप्तः जीवः ஸுப்த: ஜீவ: = சம்சாரத்தை அடைந்த ஜீவன்

यदा யதா = எப்போது

(**अनादिमायया** அநாதிமாயயா = பகவானுடைய பிரசாதத்தால்)

प्रबुध्यते ப்ரபுத்யதே = விழித்துக் கொள்ளுகிறானோ அதாவது பகவானே சுவதந்திரர், மற்றவை யெல்லாம் அவருக்குச் சுவாதீனம் என்பதாய் தத்துவஞான முள்ளவனாக ஆகிறானோ

तदा ததா = அப்போது

अजं அஜம் = ஜனனாதி தோஷமற்றவராயும்

अनिद्रं अस्वप्नं அநித்ரம் அஸ்வப்நம் = விச்வாதி மூன்று ரூபங்களால் ஜீவன் மூலமாக எந்த வியாபாரத்தைச் செய்கின்றானோ அவைகளைச் செய்யாதவரும்,

अद्वैतं அத்வைதம் = மித்தியாஞானம் முதலிய சகல அநிஷ்டங்களையும் நிவிர்த்திக்கிறவராகவுமிருக்கிற பகவானை

बुध्यते புத்யதே = பிரத்தியக்ஷமாக பார்க்கிறான்.

பிரமாணம் :—

अनादिमायया विष्णोरिच्छया स्वापितो यदा ।
तया बोधमायाति यदा विष्णुं प्रपश्यति ॥ प्रकाशिकायां ॥

அநாதிமாயயா விஷ்ணோரிச்சயா ஸ்வாபிதோ யதா ।
தயா போதமாயாதி யதா விஷ்ணும் ப்ரபஶ்யதி ॥
(ப்ரகாசிகாயாம்) ॥ 23 ॥

காரிகை.

प्रपञ्चो यदि विद्येत निवर्तेत न संशयः ।
मायामात्रमिदं द्वैतमद्वैतं परमार्थतः ॥ 24 ॥
ப்ரபஞ்சோ யதி வித்யேத நிவர்த்தேத நஸம்ஶய: ।
மாயாமாத்ரமிதம் த்வைதமத்வைதம் பரமார்த்தத: ॥24॥

प्रपञ्चः ப்ரபஞ்ச:= பிரபஞ்சம்
यदि विद्यते யதிவித்யதே= இருக்குமேயானால்
निवर्तेत நிவர்த்தேத= போய்விடும்
न संशयः நஸம்ஶய:= சந்தேகமில்லை
इदं இதம்= இந்த
द्वैतं த்வைதம்= த்வைதமானது
मायामात्रं மாயாமாத்ரம்= மாயாஸ்வரூபமே
परमार्थतः பரமார்த்தத:= வாஸ்தவமாக
अद्वैतं அத்வைதம்= அத்வைதமே
भवति பவதி இருக்கிறது

அ-கை:—பிரபஞ்ச நிவிர்த்தியால அத்வைதம் அறியப்படுமே யானால், பிரபஞ்சம் நிவிர்த்தி யாகாதவரையில் எப்படி துரீயமானது அத்வைதம என்று சித்திக்கும். இதற்கு உத்தரம் சொல்லப் படுகிறது.

प्रपञ्चः...संशयः ப்ரபஞ்ச:...ஸம்ஶய: :—பிரபஞ்சம்பாமார்த்தமாக இருக்குமேயானால, அத்வைதம் சித்திக்கமாட்டாது என்று நீ சொல்லுவது சத்தியமாகும். ஆனல் ரஜ்ஜுவில் சர்ப்பம்போல் பிரபஞ்சம கற்பிக்கப்பட்டதாகையால் அது இல்லை. ஆகையால் அத்வைதம் சித்திக்கிறது. மேலும் பிரபஞ்சம் இருக்குமேயானல் அது நிவிர்த்தியாகக்கூடும். இதில் சந்தேகமில்லை.

मायामात्र...परमार्थः மாயாமாத்ரம்...பரமார்த்தத: :— ரஜ்ஜுவினிடத்திலே பிராந்தியிற் கற்பிக்கப்படும சர்ப்பம் இருந்தாலும் விவேகத்தால் நிவிர்த்தியாய்விடும. ஆகையால் அது வாஸ்தவத்திலில்லை. மேலும் மாயாவிபுருஷனல காட்டப்பட்ட மாயையானது இருந்தாலும அதைபார்க்கும ஜனங்களின் கட்டு நீங்கின உடன் நிவிர்த்தியாய விடுகிறது ; ஆகையால் அது வாஸ்தவத்தில் இல்லை. இதுபோல், இந்த பிரபஞ்சமென்கிற த்வைதம் மாயமாத்திரமாக இருக்கிறது. ரஜ்ஜுபோலும் மாயாவிபோலும் அத்வைதம பாமார்த்தமாயிருக்கிறது. ஆகையால் பிரவிர்த்தித்து நிவிர்த்தி யாகும்படியான பிரபஞ்சம் யாதொன்றுமில்லை என்பது கருத்து.॥24॥

II - 22 - வது மந்திரம் விசிஷ்டாத்வைதம்.

அ-கை :—ஜீவனுடைய ஸ்வரூபம் எப்படி ஸ்வாபாவிகமாகைகையால் நிவிர்த்தியடைகிறதில்லையோ, அப்படி தேகம், கிரகம் முதலிய வஸ்துக்களில் ஸ்வ ஸ்வாமிசம்பந்தமாகிற பந்தம் (அதாவது விநியோகம் பண்ணத்தகுந்த வஸ்துவுக்கும் அதின் யஜமானனுக்கும் உள்ள சம்பந்தமாகிய பந்தம்) ஸ்வாபாவிக மாகையால் நிவிர்த்தி அடைகிறதில்லை. ஆகையால் விபர்யா ஸைதயோ : க்ஷீணே என்று எப்படி சொல்லக்கூடுமெனின் உத்தரம் சொல்லுகிறார்.

प्रपञ्चः ப்ரபஞ்சஃ=தேக கிரகாதிகள் நம்முடையவை நாம அவைகளுக்கு ஸ்வாமி என்கிற சம்மந்தமாகிற பந்தமானது ஸ்வதந்திரமாக இல்லை.

यदिविद्यते யதிவித்யதே=பராதீனமாயிருந்தாலும் பந்தமிருக்கிறதென்று ஒப்புக்கொண்டால், அப்போதும்

परमार्थतः பரமார்த்தத: = (பரம:... அர்த்த :) உத்தமமான வஸ்து அதாவது பகவான், அவருடைய பிரசாதத்தால் என்பது கருத்து

निवर्त्तेत நிவர்த்தேத=நிவிர்த்தி அடைகிறதுதான்.

नसंशयः நஸம்ஶய:=அதில் சம்சயமில்லை. அநாதிகாலமாய் உண்டான தேகாதிகளில் நம்முடையது என்கிற பிரமை எப்படி நிவிர்த்தியாகும் எனின் சொல்லுகிறார்.

अद्वैतं அத்வைதம்=பெரியோர்களால் எதார்த்தமாக அறியப்பட்ட பிரம்மாதிகளான வஸ்துக்கள்

द्वैतं த்வைதம்=அஞ்ஞர்களால் விபரீதமாக அறியப்பட்டவை. அவர்களுடைய அந்த விபரீதஞானம்

मायामात्रं மாயாமாத்ரம்=பகவானுடைய இச்சாமாத்திரத்தால் சிருஷ்டிக்கப்பட்டதென்று அர்த்தம்.

இப்படிப்பட்ட மித்தியா ஞானமானது அநாதியாயிருந்தாலும் ஈசுவரனுடைய இச்சையாலுண்டாயிருப்பதால் ஸ்வாபாவிகமல்ல. ஆகையால் ஈசுவரனுடைய பிரசாதத்தால் அந்த பந்தத்துக்கு நிவிர்த்தியாகும் என்பது கருத்து.

संसारबन्धस्थितिमोक्षहेतुः दैवीह्येषागुणमयी मममाया दुरत्यया - मामेवये प्रपद्यन्ते मायामेतां तरन्तिते ஸம்ஸாரபந்தஸ்திதி மோக்ஷஹேது: தைவீஹ்யேஷாகுணமயீ மமமாயா துரத்யயா மாமேவயே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே= அதாவது சம்சார பந்த ஸ்திதிக்கும் மோக்ஷத்துக்கும் ஈசுவரன் காரணமென்றும் சத்வ ராஜஸ் தமோ

குணாத்மகமான இந்த என்னுடைய மாயையானது தாண்ட முடியாதது. என்னையே எவர்கள் சரணமடைகிறார்களோ அவர்கள் இந்த மாயையைத்தாண்டிவிடுவார்கள் என்று கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. ॥24॥

II - ல் 9-வது சுலோகம் துவைதம்.

அ-கை:—தேகம், கிரகம் முதலியவைகளுக்கு நான் சுவாமி என்கிறபந்தம் சுவாபாவிகமானால், ஈசுவரப் பிரசாதத்தால் தான் அது எப்படி நிவிர்த்தியாகக்கூடும்? ஈசுவரனுடைய இச்சைக்கு சுவாதீனமாயிருப்பதால் ஈசுவர பிரசாதத்தால் நிவிர்த்தியாகலாம் என்கிறார்.

प्रपंच: ப்ரபஞ்ச:=தேகம், கிரகம் முதலியவைகளுக்கு தான் சுவாமி என்கிற பந்தமில்லை

यदिविद्यत யதிவித்யத=பராதீனமாகவாவது அந்த பந்தமிருக்கிறது என்று ஒப்புக்கொண்டால்

परमात्थत: பரமார்த்த:=(பரம: சாஸௌ + அர்த்த: ச)பகவானுடைய பிரசாதத்தால்

निवर्त्तेत நிவர்த்தேத=நிவிர்த்தியாகும்

न संशय: ந ஸம்ஸய:=இதில் சம்சயமில்லை. தேகம் முதலியவைகளில் அநாதிகாலமாக இருக்கும் தன்னுடையது என்கிற பிரமை எப்படி நிவிர்த்தியாகும் எனின் சொல்லுகிறார்.

अद्वैत அத்வைதம்=மஹாத்துக்களால் யதார்த்தமாக அறியப்பட்ட பிரம்மம் முதலிய வஸ்துக்கள்

द्वैतं த்வைதம்=அஞ்ஞானிகளால் இரண்டாவது பிரகாரமாக அறியப்பட்டது அதாவது அவர்களுடைய மித்தியாஞ் ஞானம்.

मायामात्र மாயாமாத்ரம்=இவ்விரண்டு வித ஞானமும் பகவானுடைய இச்சையால் உண்டானது. அப்படிப்பட்ட மித்தியாஞானம் அநாதிகாலமாய் துயர்ச்சியாயிருந்தாலும் ஈசுவர இச்சையி லுண்டானபடியால் சுவபாவிகமல்ல. ஆகையால் பகவத் பிரசாதத்தால் அதின் நிவிர்த்தி உண்டாகக்கூடும்.

பிரமாண வாக்கியம் :—

तन्वास्वस्वामि संबन्ध: प्रपंचोस्य शरीरिण: ।
वस्तुतो सौनचावास्ति परमस्यवशेयत: ।
तन्वादिकस्तथा प्येषह्याभिमाना त्प्रदश्यते ।
अत: सविद्यत इति ह्यंगीकारो भवेद्यदि ।
तथापि भगवज्ज्ञाना त्सानिवृत्तेद संशय: ॥ ब्रह्मतर्के ॥

परेण ब्रह्मणाय त्वाद्वैधान ज्ञातमंजसा ।
तदद्वैतं परं ब्रह्म तदेवज्ञातमन्यथा ।
जीवेन द्वैतमुद्दिष्टं मिथ्याज्ञानं तदेवच ।
परमार्था त्परादृष्णा जातमिच्छावशादनु ।
मायेतीच्छा समुद्दिष्टा मायामात्रं तदुद्भवं ।
उत्तमत्वा त्परार्थोसौ भगवान्विष्णु रच्युत ॥ ब्रह्मतर्के ॥

தத்³வாஸ்வாதி³ஸம்ப³ந்த⁴ய: ப்³ரஹ்மாஸ்ய ஶரீரிண: ।
ஸ்வதோ⁴தாஸௌ நபா⁴வஸ்து பரமாஸ்யபே⁴த³த: ।
தத்³வாதி³க்ஷ்யாஸ்ய ஷட்ஸ்விஸா நாத்³ப்³ரஹ்மஸ்யேத ।
அத: ஸமிஸ்த இதி ஸம்ஸீகாரோ ஹ்யேஷ்டி ।
தயாவிஹ ப⁴வஜ்ஞாநாத் நிவர்த்தஸம்ஶய: ॥ ப்³ரஹ்மதர்கே ॥
பரேண ப்³ரஹ்மணாய த்வாத்³வைதா⁴ந ஜ்ஞாதமஞ்ஜஸா ।
தத³த்³வைதம் பரம் ப்³ரஹ்ம ததே³வஜ்ஞாதமந்யதா² ।
ஜீவேந த்³வைதமுத்³தி³ஷ்டம் மித்²யாஜ்ஞாநம் ததே³வச ।
பரமார்தா² த்பராத்³ருஷ்ணா ஜாதமிச்சா²வஶாத³நு ।
மாயேதீச்சா² ஸமுத்³தி³ஷ்டா மாயாமாத்ரம் தது³த்³ப⁴வம்
உத்தமத்வா த்பரார்தோ²ஸௌ ப⁴க³வாந்விஷ்ணு ரச்யுத ॥
॥ ப்³ரஹ்மதர்கே ॥௨॥

காரிகை.

विकल्पो विनिवर्तेत कल्पितो यदि केनचित् ।
उपदेशादयं वादो ज्ञाते द्वैतं न विद्यते ॥

விகல்போ விநிவர்தேத கல்பிதோ யதி³ கேநசித் ।
உபதே³ஶாத³யம் வாதோ³ ஜ்ஞாதே த்³வைதம் ந வித்³யதே ॥

केनचित् கேநசித் = ஒருவனால்
विकल्प: விகல்ப: = குரு, சிஷன், சாஸ்திரம் என்கிற விகல்பவிபாகம்
यदि कल्पित: யதி³கல்பித: = கற்பிக்கப்பட்டிருந்தால்
विनिवर्तेत விநிவர்தேத = நிவர்த்தியாய் விடும்
उपदेशात् உபதே³ஶாத் = உபதேசத்தின் பொருட்டு
अयं அயம் = இந்த
वाद: வாத³: = விபாக வசனம்
ज्ञाते ஜ்ஞாதே = தத்வ ஞானமடைந்த மாத்திரத்தில்
द्वैतं த்³வைதம் = துவைதம்
नविद्यते நவித்³யதே = இருக்கிறதில்லை

அகை :... அத்வைதம் சித்திக்கமாட்டாது என்னும் சங்கையை வேறு விதமாய் பரிகரிக்கிறார். சாஸ்திரத்தை உபதேசிக்கும் குரு,

சாஸ்திரம், சிஷ்யன் ஆகிய விகற்பங்கள் எப்படி சம்பவிக்கும் எனின் சொல்லுகிறார்.

विकल्पः ...केनचित् விகல்ப:...கேநசித் :—விகற்பமானது எவனாலாவது கற்பிக்கப்பட்டிருந்தால் நிவிர்த்தியாகும்.

उपदेशात्...विद्यते உபதேசாத்...வித்யதே :—எப்படி இந்த பிரபஞ்சம் மாயைபோலும் ரஜ்ஜு சர்ப்பம்போலும் ஞானமுண்டாவதற்கு முன்னிருக்கிறதோ, அப்படி சிஷ்யன் முதலிய இந்த விகற்பமும் (பேதமும்) ஞானத்திற்கு முன் உபதேசத்தின் பொருட்டு ஏற்படுகிறது. ஆகையால் சிஷ்யன், குரு, சாஸ்திரம் என்பதால் உபதேசத்திற்கு முன் தான் இருக்கிறது. உபதேசத்தின் பலமான ஞானம் சித்தித்தவுடன் பரமார்த்த தத்துவம் அறிந்துவிடப்பட்டபடியால் துவைதம் சித்திக்கிறதில்லை. ॥ 25 ॥

II - 23 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்.

அ-கை:—மேற்சொன்ன அர்த்தங்களையே ஸ்பஷ்டமாக்கி உபசம்காரம் செய்கிறார். மேற்சொன்னபடி சுவாபாவிகமாயிராத

विकल्पः விகல்ப:=தேகாதிகளில் நம்முடையது என்னும் அபிமானமாகிற பந்தமானது

केनचित् कल्पितोयदि கேநசித் கல்பிதோயதி= எவனாலாவது ஸ்வாபாவிகமென்று அஞ்ஞானாதிகளால் கற்பிக்கப்பட்டாலும்.

उपदेशात् உபதேசாத்=மகான்களுடைய உபதேசபலத்தால்

विनिवर्त्तेत விநிவர்த்தேத= போய்விடும். நிவர்த்தேத என்கிற பாடத்தில் நிவிர்த்தியாய்விடாதா ? ஆய் விடும் என்று அர்த்தம், எந்த வாதத்தால் நானாவிதமான ஸ்வாதந்திரியம் முதலிய பிரமநிவிர்த்தி உண்டாகிறதோ, அந்தசாதுக்களின் வாதம் எது எனின் சொல்லுகிறார்.

ब्रह्मणि ப்ரஹ்மணி= பிரம்மமானது

ज्ञाते सति ஜ்ஞாதேஸதி= நன்றாக அறியப்பட்டிருக்கும்போது

द्वैतं த்வைதம்= மித்தியாஞானமானது.

निवर्तते நிவர்த்ததே= நிவிர்த்தி அடைகிறது.

अयंवादः அயம்வாத:= இது சாதுக்களுடைய வாதம் ॥ 25 ॥

இரண்டாவது கண்டம் முற்றிற்று.

துவைதம்.

அ-கை:—மேற்சொன்னதையே ஸ்பஷ்டம் செய்து முடிக்கிறார்.

विकल्पः விகல்ப:=தேகாதிகள் தன்னுடையவை என்கிற அபிமானமாகிற நானாவித பந்தமானது ஈசுவராதீனமாயிருந்தும்

केनचित् கேநசித்=அஞ்ஞான முதலிய காரணத்தால்

कल्पितोयादि கல்பிதோயதி=ஸ்வாபாவிகமென்றாரோபிக்கப்பட்டிருந்தாலும்

उपदेशात् உபதேஶாத்=மஹாத்மாக்களுடைய உபதேசபலத்தால்

निवर्तेत நிவர்த்தேத=நிவர்த்தியாகிறது.

எந்தஉபதேசத்தால் அநேகவிதஸ்வாதந்திரியமுதலியபிரமை நிவர்த்தியாய் விடுகிறதோ சாதுக்களின் அந்தவாதம் எது பலனின்

ज्ञाते ஜ்ஞாதே=பிரம்மம் யதார்த்தமாக அறியப்படும்போது மித்தியாஞானம்.

नविद्यते நவித்யதே=நிவர்த்தியாய் விடுகிறது. பிறகு ஆனந்த ரூபமான முக்தி கிடைக்கிறது.

अयंवादः அயம்வாத:=இது சாதுக்களின்வாதம் என்று அர்த்தம்.

इति இதி=இந்த சப்தத்தை

एते श्लोकाःभवन्ति ஏதே ஶ்லோகா:பவந்தி=என்பதுடன் அன்வயிக்கவேண்டும்.

பிரமாணவாக்கியம்:—

विकल्पो देहबंधादिः केनचित्कारणेनतु ।
कल्पितो विनिवर्त्तेत गुरुवाक्यादसंशयः ।
एषएव सतांवादो ज्ञाते ब्रह्मणि तत्वतः ।
निवर्त्तते न्यथाज्ञानं तत आनन्दमेत्यसौ ॥ ब्रह्मतर्के ॥

விகல்போ தேஹபந்தாதி: கேநசித்காரணேநது ।
கல்பிதோ விநிவர்த்தேத குருவாக்யாதஸம்ஶய: ।
ஏஷஏவ ஸதாம்வாதோ ஜ்ஞாதே ப்ரஹ்மணி தத்வத: ।
நிவர்த்ததே ந்யதாஜ்ஞாநம் தத ஆநந்தமேத்யஸௌ ॥
॥ ப்ரஹ்மதர்கே ॥

இந்த இரண்டு சுலோகங்களும் தத்துவநிர்ணயம் முதலிய கிரந்தங்களில் ஐந்து வேதங்களை சத்தியமாகவும் அநாதியாகவும் கூறுவதாக வியாக்கியானம் பண்ணப்பட்டிருக்கிறது.

இரண்டாவது பாகம்

முற்றிற்று.

॥ उपनिषत् ॥ (அத்வைதம்.)

॥ 𑌉𑌪𑌨𑌿𑌷𑌤𑍍 ॥

सोयमात्माऽध्यक्षरमोंकारोऽधिमात्रं पादा मात्रा मात्राश्च पादा अकार उकारो मकार इति ॥ 8 ॥

𑌸𑍋𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌽𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌮𑍋𑌂𑌕𑌾𑌰𑍋𑌽𑌧𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑌾𑌦𑌾 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌪𑌾𑌦𑌾 𑌅𑌕𑌾𑌰 𑌉𑌕𑌾𑌰𑍋 𑌮𑌕𑌾𑌰 𑌇𑌤𑌿॥

अध्यक्षरं 𑌅𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌂 = முழுதான அக்ஷரத்திலும்

अधिमात्रं 𑌅𑌧𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 = தனித்தனி பாகத்திலுமிருக்கிற

सः ओंकारः 𑌸𑌃 𑌓𑌂𑌕𑌾𑌰𑌃 = அந்த ஓங்காரம்

अयं आत्मा 𑌅𑌯𑌂 𑌆𑌤𑍍𑌮𑌾 = இந்த ஆத்மா.

पादाः 𑌪𑌾𑌦𑌾𑌃 = பாதங்கள்

मात्राः 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃 = மாத்திரைகள் (பாகங்கள்)

अकारः उकारः मकारः इति 𑌅𑌕𑌾𑌰𑌃 𑌉𑌕𑌾𑌰𑌃 𑌮𑌕𑌾𑌰𑌃 𑌇𑌤𑌿 = அகார உகார மகாரங்கள் என்னும

मात्राः 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃 = மாத்திரைகள்

पादाः 𑌪𑌾𑌦𑌾𑌃 = பாதங்கள்

அர்த்தத்தைப் பிரதானமாய் வைத்துக்கொண்டு ஓங்காரமானது நான்கு பாதங்களுடன் கூடின ஆத்மாவென்று முன் (1-2 மந்திரங்களிற் கூறப்பட்டது. அந்த ஓங்காரமே அகாரப்பிராதானிக பாகங்களால் ஆத்மாவாயிருக்கிறது. இந்த பாகங்கள் எவை? இந்த பாகங்கள் சேர்ந்து ஓம் என்னும் சமுதாய பதமாகின்றன. பாகங்களாக பிரிக்கக்கூடியது ஓங்காரம் என்று கூறப்படுகின்றது. இவ்விரண்டும் (ஓங்காரமும் ஆத்மாவும்) எப்படி ஒன்றாகக்கூடும்? பாகங்களானதாலும் பாகங்களே பாதங்களானதாலும் பாதங்களே பாகங்களானதாலும் இவ்விரண்டும் ஒன்றே. இந்த பாகங்கள் அ. உ. ம. ॥ 26 ॥

மூன்றாவது கண்டம் 1-வது மந்திரம்.

𑌰𑌂 𑌹𑌾𑌰𑌂 :—

अध्यक्षरं 𑌅𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌂 = அக்ஷரங்களிலும்

अधिमात्रं 𑌅𑌧𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 = மாத்திரைகளிலுமிருக்கிற

ओंकारः 𑌓𑌂𑌕𑌾𑌰𑌃 = நாதரூபமான எந்த ஓங்காரமோ

स एवायमात्मा 𑌸 𑌏𑌵𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 = அதுவே இந்த ஆத்மா

पादाः मात्राः 𑌪𑌾𑌦𑌾𑌃 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃 = பிரம்மத்தின் பாதங்களாககூறப்பட்ட அநிருத்தன், பிரத்யும்னன், சங்கர்ஷணன் வாசுதேவன்

இவர்கள் பிரணவத்தின் மாத்திரைகளான அகார உகார மகாரங்க ளால் கூறத்தகுந்தவர்கள். ஆகையால்

मात्रा: மாத்ரா:= ஓங்காரத்தின் அகார உகார மகாரங்கள்

पादा: பாதா:= பிரம்மத்துக்கு பாதங்களாக இருக்கின்றன என்று அர்த்தம்,

சமஸ்தபிரணவத்தில் பிரம்மத்தை பாவித்து அதாவது பிரம் மோபாசனையை விதித்து பிரணவத்தின் மாத்திரைகளான அகா ராதிகளில் அநிருத்தன் முதலானவர்களை உபாசிக்க வேண்டுமென் பது கருத்து.

अकार उकार मकार इति அகார உகார மகார இதி= இதைகுறித்த இவைகள் காண்பிக்கின்றன. அகாராதிகள் நாதத்துக்கும் உப லக்ஷணம் ॥ 26 ॥

கூ ௩௦ ௯௦.

அகை :—இந்தப் பிரகாரம் சமஸ்த ஓங்காரத்தில் கூறப்படும் ஆத்மாவின் விசுவாதி, நான்கு ரூபங்களையும் நிரூபணம் செய்து அந்த ரூபங்களின் அகாரமுதலிய ப்ரணவாம்சங்களால் பிரதிபா திக்கப்படும் மகாத்மியத்தை சொல்லுகிறதற்காக மேற்சொன்ன ஆத்மஸ்வரூபத்தை மறுபடியும் வேதம் கூறுகிறது.

ओंकार: ஓம்கார:= ஓங்காரத்தால் கூறப்பட்டதாயும்

सोयं ஸோயம்= நான்கு ரூபங்களாக கூறப்பட்டதாயு மிருக் கிற

आत्मा ஆத்மா= ஆத்மா

अध्यक्षरं அத்யக்ஷரம்= சகலத்துக்கும் மேலானவனாயும் கா மற்றவனாயுமிருக்கிறான். அக்ஷர சப்தம சுவயமாக அபிப்பாலாத லால் அக்ஷரம் என்று பிரயோகம் ஏற்பட்டது.

அந்த அக்ஷரம் எப்படிப்பட்டதெனின் :—

अधिमात्रं அதிமாத்ரம்= அதிக அம்சங்களை உடையது மாத்தி ரைகள் எவை எனின்.

पादा: பாதா:= பாதங்கள் அதாவது விசுவ முதலான ரூபங் கள்.

मात्रा: மாத்ரா:= மாத்திரைகள் என்று சொல்லப்படுகின்றன.
பாதங்கள் எபபடிப்பட்டவை எனின் :—

मात्रा:चपादा: अकार उकार मकार इति மாத்ரா: சபாதா: அகார உகார மகார இதி= அ என்கிற அக்ஷரத்தால் கூறப்படுவதால் அகாரம் விசுவனென்றும், உ என்கிற அக்ஷரத்தால் கூறப்படுவ

தால் உகாரம் தைஜஸன் என்றும், ம என்கிற அக்ஷரத்தால் கூறப்படுவதால் மகாரம் பிராஞ்ஞன் என்றும், நாதத்தால் போதிக்கிறபடியால் நாதம் துரீயம் என்றும் கூறப்படுகின்றன. அகாராதி உபலக்ஷணம். நாதத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டியது.

இந்த விசுவதைஜஸ பிராஞ்ஞ துரீயங்களான பாதங்கள் அதிமாத்ரம் என்றவிடத்தில் மாத்திரை சப்தத்தால் கூறப்பட்டனவென்று அர்த்தம். ॥ 26 ॥

மூன்றுவது பாகம். துவைதம்.

अकारादिमाहिमा (3&4.)

அகாராதிமஹிமா (3&4)

அ-கை :—இந்தப் பிரகாரம் சமஸ்த ஓங்காரத்தால் பிரதிபாத்தியமான ஆத்மாவின் நான்கு ரூபங்களை நிரூபணம் செய்து, அந்த ரூபங்கள் பிரணவத்தின் அம்சமான அகாராதிகளால் பிரதிபாத்தியமென்று சொல்லுவதற்காக மேற்சொன்ன அர்த்தத்தை திரும்பவும் கூறுகிறார்.

ओंकारः ஓம்காரஃ = ஓம் என்று சொல்லப்பட்ட

सः अयं ஸஃ அயம் = மேற் சொன்ன நான்கு ரூபமான ஆத்மா

अध्यक्षरं அத்யக்ஷரம் = எல்லாவற்றிற்கும் மேலாகவும் நாசமற்றதாகவும் இருக்கிறது. அந்த அக்ஷரமான பிரம்மம் எப்படிப்பட்டதெனின்

अधिमात्रं அதிமாத்ரம் = அதிகமான மாத்திரைகளை (அம்சங்களை) உடையது. அவைகள் எவை யெனின்

मात्राः மாத்ராஃ = மாத்திரைகள்

पादाः பாதாஃ = விசுவாதி ரூபங்கள்.

பாதங்கள் எவையெனின், அகாராதி பிரதிபாத்தியமான விசுவாதிகள் என்று சொல்லுகிறார்.

अकारः அகாரஃ = அ என்று பிரதிபாதிக்கப் படுகிறபடியால் அகாரம் விசுவன் எனப்படும்.

उकारः உகாரஃ = உகாரம் தைஜஸன்.

मकारः மகாரஃ = மகாரம் பிராஞ்ஞன்.

तुरीयोपि துரீயோऽபி = நாதத்தால் அறியத்தகுந்த துரீயனும் நாதமென்று கிரகிக்கவேண்டியது

பிரமாண வாக்கியம் :...

आधिकत्वाच्च नित्यत्वादध्यक्षरमुदाहृतः ।
येंशास्तस्य तुसर्वेपि पूर्णाःप्रत्येकशः प्रभोः ।
अतोधिमात्रमुद्दिष्टो मात्राअंशा उदाहृताः ।
श्रुतः सविष्णुरोंकार ओमित्याक्रियतेयतः ॥

ஆதிகத்வாச்ச நித்யத்வாதத்யக்ஷரமுதாஹ்ருத: ।
யேம்ஶாஸ்தஸ்ய துஸர்வேபி பூர்ணா:ப்ரத்யேகஶ: ப்ரபோ:
அதோதிமாத்ரமுத்திஷ்டோ மாத்ராம்ஶா உதாஹ்ருதா: ।
ஶ்ருத: ஸவிஷ்ணுரோங்கார ஓமித்யாக்ரியதேயத: ॥

உபநிஷத்தின் 9-வது மந்திரம்.

जागरितस्थानो वैश्वानरोऽकारः प्रथमा मात्राऽऽप्तेरादि मत्त्वाद्वाऽऽप्नोति वै सर्वान्कामानादिश्च भवति य एवं वेद ॥ 9 ॥ 27 ॥

ஜாகரிதஸ்தாநோ வைஶ்வாநரோऽகார: ப்ரதமா மாத்ராऽऽப்தேராதிமத்த்வாத்வாऽऽப்நோதி ஹ வை ஸர்வாந்காமாநாதிஶ்ச பவதி ய ஏவம் வேத ॥ 9 ॥ 27 ॥

जागरितस्थानः ஜாகரிதஸ்தாந: = ஜாக்கிராவஸ்தையை ஸ்தானமாயுடைய
वैश्वानरः வைஶ்வாநர: = வைசுவானரன்
आप्तेः ஆப்தே: = வியாப்தியினாலேயும்
आदिमत्त्वाद्वा ஆதிமத்த்வாத்வா = ஆதியாக இருப்பதினாலேயும்
(**ओंकारस्य** ஓங்காரஸ்ய = ஓங்காரத்தின்)
प्रथमा ப்ரதமா = முதலாவதான
मात्रा மாத்ரா = மாத்திரையாகிய
अकारः அகார: = அகாரம்
यः ய: = எவன்
एवं ஏவம் = இந்த பிரகாரம்
वेद வேத = தெரிந்து கொண்டிருக்கிறானோ
सः ஸ: = அவன்
सर्वान् ஸர்வாந் = சமஸ்தமான
कामान् காமாந் = இச்சைகளை
आप्नोति ह वै ஆப்நோதி ஹ வை = அடைகிறான்
आदिश्च ஆதிஶ்ச = மஹாத்மாக்களுக்குள் முதல்வனாக
भवति பவதி = ஆகிறான்

ச-பா :—ஆத்மாவுக்கும் ஓங்காரத்துக்கும் சாமான்னியமாய் கூறப்பட்ட ஏகத்வம் இனி விசேஷமாய் எடுத்துக்காட்டப்படுகின்றது.

जागरित...मात्रा ஜாகரித...மாத்ரா = ஜாக்ராவஸ்தையில் ஸ்தூலாபிமானியான வைசுவாநரன் ஓங்காரத்தின் முதல்மாத்திரையாகிய அகாரமாகிறான்.

आप्तेः... ஆப்தே:...:—இப்படி சொல்லுவதற்கு என்னகாரணம். (1) **अकारो वै सर्वावाक्** அகாரோ வை ஸர்வாவாக்= "அகாரமே ஸமஸ்த சப்தங்களும்" என்று சுருதியில் சொல்லியபடி அகாரத்தால் சகல சப்தங்களும் வியாபிக்கப் பட்டிருக்கின்றன. அதாவது அகாரம் எல்லாவற்றிலுமிருக்கிறது.

तस्य ह वै तस्यात्मनो वैश्वानरस्य मूर्धैव सुतेजाः தஸ்ய ஹவை தஸ்யாத்மனோ வைச்வாநரஸ்ய மூர்த்தைவ ஸுதேஜா: அதாவது அந்த வைசுவாநரனாகிற ஆத்மாவுக்கு சுவர்க்கமே சிரசு என்பது முதலான சுருதிகள்படி வைசுவாநரன் ஜகத்து முழுமையும் வியாபித்திருக்கிறான். வாசகத்துக்கும் வாச்சியத்திற்கும் பேதமில்லை என்று நாம் சொல்லியிருக்கிறோம். வியாபிக்கும் தன்மை இரண்டுக்கும் சமானமாயிருப்பதால் வைசுவாநரனே அகாரம்.

आदिमत्वात् ஆதிமத்வாத்= மேலும் அக்ஷரங்களில் அகாரம் முதலிய பாதங்களில் வைசுவாநரன் முதலாவது. இந்த சமான தன்மையாலும் வைசுவாநரனே அகாரம்.

आप्नोति ஆப்னோதி= இவ்விதமாக வைசுவாநரனையும் அகாரத்தையும் ஒன்றாக அறிகிறவன் நிச்சயமாய் சகல போகங்களையும் அடைகிறான். மஹான்களுக்குள் அவன் முதல்வனாயு மிருக்கிறான். ॥ 27 ॥

III - விசிஷ்டாத்வைதம்.

அ-கை :—அதையே பிரித்துக்காட்டுகிறார்.

जागरित...प्रथमामात्रा ஜாகரித...ப்ரதமாமாத்ரா :—முதலாவது மாத்திரையான அகாரத்தை ஜாகரிதஸ்தானனாகவும் வைசுவாநர சப்தத்தால் கூறப்படும் அநிருத்தனாகவும் பாவிக்க வேண்டியது.

आप्तेः ஆப்தே: :—வைசுவாநரனை அகாரரூபமென்று சொல்லுவதில் காரணமென்னவெனின், ஆப்தி என்றால் வியாப்தி அதாவது சகலஜகத்தையும் வியாபித்திருக்கிற அநிருத்தன் போல் சகல சப்தங்களையும் வியாபித்துக் கொண்டிருக்கிறதென்று அறியவும்.

आदिमत्वाद्वा ஆதிமத்வாத்வா = சகல சப்தத்துக்கும் ஆதியான அகாரத்தால் வைசுவாநரன் கூறப்படுகிற படியால் வைசுவாநரன் அகாரம்.

ஆதியுடனும் ஆப்தியுடனும் கூடினவன் என்று அறிந்தவனுக்குப் பலன் யாதெனின்:—

यः யஃ=எவன்
एवं வஏவம்=இந்தப்படி
वेद வெத—அறிகிறானோ
(सः ஸஃ=அவன்
सर्वान् कामान् ஸவ்ர்வாநுகாமாநு=சமஸ்தமான இச்சைகளையும்
आप्नोतिहवै ஆப்நோதிஹவெ—அடைகிறான்
आदिश्चभवति ஆதிஶ்சபவதி=சகலத்துக்கும் பிரதானமாக ஆய் விடுகிறான் என்று அர்த்தம் ॥ 27 ॥

கூ ௨௦.

அ-கை :—அகாரத்தால் கூறப்படும் ரூபத்தை அதின் ஸ்தானத்தைக் கூறுவதால் குறிப்பிடுகிறார்.

अकारः அகாரஃ=அகாரமென்று சொல்லப்படுவதானது

प्रथमामात्रा ப்ரயமாமாத்ரா=பிரணவத்தால் பிரதிபாதிக்கப்படும் அக்ஷரத்தின் முதலாவது அம்சம் என்றும் அர்த்தம் ஜாக்கிறத் ஸ்தானனாகவும் முதலாவது அம்சனாகவும் இருக்கிற விசுவனை உத்தெசித்து அகாரத்தால் பிரதிபாதிக்கப் படுந்தன்மை விதிக்கப்பட்டது. ஆகையால் கூறியதைக்கூறல் என்னும் தோஷமில்லை. இப்படியே உகாராதி விஷயத்திலும் அறியவும்.

வைசுவாநரன் அகாரத்தால் கூறப்படுவதில் இரண்டு காரணங்களைச் சொல்லுகிறார்.

आप्तेः आदिमत्वाद्वा ஆப்தெஃ ஆதிமத்வாத்வா :—அந்தந்த ஜீவனுக்குத்தக்க விஷயங்களை அனுபவிக்கும்படி விசுவன் செய்கிறபடியால் விசுவன் அ எனப்படுகிறான். அல்லதுபிராஞ்ஞன் தைஜஸன் இவர்களை உத்தேசித்து ஆதியாக இருப்பதால் அகாரமெனப்படுகிறான். விசுவன் சுஷுப்தி காலத்திலும் சொப்பன காலத்திலும் பிராஞ்ஞனுடனும் தைஜஸனுடனும் ஒன்றாக இருந்து நித்திரையிலிருந்து விழித்துக்கொள்ளும்போது பிராஞ்ஞனைவிட வேறாகவும் ஸ்வப்நத்திலிருந்து விழித்துக்கொள்ளும்போது தைஜஸனைவிட வேறாகவும் இருந்து வலது கண்ணை அடைகிறான். ஆகையால் இவ்விருவர்களுக்கும் ஆதியாக இருப்பதால் விசுவன் ஆதி என்றும் அகாரம் என்றும் கூறப்படுகிறான்.

இப்படி அறிந்தவனுக்குப் பலன் யாதெனின்,

यः யஃ=எவன்

एवं வஏவம்=இந்தப்படி விசுவனுக்கு அகாரத்தால் கூறப்படும் தன்மையை

वेद வேத=அறிகிறானோ
(अस्य அஸ்ய)=அவனுக்கு)
(वैश्वानरः வைஶ்வாநர:=வைசுவாநரன்)
सर्वान् कामान् ஸர்வாந்காமாந்=இவனால் இச்சிக்கக்கூடிய சகல போகங்களையும்

आप्नोति ஆப்நோதி=அடையும்படி செய்கிறான்.

आदिश्च ஆதிஶ்ச=இப்படி அறிந்தவனுக்கு விசுவன் ஆதியாக ஆகிறான். இப்படி அறிந்தவன் முக்தரூபனாகிறபடியால் முக்தியில் விசுவன் காரணமாயிருக்கிறான் என்று அர்த்தம். ஆப்நோதி என்பதற்குமுன் அந்த ஞானி என்று சேர்த்தும் அர்த்தம் செய்யலாம். ‖ 27 ‖

III-ல் 2 வது சுலோகம். துவைதம்.

அ-கை :...அகாரத்தால் பிரதிபாத்தியமான விசுவரூபத்தை அதின் ஸ்தானத்தைக் குறிப்பிடுவதால் விவரிக்கிறார்.

अकारः அகார:=அ என்று பிரதிபாதிக்கப்படுகிற விசுவன்

प्रथमामात्रा ப்ரதமாமாத்ரா =சமஸ்தமான பிரணவ பிரதிபாத்தியமான ஆத்மாவின் முதலாவது அம்சம் என்பது கருத்து.

இவ்விடத்தில் जागरितस्थानः प्रथमामात्रावैश्वानरः ஜாகரிதஸ்தாந: ப்ரதமாமாத்ராவைஶ்வாநர: என்று அனுவதித்து அகாரமென்று சொல்லப்படுகிறது என்பது மட்டும் இவ்விடத்தில் விதிக்கப்படுகிறது. ஆகையால் கூறியதைக்கூறல் என்னும் தோஷமில்லை. இப்படியே மற்ற இடங்களிலும் அறியவும்.

விசுவனை அகாரமாகக் கூறுவதில் இரண்டு காரணங்களைச் சொல்லுகிறார்.

आप्तेः ஆப்தே:=அந்தந்த ஜீவர்களுக்கு யோக்கியமான போக்கியங்களை அடையும்படி செய்வதாலும்

आदिमत्वाद्वा ஆதிமத்வாத்வா=பிராஞ்ஞன் தைஜஸன் இவர்களுக்கு முந்தினவனாயிருப்பதாலும் அகாரமென்று கூறப்படுகிறான்.

சுஷுப்தியிலும் சொப்பனத்திலும் விசுவன் பிராஞ்ஞனுடனும் தைஜஸனுடனும் ஐக்கியமாயிருக்கிறான். ஜாக்கிராவஸ்தை வரும்போது பிராஞ்ஞன் தைஜஸன இவர்களைவிட்டு விசுவன் விலகி வலது கண்ணில் வந்து சேருகிறான். அப்போது விசுவனுக்கு முன் பிராஞ்ஞனும் தைஜஸனு மிருக்கிறபடியால் விசுவன் ஆதியாக இருக்கிறான் எனப்படுகிறான் என்பது கருத்து.

यः ய:=அகாரம் விசுவனை இரண்டு காரணங்களால் கூறுகிறது என்று அறிந்தவனுக்கு பலனைச் சொல்லுகிறார்.

य: யஃ = எவன், எந்த அதிகாரி
एवं ஏவம் = மேற் சொன்னபடி
वेद வேத = அறிகிறானோ
अस्य அஸ்ய = அந்த அதிகாரிக்கு
सर्वान् कामान् ஸர்வாந் காமாந் = சகல காமங்களையும்
आप्नोति ஆப்நோதி = (விசுவன்) அடையும்படி செய்கிறான்.

आदिश्च भवति ஆதிச்ச பவதி = இப்படி அறிந்தவனுக்கு விசுவன் ஆதியாக அதாவது சாதாரணமாக ஆய்விடுகிறான். ஆத்ம ஸ்வரூபம் பிரகடமானதால் முக்தனாகி ஞானி விசுவனிடமிருந்து உண்டாகிறான். ஆனதால் விசுவன் காரணமாக ஆகிறான். அல்லது எவன் விசுவனை ஆதியாக அறிகிறானோ அவன் இஷ்டத்தை யெல்லாம் அடைகிறான். ॥ 27 ॥

உபநிஷத்தின் 10 - வது மந்திரம்.

स्वप्नस्थानस्तैजस उकारो द्वितीया मात्रोत्कर्षादु भयत्वाद्वोत्कर्षति ह वै ज्ञानसंततिं समानश्च भवति नास्याब्रह्मवित्कुले भवति य एवं वेद ॥ 28 ॥

ஸ்வப்நஸ்தாநஸ்தைஜஸ உகாரோ த்விதீயா மாத்ரோத்கர்ஷாது பயத்வாத்வோத்கர்ஷதி ஹவை ஜ்ஞாநஸந்ததிம் ஸமாநஶ்ச பவதி நாஸ்யாப்ரஹ்மவித்குலே பவதி ய ஏவம் வேத ॥ 28 ॥

स्वप्नस्थान: ஸ்வப்நஸ்தாநஃ = ஸ்வப்நாவஸ்தையை ஸ்தானமாயுடைய
तैजस: தைஜஸஃ = தைஜஸன்
उत्कर्षात् உத்கர்ஷாத் = உத்கிருஷ்டனாயிருப்பதாலும்
उभयत्वाद्वा உபயத்வாத்வா = இரண்டுடன் சம்பந்தப்படுவதாலும்
(ओंकारस्य ஓங்காரஸ்ய = ஓங்காரத்தின்)
द्वितीया த்விதீயா = இரண்டாவதான
मात्रा மாத்ரா = மாத்திரையாகிய
उकार: உகாரஃ = உகாரமாக இருக்கிறான்
य: யஃ = எவன்
एवं ஏவம் = இவ்விதமாக
वेद வேத = அறிகிறானோ
ज्ञानसंततिं ஜ்ஞாநஸந்ததிம் = ஞானத்தின் பாரம்பரியத்தை
ह वै ஹ வை = நிச்சயமாக
उत्कर्षति உத்கர்ஷதி = விர்த்திசெய்கிறான்
समानश्च ஸமாநஶ்ச = சத்துரு மித்திரர்களுக்கு சமானனாயும்
भवति பவதி = ஆகிறான்
अस्य அஸ்ய = அவனுடைய

कुले குலே=வம்சத்தில்
अब्रह्मवित् அப்ரஹ்மவித்=பிரம்மத்தை அறியாத அஞ்ஞானி
न भवति ந பவதி=உண்டாகிறதில்லை

அ-கை:—இரண்டாவது மந்திரமும் இரண்டாவது மாத்திரையும் ஒன்று என்பதைக் கூறுகிறார்.

स्वप्न…मात्रा ஸ்வப்ந…மாத்ரா:—ஸ்வப்நத்தை ஸ்தானமாயுடைய தைஜஸன் ஓங்காரத்தின் இரண்டாவது மாத்திரையான உகாரம் இந்த சாதிருசியத்துக்குக் காரண மென்னவெனின் उत्कर्षात् உத்கர்ஷாத் என்று சொல்லுகிறார்.

उत्कर्षात् உத்கர்ஷாத்:—உகாரமானது அகாரத்துக்கு பாடக்கிரமத்தில் மேலாக இருக்கிறது. அதுபோல் ஸ்தூல உபாதியுடன் கூடின விசுவனைவிட சூட்சும உபாதியுடன் கூடின தைஜஸன் சிரேஷ்டனாயிருக்கிறான். இத்தன்மையால் இரண்டும் ஒன்று.

उभयत्वात् உபயத்வாத்:— மேலும் எப்படி அகாரத்திற்கும், மகாரத்திற்கும் மத்தியில் உகாரம் இருக்கிறதோ அப்படி விசுவனுக்கும் பிராஞ்ஞனுக்கும் மத்தியில் தைஜஸனிருக்கிறான். ஆகையால் இரண்டுடன் சம்பந்தப்படும் தன்மை இரண்டுக்கும் சமமாயிருப்பதால் இரண்டும் சமம்.

उत्कर्षति…वेद உத்கர்ஷதி…வேத:— இவ்விரண்டும் ஒன்று என்று அறிந்தவனுக்குக் கிடைக்கும் பலத்தைக் கூறுகிறார். எவன் இப்படி அறிகிறானோ அவன் மேன்மேல் ஞானத்தை அடைகிறான்; சமானனாகிறான், அதாவது மித்திரனல்போல் சத்துருவாலும் துவேஷிக்கப்படுகிறதில்லை. மேலும் இவன் குலத்தில் பிரம்மத்தை அறியாதவன் உண்டாகிறதில்லை. ॥28॥

III - 3 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்)

௵ ஹாம்:—

அ-கை:—ஸ்வப்நஸ்தானனான தைஜஸன் இரண்டாவது மாத்திரையான உகாரரூபம் அதற்குக் காரணஞ்சொல்லுகிறார்.

उत्कर्षात् உத்கர்ஷாத் = விசுவனை உத்தேசித்து தைஜஸன் உத்கிருஷ்டனாகையால்

वा வா= அல்லது.

उभयत्वात् உபயத்வாத்=விசுவனுக்குச் சமானமான பிராஞ்ஞ தைஜஸர்கள் இவனுக்கு இரண்டாவதாயிருப்பதால் உகாரரூபம். இவ்விடத்தில் விசுவனை பார்க்கிலும் தைஜஸன் சூட்சுமமாயிருப்பதால் உத்கிருஷ்டனாக இருக்கிறான். விசுவன், தைஜஸன் பிராஞ்

ஞன் இம்மூன்று பேர்களுக்கும் குணம் பூர்ணமாயிருப்பதால் இவர்கள் சமானமாக இருக்கிறார்கள் என்று அறியவும்.

இந்தபடி உகாரம் அகாரத்துக்கு லயஸ்தானமாக இருப்பதால் அதைவிட உத்கிருஷ்டம். அகார உகார மகாரம் இம்மூன்றும் அக்ஷரமாயிருப்பதால் இவைகள் சமம் என்று அறியவும் உத்கிருஷ்டம் என்று அறிந்தவனுக்கு பலன் யாதெனின் :—

उत्कर्षतिहै वज्ञानसन्तातिं உத்கர்ஷதிஹ வைஜ்ஞானஸந்ததிம் = ஒருவன் சிஷ்யனுக்கு ஞானத்தை உபதேசித்து அவன் குருவாய் அவனுடைய சிஷ்யனுக்கு உபதேசிப்பதால் உத்கிருஷ்டனாகிறான் என்று அர்த்தம்.

இவன் இரண்டாவதாயிருக்கிறான் என்று அறிந்தவனுக்குப் பலன் யாதெனின் :—

समानःचभवति ஸமானஃச்ச பவதி = உத்கிருஷ்டமாயிருக்கிறவர்களுக்குச் சமானமாயிருக்கிறவர்களுக்குச் சமானனாக ஆயிருக்கிறான் என்று அர்த்தம். 28.

க.-பா :—

அ-கை :—இரண்டாவது பாதத்தைக் கூறுகிறார்.

द्वितीयामात्रा த்விதீயாமாத்ரா = ஆத்மாவின் இரண்டாவது அம்சம்

तैजसः தைஜஸஃ = தைஜஸன்.

उकारः உகாரஃ = உ என்கிற அக்ஷரத்தால் கூறப்படுகின்றான். ஏனெனின்

उत्कर्षात् உத்கர்ஷாத் = ஜாக்கிரத் காலத்தில் விட்டதாத போகாதி அபிமானத்தை விடும்படிச்செய்து ஸ்வப்னத்தில் ஜீவனை இழுக்கிறான். அல்லது

उभयत्वात् உபயத்வாத் = பாஹ்ய அந்தர்ஞானமாகிற த்ருத்திகளையையும் வாசனாமயமான விஷயானுபவத்தையும் கொடுக்கிறபடியால் உகாரனென்று கூறப்படுகிறான். அப்படி அறிந்தவனுக்குப் பலன் யாதெனின்

यः யஃ = எந்த அதிகாரியானவன்

एवं ஏவம் = இப்படிப்பட்ட தைஜஸனை

वेद வேத = அறிகிறானோ

(सः ஸஃ = அவன்)

ज्ञानसन्तति ஜ்ஞானஸந்ததிம் = ஞானதாரையை அதாவது நித்திய ஞானத்தை

(आप्नोति ஆப்னோதி=அடைகிறான்)

उत्कर्षति உத்கர்ஷதி= தேக பந்தத்தினின்றும் ஆத்மாவை விடுவிக்கிறான்.

समानःचभवति ஸமாநஃச்சபவதி=மானமென்றால் உள்பிரவேசம் தோஷமற்றவனாயும் ஈச்வர பிரீதிக்குப் பாத்திரனாயு மிருப்பதால் சர்வ முக்தாகளுக்குள் சேர்ந்தவனாகவும் ஆகிறான்.

अस्य அஸ்ய=இந்த ஞானியனுடைய

कुले குலே= வம்சத்தில்

अब्रह्मवित् அப்ரஹ்மவித்=பிரம்மத்தை அறியாதவன்

नभवति நபவதி=உண்டாகிறதில்லை. இப்படி அறிகிறவனு டைய குலத்தில் பிரம்ம வித்தையானது இதர குலத்தில்விட அதிக மாகவே இருக்கிறதென்பது கருத்து. ||28||

III ல் 3-வது சுலோகம் துவைதம்

அ-கை :...எவன் உகாரம் என்று கூறப்பட்டானோ அந்த இரண்டாவது பாதம் எதுவெனின் உத்தரம் கூறுகிறார்.

स्वप्नस्थानः ஸ்வப்நஸ்தாநஃ=ஸ்வப்நத்தை ஸ்தானமாக உடையவ னாகவும்

द्वितीयामात्रा த்விதீயாமாத்ரா=ஆத்மாவின் இரண்டாவது அம்ச மாகியு மிருக்கிற

तैजसः தைஜஸஃ=தைஜஸன்

उकारः உகாரஃ=உகாரன் என்று சொல்லப்படுகிறான். தைஜ ஸனை உகாரமென்று கூறுவதில் இரண்டு காரணங்களை கூறுகிறார்.

उत्कर्षात् உத்கர்ஷாத்=ஜாக்கிறத் தசையிலிருக்கிற தேகாபி மானத்தை ஜீவனை விடும்படி செய்து ஸ்வப்ந ஸ்தானத்தில் ஜீவனை இழுக்கிறபடியால் தைஜஸன் உகாரமெனப்படுகிறான்.

उभयत्वाद्वा உபயத்வாத்வா= அல்லது நித்திரை, வாஸனாமய விஷயானுபவம் இவைகளைக் கொடுப்பதால் உகாரமெனப்படுகிறான்.

இப்படி அறிந்தவனுக்குப் பயன் என்னவெனின் :—

यः एवंवेद யஃ ஏவம்வேத = எவன் இப்படி அறிகிறானோ

(सः ஸஃ= அந்த ஞானி)

ज्ञानसन्ततिं ஜ்ஞாநஸந்ததிம்=ஞானதாரையை அதாவது நித் தியமான ஞானத்தை

आप्नोति ஆப்னோதி =அடைகிறான்.

उत्कर्षति உத்கர்ஷதி=தேக பந்தத்தினின்றும் ஆத்மாவை கரையேற்றுகிறான்.

समान: चभवति ஸமாநஶ்ச ஹவதி = சமானனுகவும் ஆகிறுன். அதாவது முக்த லோகத்தில் தங்குகிறுன். தோஷ மில்லாததாலும் இவனிடத்தில் பகவானுக்குப் பிரீதி இருப்பதாலும் என்பது கருத்து.

अस्य அஸ்ய = இந்த ஞானினுடைய

कुले குலெ = குலத்தில்

अब्रह्मवित् அப்ரஹ்மவித் = பிரம்மத்தை அறியாதவன்

नभवति நஹவதி = உண்டாகிறதில்லை. பிரம்ம ஞானியாகவே உண்டாகிறுன் என்பது கருத்து. ॥ 28 ॥

உபநிஷத்தின் 11-வது மந்திரம்.

सुषुप्तस्थान: प्राज्ञो मकारस्तृतीया मात्रा मितेरपीतेर्वा मिनोति ह वा इदं सर्वमपीतिश्च भवति य एवं वेद ॥ 29 ॥

ஸுஷுப்தஸ்தாநঃ ப்ராஜ்ஞோ மகாரஸ்த்ருதீயா மாத்ரா மிதேரபீதேர்வா மிநோதி ஹ வா இதஂ ஸர்வமபீதிஶ்ச ஹவதி ய ஏவஂ வெத ॥ 29 ॥

सुषुप्तस्थान: ஸுஷுப்தஸ்தாநঃ = சுஷுப்தி அவஸ்தையில் அபிமானியான

प्राज्ञ: ப்ராஜ்ஞঃ = பிராஞ்ஞன்

मिते: மிதேঃ = பரிமிதியாவதாலும்

अपीतेर्वा அபீதேர்வா = ஏகிபாவமாவதாலும்

(ओंकारस्य ஓஂகாரஸ்ய = ஓங்காரத்தின்)

तृतीया த்ருதீயா = மூன்றுவதான

मात्रा மாத்ரா = மாத்திரையாகிய

मकार: மகாரঃ = மகாரமாக இருக்கிறுன்

य: யঃ = எவன்

एवं ஏவஂ = இந்தப்படி

वेद வெத = தெரிந்துக்கொள்ளுவாறே

स: ஸঃ = அவன்

इदं सर्वं இதஂ ஸர்வஂ = இந்த சமஸ்த ஜகத்தையும்

मिनोति மிநோதி = இவ்வளவுதான் என்று தெரிந்துகொள்ளுகிறுன்

अपीतिश्च அபீதிஶ்ச = ஜகத் காரணத்மாவாயும்

भवति ஹவதி = ஆகிறுன்

அ-கை:—மூன்றுவதுபாதமும் மூன்றுவது மாத்திரையும் ஒன்று என்பதை நிரூபிக்கிறுர்.

सुषुप्त...मात्रा ஸுஷுப்த...மாத்ரா :—சுஷுப்தியை ஸ்தானமாயுடைய பிராஞ்ஞன் ஓங்காரத்தின் மகாரமாகிற மூன்றாவது மாத்திரையாயிருக்கிறான்.

எந்த சமானத்தன்மையால் இரண்டும் ஒன்று? இந்த சாமான்னியம் அடியில் வருமாறு இருக்கிறது :—

मितेः மிதே: :—பரிமாணத்தால் இரண்டும் ஒன்றே. எப்படியெனின் ஒருபடியால் தான்னியத்தை அளக்கிறதுபோல் பிரளயத்திலும் உற்பத்தியிலும் பிரவேசத்தாலும் வெளிப்படுவதாலும் விசுவதைஜஸர்கள் பிராஞ்ஞனைய அளவிடப்படுகிறார்கள்போலிருக்கிறார்கள். அப்படியே ஓங்காரத்தை உச்சரித்தவுடன் மறுபடியும் உச்சரித்தால் அகார உகாரங்கள் மகாரத்தில் பிரவேசித்து வெளிக்கிளம்புகிறது போலிருக்கின்றன. ஆகவே இவைகள் மகாரத்தால் அளவிடப்பட்டவை போலிருக்கின்றன. ஆகையால் பிராஞ்ஞனும் மகாரமும் ஒன்று.

अपीतेर्वा அபீதேர்வா :—மேலும் எப்படி ஓங்காரத்தை உச்சரித்தவளவில் மகாரமாகிற கடைசியான அக்ஷரத்தில் அகார உகாரங்கள் இரண்டும் லயப்படுவது போலாகின்றனவோ, அப்படி விசுவனும் தைஜஸனும் சுஷுப்தி காலத்தல் பிராஞ்ஞனுடன் ஒன்றாய் விடுவதுபோலிருக்கிறார்கள். ஆகையால் ஏகமாகப் போகும்தன்மை சமமாயிருப்பதால் பிராஞ்ஞனும் உகாரமும் ஒன்றாகின்றன.

मिनोति...वेद மிநோதி...வேத :—இனி இவ்விரண்டும் ஒன்று என்று அறிந்தவனுக்குக் கிடைக்கும் பலத்தைக்கூறுகிறார். எவன் இப்படி அறிகிறானோ. அவன் நிச்சயமாய் சகலஜகத்தையும் உள்ளபடி அறிகிறான். மேலும் ஜகத்துக்குக் காரணமாக ஆகிறான் அதாவது சகலமும் தன்னிடத்தில் அடங்கினதாக அறிகிறான் என்பது கருத்து. ஒவ்வொரு அறிவுக்கும் பலத்தைக்கூறினதானது முக்கியமான விஷயத்தை அறிவதில் சாதகமாயிருக்கும்படி ஸ்துதிருபமாம். பாதங்களும் மாத்திரைகளும் கிரமமாக ஒன்று என்று அறிவதினால் சில பிரயோசனங்களுண்டாவதாகக் கூறப்பட்டது. அப்படி கூறுதலானது, சகல பாதங்களையும் மாத்திரைகளையும் தன்னிடத்தில் அடக்கி பிரதானமான பிரம்மத்தியானத்தில் சாதகமாயிருக்கும் ஓங்கார அக்ஷரத்தை ஸ்துதிப்பதில் பிரயோஜனப்படுகின்றது. இதனால் உபாசனை ஒன்றே, மற்றவைகள் அதின் அங்கங்களே. உபாஸ்தி பேதமில்லை என்பது கருத்து. ॥ 29 ॥

III - 4 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்)

सुषुप्तः...मात्रा ஸுஷுப்தஸ்தாநோ த்ருதீயா மாத்ரா=ஸுஷுப்தி ஸ்தானனான பிராஞ்ஞன் மூன்றாவது மாத்திரையான மகாரரூபம். ஏனெனின்

मितेः மிதே:=பிராஞ்ஞன் தன்னிடத்தில் எல்லாவற்றையும் தானாகவே அறிகிறான். மகாரமும் தன்னிடத்தில் அகார உகாரங்களை சேர்ப்பிவிக்கிறது. அகார உகாரங்கள் மகாரம் வரையில் இருக்கின்றன.

अपीतेःवा அபீதேர்வா =பிராஞ்ஞனிடத்தில் ஜகத்கானது லயத்தை அடைகின்றன. மகாரத்துடன் அவை முடிவு பெறுகின்றன.

இந்த இரண்டு ஞானத்துக்கும் பலன் யாதெனின்

यः ய:=எவன்

एवं ஏவம்=இப்படி

वेद வேத=அறிகிறானோ

(सः ஸ:=அவன்)

इदं सर्वं இதம்ஸர்வம்=இந்த எல்லாவற்றையும்

मिनोति மிநோதி=அடைகிறான்.

अपीतिःचभवति அபீதிச்சபவதி=அவனுக்கு பரமாத்மாவிடத்தில் லயமுண்டாகிறது என்று அர்த்தம். 29

கூ. பா஠ :—

அ - கை :—மூன்றாவது பாதத்தைக் கூறுகிறார்.

तृतीयामत्रा த்ருதீயாமாத்ரா =ஆத்மாவின் மூன்றாவது அம்சமான

प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராஞ்ஞன்

मकारः மகார:=ம என்கிற அக்ஷரத்தால் கூறப்படுகிறான். ஏனெனின்

मितेः மிதே:=தன்னிடத்தில் ஜீவனை அடக்கிக் கொண்டிருப்பதால் அல்லது அப்படி அடங்குவதற்குக் காரணமாயிருப்பதால் என்பது கருத்து.

वा வா=அல்லது

अपीतेः அபீதே:=விருத்தி ஞானத்துக்கு லயத்தைப் பண்ணுகிறபடியால் மகாரனென்று கூறப்படுகிறான் என்று அர்த்தம்.

यः एवं वेद ய: ஏவம் வேத=எவன் இப்படி அறிகிறானோ

(सः ஸ:=அவன்)

इदं सर्वं இதம் ஸர்வம்=இந்த சர்வஜகத்தை

मिनोति மிநோதி=தகுந்தபடி உள்ளே அடக்குகிறான். ஜீவர்கள் அணுவாயிருந்தாலும் சூரியாதிகள் பிரகாசத்தால் வியாபித்து இருப்பதுபோல், அதிகாரியான ஜீவன் ஞானமாகிற பிரகாசத்தால் வியாபித்திருக்கிறான் ஆகையால் முக்தனாயிருந்துகொண்டு அந்த பிரகாசத்தின் மத்தியில் ஜகத்தை அடக்கிக்கொள்ளுகிறான்.

अपीतिः च भवति அபீதிஃ ச பவதி = துக்காதிகளான அநிஷ்டங்களுக்கு லயத்தைச் செய்கிறவனாயு மிருக்கிறான் ॥29॥

III-ல் 4-வது சுலோகம். துவைதம்.

அ-கை :—மூன்றாவது பாதம் எது. அதை மகாரமாக எப்படி சொல்லலாம். அதை அறிந்தவனுக்குப் பலனென்ன? இவைகளுக்கு உத்தரம் கூறுகிறார்.

सुषुप्तस्थानः ஸுஷுப்தஸ்தாநஃ= ஸுஷுப்தியை ஸ்தானமாக உடைய

तृतीयामात्रा த்ருதீயாமாத்ரா = ஆத்மாவின் மூன்றாவது அம்சமான

प्राज्ञः ப்ராஜ்ஞஃ =பிராஜ்ஞன்

मकारः மகாரஃ = மகாரனெனப்படுகிறான். ஏனெனின்

मितेः மிதேஃ = தன்னிடத்தில் ஜீவனை சேர்ப்பிக்கிறதினால் அல்லது

अपीतेर्वा அபீதேர்வா = விருத்தி ஞானத்தின் லயத்திற்குக் காரணமாயிருப்பதால் பிராஜ்ஞன் மகார மெனப்படுகிறான்

यः एवंवेद யஃ ஏவம் வேத = இந்தப்படி எவன் அறிகிறானோ

(सः ஸஃ = அவன்)

इदंसर्वं இதம் ஸர்வம் = இந்த சமஸ்தத்தையும்

मिनोति மிநோதி = தனக்குள் அடைகிறான். அதாவது ஜீவன் அணுவாயிருந்தாலும் இவனுடைய பிரகாசம் சூரியன்போல் வியாபகமாயிருப்பதால் முக்தனாகி சகல ஜகத்தையும் தன்னுடைய பிரகாசத்தில் வைத்துக்கொள்ளுகிறான். ஆகையால் ஜகத்தை உள்ளே அடக்கிக்கொள்ளுகிறான். ஞானத்தால் சகலத்தையும் விஷயமாக்குகிறான் என்பது கருத்து.

अपीतिःचभवति அபீதிஶ்சபவதி = துக்கம் முதலிய அநிஷ்டங்களையும் நிவர்த்திக்கிறவனாகவும் ஆகிறான்.

2-3-4 க்கு பிரமாண வாக்கியங்கள் :—

आद्यस्तदंशोह्यातिस्था द्विषयानापयेद्यतः ।
जीवस्य तुयतः प्राज्ञात्तैजसाद्वा समुत्थितः ।
अविभागोपि भगवानादिमांस्तेन कीर्तितः ।
तस्मादुत्पद्यतेमुक्तः सज्ज्ञाना नंदलक्षणः ।
आप्नोति विषयान्सर्वा न्निद्राया विषयस्यच ।
उभयोः कारणत्वेन ह्युभयस्तैजसःस्मृतः ।
देहाभिमाना दुद्धृत्य कर्षति स्वप्नमंडले ।
उत्कर्षत्वं ततस्तस्य तज्ज्ञानी ज्ञाननिस्वतां ।
आप्नोतिदेहादुत्कृष्य स्वात्मानं सर्वमोक्षिणां ।
मध्यस्थःप्रभवे त्स्नेहाद्दोषाभावाच्च सर्वशः ।
स्वात्मन्यं तर्गमयाति मानमंतर्गतिःस्मृता ।
जीवमंतर्गतंकृत्वा तज्ज्ञानलयकृद्यतः ।
प्राज्ञोमानमपीतिश्च तज्ज्ञोप्येवं विमुक्तिगः ।
व्याप्यांतर्ग मयेत्सर्वं दुःखाद्यंतुविलापयेत् ।
अणूनामपिजीवानां प्रकाशो व्यापकोभवेत् ।
अंडमात्रे बहिश्चापि देवतानां यथाक्रमं ।
अतोंतर्ग मनंमुक्तौ जीवेषु जगतोभवेत् ॥ ब्रह्मतर्के ॥ २९ ॥

ஆத்யஸ்ததம்ஶோஹ்யாதிஸ்த்யா த்விஷயாநாபயேத்யத: ।
ஜீவஸ்ய து யத: ப்ராஜ்ஞாத்தைஜஸாத்வா ஸமுத்தித: ।
அவிபாகோபி பகவாநாதிமாம்ஸ்தேந கீர்த்தித: ।
தஸ்மாதுத்பத்யதே முக்த: ஸஜ்ஜ்ஞாநாநந்தலக்ஷண: ।
ஆப்நோதி விஷயாந்ஸர்வாந் நித்ராயா விஷயஸ்ய ச ।
உபயோ: காரணத்வேந ஹ்யுபயஸ்தைஜஸ: ஸ்ம்ருத: ।
தேஹாபிமாநாதுத்த்ருத்ய கர்ஷதி ஸ்வப்நமண்டலே ।
உத்கர்ஷத்வம் ததஸ்தஸ்ய தஜ்ஜ்ஞாநீ ஜ்ஞாநநிஸ்வதாம் ।
ஆப்நோதி தேஹாதுத்க்ருஷ்ய ஸ்வாத்மாநம் ஸர்வமோக்ஷிணாம் ।
மத்யஸ்த: ப்ரபவேத் ஸ்நேஹாத்தோஷாபாவாச்ச ஸர்வஶ: ।
ஸ்வாத்மந்யந்தர்கமயதி மாநமந்தர்கதி: ஸ்ம்ருதா ।
ஜீவமந்தர்கதம் க்ருத்வா தஜ்ஜ்ஞாநலயக்ருத்யத: ।
ப்ராஜ்ஞோ மாநமபீதிஶ்ச தஜ்ஜ்ஞோப்யேவம் விமுக்திக: ।
வ்யாப்யாந்தர்கமயேத்ஸர்வம் து:காத்யம் து விலாபயேத் ।
அணூநாமபி ஜீவாநாம் ப்ரகாஶோ வ்யாபகோ பவேத் ।
அண்டமாத்ரே பஹிஶ்சாபி தேவதாநாம் யதாக்ரமம் ।
அதோந்தர்கமநம் முக்தௌ ஜீவேஷு ஜகதோ பவேத் ॥29॥
॥ ப்ரஹ்மதர்கே ॥

|| अत्रैते श्लोकाः भवन्ति || (அத்வைதம்)

|| 𑌅𑌤𑍍𑌰𑍈𑌤𑍇 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌃 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ||

विश्वस्यात्व विवक्षाया मादिसामान्य मुत्कटम् ।
मात्रासंप्रतिपत्तौ स्यादाप्ति सामान्यमेव च || 30 ||

𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌾𑌯𑌾 𑌮𑌾𑌦𑌿𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌕𑌟𑌮𑍍 ।
𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌 𑌸𑍍𑌯𑌾𑌦𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌮𑍇𑌵 𑌚 || 30 ||

विश्वस्य 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 = விசுவனுக்கு

अत्वविवक्षायां 𑌅𑌤𑍍𑌵𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌂 = அகார மாத்திரையாக இருப்பதாகச்சொல்ல இச்சிக்குமளவில் அதாவது விசுவனே அகாரம் என்று சொல்லும்போது

आदिसामान्यं 𑌆𑌦𑌿𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌂 = முதலாவதாக இருப்பதாகிய சமானபாவம்

उत्कटं 𑌉𑌤𑍍𑌕𑌟𑌂 = சிரேஷ்டமாக அதாவது ஸ்பஷ்டமாக

(दृश्यते 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 = காணப்படுகிறது)

मात्रा संप्रतिपत्तौ 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌 = விசுவன் அகாரம் அறியப்படும் போது

आप्तिसामान्य मेव च 𑌆𑌪𑍍𑌤𑌿𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯 𑌮𑍇𑌵 𑌚 = வியாபிக்கும் சமானதர்மமும்

स्यात् 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 = ஸ்பஷ்டமாக காணப்படுகிறது

ச-பா:—அ-கை:—பாதங்களும்மாத்திரைகளும் ஒன்றுஎன்று காரண பூர்வகமாய் நான்கு சுருதிகளால் நிரூபிக்கப்பட்டது. அந்த சுருதியின் அர்த்தத்தை விவரிக்கிற ஸ்ரீ கௌடபாதாசாரியருடைய ஆறு சுலோகங்கள் இனி கூறப்படுகின்றன.

विश्वस्य...उत्कटम् 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯...𑌉𑌤𑍍𑌕𑌟𑌮𑍍 :—விசுவன் அகாரமாகிற மாத்திரை என்று சொன்னபோது முன் சொன்னபடி (ஆதி) யாயிருக்கும் தன்மையாகிற சாதிருச்யமே ஸ்பஷ்டமான காரணமாக காணப்படுகிறது.

मात्रा...च 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾...𑌚 :—பூர்வார்த்தத்திலுள்ள अत्वविवक्षायां 𑌅𑌤𑍍𑌵𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌂 என்பதின் வியாக்கியானமே உத்தரார்த்தத்திலுள்ள मात्रा संप्रतिपत्तौ 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌 என்பது. விசுவனே அகாரமென்று நிச்சயிக்கும்போது வியாபிக்கும் தன்மையும்கூட இரண்டுக்கும் சமானமான காரணமா யிருக்கிறது. || 30 ||

III - 5 - வது மந்திரம் விசிஷ்டாத்வைதம்.

அ-கை :—இந்தப்படி மூன்று ரூபங்களும் பிரணவத்தின் அகாராதி மூன்று அக்ஷரங்களால் கூறத்தக்கவை என்று சொல்லி நான்காவதுரூபத்தை अमात्रश्चतुर्थः அமாத்ரஸ்சதுர்த்த:=என்கிற வாக்கியத்தால் அடியில் சொல்லப்போகிறவரா யிருந்துகொண்டு மேற்சொன்ன மூன்றுரூபங்களை அறிந்த ஞானிக்கு எந்தப்பலன்கள் சொல்லப்பட்டனவோ அவ்விஷயத்தில் பிரம்மாவால் பார்க்கப்பட்ட சுலோகத்தை சொல்லுகிறார்.

अत्र एते श्लोकाः भवन्ति அத்ர ஏதே ஶ்லோகா: பவந்தி=ரூபத்திரயத்தை அறிந்தஞானியின் பலவிஷயத்தில் அடியில்வரும் மந்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைக் கிரமமாகச் சொல்லுகிறோம்.

विश्वस्य अत्वविवक्षायां விஶ்வஸ்ய அத்வவிவக்ஷாயாம்=விவக்ஷா சப்தத்தால் உபாசனையை கிரகிக்கவேண்டும். ஆதிமத்வாத்வா என்கிற மந்திரத்தில் சொல்லியபடி விசுவன் பிரணவத்தின் ஏகதேசமான அகாரத்தால் கூறப்படுகிறான் என்கிற உபாசனை இருக்கும்போது உபாசகனுக்கு

आदिसामान्यं ஆதிஸாமாந்யம் = ஆதியாக இருப்பதால் விசுவனுக்குச் சமானனாக இருக்கும் தன்மை

उत्कटं உத்கடம்=ஸ்பஷ்டமாக ஆகிறது.

यथा यथोपासते सतथैवभवति யயதா யதோபாஸதே ஸததைவபவதி என்கிற சுருதிப்படி எவன் பரமாத்மாவை எப்படி எப்படி உபாசிக்கிறானோ அப்படி யாகிவிடுகிறான் என்றுசொல்லியிருக்கிறது. ஆகையால் விசுவன் போலாகிறான்.

मात्रासं प्रतिपत्तौ மாத்ராஸம் ப்ரதிபத்தௌ=ஆத்மாவின் அம்சமான விசுவன் வியாபிக்கும் தன்மையையுடைய பிரணவத்தின் அம்சமான அகாரத்தால் கூறப்படுகிறவன் என்று தியானிக்கும்போது தியானம் செய்கிறவனுக்கு

आप्तिसामान्य मेवस्यात् ஆப்திஸாமாந்ய மேவஸ்யாத்=ஸர்வபலத்தையும் விசுவன் போல் அடைகிறான். ॥ 30 ॥

III-ல் I வது சுலோகம். துவைதம்.

அ-கை —இந்தப் பிரகாரம் விசுவாதி மூன்று ரூபங்களும் அகாராதி மூன்று அக்ஷரங்களால் கூறப்படுமென்பதையும் அறிந்தவனுக்கு உண்டாகும் பலத்தையும் சொல்லி, நான்காவது ரூபத்தை இனி விவரிக்கப்போகிறவராயிருந்து கொண்டு, சொன்ன அர்த்தத்தில் பிரம்மாவால் பார்க்கப்பட்ட சுலோகங்களை பிரமாணமாக கூறுகிறார்.

अत्र அத்ர=மூன்று ரூபங்களையும் அறிந்தவனுக்கு உண்டாகும் பலத்தில்

एते ஏதே= அடியில் வரும்

श्लोकाः ஶ்லோகா:=சுலோகங்கள்

(संवादिनः) भवन्ति (ஸம்வாதிந:) பவந்தி=மேற் சொன்ன அர்த்தத்தை அனுசரித்துச் சொல்லுவதாக இருக்கின்றன.

विश्वस्य अत्वविवक्षायां விஶ்வஸ்ய அத்வவிவக்ஷாயாம்=விசுவனை மேற் சொன்ன வழியாய் அகார வாச்சியனென்று உபாசிக்கும்போது

उत्कटं உத்கடம்=ஸ்பஷ்டமான

आदिसामान्यं ஆதிஸாமாந்யம்= ஆதிமத்வமாகிய சாதிருசியமிருக்கிறது. அந்த பரமாத்மாவை எப்படி உபாசிக்கிறாரோ அப்படி ஆய்விடுகிறான் என்று சொல்லியிருப்பதால் விசுவ உபாசகன் ஆதிமானாகிறான் அதாவது விசுவனிடமிருந்து ஆத்மஸ்வரூபம் வெளிப்பட்டு முக்தனாகிறான் என்பது கருத்து.

मात्रासंप्रतिपत्तौ மாத்ராஸம்ப்ரதிபத்தௌ=ஆத்மாவின் அம்சமான விசுவனை பிரணவத்தின் அம்சமான அகாரமென்று தியானம் பண்ணுவதில்

आप्तिसामान्यमेव ஆப்திஸாமாந்யமேவ = உபாசகனுக்கு ஆப்தி ஆகிற சாதிருசியமே.

स्यात् ஸ்யாத்=உண்டாய் விடுகிறது. அதாவது உபாசகனுடைய சகல மனோரதங்களும் பூர்ணமாய் விடுவதால் அவன் விசுவன்போலாகிறான். ॥ 30 ॥

காரிகை சுலோகம்.

तैजसस्यो त्वविज्ञान उत्कर्षो दृश्यते स्फुटम् ।
मात्रा संप्रतिपत्तौ स्यादुभयत्वं तथाविधम् ॥ 31 ॥

தைஜஸஸ்யோத்வவிஜ்ஞாந உத்கர்ஷோ த்ருஶ்யதே ஸ்புடம்
மாத்ராஸம்ப்ரதிபத்தௌ ஸ்யாதுபயத்வம் ததாவிதம் ॥ 31 ॥

तैजसस्य தைஜஸஸ்ய=தைஜஸனுக்கு

उत्वविज्ञाने உத்வவிஜ்ஞாநே=உகாரமாத்திரையாக தெரிந்துகொள்ளுவதில்

उत्कर्षः உத்கர்ஷ:=மேலாக இருத்தல்

स्फुटम् ஸ்புடம்=ஸ்பஷ்டமாக

दृश्यते த்ருஶ்யதே=காணப்படுகிறது

मात्रा संप्रतिपत्तौ மாத்ராஸம்ப்ரதிபத்தௌ=தைஜஸனுக்குஉகாரத்வம் சித்திப்பதில்

उभयत्वं = உபயத்வம் = இரண்டுக்கு மத்தியில் இருத்தல்

तथाविधं = தயாவிதம் = ஸ்பஷ்டமாயிருக்கிறது

ச-பா:—அ.கை:—இரண்டாது பாதமும் இரண்டாவது மாத்திரையும் ஒன்று என்று சுருதி சொன்னதை சுலோகம் விவரிக்கிறது.

तैजस···स्फुटम् தைஜஸ...ஸ்புடம்:—தைஜஸனை உகாரமென்று சொன்னபோது மேலாயிருக்கும் தன்மை சமானமென்று ஸ்பஷ்டமாய் காணப்படுகிறது.

मात्र மாத்ர... :—இரண்டிற்கும் மத்தியிலிருக்கும் தன்மையும் ஸ்பஷ்டமாயிருக்கிறது. சகலத்தையும் முன்போலவே அறியவும். ||31||

III - 6 - வது மந்திரம் விசிஷ்டாத்வைதம்.

तैजसस्य தைஜஸஸ்ய = தைஜஸன்

उत्वविज्ञाने உத்வவிஜ்ஞானே = முன் சொன்னபடி உகாரத்தால் வாச்சியம் என்று உபாசனை செய்யும்போது, அங்கு உபாசகனுக்கு

उत्कर्षः உத்கர்ஷ: = மேற் சொன்னபடி சிரேஷ்டத் தன்மை,

स्फुटं ஸ்புடம் = ஸ்பஷ்டமாக

दृश्यते த்ருஶ்யதே = நிச்சயம் பண்ணப்படுகிறதென்று அர்த்தம்

मात्रासं प्रतिपत्तौ மாத்ராஸம்ப்ரதிபத்தௌ = முன் சொன்னபடி இரண்டுடன் சம்பந்தப்படும் பிரணவத்தின் அம்சமான உகாரத்தால் கூறப்படும் ஆத்மாவின் அம்சமான தைஜஸனுடைய தியானத்தால் உபாசகனுக்கு

तथाविधं उभयत्वं தயாவிதம் உபயத்வம் = மேற்சொல்லிய சர்வஞ்ஞத்துவமும் சமானத்வமும்

स्यात् ஸ்யாத் = உண்டாகின்றன. இவன் தைஜஸனுக்குச் சமானனாகிறான். || 31 ||

III-ல் 2வது சுலோகம். துவைதம்.

तैजसस्य उत्वविज्ञाने தைஜஸஸ்ய உத்வவிஜ்ஞானே = மேற் சொன்னபடி தைஜஸனை பிரணவத்தின் ஏகதேசமான உகார வாச்சியமாக உபாசிக்கும்போது

उत्कर्षः உத்கர்ஷ: = உபாசகனுக்கு உத்கர்ஷமாகிற சாதிருசியம்

स्पष्टं ஸ்பஷ்டம் = ஸ்பஷ்டமாக

दृश्यते த்ருஶ்யதே = காணப்படுகிறது. பிரமாணத்தால் நிச்சயம் பண்ணப்பட்டிருக்கிறது என்று அர்த்தம்.

मात्रासंप्रतिपत्तौ மாத்ராஸம்ப்ரதிபத்தௌ=மேற் சொன்ன ரீதியாக ஆத்மாவின் அம்சமான தைஜஸனை பிரணவத்தின் அம்சமான உகாரமாகத் தியானம் பண்ணுவதில், தியானம் பண்ணுகிறவனுக்கு

तथाविधं उभयत्वं ததாவிதம் உபயத்வம்=மேற் சொன்ன நித்திய ஞானம், முக்தர்களுக்குள் ஒன்றாக இருத்தலான சமானத்வம் இரண்டும்

स्यात् ஸ்யாத்=உண்டாய்விடுகிறது என்று அர்த்தம். ॥ 31 ॥

காரிகை சுலோகம்.

मकारभावेप्राज्ञस्य मानसामान्यमुत्कटम् ।
मात्रासंप्रातिपत्तौ तु लयसामान्यमेवच ॥ 32 ॥
மகாரபாவே ப்ராஜ்ஞஸ்ய மானஸாமான்யமுத்கடம் ।
மாத்ராஸம்ப்ரதிபத்தௌ து லயஸாமான்யமேவச ॥ 32 ॥

प्राज्ञस्य ப்ராஜ்ஞஸ்ய=பிராஞ்ஞனுக்கு பிராஞ்ஞனை

मकारभावे மகாரபாவே=மகாரமாக நினைப்பதில்

मानसामान्यं மானஸாமான்யம்=பரிமாண சாமான்னியம்

उत्कटं உத்கடம்=சிரேஷ்டமாக யிருக்கிறது

मात्रासंप्रातिपत्तौ तु மாத்ராஸம்ப்ரதிபத்தௌ து=பிராஞ்ஞனுக்கு மகாரத்வம் சித்திப்பதில்

लयसामान्यमेवच லயஸாமான்யமேவச = எல்லாம் லயமாகும் படியான சமான தர்மமும் காணப்படுகின்றது.

ச-பா:—அ-கை:—மூன்றாவது பாதமும், மூன்றாவது மாத்திரையும் ஒன்று என்று சுருதி சொன்னதை இந்த சுலோகம் விவரிக்கிறது

मकार...उत्कटं மகார ... உத்கடம் :-பிராஞ்ஞனும் மகார அக்ஷரமும் ஒன்று என்று சொல்லுவதில் பரிமாணம் சாமான்யமாயிருக்கிறது.

मात्रा ...च மாத்ரா...வ :—மாத்திரையை நிச்சயிக்கிற விஷயத்தில் லயம் அதாவது அண்டங்களின் சகலமும் அடங்கிப் போகுதல் சமானமாயிருக்கிறது. ॥ 32 ॥

III-வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்.

प्राज्ञस्य ப்ராஜ்ஞஸ்ய=பிராஜ்ஞனுக்கு

मकारभावे மகாரபாவே=முன் சொன்னபடி அளவு என்னும் காரணத்தால் பிரணவத்தின் அம்சமான மகாரத்தில் கூறப்படும் தன்மையானது உபாசிக்கப்படும்போது,

मानसामान्यं மானஸாமான்யம்=சர்வத்தையும் உள்ளே அடக்குதல் என்னும் பிராஞ்ஞனுடைய சாம்மியமானது

उत्कटं 𑌉𑌤𑍍𑌕𑌟𑌂=ஸ்பஷ்டமாயிருக்கிறது.

मात्रासंप्रतिपत्तौ 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌=இந்திரியங்களின் ஞானத்தை லயப்படுத்தும் பிரணவத்தின் அம்சமான மகாரத்தால் கூறப்படும் ஆத்மாவின் அம்சமான பிராஞ்ஞனுடைய தியானத்தால் உபாசகனுக்கு

लयसामान्यं 𑌲𑌯𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌂=துக்காதிகளின் லயத்தைச் செய்கிறபடியால பிராஞ்ஞனுடைய சாம்யமானது உண்டாகிறது என்று அர்த்தம். ॥ 32 ॥

III - ல் 3 - வது சுலோகம். துவைதம்.

प्राज्ञस्य मकारत्वे 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌸𑍍𑌯𑌮𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑍇=பிராஞ்ஞனை மேற் சொன்னபடி பிரணவத்தின் ஏகதேசமான மகார வாச்யனென்று அறியும்போது

मानसामन्ये 𑌮𑌾𑌨𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌂 =எல்லாவற்றையும் உள்ளடக்குவதான சாதிருசியம்

उत्कटं 𑌉𑌤𑍍𑌕𑌟𑌂=ஸ்பஷ்டமாக இருக்கிறது.

मात्रासंप्रतिपत्तौ 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌= ஆத்மாவின் அம்சமான பிராஞ்ஞன் பிரணவத்தின் அம்சமான மகார வாச்யனென்று தியானம் பண்ணுவதில்

लयसामान्यं 𑌲𑌯𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌂=அப்படி தியானம் பண்ணுகிறவன் துக்கம் முதலியவைகளுக்கு லயத்தைப் பண்ணுகிறபடியால் பிராஞ்ஞனோடு சமானனாகி விடுகிறான் என்று அர்த்தம். ॥ 32 ॥

காரிகை சுலோகம்.

त्रिषु धामसु यत्तुल्यं सामान्यं वेत्ति निश्चितः ।
स पूज्यः सर्वभूतानां वन्द्यश्चैव महामुनिः ॥ 33 ॥

𑌤𑍍𑌰𑌿𑌷𑍁𑌧𑌾𑌮𑌸𑍁 𑌯𑌤𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌂𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 ।
𑌸𑌪𑍂𑌜𑍍𑌯𑌃𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌃 ॥ 33 ॥

त्रिषु 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁=ஜாக்கிர ஸ்வப்ந சுஷுப்தியாகிற மூன்று
धामसु 𑌧𑌾𑌮𑌸𑍁=அவஸ்தைகளில்
यत् 𑌯𑌤𑍍=யாதொரு
तुल्यं 𑌤𑍁𑌲𑍍𑌯𑌂=துல்லியம்
सामान्यं 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌂=சமானமாக
(उक्तं 𑌉𑌕𑍍𑌤𑌂=சொல்லப்பட்டதோ)
(तत् 𑌤𑌤𑍍=அதை)
(यः 𑌯𑌃=எவன்)
निश्चितः 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌃=நிச்சயமாக

वेत्ति வெத்தி=அறிகிருனே
सः ஸஃ=அவன்
सर्वभूतानां ஸர்வபூதாநாம்=ஸமஸ்த பூதங்களுக்கு
पूज्यः பூஜ்யஃ=பூஜிக்கத்தக்கவன்
वन्द्यः வந்த்யஃ=வந்தனம் செய்யத்தகுந்தவன்
महामुनिः மஹாமுநிஃ=பிரம்மத்தை அறிந்தவன்

ச-பா:—அ-கை:—விசுவாதிகளும் அகாராதிகளும் ஒன்று என்று சொன்னதை ஸ்துதிக்கிருர்.

त्रिषु…निश्चितः த்ரிஷு…நிஶ்சிதஃ:—முன் சொன்னபடி ஜாக்கிற ஸ்வப்ந சுஷுப்தியாகிற மூன்று ஸ்தானங்களிலுள்ள சமான தர்மங்களை எவன் நிச்சயமாய் அறிகிருனே

सः…मुनिः ஸஃ…முநிஃ:—அவன் சகல பிராணிகளுக்குள் பூஜ்ஜியனுகிருன்; மேலும் அவன் நமஸ்கரிக்கத்தக்கவனுகிருன். அவன் உலகத்தில் பிரம்மத்தை அறிந்தவனுயிருக்கிருன். ॥ 33 ॥

III - 8 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்.

அ - கை:—விசுவன், தைஜஸன் பிராஞ்ஞன் இவர்கள் அகார உகார மகாரங்களால் கூறப்பட்டவர்களென்று உபாசித்தவனுக்கு எந்தப்பலனானது கூறப்பட்டதோ, அதைத் திடப்படுத்துவதற்காக விசுவாதிகளை உபாசித்தவர்களுக் குண்டாகும் பலத்தை எவன் அறிகிருனே அவனுக்கும் பலன் கூறுகிருர்.

त्रिषुधामसु த்ரிஷுதாமஸு=மூன்று ரூபங்கள் மேற்சொன்னபடி தியானிக்கப்படும் போது

यत् तुल्यं யத் துல்யம்=உபாசிக்கிறவனுக்கு தியானிக்கத் தகுந்த விசுவாதிகளின் எந்த சாதிருசியமானது இருக்கிறதோ

सामान्यं ஸாமாந்யம்=அந்த ஆதிமத்வாதி சாமியமானது உண்டாகிறதென்று

निश्चितः நிஶ்சிதஃ=நிச்சயத்தோடு கூடினவனுய்
वेत्ति வெத்தி=எவன் அறிகிருனே
(सः ஸஃ=அவன்)
महामुनिः மஹாமுநிஃ=மகா முனியாக
सर्वभावानां ஸர்வபாவாநாம்=சர்வபூதங்களாலும்
पूज्यः பூஜ்யஃ=பூஜிக்கத் தகுந்தவனும்
वन्द्यश्च வந்த்யஶ்ச=நமஸ்காரம் பண்ணத்தகுந்தவனும் ஆகிருன். ॥ 33 ॥

III-ல் 4-வது சுலோகம். துவைதம்.

அ-கை :...விசுவன், தைஜஸன், பிராஞ்ஞன், இவர்கள் அகாரம், உகாரம், மகாரம், என்று அறிந்தவனுக்கு எந்த பலன் சொல்லப்பட்டதோ, அது சித்திக்க வேண்டியதற்காக மேற் சொல்லிய பலத்தை எவன் அறிகிறானோ அவனுக்கும் பலன் உண்டென்று சொல்லுகிறார்.

त्रिषुधामसु த்ரிஷுதாமஸு = மூன்று ரூபங்களும் மேற் சொன்னபடி தியானம் செய்யப்பட்டிருக்கும்போது

यत्तुल्यं யத்துல்யம் = தியானிக்கிறவனுக்கு தியேயமான விசுவாதிகளின் சாதிர்சியமும்

सामान्यं ஸாமாந்யம் = ஆதிமத்வாதி சாமான்னியமும்

(भवति பவதி = உண்டாகிறதென்று)

निश्चितं நிஶ்சிதம் = நிச்சயமாக

वेत्ति வேத்தி = எவன் அறிகிறானோ

सः ஸ: = அவன்

महामुनिः மஹாமுநி: — மகரிஷி

सर्वभावानां ஸர்வபாவாநாம் = சர்வ பிராணிகளாலும்

पूज्यः பூஜ்ய: = பூஜிக்கத்தக்கவன்

वन्द्यःचएषः வந்த்ய: சைஷ: = நமஸ்கரிக்கத் தக்கவனாகவும் ஆய் விடுகிறான்.

பிரமாண வாக்கியம் :...

आदिमत्वेन सामान्य मुपास्येनभवेदीत ।
उपासकस्य सं जानन्सर्ववन्द्योभवे त्पुमान् ।
सामान्यत्रयमेतत्तुल्यं मुक्तिगत्वतः ॥ आत्मसंहिता ॥ 33 ॥

ஆதிமத்வேந ஸாமாந்ய முபாஸ்யேநபவேதீத ।
உபாஸகஸ்ய ஸம் ஜாநந் ஸர்வவந்த்யோபவேத்புமாந் ।
ஸாமாந்யத்ரயமேதத்துல்யம் முக்திகத்வத: ॥ ஆத்மஸம்ஹிதா ॥ 33 ॥

காரிகை சுலோகம்.

अकारो नयते विश्वमुकारश्चापि तैजसम् ।
मकारश्च पुनः प्राज्ञं नामात्रे विद्यते गतिः ॥ 34 ॥

அகாரோ நயதே விஶ்வமுகாரஶ்சாபி தைஜஸம் ।
மகாரஶ்ச புந: ப்ராஜ்ஞம் நாமாத்ரே வித்யதே கதி: ॥ 34 ॥

अकारः அகார: = அகாரம்

विश्वं விஶ்வம் = விசுவனை

नयते நயதே = அடைவிக்கிறது.

उकारश्चापि உகாரஶ்சாபி = உகாரமும்

तैजसं தைஜஸம்=தைஜஸனை
नयते நயதே=அடைவிக்கிறது
मकारश्च पुनः மகாரஶ்ச புந:=மகாரமும்
प्राज्ञं ப்ராஜ்ஞம்=பிராஞ்ஞனை
(नयते நயதே=அடைவிக்கிறது)
अमात्रे அமாத்ரே=மாத்திராரகிதமான ஓங்காரத்தின்
गतिः கதி:=கமனம்
नविद्यते ந வித்யதே=இல்லை

ச-பா:—அ-கை:—முன்சொன்ன பாதங்களுக்கும் மாத்திரைகளுக்குமுள்ள சமான தர்மங்களை அறிந்து தியானம் செய்கிறவனுக்கு உண்டாகும் வெவ்வேறு பலன்களைக் கூறுகிறார்.

अकारः...विश्वं அகார:...விஶ்வம் :—ஆத்மாவின் பாதங்களும் மாத்திரைகளும் ஒன்று என்று முன்கூறிய சமான அம்சங்களால் அறிந்து ஓங்காரத்தின் யதார்த்த ஞானத்தையும் அடைந்து எவன் தியானிக்கிறானோ அவன் விசுவனை அடையும்படி அகாரஞ்செய்கிறது. அகாரப்பிரதானமான ஓங்காரத்தைத் தியானிக்கிறவன் வைசுவனராகிறான் என்பது கருத்து.

उकारः...तैजसं உகார:...தைஜஸம் :—அப்படியே உகாரம் தைஜஸனை அடையும்படிச் செய்கிறது அதாவது உகாரப்பிரதானமான ஓங்காரத்தைத் தியானிக்கிறவன் ஹிரண்யகர்ப்பனாகிறான்.

मकारः च पुनः प्राज्ञं மகார: ச புந: ப்ராஜ்ஞம் :—மேலும் மகாரமும் பிராஞ்ஞனை அடையும்படிச் செய்கிறது. அதாவது மகாரப் பிரதானமான ஓங்காரத்தைத் தியானிக்கிறவன் பிராஞ்ஞனாகிறான் அதாவது அவ்வியாகிருதனாகிறான் என்பது கருத்து.

नामात्रे...गतिः நாமாத்ரே...கதி: :—மகாரம் நீங்கினவுடன் காரணபாவமும் நீங்கிவிடுகிறது. மாத்திரைகளாகிற விபாகமில்லாத ஓங்காரமே மிச்சப்படுகின்றது. அது விஷயத்தில் காரிய காரணங்களுக்குரிய யாதொரு செய்கையுமில்லை. அதாவது:—மாத்திரைகளுடையவும் பாதங்களுடையவும் விபாகம் எப்போது இல்லாமற் போகிறதோ அப்போது ஓங்காரமாகிற துரீய ஆத்மாவாயிருக்கிற புருஷன் விஷயத்தில் அடையும்படியான பொருள் அடைகிறவன், அடைதல் என்னும் பேதங்களில்லாமற் போகின்றன. ஸ்தூலப்பிரபஞ்சம், ஜாக்கிராவஸ்தை, அபிமானியான விசுவன் இம்மூன்றும் அகாரமாம். சூட்சுமப்பிரபஞ்சம், ஸ்வப்நாவஸ்தை அபிமானியான தைஜஸன் இம்மூன்றும் உகாரமாம். ஸ்தூல

சூட்சுமமான இரண்டு பிரபஞ்சங்களுக்கும் காரணம். சுஷுப்தி அவஸ்தை, அபிமானியான பிராஞ்ஞன், இம்மூன்றும் மகாரமாம். இவைகளிலும் முன்னிருப்பது பின்னிருப்பதை அடைகிறது. இவ்விதமாய் எல்லாம் ஓங்காரமாயிருக்கிறது. இப்படி தியானிக்கிறவன், இதுவரையில் ஓங்கார ரூபமாய் எந்த வஸ்து அறியப்பட்டதோ அது சுத்தப்பிரம்மம் என்று ஆசாரிய உபதேசத்தால் அறிகிறான். இந்த அறிவினால் சகல விபாகங்களுக்கும் காரணமானதும் மகாரத்தால் குறிப்பிடப்படுவதுமான அஞ்ஞானம் நீங்கிவிடுவதால் அவன் வியாபகமான சுத்தப்பிரம்மமாகவே ஆகிறான் ஆகவே அவனுக்கு யாதொரு செய்கையும் ஏற்படவில்லை. ||34||

III - 9 - வது மந்திரம்· விசிஷ்டாத்வைதம்.

அ - கை :—விசுவன் முதலான உபாசனையால் சர்வ காமங்களும் உண்டாகிறதென்று சொல்லப்பட்டது. இப்போது விசுவாதிகளை அடைதலான பலத்தைக் கூறுகிறார்.

अकारः அகாரஃ=அகாரத்தால் கூறப்படும் விசுவன்

विश्वे விஶ்வம்=தன்னை உபாசிக்கிறவனை, தன்னுடைய ஸ்வரூபத்தை

नयति நயதி=அடையும்படிச் செய்கிறான்.

उकारः चापि உகாரஃ சாபி=உகாரத்தால் கூறப்படும் தைஜஸனும்

तैजसः தைஜஸஃ=தன்னை உபாசிக்கிறவனை தன்னுடைய ஸ்வரூபத்தை

नयति நயதி=அடையும்படி செய்கிறான்.

मकारः மகாரஃச=மகாரத்தால் கூறப்படும் பிராஞ்ஞனும்

पुनः प्राज्ञं புநஃ ப்ராஜ்ஞம்= தன்னை உபாசிக்கிறவனை தன்னுடைய ஸ்வரூபத்தை மறுபடியும்.

नयति நயதி=அடையும்படிச் செய்கிறான். மறுபடியும் அடைகிறான் என்பதற்கு தினந்தோறும் சுஷுப்திகாலத்தில் பிராஞ்ஞனை அடைந்தாலும் ஸ்தான விசேஷமான முக்தியால் அந்தப் பிராஞ்ஞனை அடைகிறபடியால் மறுபடியும் என்று சொல்லப்பட்டது. துரீயோபாசகனுக்கு எப்படி யென்றால், அவனுக்கும் பிராஞ்ஞபிராப்தி உண்டு என்று சொல்லுகிறார்.

अमात्रेः அமாத்ரெஃ :—விசுவ தைஜஸர்கள் தினந்தோறும் பிராஞ்ஞனோடு ஒன்றாக இருப்பதால் மாத்திரை என்று சொல்லப்படுகிறார்கள். துரீயன் அப்படி ஒன்றாக இராதபடியால் அமாத்திரை என்று சொல்லப்படுகிறான். அந்த அமாத்திரையான துரீயத்தில்

अगतिः नाविद्यते அகதி: நவித்யதே = அதை உபாசிக்கிறவனுக்கு அகதி இல்லை. அதாவது அதை அடைதலுண்டு. துரீயத்துக்கு கதியானது இருக்கிறது என்று சொல்லவேண்டியதாயிருக்க அகதி இல்லை என்று சொன்னதானது, விசுவாதிகள் வெளிமுதலிய வியவஹாரங்களுக்குக் காரணமாகவும் உபாசகர்களால் அடையத் தகுந்தவர்களாகவும் எப்படி இருக்கிறார்களோ, அப்படி துரீயம் பாஹ்ய வியவஹாரங்களுக்குக் காரணமாக இல்லாதது போல் அடையத்தகுந்ததன்றோ என்னும் சங்கையைநிவிர்த்திக்கும் பொருட்டு அகதி: நவித்யதே என்று சொல்லபட்டது. ॥ 34 ॥

மூன்றுவது கண்டம் முற்றிற்று.

III-ல் 5வது சுலோகம். துவைதம்.

அதை :...விசுவாதி ரூபங்களை உபாசிக்கிறவர்கள் சகல காமங்களையும் அடைகிறார்கள் என்று கூறப்பட்டது. இப்போது விசுவாதிகளை அடைவதால் அவர்களுக்கு உண்டாகும் பலத்தை கூறுகிறார்.

अकारः அகார: = அ என்று கூறப்படும் விசுவன்
स्वात्मोपासकं ஸ்வாத்மோபாஸகம் = தன்னை உபாசிக்கிறவனை
विश्वं விஶ்வம்=விசுவனை அதாவது தன்னை
नयते நயதே = அடையும்படிச் செய்கிறான்

उकारः உகார: = உ என்று கூறப்படும் தைஜஸன் தன்னை உபாசிக்கிறவனை

तैजसं தைஜஸம்=தைஜஸனை அதாவது தன்னை
नयते நயதே=அடையும்படி செய்கிறான்

मकारः மகார:=ம என்று கூறப்படும் பிராஞ்ஞன் தன்னை உபாசிக்கிறவனை

पुनःप्राज्ञं புந:ப்ராஜ்ஞம்=மறுபடியும் பிராஞ்ஞனை அதாவது தன்னை

नयते நயதே=அடையும்படிச் செய்கிறான். **புன:** என்னும் சப்தம் தினந்தோறும் சுஷுப்தியில் பிராஞ்ஞனை அடைந்திருந்தாலும் ஸ்தான விசேஷமான முக்தியில் அவனை அடைகிறான் என்கிற அபிப்பிராயத்தால் பிரயோகிக்கப் பட்டிருக்கிறதென்று அறியவும்.

துரீயோபாசகனுக்கு அதாவது நான்காவது ரூபத்தை உபாசிக்கிறவனுக்கு பலன் யாதெனின், அவனுக்கும் அதின் பிராப்தி உண்டென்று சொல்லுகிறார்.

अमात्रे அமாத்ரே=நான்காவது ரூபத்தில் விச்வ தைஜஸர்கள் பிராஜ்ஞனோடு பிரதிதினம் ஒன்றாகியும் விலகியுமிருக்கிறார்கள். ஆனதால் பிராஜ்ஞனுக்கு அம்சம் ஏற்படுகிறது. துரீயமோ அப்படியில்லை. ஆகையால், அமாத்திரை என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட துரீயத்தில்

अगतिः அகதி:=அதை அடையாமை

नाविद्यते நவித்யதே=அதை உபாசிக்கிறவனுக்கு இல்லை. கதி இருக்கிறதென்றே அர்த்தம். நான்காவது ரூபத்தில் கதி இருக்கிறதென்று சொல்ல வேண்டியதாயிருக்க, அகதி இல்லை என்று சொன்னதானது, நான்காவது ரூபம் விச்வாதிகள் போல் பாஹ்ய வியவஹார காரணமாக இல்லாதபடியால் அந்த ரூபத்துக்கு கதியுமில்லை என்று சங்கையும் வருமாகையால் அதை நிவர்த்திக்க வேண்டியதற்காக அகதியில்லை என்று கூறப்பட்டது.

பிரமாண வாக்கியம் :—

अमात्रत्वंतुरीयस्य त्वविभागा दिनेदिने ।
जाग्रदादेरकर्त्तापि गम्यो सौज्ञानिनांभवेत् ॥
आदिमत्वादि सामान्यं तुल्यं मोक्षोपभोग्यतः ।
अमात्रत्वंतुरीयस्या प्यविभागा दिनेदिने ॥ आत्मसंहितायां ॥ 34 ॥

அமாத்ரத்வம் துரீயஸ்ய த்வவிபாகா தினேதினே ।
ஜாக்ரதாதேரகர்த்தாபி கம்யோ ஸௌஜ்ஞானினாம்பவேத் ।
ஆதிமத்வாதி ஸாமான்யம் துல்யம் மோக்ஷோபபோக்யத: ।
அமாத்ரத்வம் துரீயஸ்யா ப்யவிபாகா தினேதினே ॥
॥ ஆத்மஸம்ஹிதாயாம் ॥ 34 ॥

॥ उपनिषत् ॥

अमात्रश्चतुर्थोऽव्यवहार्यः प्रपञ्चोपशमः शिवोऽद्वैत एवमोंकार आत्मैव संविशत्यात्मनाऽऽत्मानं य एवं वेद ॥ 35 ॥

इति माण्डूक्योपनिषत्समाप्ता ॥

॥ உபநிஷத் ॥

அமாத்ரஶ்சதுர்தோऽவ்யவஹார்ய: ப்ரபஞ்சோபஶம: ஶிவோऽத்வைத ஏவமோங்கார ஆத்மைவ ஸம்விஶத்யாத்மனாऽऽத்மானம் ய ஏவம் வேத ॥ 35 ॥

இதி மாண்டூக்யோபநிஷத்ஸமாப்தா ॥

अमात्रः அமாத்ர:=அகாராதி மாத்திரைகளில்லாத
एवं ओंकारः ஏவம் ஓங்கார:=இப்படிப்பட்ட ஓங்காரம்
चतुर्थः சதுர்த:=துரீயமானது

अव्यवहार्यः அவ்யவஹார்ய:=வாக்கு மனதுகளால் வியவஹரிக்கக்கூடாதது

प्रपञ्चोपशमः ப்ரபஞ்சோபசம:=ஜாக்கிரதாதி ஸ்தானதர்மங்களில்லாமல் சாந்தமானது

शिवः ஶிவ:=கலியாணஸ்வரூபம்

अद्वैतः அத்வைத:=த்வைதமற்றதுமான

आत्मैव ஆத்மைவ=ஆத்மாவே

यः ய:=எவன்

एवं ஏவம்=இந்தப்பிரகாரம்

वेद வேத=தெரிந்துகொள்ளுகிறானோ

(सः ஸ:=அவன்)

आत्मना ஆத்மநா=தன் ஸ்வரூபத்தால்

आत्मानं ஆத்மாநம்=பரமாத்ம ஸ்வரூபத்தை

संविशति ஸம்விஶதி=பிரவேசிக்கிறான்.

अमात्रः அமாத்ர: = मात्रा यस्य नास्ति स अमात्रः மாத்ரா யஸ்ய நாஸ்தி ஸ அமாத்ர: எதற்கு மாத்திரையில்லையோ அது இந்த அமாத்திர ஓங்காரம்

चतुर्थः आत्मैव சதுர்த்த: ஆத்மைவ=துரீயமான ஆத்மாவே

अव्यवहार्यः அவ்யவஹார்ய:=ஒரு பதார்த்தத்தைக் குறிப்பிட சாதகங்களான வாக்கும் மனதும் அதை அறியமுடியாதபடியால், அது வியவஹரிக்கத்தக்கதன்று என்பது கருத்து.

प्रपंच...अद्वैतः ப்ரபஞ்ச...அத்வைத:—இவ்விதமாக த்வைத பிரபஞ்சம் நாசமடையும்போது அது ஆத்மசுவரூபமாயும் ஆகையால் இரண்டற்றதாகவுமே இருக்கிறது

இப்படி அறிந்த புருஷனால் உச்சரிக்கப்பட்ட ஓங்காரமானது மூன்று மாத்திரைகளுடன் கூடினதாயும் மூன்று பாதங்களுள்ளதாயு மிருக்கின்றது.

यः एवं वेद ய: ஏவம் வேத=எவன் இப்படி அறிகிறானோ

संविशत्यात्मना आत्मानं ஸம்விஶத்யாத்மநா ஆத்மாநம்=அவன் தன்னுடைய ஆத்மாவினாலேயே தன்னுடைய பரமார்த்த ரூபமான ஆத்மாவே பிரவேசிக்கிறான் அதில் ஐக்கியமாய்விடுகிறான் என்பது கருத்து அதாவது, சுஷுப்தியாகிற மூன்றாவது ஸ்தானமான காரணத்தை தஹித்து பரமார்த்த தர்சியான பிரம்மஞ்ஞானியின் ஆத்மாவில் பிரவேசித்து அதாவது அத்துடன் ஒன்றாகி மறுபடியும் ஜன்மத்தை அவர்கள் அடைகிறதில்லை. ஏனெனின் துரீயமா

னது காரிய காரணங்களற்ற கேவல ரூபமாயிருக்கின்றது. இரஜ்ஜு ஸர்ப்பங்களை விவேசனை செய்ததின்பேரில் ரஜ்ஜுவில் ஐக்கியமான சர்ப்பம் பிராந்தி சம்ஸ்காரத்தால் விவேகிக்கு முன்போல் மறுபடியும் தோன்றுகிறதில்லை. அப்படியே முக்தனுக்கும் முந்தின சம்ஸ்காரத்தால் மறுபடியும் புனர்ஜன்மம் உண்டாகிறதில்லை. உத்தமாதிகாரிகளான சுத்தப் பிரம்மாத்மைக்கியத்தை அறிந்தவர்களுக்கு ஓங்கார மூலமாக மறுபடியும் ஜன்மமில்லை என்று சொல்லப்பட்டது. இனி மந்த மத்திய புத்தியுள்ளவர்களுக்கு எப்படி பிரம்ம பிராப்தி சித்திக்கும் என்பதைக் கூறுகிறார். அவர்களுக்கு கிரமமுக்தி கிடைக்கும் என்று சொல்லுகிறார் சாதகங்களை அடைந்தும் சன்மார்க்கத்திலிருந்தும், மாத்திரைகளும் பாதங்களும் சமம் என்று நிச்சயபுத்தி அடைந்துமிருக்கிற மந்தமத்திய புத்தியுள்ள சன்னியாசிக்கு விதிப்படி உபாசிக்கப்பட்ட ஓங்காரமானது பிரம்மப்பிராப்திக்குச் சாதகமாகிறது. அப்படியே आश्रमास्त्रिविधाहीनाः ஆஶ்ரமாஸ்த்ரிவிதாஹீநா: (III 16.) கீழ்பட்ட முதலிய மூன்றுவித ஆசிரமங்கள் என்று இனி சொல்லப்படுகிறது. ॥ 35 ॥

மாண்டூக்கியோபநிஷத்தின்
மூலமந்திரங்களின் பாஷ்ய மொழிபெயர்ப்பு
முற்றிற்று.

4-வது கண்டம் 1-வது மந்திரம், விசிஷ்டாத்வைதம் ஶ்ரீ பா :—

अमात्रः அமாத்ர:= அளவற்றவன்

अव्यवहार्यः அவ்யவஹார்ய:=மேற்சொன்ன வியவஹரிக்க முடியாத முதலிய குணங்களுடன் கூடினவன்

चतुर्थः சதுர்த்த:=துரீயன்

आत्मैव ஆத்மைவ=ஆத்மாவே,

एव ओंकारः ஏவ ஓங்கார:=வியூஹவாசுதேவர் தானே இப்படிபட்ட ஓங்காரம் ஓங்காரத்தின் ஏகதேசமான நாதரூபம் என்று கருத்து.

இந்த வியூஹவாசுதேவனை ஸமஸ்தப் பிரணவரூபமான பரவாசுதேவனோடு ஐக்கியத்தை சூசிப்பிக்கிறதற்காக ஓங்காரமென்று கூறப்பட்டது. அப்படி அறிந்தவனுக்கு யாது பலனெனின்,

यः एवं वेद ய: ஏவம் வேத=எவன் இப்படி அறிருத்த, பிரத்யும்ன, சங்கர்ஷண, வாசுதேவ, பரவாசுதேவரூபமாக வியஸ்த சமஸ்த பிரணவத்தை உபாசிக்கிறானோ அவன்

आत्मना ஆத்மநா= பரமாத்மாவால் அனுக்கிரகிக்கப்பட்ட

னாய் அந்த உபாயத்தாலேயே கிரமமாக

आत्मानं ஆத்மாநம்=அந்த பரமாத்மாவை

संविशति ஸம்விசதி=அடைகிறான் ॥ 35 ॥

ரங்கராமாநுஜ பாஷ்ய மொழிபெயர்ப்பு முற்றிற்று.

கூ - பா :—

அ - கை :—नान्तः प्रज्ञं நாந்த: ப்ரஜ்ஞம் என்கிற வாக்கியத்தால் கூறப்பட்ட நான்காவது ரூபத்தின் குணத்தை மறுபடியும் கூறி துரீயமான துநாதத்தால் பிரதிபாத்தியமென்றுசொல்லுகிறார். அத்வைதம் என்கிற பதம் வரையில் மறுபடியும் கூறுதல்.

ओंकारः ஓம்காரः=பிரணவத்தின் ஏகதேசமான நாதத்தால் கூறப்படுகிறதென்று அர்த்தம். அமாத்திரை முதலான பதங்களுக்கு முன்போலவே அர்த்தம் செய்துகொள்ளவும்.

துரீயத்தின் முன்சொன்ன அவ்வியவஹாரியத்வாதி குணங்கள் உபாசகனுக்கு முக்திகாலத்திலும் சமமாக இருக்கிறதென்று தெரியப்படுத்துவதற்காக இந்த அனுவாதம் ஏற்பட்டது. எப்படி விசுவன் முதலானவர்கள் அகார முதலானவைகளால் கூறப்படுகிறார்களோ அப்படி துரீயமானது ஓங்காரத்தின் ஏகதேசமான நாதத்தால் கூறப்படுகிறதென்று அர்த்தம்.

துரீயன் நாதத்தால் கூறப்படுகிறான் என்று உபாசிக்கிறவனுக்குப் பலன் யாதெனின் :—

यः யஃ=எந்த அதிகாரியானவன்

एवं ஏவம்=இந்தப்படி

वेद வேத=அறிகிறானோ

सः ஸஃ=அவன்

आत्मैवसन् ஆத்மைவஸந்=ஆத்மஸ்வரூபனாகஇருந்துகொண்டு அதாவது தேகாதிகளில் நான் என்னுடையது என்கிற அபிமானத்தை விட்டவனாக இருந்து

आत्मना ஆத்மநா = பரமாத்மாவால், அதாவது அவனுடைய பிரசாதத்தால

आत्मानं ஆத்மாநம்=நாதத்தால் கூறப்படும் துரீயரூபத்தை

संविशति ஸம்விசதி=உள்ளும் வெளியிலும் தன்னிஷ்டப்படி பிரவேசித்து தனக்குத்தகுந்த போகங்களை அனுபவித்து சுகமாயிருக்கிறான் என்பது கருத்து.

யஏவம்வேத என்று இரண்டு தடவை சொன்னதானது மேற்சொன்ன உபாசனையை நிச்சயிப்பதற்காக என்று அர்த்தம் ॥ 35 ॥

நான்காவது கண்டம். துவைதம்.

(துரீயம் நாதம் என்று கூறப்படுதல்.

அ-கை :—நாந்த : பிரஞ்ஞம் என்கிற வாக்கியத்தால் கூறப்பட்ட துரீயத்தின் குணத்தை அனுவதித்து அந்த துரீயம் நாதப்பிரதிபாத்தியம் என்று கூறுகிறார்.

अमात्रः அமாத்ர: முதல் **अद्वैतः** அத்வைத: வரையில் அநுவாதம். அர்த்தம் முன் சொல்லியபடியே.

ओंकारः ஓங்கார:=பிரணவத்தின் ஏகதேசமான நாதத்தால் பிரதிபாத்தியன். ஆகையால் நாதப் பிரதிபாத்தியத்வம் விதிக்கப்படுகிறது.

அவ்வியவஹார்யாதிகளை மறுபடியும் சொன்னதற்குக் காரணம் உபாசகனிடத்திலும் முக்தி காலத்திலும் சமமாக இருக்கிறதென்று காண்பிவிக்கும் பொருட்டாம்.

துரீயத்தை நாதப் பிரதிபாத்தியம் என்று அறிந்தவனுக்கு பலத்தைக் கூறுகிறார் :—

यः ய:=எவன்

एवं ஏவம்=மேற்சொன்னபடி ஓங்காரத்தை நாதப்பிரதிபாத்தியமென்று

वेद வேத=அறிகிறானோ

(**सः** ஸ:=அவன்)

आत्म एव ஆத்மைவ=சுத்தாத்மாவாகவே யிருந்துகொண்டு அதாவது தேகம் முதலியவைகளில் என்னுடையது என்கிற அபிமானத்தை விட்டவனாக இருந்துகொண்டு

आत्मना ஆத்மநா=பரமாத்மாவினுடைய பிரசாதத்தால்

आत्मानं ஆத்மாநம்=நாதபோத்தியமான துரீயாத்மாவை

संविशति ஸம்விஶதி=பிரவேசிக்கிறான். பிரவேசித்து உள்ளும் வெளியிலும் தன்னிஷ்டப்படி தனக்கு யோக்கியமான போகங்களை புஜித்துக்கொண்டு சுகமாயிருக்கிறான் என்பது கருத்து. பிரமாணவாக்கியம் :—

तुरीयं नादनामानं हरिंज्ञात्वा परंपदं ।
तमेवप्राविशे च्छुद्धरूपीत त्सदशात्मवान् ।
ज्ञानानं दौचशक्तिश्च तथापिनसमाः क्वचित् ।
विमुक्तस्यापि जीवस्य पारतंत्र्येच नित्यदा ॥ 35 ॥

துரீயம் நாதநாமாநம் ஹரிம்ஜ்ஞாத்வா பரம்பதம் ।
தமேவப்ராவிஶேச்சுத்தரூபீதத்ஸதஶாத்மவாந் ।
ஜ்ஞாநாநந்தௌசஶக்திஶ்ச ததாபிநஸமா: க்வசித் ।
விமுக்தஸ்யாபிஜீவஸ்ய பாரதந்த்ர்யேசநித்யதா ॥ 35 ॥

॥ गौडपादीयश्लोकाः ॥

ओंकारं पादशो विद्यात्पादा मात्रा न संशयः ।
ओंकारं पादशो ज्ञात्वा न किंचिदपि चिन्तयेत् ॥ 36 ॥

पूर्ववदत्रैते श्लोका भवन्ति ॥

॥ கௌடபாதீயஶ்லோகா: ॥

ஓங்காரம் பாதஶோ வித்யாத்பாதா மாத்ரா ந ஸம்ஶய: ।
ஓங்காரம் பாதஶோ ஜ்ஞாத்வா ந கிஞ்சிதபி சிந்தயேத் ॥ 36 ॥

பூர்வவதத்ரைதே ஶ்லோகா பவந்தி ॥

ओंकारं ஓங்காரம்=ஓங்காரத்தை
पादशः பாதஶ:=பாதங்களின் விபாகமற்றதாக
विद्यात् வித்யாத்=தெரிந்துகொள்ளவேண்டும்
पादाः பாதா:=பாதங்களே
मात्राः மாத்ரா:=ஓங்காரத்தின் அகாராதி மாத்திரைகள்
न संशयः ந ஸம்ஶய:=ஸம்சயமில்லை
ओंकारं ஓங்காரம்=ஓங்காரத்தை
पादशः பாதஶ:=பாதவிபாகமற்றதாக அதாவது ஒன்றாக
ज्ञात्वा ஜ்ஞாத்வா=தெரிந்துகொண்டு
किंचिदपि கிஞ்சிதபி=யாதொன்றையும்
न चिन्तयेत् ந சிந்தயேத்=சிந்திக்கமாட்டான்

ச-பா:-அ-கை:— சுருதியின் அர்த்தத்தை விளக்கிவைக்கும் சுலோகங்கள் முன் ஸ்ரீகௌடபாதாசாரியரால் ஏற்படுத்தப்பட்டதுபோல் இப்போதும் இந்த சுருதி அர்த்தத்தில் சுலோகங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ओंकार...संशयः ஓங்காரம்...ஸம்ஶய: :—முன்கூறிய சாமான்னிய காரணங்களால் பாதங்களே மாத்திரைகள் பாதங்கள், மாத்திரைகளே பாதங்கள் ஆகையால் ஓங்காரத்தை பாதங்களுடன் கூடினதாக அதாவது விபாகமற்றதாக அறியவேண்டியது.

ओंकार...चिन्तयेत् ஓங்காரம்...சிந்தயேத் :—இவ்விதமாக ஓங்கார மறியப்பட்டவளவில் ஒருவன் கிருதார்த்தனாக ஆய்விட்டபடியால் திருஷ்ட பிரயோஜனத்தையாவது அதிர்ஷ்டப் பிரயோஜனத்தையாவது சிந்திக்கமாட்டான். விபாகமற்ற ஓங்காரத்தைப் பிரம்ம புத்தியுடன் தியானிக்கிறவன் கிருதகிருத்தியனாய் விடுகிறான் என்பது கருத்து. ॥ 36 ॥

IV - - 2 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்.

அ - கை :...பிரணவத்தின் அவயங்களான அகாராதிகளால் கூறப்படும் பகவானுடைய ரூபத்தை வேறு வஸ்துக்களை நினைக்காமல் தியானம் செய்யவேண்டிய தென்கிற விஷயத்தில் பிரம்மாவால் பார்க்கப்பட்ட மந்திரங்களைக் கூறுகிறார்.

अत्र அத்ர=மேற்சொன்ன அர்த்தத்தில்

ओंकारं ஓங்காரம் = அகாராதிகளுடன் கூடின பிரணவ சமுதாய ரூபத்தை

पादशः பாதஶ:=உபாசகர்களால் அடையப்படும் பாதங்கள் அதாவது விசுவன் முதலான ரூபங்களாக

विद्यात् வித்யாத்=அறியவேண்டும்.

பாதங்கள் எப்படிப்பட்டவை எனின்

पादा: பாதா:=ரூபங்கள்

मात्रा: மாத்ரா:= பிரணவத்தின் அம்சங்களான அகாராதிகளால் பிரதிபாதிக்கத் தகுந்தவை என்று அர்த்தம்.

ओंकारं ஓங்காரம்=பிரணவத்தால் கூறிய அர்த்தத்தை

पादशः பாதஶ:=நான்கு ரூபமாக

ज्ञात्वा ஜ்ஞாத்வா = அறிந்து

किंचिदपि கிஞ்சிதபி=வேறு ஒன்றையும்

नचिन्तयेत् நசிந்தயேத்=சிந்திக்கமாட்டான்; இதர சிந்தனையாலுண்டாகிற பலனும் அதைவிட அதிகமான பலனும் இந்த ஓங்கார தியானத்தாலேயே உண்டாகிறபடியால் மற்ற ஒன்றையும் சிந்திக்கமாட்டான் என்பது கருத்து. ॥ 36 ॥

IV - ல் 1 - வது சுலோகம். துவைதம்.

அ-கை :—பகவானுடைய ரூபங்கள் பிரணவத்தின் அவயவமான அகாராதிகளால் பிரதிபாத்தியங்கள் அந்த ரூபங்களின் ஞானம் வேறு பதார்த்தத்தின் ஸ்மரணையை விட்டுவிடுவதால் சம்பாதிக்கத் தகுந்தது என்று கூறப்பட்டது. அந்த அர்த்தத்தை சர்வேசுவரரான பிரம்மாவால் பார்க்கப்பட்ட சுலோகங்களால் உதஹரிக்கிறார்.

अत्र அத்ர = இவ்விடத்தில்

एते श्लोकाः ஏதே ஶ்லோகா:=இந்த சுலோகங்கள்

भवन्ति பவந்தி=இருக்கின்றன

ओंकारं ஓங்காரம்=சமஸ்தப் பிரணவப் பிரதிபாத்யமான ஆத்மாவை

पादशः பாதஶ:=விசுவாதி அம்சங்களால்

विद्यात् வித்₃யாத்=அறியவேண்டும். அதாவது விசுவாதி நான்கு ரூபமாக அறியவேண்டும். . பாதங்கள் எவையெனின் :—

पादाः பாதா₃:=அம்சங்கள்

मात्राः மாத்ரா:=பிரணவத்தின் அம்சங்களான அகாராதிகளால் பிரதிபாத்தியமென்று அர்த்தம்.

ओंकारं ஓங்காரம்=ஓங்கார வாச்சியமான பரமாத்மாவை

पादशः பாத₃ஶ:= நான்கு ரூபமாக

ज्ञात्वा ஜ்ஞாத்வா= அறிந்து

किंचिदपि கிஞ்சித₃பி=மற்றொன்றையும்

नचिंतयेत् நசிந்தயேத்=சிந்திக்கக்கூடாது. இதர தியானத்தாலுண்டான தியானத்தைவிட இந்த ஞானத்தால் அதிக பலம் சித்திப்பதால் வேறு ஒன்றையும் சிந்திக்கக் கூடாதென்பது கருத்து. ॥ 36 ॥

காரிகை சுலோகம்.

युञ्जीत प्रणवे चेतः प्रणवो ब्रह्म निर्भयम् ।
प्रणवे नित्ययुक्तस्य न भयं विद्यते क्वचित् ॥ 37 ॥

யுஞ்ஜீத ப்ரணவே சேத: ப்ரணவோ ப்₃ரஹ்ம நிர்ப₄யம் ।
ப்ரணவே நித்யயுக்தஸ்ய நப₄யம்வித்₃யதே க்வசித் ॥ 37 ॥

चेतः சேத:=மனதை

प्रणवे ப்ரணவே=பிரணவத்தில்

युञ्चीत யுஞ்ஜீத=சேர்க்கவேண்டும்

प्रणवः ப்ரணவ:= பிரணவம்

निर्भयं நிர்ப₄யம்= ஜனனமரண ரூபசம்சார பயமில்லாத

ब्रह्म ப்₃ரஹ்ம= பிர்ம்மஸ்வரூபம்

प्रणवे ப்ரணவே=பிரணவத்தை

नित्ययुक्तस्य நித்யயுக்தஸ்ய=எப்போதும் தியானிக்கிறவனுக்கு

क्वचित् க்வசித்=எவ்விடத்திலும்

भयं ப₄யம்=பயம்

न विद्यते ந வித்₃யதே = இல்லை.

ச-பா:—ஓங்காரானுசந்தானத்தில் சாமர்த்திய முள்ளவனுக்கு சகல த்வைதத்தையும் போக்கிவைக்கும் ஓங்கார ஞானமானத்தினாலேயே கிருதார்த்ததை உண்டாகிறது என்று சொல்லப்பட்டது. இந்த ஓங்கார ஞானமில்லாமல் பிறருடைய உபதேசத்தையே ஆசிரயித்திருக்கிறவன் தியானம் செய்யவேண்டியது என்று இப்போது கூறப்படுகின்றது.

युंजीत...चेत: யுஞ்ஜீத...சேதஃ:—மனதை முன் சொல்லிய படி பிரம்மரூபமான ஓங்காரத்தில் செவ்வையாகச் செலுத்தவேண்டியது.

प्रणव: ब्रह्मनिर्भय: ப்ரணவஃ ப்ரஹ்ம நிர்பயஃ என்பவைகளின் ஓங்காரமே அபயமற்ற பிரம்மம். எப்போதும் பிரணவத் தியானம் செய்கிறவன் யாதொரு பயமுமடைகிறதில்லை.

विद्वान् नबिभेतिकुतश्चन விதாந் நபிபேதிகுதஶ்சந வித்வான் ஒன்றிலும் பயப்படுகிறதில்லை என்று சுருதி சொல்லுகிறது. ॥37॥

IV - 3 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்.

அ - கை :—சம்சார பயத்தினின்றும் கரை ஏறவேண்டும் என்று இச்சிக்கிறவன் ஓங்காரத்தை பகவானென்று எவ்விதத்திலும் தியானம் செய்யவேண்டியது என்கிறார்.

प्रणवे ப்ரணவே = பிரணவத்தால் கூறப்படும் விஷ்ணுவினிடத்தில்

चेत: சேதஃ = சித்தத்தை

युंजीत யுஞ்ஜீத = சேர்க்கவேண்டும். அந்தப் பிரணவம் எப்படிப்பட்டதெனின் :—

ब्रह्म ப்ரஹ்ம = குணங்களால் விர்த்தியடைந் திருப்பதால் பிரம்மமென்று சொல்லப்படுகிற

प्रणव: ப்ரணவஃ = விசுவன் முதலிய நான்குருபத்துடன் கூடிய ஸ்வரூபமானது

निर्भयं நிர்பயம் = பயமற்றது. அல்லது குணபூர்ணமாயிருப்பதால் விசுவாதி நான்குருபமான ஹரியானவர் ஜீவனுக்கு ஜாக்ராதாதி அவஸ்தைகளை உண்டுபண்ணுகிறபடியால் பிரணவமென்று சொல்லப்படுகிறார்.

பிரணவத்தை அறிந்தவனுக்குப் பலனைச்சொல்லுகிறார்.

प्रणवे ப்ரணவே = அந்த ஹரியை

नित्ययुक्तस्य நித்யயுக்தஸ்ய = நித்தியம் தியானிக்கிறவனுக்கு

काश्चित् கஶ்சித் = ஒரு நிமித்தத்தாலும் பயமானது

नविद्यते நவித்யதே = இல்லை. பலன் இருவர்களுக்கும் சமம் என்று சொல்லவேண்டியதற்காக பிரம்மம் நிர்பயம் என்று கூறப்பட்டது. ॥ 37 ॥

IV - ல் 2 - வது சுலோகம். துவைதம்.

அ-கை:—சம்சார சாகரத்தினின்றும் கரையேற இச்சிக்கிற வன் ஓங்கார ஸ்வரூபியான பகவானை எவ்விதத்திலும் தியானம் பண்ணவேண்டும் என்று கூறப்பட்டது. அந்த அர்த்தத்தை இந்த சுலோகமும் கூறுகிறது.

प्रणवे ப்ரணவே = ஹரியினிடத்தில்

चेतः சேத꞉ = மனதை

युंजीत யுஞ்ஜீத = சேர்ப்பிக்கவேண்டும். அதாவது பகவத் விஷயமாகச் செய்யவேண்டும். பிரணவம் எப்படிப்பட்டதெனின்,

प्रणवः ப்ரணவ꞉ = விசுவாதி நான்கு ரூபமாயிருக்கிற ஹரியானவர்

निर्भयं நிர்ப⁴யம் = பயமற்றவர்

ब्रह्म ப்³ரஹ்ம = பூர்ணகுணமுள்ளவர்

ஜீவர்களுக்கு ஜாக்கிரதாதி அவஸ்தைகளை உண்டுபண்ணுகிற படியால் பிரணவமெனப்படுகிறார். இனி பலத்தைக் கூறுகிறார்.

प्रणवे नित्ययुक्तस्य ப்ரணவே நித்யயுக்தஸ்ய = பிரணவத்தை எப்போதும் தியானம் செய்கிறவனுக்கு

क्वचित् க்வசித் = ஒரு நிமித்தத்தாலும் பயமில்லை என்பது கருத்து.

பிரமாணவாக்கியம்:—

चतूरूपस्यास्य विष्णोर्नाम प्रणव इत्यपि ।
जाग्रदादि प्रणयनात्स एव ब्रह्म बृंहणात् ।
ओमित्या क्रियमाणत्वादोंकारस प्रकीर्त्तितः ।
आदिमत्वा दयोह्यर्था ओमित्यस्य श्रुतौश्रुताः ॥ आत्मसंहिता ॥ 37 ॥

சதூரூபஸ்யாஸ்ய விஷ்ணோர்நாம ப்ரணவ இத்யபி ।
ஜாக்³ரதா³தி³ ப்ரணயநாத்ஸ ஏவ ப்³ரஹ்ம ப்³ரும்ஹணாத் ।
ஓமித்யா க்ரியமாணத்வாதோ³ங்காரஸ ப்ரகீர்த்தித꞉ ।
ஆதி³மத்வா த³யோஹ்யர்தா² ஓமித்யஸ்ய ஶ்ருதௌஶ்ருதா꞉ ॥
ஆத்மஸம்ஹிதா ॥ 37 ॥

காரிகை சுலோகம்.

प्रणवो ह्यपरं ब्रह्म प्रणवश्च परः स्मृतः ।
अपूर्वोऽनन्तरोऽबाह्योनपरः प्रणवोऽव्ययः ॥ 38 ॥

ப்ரணவோ ஹ்யபரம் ப்³ரஹ்ம ப்ரணவஶ்ச பர꞉ ஸ்ம்ருத꞉ ।
அபூர்வோऽநந்தரோऽபா³ஹ்யோநபர꞉ ப்ரணவோऽவ்யய꞉ ॥ 38 ॥

प्रणवः हि ப்ரணவ: ஹி=பிரணவமே

अपरं ब्रह्म அபரம் ப்ரஹ்ம=அபரப்பிர்ம்ம ஸ்வரூபம்

प्रणवश्च ப்ரணவஸ்ச=பிரணவமே

परः பர:=பரப்பிர்ம்ம ஸ்வரூபமாக

स्मृतः ஸ்ம்ருத:=சொல்லப்பட்டிருக்கிறது.

प्रणवः ப்ரணவ:=பிரணவம்

अपूर्वः அபூர்வ:=பூர்வம் அதாவது காரணம் யாதொன்று மில்லாதது

अनन्तरः அநந்தர:=இதற்கு வேறாக, விஜாதியமான யாதொன்று மில்லாதபடியால் இது அநந்தரம்

अबाह्यः அபாஹ்ய:=இதற்கு வெளியில் யாதொன்று மில்லாத படியால், அபாஹியம்

अनपरं அநபரம்=இதற்கு யாதொரு காரியமு மில்லாததால் இது அநபரம்

अव्ययः அவ்யய:=நாசமில்லாதது

அ-கை :—மந்திராதிகாரிகள் பிரணவத்தை அபரப்பிரம்மரூபமாயும், மத்தியமாதிகாரிகள் பரப்பிரம்ம ரூபமாயும் தியானிக்க வேண்டியதென்று முற்பாதி சுலோகத்தால் கூறுகிறார்.

प्रणवः...स्मृतः ப்ரணவ:.. ஸ்ம்ருத: :—ஓங்காரமே அபரப்பிரம்மரூபமாயும் பரப்பிரம்ம ரூபமாயு மிருக்கிறது.

अपूर्वः...अव्ययः அபூர்வ: ...அவ்யய: :—

அ-கை :—உத்தமாதிகாரிகள் யாதொரு விசேஷமன்னியிலும், ஏகரஸமாயும் பிரத்தியக் ரூபமாயு மிருக்கிற பிரம்மமே பிரணவம் என்று அறிகிறார்கள் என்பதாய் உத்தரார்த்தத்தில் கூறுகிறார்.

மாத்திரைகளும் பாதங்களும் விடப்பட்டபின் பரமான ஆத்மா அதாவது சுத்தப்பிரம்மமே மிச்சப்படுகின்றது. (அபூர்வாதி லக்ஷணங்கள் பத உரையில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.) முன் சொன்ன விஷயத்தில் பிரமாண சுருதி :—सबाह्याभ्यन्तरोह्यजः (कठ) सैन्धवघनवत् (बृह) ஸபாஹ்யாப்யந்தரோஹ்யஜ: (கட) ஸைந்தவகநவத் (ப்ருஹ) உப்புக்கட்டிப்போல் உள்ளும் வெளியிலும் ஏக ரஸமாயிருக்கிறது என்பது கருத்து. ॥ 38 ॥

IV - 4 - வது மந்திரம்· விசிஷ்டாத்வைதம்.

அ - கை:—விசுவாதி ரூபங்களுக்கும் மூல ரூபத்துக்கும் ஒன்றுக்கொன்று அன்னியோன்னிய குணதாரதம்மியமில்லை என்று சொல்லுகிறார்.

अपर: அபர:=மூலரூப பூர்வாவதாரமான

प्रणव: ப்ரணவ:=ஹரியானவர்

ब्रह्म ப்ரஹ்ம=பூர்ணராகவும்

हि ஹி=ஸர்வேஷு பூதேஷு ஏதமேவாசக்ஷதே என்கிற இடங்களில் பிரசித்தம் என்று அர்த்தம்.

परं பரம்=ஆத்மாவின் விசுவாதி அவதாரரூபமான

प्रणव: च ப்ரணவ: ச=ஹரியும் பூர்ணமாக

स्मृत: ஸ்ம்ருத:=சொல்லப்படுகிறார். முன் ரூபமும் பின் ரூபமும் பூர்ணமாகவே யிருக்கிறதே தவிர ஒன்றும் குறைவாக இல்லை என்பது கருத்து.

பிரணவம் பூர்ணமென்பதை விவரிக்கிறார் :—

अपूर्व: அபூர்வ:=காரணமற்ற

प्रणव: ப்ரணவ:=ஹரியானவர்

अन्तर: அநந்தர:=நாசமற்றவர்

अबाह्य: அபாஹ்ய:=எங்கு மிருப்பதால் அபாஹ்ய மென்று சொல்லப்படுகிறார்.

पर: न பர: ந=பராதீனமான ஸ்திதி இராதபடியால் பரனல்ல.

अव्यय: அவ்யய:=எப்போதும் ஒரேவிதமாக இருக்கிறார். ||38||

IV - ல் 3 - வது சுலோகம். துவைதம்.

அ·கை:—விசுவாதி ரூபங்களில் ஒன்றுக்கு ஒன்றும், அவ்வரூபங்களுக்கும் மூலரூபத்துக்கும் குணதாரதம்யமில்லை என்று கூறுகிறார்.

अपरं அபரம்=மூலரூபமான

प्रणव: ப்ரணவ:=ஹரியானவர்

ब्रह्म ப்ரஹ்ம=பூர்ணம்

हि ஹி=सर्वेषु भूतेषु एतमेव ब्रह्मेत्याचक्षते ஸர்வேஷு பூதேஷு ஏதமேவ ப்ரஹ்மேத்யாசக்ஷதே முதலிய சுருதிகளால் பிரசித்தம்,

परं பரம்=பிற்பாடு உண்டான

प्रणव: ब्रह्म ப்ரணவ: ப்ரஹ்ம=விசுவாதி ரூபமான ஹரி

ब्रह्म ப்ரஹ்ம=பூர்ணமென்று

स्मृत: ஸ்ம்ருத:=பிரம்மாவால் ஸ்மரிக்கப்பட்டது அதாவது கூறப்பட்டிருக்கிறது.

முந்தின அவதாரமும் பிந்தின அவதாரமும் பூர்ணமே. ஆகையால் ஒன்றுக்கொன்று தாரதம்யமில்லை என்பது கருத்து அப்படியே नस्थानतोपि परस्योभयलिंगं सर्वत्रहि ந ஸ்தாநதோபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ரஹி (III-2-11) என்கிற ஸூத்ரத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

பூரணமென்று சொன்னதையே விவரிக்கிறார் :—

अपूर्वः அபூர்வ:=பூர்வமற்றவர். அதாவது காரணமற்றவர்

अनन्तरः அநந்தர:=நாசமற்றவர்

अबाह्यः அபாஹ்ய:=எங்கும் நிறைந்திருப்பதால் பாஹ்யமற்றவர்

अनपरः அநபர:=பராதீனமான ஸ்திதியில்லாதபடியால் அபரமற்றவர்

अव्ययः அவ்யய:=எப்போதும் ஒரே ரீதியாக இருக்கிறவர்

प्रणवः ப்ரணவ:=இப்படிப்பட்டவர் ஹரி என்று அர்த்தம்

பிரமாணம் :—

अपूर्वः कारणाभावा न्नाशाभावादनंतरः ।
पराधीनस्थित्य भावादनपर उदाहृतः ।
सर्वगत्वाद बाह्यश्च तं ज्ञात्वा प्रविमुच्यते ॥ आत्मसंहिता ॥
परत्वमपरत्वं च विष्णोरेकस्य वैयदा ।
श्रूयतेन तु सामर्थ्य भेदस्तत्रकथंचन ।
अवतारस्य पूर्वत्वात्पौर्वापर्य मुदाहृतम् ॥ ब्रह्मतर्के ॥ 38 ॥

அபூர்வ: காரணாபாவா ந்நாஶாபாவாதநந்தர: ।
பராதீநஸ்தித்யபாவாதநபர உதாஹ்ருத: ।
ஸர்வகத்வாதபாஹ்யஶ்ச தம் ஜ்ஞாத்வா ப்ரவிமுச்யதே ॥
ஆத்மஸம்ஹிதா ॥
பரத்வமபரத்வம் ச விஷ்ணோரேகஸ்ய வையதா ।
ஶ்ரூயதே ந து ஸாமர்த்ய பேதஸ்தத்ர கதஞ்சந ।
அவதாரஸ்ய பூர்வத்வாத் பௌர்வாபர்யமுதாஹ்ருதம் ॥
ப்ரஹ்மதர்கே ॥ 38 ॥

காரிகை சுலோகம்.

सर्वस्य प्रणवो ह्यादिर्मध्य मन्तस्तथैव च ।
एवं हि प्रणवं ज्ञात्वा व्यश्नुते तदनन्तरम् ॥ 39 ॥

ஸர்வஸ்ய ப்ரணவோ ஹ்யாதிர்மத்ய மந்தஸ்ததைவ ச । ஏவம் ஹி ப்ரணவம் ஜ்ஞாத்வா வ்யஶ்நுதே ததநந்தரம் ॥ 39 ॥

प्रणवः हि 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 𑌹𑌿 = பிரணவம்
सर्वस्य 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 = சமஸ்தத்துக்கும்
आदिः 𑌆𑌦𑌿𑌃 = ஆதியானது
तथैव 𑌤𑌥𑍈𑌵 = அப்படியே
मध्यं 𑌮𑌧𑍍𑌯𑌂 = மத்தியமானது
अन्तः च 𑌅𑌨𑍍𑌤𑌃 𑌚 = அந்தமும்
एवं हि 𑌏𑌵𑌂 𑌹𑌿 = இவ்விதமாக
प्रणवं 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 = பிரணவத்தை
ज्ञात्वा 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 = தெரிந்துகொண்டு
अनन्तरं 𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 = பிறகு
तत् 𑌤𑌤𑍍 = அந்த பிரம்ம ஸ்வரூபத்தை
व्यश्नुते 𑌵𑍍𑌯𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 = அடைகிறான்.

ச-பா :— துரியத்துக்குக் கூறிய விசேஷணங்களுக்குக் காரணம் சொல்லுகிறார். இந்திரஜால யானை, ரஜ்ஜுசர்ப்பம், கானல்ஜலம் ஸ்வப்நம் முதலியவைகளுக்கு சிருஷ்டி ஸ்திதி நாசங்கள், அந்த இந்திரஜால புருஷன், இரஜ்ஜு முதலியவைகளிலிருப்பதுபோல் ஆகாசாதி சமஸ்த பிரபஞ்சத்தின் சிருஷ்டி ஸ்திதி நாசங்களும் பிரணவ ஸ்வரூப ஆத்மாவினிடத்தில் இருக்கின்றன. இப்படி ஆத்மாவை இந்திரஜால புருஷனாக அறிகிறவன் தக்ஷணமே பிரம்மஸ்வரூபத்தை அடைந்து விடுகிறான். ॥ 39 ॥

IV - 5 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்

प्रणवः 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 = ஹரியானவர்
सर्वस्य 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 = சகலத்துக்கும்
आदिः 𑌆𑌦𑌿𑌃 = காரணம்
मध्यं 𑌮𑌧𑍍𑌯𑌂 = ஸ்திதிகர்த்தா
तथा अन्तमेवच 𑌤𑌥𑌾 𑌅𑌨𑍍𑌤𑌮𑍇𑌵 𑌚 = அவரே நாசகர்த்தா இப்படி அறிந்தவனுக்குப் பலன் யாதெனின் :—

एवं 𑌏𑌵𑌂 = இந்தப்பிரகாரமாக
प्रणवं 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 = ஹரியை
ज्ञात्वा 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 = அறிந்து
अनन्तरं 𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 = பிராரப்தத்தை அனுபவித்ததற்குப் பிறகு
तत् 𑌤𑌤𑍍 = அந்த பிரம்மத்தை
व्यश्नुते 𑌵𑍍𑌯𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 = நன்றாக அடைகிறான். எப்போதும் பகவத்சமீபத்திலிருந்தாலும் வைகுண்டாதி ஸ்தானத்தை அடைகிறபடியால்பிரம்மத்தை நன்றாக அடைகிறான் என்று கூறப்பட்டது.39

IV - ல் 4 - வது சுலோகம்.

सर्वस्य ஸவஸ்ய=சகலத்துக்கும்

प्रणवः ப்ரணவः=ஹரியானவர்

आदिः ஆதி:=காரணம்

मध्यं மத்யம்=ஸ்திதியை கொடுக்கிறவர்

अन्तः அந்த:=நாசம் செய்கிறவர்

एवं ஏவம்=இப்படி

प्रणवं ப்ரணவம்=ஹரியை

ज्ञात्वा ஜ்ஞாத்வா=அறிந்து

अनन्तरं அநந்தரம்=பிராரப்த போகத்திற்குப் பிறகு

तत् தத்=பிரம்மத்தை

व्यश्नुते வ்யஶ்நுதே=விசேஷமாக அறிகிறான் பிரம்ம ப்ராப்தி எப்போதுமிருந்தாலும் ஸ்தான விசேஷத்தைக் காட்டும் பொருட்டு வி என்று கூறப்பட்டது. ‖ 39 ‖

காரிகை சுலோகம்.

प्रणवं हीश्वरं विद्यात्सर्वस्य हृदि संस्थितम् ।
सर्वव्यापिनमोंकारं मत्वा धीरो न शोचति ‖ 40 ‖

ப்ரணவம் ஹீஶ்வரம் வித்யாத்ஸர்வஸ்ய ஹ்ருதி ஸம்ஸ்திதம் ।
ஸர்வவ்யாபிநமோங்காரம் மத்வா தீரோ ந ஶோசதி ‖ 40 ‖

सर्वस्य ஸர்வஸ்ய=சமஸ்த பிராணிகளின்

हृदि ஹ்ருதி=ஹிருதயத்தில்

संस्थितं ஸம்ஸ்திதம்=இருக்கப்பட்ட

ईश्वरं ஈஶ்வரம்=ஈசுவரனை

प्रणवं हि ப்ரணவம் ஹி=பிரணவத்தை

विद्यात् வித்யாத்=அறியவேண்டியது.

धीरः தீர:=ஞானி

सर्वव्यापिनं ஸர்வவ்யாபிநம் = எல்லாவற்றையும் வியாபித்திருக்கும்

ओंकारं ஓங்காரம்=பிரணவத்தை

मत्वा மத்வா=தெரிந்துகொண்டு

न शोचति ந ஶோசதி=துக்கிக்கிறதில்லை.

ச-பா:—प्रणवं...संस्थितं ப்ரணவம்...ஸம்ஸ்திதம்=சகல பிராணிகளின் ஸ்மரணம் ஞானம் இவைகளுக்கு ஸ்தானமான ஹிருதயத்திலிருக்கப்பட்ட ஈசுவரனே பிரணவம் என்று அறியவேண்டியது.

सर्व...शोचाति ஸர்வ...ஶோசதி=ஆகாசம் சர்வ வியாபகமாயி ருப்பதுபோல் பிரணவரூப ஆத்மாவும் சர்வ வியாபி என்று ஞானி தெரிந்துகொண்டு துக்க காரணமான அஞ்ஞானமில்லாதபடியால் ஞானி சோகத்தை அடைகிறதில்லை. **तरति शोकमात्मवित्** தரதி ஶோகமாத்மவித் ஆத்மஞானி சம்சார துக்கசாகரத்தைத் தாண்டு கிறான் என்று சுருதி கூறுகிறது. ॥ 40 ॥

IV - 6 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்

அ - கை :—உபாசனையில் ஸ்தான விசேஷத்தை விதித்து ஹரியின் வேறு மகிமையைக் கூறுகிறார்.

ईश्वरं ஈஶ்வரம்=சகலத்துக்கும் நியாமகனை
प्रणवं ப்ரணவம்=ஹரியை
सर्वस्य ஸர்வஸ்ய=சகலபிராணிகளுடைய
हृदि ஹ்ருதி=ஹிருதயத்தில்
संस्थितं ஸம்ஸ்திதம்=இருக்கிறதாக
विद्यात् வித்யாத்=உபாசிக்கவேண்டும்.

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुनातिष्ठति - तमेवशरणं गच्छेत् ஈஶ்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுந திஷ்டதி - தமேவஶரணம் கச்சேத் என்கிற ஸ்மிருதிகள் இதற்குப் பிரமாணம் இப்படி.

सर्वव्यापिनं ஸர்வவ்யாபிநம்=எங்கும் வியாபித்திருக்கிற
ओंकारं ஓங்காரம்=ஓங்காரத்தால் கூறப்படும் விஷ்ணுவை
मत्वा மத்வா=உபாசித்து
धीरः தீர:=ஞானியானவன்

नशोचति நஶோசதி=துக்கமடைகிறதில்லை. அபஹத பாப்மத்துவாதி குணங்களோடு கூடினவனாக இருந்துகொண்டு துக்கத்தினின்றும் விடுபடுகிறான் என்பது கருத்து ॥ 40 ॥

IV - ல் 5 - வது சுலோகம்.

அ-கை :—ஹரியின் (பிரணவத்தின்) வேறு மஹிமையைக்கூறு கிறார்.

ईश्वरं ஈஶ்வரம் = எல்லாவற்றையும் நியமனம் செய்கிறவர் என்று அர்த்தம்
ओंकारं ஓங்காரம்=ஓம் என்று கூறப்பட்டவனாக
मत्वा மத்வா=தியானம் பண்ணி
नशोचति நஶோசதி=துக்கப்படமாட்டான் அதாவது முக்தனாக ஆய்விடுகிறான் என்பது கருத்து.

காரிகை சுலோகம்.

अमात्रोऽनन्तमात्रश्च द्वैतस्योपशमः शिवः ।
ओंकारो विदितो येन स मुनिर्नेतरो जनः ॥ ४१ ॥

॥ इति माण्डूक्योपनिषदर्थाविष्करणपरायाम्
गौडपादीयकारिकायां प्रथममागमप्रकरणम् ॥
॥ ओं तत्सत् ॥

அமாத்ரோऽநந்தமாத்ரஶ்ச த்வைதஸ்யோபஶம: ஶிவ: । ஓம்
காரோ விதி³தோ யேந ஸ முநிர்நேதரோ ஜந: ॥ 41 ॥

இதி மாண்டூ³க்யோபநிஷத³ர்தா²விஷ்கரண பராயாம்
கௌ³ட³பாதீ³யகாரிகாயாம் ப்ரத²மமாக³ம ப்ரகரணம்

॥ ஓம் தத்ஸத் ॥

अमात्रः அமாத்ர:=அகாராதி மாத்திரைகளில்லாமலும்
अनन्तमात्रश्च அநந்தமாத்ரஶ்ச = முடிவில்லாத பரிமாணமுடைய
வும்
द्वैतस्य த்வைதஸ்ய=துவைதத்தின்
उपशमः உபஶம:=நாசகரமாயும்
शिवः ஶிவ:=கல்லியாணமயமாயிருக்கிற
ओंकारः ஓங்கார:=பிரணவம்
येन யேந=எவனால்
विदितः விதி³த:=தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறதோ
सः ஸ:=அவன்
मुनिः முநி:=முனி.
इतर: இதர:=வேறு
जनः ஜந:=மனிதன்
न ந= இல்லை,

ச-பா:—अनन्तमात्रः அநந்தமாத்ர:= மாத்திரை என்றால் அளவு முடிவில்லாத அளவுள்ளது. அதாவது அளவில் அடங்காதது பிரம்மம் என்பது கருத்து. இது இவ்வளவு என்று அளவிட முடியாது என்று அர்த்தம்.

सर्वस्योपशमः शिवः ஸர்வஸ்யோபஶம: ஶிவ:=சகல துவைத பிரபஞ்சமும் நீங்கிப்போவதால் தான் சுகரூபம்.

ओंकारः...जनः ஓங்கார:...ஜந:=ஓங்காரத்தை முன் சொன்னபடி எவன் அறிகிறானோ அவன் பரமார்த்த தத்துவத்தை தியானம் செய்கிறதினால் முனியாகிறான். சாஸ்திரத்தை அறிந்திருந்தாலும் மற்றவன் முனியல்ல. ॥41॥

முதலாவதான ஆகமபிரகிரணத்தின் அத்வைத பாஷ்ய மொழி பெயர்ப்பு முற்றிற்று.

IV - 7 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்

அ - கை :—இந்தப் பிரகாரம் மேற்கூறிய சமஸ்தவியஸ்த பிரணவத்தால் கூறப்படும் பகவானுடைய உபாசனையை மறுபடியும் உபதேசித்து அந்த உபாசகனையை ஸ்தோத்திரஞ்செய்து கிரந்தத்தை முடிக்கிறார்.

अमात्र: அமாத்ர: = அம்சங்க ளற்றவன் மூல ரூபமாக இருக்கிறான் என்பது கருத்து.

अनन्तमात्र: அநந்தமாத்ர: = ஜகத்வியாபாரத்தைப் பண்ணுவதற்காக இச்சைப்படி அநேக ரூபங்களை உடையவர். इच्छा गृहीताभिमतोरुदेह இச்சா க்ருஹீதாபிமதோருதேஹ என்கிற ஸ்மிருதி இதற்குப் பிரமாணம்.

द्वैतस्य उपशम: த்வைதஸ்ய உபஶம: = தன்னை உபாசிக்கிறவர்களுக்கு சகல அநிஷ்டங்களையும் நிவிர்த்திக்கிறவர்.

शिव: ஶிவ: = துக்கமற்ற ஸ்வரூபமாயுமிருக்கிற
ओंकार: ஓங்கார: = ஓங்காரத்தால் கூறப்படும் விஷ்ணுவானவர்
येन யேந = எவரால்
विदित: விதித: = இப்படிப்பட்டவராக அறியப்படுகிறாரோ
स: ஸ: = அவனே

मुनि: முநி: = மனன சீலன்

नेतर: நேதர: = மற்றவன் முனியல்ல. ஆனால்

जन: ஜந: = ஜநநமரணாதிகளுடன் கூடினவன் என்று அர்த்தம். மனனசீலன் என்பதினால் விடுபடுகிறான் என்பது கருத்து.

स मुनि: ஸ முநி: என்றும் नेतर: நேதர: என்றும் இரண்டுதடவை சொன்னதானது மேற்கூறிய சகல பிரமேயத்தை நிச்சயிப்பதற்காகவும் உபநிஷத்தின் சமாப்தியைக் கூறுவதற்காகவும் ஏற்பட்டது.

கூர நாராயணசுவாமிகள் ஏற்படுத்தின விசிஷ்டாத்வைத பாஷ்யத்தின்

தமிழ் மொழிபெயர்ப்பு

முற்றிற்று.

IV - ல் 6 - வது சுலோகம்.

இந்தப்படி மேற்சொன்ன சமஸ்தவியஸ்த பிரணவ வாச்சிய ஞன பகவானுடைய உபாசனையை அனுவதித்து பகவானை அறிந்த ஞானியை ஸ்துதித்து கிரந்தத்தை முடிக்கிறார்.

अमात्रः அமாத்ர:=அம்சமற்றவராயும்

अनन्तमात्रः அநந்தமாத்ர: = விசுவாதிகளான அநேக அம்சங்களுள்ளவராயும்

द्वैतस्य उपशमः த்வைதஸ்ய உபஶம:=சர்வ அநிஷ்டங்களையும் நிவிர்த்திக்கிறவராயும்

शिवः ஶிவ:=துக்கமன்றியிலும் சுகரூபமாயிருக்கிற

ओंकारः ஓங்கார:=ஓங்காரமென்று சொல்லப்பட்ட

येन யேந=எவனால் ஹரியானவர்

विदितः விதித:=அறியப்படுகிறரோ

सः ஸ:=அவன்

मुनिः முநி:=எப்போதும் மனனம் செய்கிறவன்

इतरःन இதர: ந=மற்றவன் அப்படிப்பட்டவனல்ல.

समुनिः नेतरोजनः ஸமுநி: நேதரோஜந: என்று இரண்டு தடவை சொன்னதானது இதிற் சொன்ன எல்லா பிரமேயங்களும் நிச்சயமென்று காட்டும் பொருட்டேயாம்.

பாஷ்யகாருடைய மங்களம்:—

एकोपि निर्विशेषोपि चतुर्धा व्यवहारभाक् ।
यस्तं वंदे चिदात्मानं विष्णुं विश्वादिरूपिणं ॥

ஏகோபி நிர்விஶேஷோபி சதுர்தா வ்யவஹாரபாக் ।
யஸ்தம் வந்தே சிதாத்மாநம் விஷ்ணும் விஶ்வாதிரூபிணம் ॥

கண்டார்த்த காரருடைய மங்களம்:—

प्रणवप्रतिपाद्याय चतुर्मूर्त्तिस्वरूपिणे ।
नमः श्रीप्राणनाथाय भक्ताभीष्टप्रदायिने ॥

ப்ரணவப்ரதிபாத்யாய சதுர்மூர்த்திஸ்வரூபிணே ।
நம: ஶ்ரீப்ராணநாதாய பக்தாபீஷ்டப்ரதாயிநே ॥

மாண்டூக்கிய உபநிஷத்
அத்வைத பாஷ்யத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு
முற்றிற்று.

अथ गौडपादीयकारिकायां वैतथ्याख्यं
द्वितीयप्रकरणं ॥

हरिः ओं ॥ वैतथ्यं सर्वभावानां स्वप्न आहुर्मनीषिणः ।
अन्तः स्थानात्तु भावानां संवृतत्वेन हेतुना ॥ 42 ॥

அத கௌடபாதீய காரிகாயா வைதத்யாக்யம்
த்விதீயம் ப்ரகரணம் ॥

ஹரி: ஓம் வைதத்யம் ஸர்வபாவாநாம் ஸ்வப்ந ஆஹுர்மநீஷிண: । அந்த: ஸ்தாநாத்து பாவாநாம் ஸம்வ்ருதத்வேந ஹேதுநா ॥ 42 ॥

मनीषिणः மநீஷிண:= பிரமாணத்தில் குசலர்களான பண்டிதர்கள்

भावानां பாவாநாம்=பதார்த்தங்கள்

अन्तःस्थानात् அந்த:ஸ்தாநாத்=சரீரத்திற்குள் இருப்பதினாலும்

संवृतत्वेन हेतुना ஸம்வ்ருதத்வேந ஹேதுநா= மறைபட்டிருக்கும் காரணத்தினாலும்

स्वप्ने ஸ்வப்நே=ஸ்வப்நத்தில்

सर्वभावानां ஸர்வபாவாநாம்=வெளியேயுள்ள கடாதிகள் உள்ளேயிருக்கும் சுகாதிகள் இவைகளின்

वैतथ्यं வைதத்யம்=அசத்தியத்தன்மையை

आहुः ஆஹு:= சொல்லுகிறார்கள்

சு-பா:—அ-கை :—ज्ञातेद्वैतंनविद्यते ஜ்ஞாதே த்வைதம் நவித்யதே அதாவது ஞானமுண்டானபின் துவைதம் இருக்கிறதில்லை என்று முதல் பிரகரணத்தில் 18 வது சுலோகத்தில் एकमेवाद्वितीयंब्रह्म ஏகமேவாத்விதீயம்ப்ரஹ்ம यत्राहिद्वैतमिवभवति யத்ரஹித்வைதமிவ பவதி முதலிய சுருதி ஆதாரங்களின்பேரில் சொன்னதினால் துவைதம் மித்தை என்று சொன்னதாக ஆகிறது. இந்த மித்தியாத்வத்தை யுக்தியாலும் நிச்சயிக்க முடியும் என்று இந்த இரண்டாவது பிரகரணம் ஆரம்பிக்கப்படுகிறது. பிரபஞ்சம் பொய் யென்று காண்பிக்கும் பொருட்டு ஸ்வப்ந திருஷ்டாந்தத்தைக் கூறுவதற்காக அதுவும் பொய் என்று நிரூபிக்கிறார்.

वैतथ्यं...मनीषिणः வைதத்யம்... மநீஷிண:=ஸ்வப்நத்தில் அநுபவிக்கப்படும் சமஸ்தமான கடாதி பாஹ்ய பதார்த்தங்களும் உள்ளே யிருக்கும் சுகாதி பதார்த்தங்களும் அசத்தியம் என்று ஞானிகள் சொல்லுகிறார்கள். ஏனெனின் ஸ்வப்ந காலத்தில் காணப்

படும் பர்வதம் யானை முதலிய பதார்த்தங்கள் சரீரத்துக்குள் தோன்றுகின்றனவே தவிர சரீரத்துக்கு வெளியே தோன்றுகிறதில்லை. ஆகையால் பர்வதாதிகள் பொய்.

अन्तः...हेतुना ... :—பிரைக்குள்ளிருக்கும் கடாதி பதார்த்தம் பொய்யாக இராததுபோல் ஆவரணத்துக்குள்ளிருக்கிற காரணத்தால் மட்டும் பொய் என்று எப்படிச் சொல்லலாமெனின் உள்ளே மறைபட்டிருக்கிற படியால் என்று சொல்லுகிறார். தேகத்திலேயே பர்வதாதிகளில்லை என்பது வியக்தமாயிருக்க, தேஹத்துக்குள்ளிருக்கும் அதிஸூக்ஷ்மமான நாடிகளில் பர்வதாதிகள் எப்படி இருக்கக்கூடும். ஆகையால் அவைகளுக்கு வேண்டிய தேசமில்லாதபடியால் ஸ்வப்நத்தில் காணப்படும். பர்வதாதிகள் ரச்சு சர்ப்பம்போல் பொய்யே. ||42||

आदीर्घत्वाच्च कालस्य गत्वा देशान्नपश्यति ।
प्रतिबुद्धश्चवैसर्व स्तस्मिन्देशे न विद्यते ॥ 43 ॥

ஆதீர்க⁴த்வாச்ச காலஸ்ய க³த்வா தே³ஶாந்நபஶ்யதி ।
ப்ரதிபு³த்³த⁴ஶ்சவை ஸர்வஸ்தஸ்மிந்தே³ஶே ந வித்³யதே ॥43॥

कालस्य காலஸ்ய=காலத்தின்
अदीर्घत्वाच्च அதீர்க⁴த்வாச்ச=ஸ்வல்பத்தினாலும்
गत्वा க³த்வா=வெளியே போய்
देशान् தே³ஶாந்=பிரதேசங்களை
नपश्यति நபஶ்யதி=பார்க்கிறதில்லை
प्रबुद्धः च वै ப்ரபு³த்³த⁴: ச வை=விழித்துக்கொண்ட
सर्वः ஸர்வ:=சமஸ்தமும்
तास्मिन् தஸ்மிந்=ஸ்வப்நத்தில் கண்ட அந்த
देशे தே³ஶே=இடத்தில்
नविद्यते நவித்³யதே=இருக்கிறதில்லை

अदीर्घत्वात् ...पश्याति அதீர்க⁴த்வாத்...பஶ்யதி :—ஸ்வப்நத்தில் பார்த்த பதார்த்தங்கள் சரீரத்துக்குள் ஸ்வல்ப இடத்தில் காணப்படுவதாகச் சொல்லக்கூடாது. ஏனெனின் கிழக்கில் தூங்குகிறவன் வடதேசத்தில் ஸ்வப்நத்தைப் பார்க்கிறவன் போல் காணப்படுகிறான். இந்த சங்கை சரியன்று. தேக மிருக்கு மிடத்துக்கு வெகு தூரத்திலிருப்பதாயும் ஒருமாத காலத்தில் தான் போய் சேரக்கூடாததாயு மிருக்கிற தேசத்தில் ஒருவன் தூங்கின வுடன் ஸ்வப்நம் காணுவது போல் காணப்படுகிறான். அவ்விடத்துக்குப் போகவாவது அவ்விடமிருந்து வரவாவது எவ்வளவு காலம் வேண்டியதோ அதில் கொஞ்ச பாகங்கூட அவன் தூங்க ஆரம்பித்தது முதல் ஸ்வப்நம் காணும் வரையில் காணப்படவில்லை. ஆன

தால் அவன் தேகத்தைவிட்டு வெளியேபோய் பதார்த்தங்களைப் பார்த்ததாகச் சொல்லக்கூடாது.

प्रतिबुद्धश्च... ப்ரதிபு³த்³த⁴ஸ்²ச = மேலும் விழித்துக்கொண்டவன் ஸ்வப்நத்திற்கண்ட தேசத்திலிருக்கிறதில்லை. அப்படி அவன் ஸ்வப்நத்தில் தேசாந்திரம் போயிருக்கும் பக்ஷத்தில் எந்த இடத்தில் ஸ்வப்நத்தைப் பார்க்கிறானோ அந்த இடத்திலேயே தான் விழித்துக்கொள்ள வேண்டும். அனுபவம் அப்படிக் காணப்படவில்லை மேலும் இராத்திரியில் தூங்குகிறவன் ஸ்வப்நத்தில் பகல்காலத்தில் போல் பதார்த்தங்களைப் பார்க்கிறான். அநேகம் பேர்களை சந்திக்கிறான். இதெல்லாம் வாஸ்தவமாயிருந்தால் அவர்களும் இவனைப் பார்த்திருக்கவேண்டும். அனுபவத்தில் அப்படி இல்லை. ஏனெனில் பார்த்திருக்கும் பக்ஷத்தில் உன்னை நாம் அங்கே பார்த்தோம் என்று சொல்லுவார்கள். இப்படி இல்லை. ஆகையால் தூங்குகிறவன் ஸ்வப்நத்தில் வேறு இடத்துக்குப் போகிறதில்லை. ॥ 43 ॥

अभावश्च रथादीनां श्रूयते न्यायपूर्वकम् ।
वैतथ्यं तेन वै प्राप्तं स्वप्न आहुः प्रकाशितम् ॥ 44 ॥

அபா⁴வஸ்²ச ரதா²தீ³நாம் ஸ்²ரூயதே ந்யாயபூர்வகம் । வைதத்²யம் தேந வை ப்ராப்தம் ஸ்வப்ந ஆஹு꞉ ப்ரகாஸி²தம் ॥44॥

रथादीनां ரதா²தீ³நாம்=இரதம் முதலியவைகளின்

अभावश्च அபா⁴வஸ்²ச=அபாவமும் (அறியப்பட்டவஸ்து இல்லாவிட்டால் அறிவும் இருக்கமாட்டாது என்பதைக்காட்ட च சப்தம் உபயோகம்.)

न्यायपूर्वकं ந்யாயபூர்வகம்=யுக்தி பூர்வமாக

श्रूयते ஸ்²ரூயதே=கேழ்க்கப்பட்டிருக்கிறது அதாவது சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறது

तेन தேந=சரீரத்துக்குள்ளிருக்கும் நாடியாகிற சூட்சுமஸ்தானத்தில் சம்பவிக்கும் காரணத்தால்

प्राप्तं ப்ராப்தம் = அடையப்பட்ட

वैतथ्यं வைதத்²யம்=பொய்யாக இருப்பதானது

स्वप्ने ஸ்வப்நே=ஸ்வப்நத்தில்

(**श्रुत्या** ஸ்²ருத்யா = சுருதியால்)

प्रकाशितं ப்ரகாஸி²தம் = ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுகிறதென்று

(**ब्रह्मविदः** ப்³ரஹ்மவித³꞉= பிரம்மவித்துக்களான ஞானிகள்)

आहुः ஆஹு: = சொல்லுகிறார்கள்

சபா: = ஸ்வப்நத்தில் பார்க்கப்படும் பதார்த்தங்கள் மித்தை என்பதற்கு வேறுஹேது சொல்லுகிறார் नतत्रस्था: நதத்ரஸ்தா:— அவ்விடத்தில் இரதம்இல்லை, குதிரைகள் இல்லைமுதலிய (बृहद्यू ஆ IV3-10) ஆத்மாவின் ஸ்வபிரகாசத்தைபிரதிபாதிக்கும் வசனங்களால் சரீரத்துக்குள் இருக்கும் சூட்சுமமான நாடிஸ்தானங்களில் பர்வதாதிகள் இருக்கமாட்டாது என்னும் யுக்தியை அநுசரித்து ஸ்வப்நமித்தியத்வம் ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது என்று ஞானிகள் சொல்லுகிறார்கள் ॥ 44 ॥

अन्तस्थानात्तु भेदानां तस्माज्जागरिते स्मृतम् ।
यथा तत्र तथा स्वप्ने संवृतत्वेन भिद्यते ॥ 45 ॥

அந்தஸ்தாநாத்து பேதாநாம் தஸ்மாஜ்ஜாகரிதே ஸ்ம்ருதம் ।
யதாதத்ர ததாஸ்வப்நே ஸம்வ்ருதத்வேந பித்யதே ॥ 45 ॥

यथा யதா = எப்படி
तत्र தத்ர = அந்த
स्वप्ने ஸ்வப்நே = ஸ்வப்நத்தில்
(दृश्यानां த்ருஸ்யாநாம் = பார்க்கப்பட்ட)
(भावानाम् பாவாநாம் = பதார்த்தங்களின்)
(वैतथ्यं வைதத்யம் = மித்தையோ)
तथा ததா = அப்படி
(जागरितेऽपि ஜாகரிதேऽபி = ஜாக்கிரத்திலும்)
(दृश्यत्वं த்ருஸ்யத்வம் = பார்க்கப்படும் தன்மை)
(भवति பவதி = இருக்கிறது.)
तस्मात् தஸ்மாத் = ஆகையால்
जागरितेपि ஜாகரிதேபி = ஜாக்கிரதத்திலும்
(वैतथ्यं வைதத்யம் = மித்தை)
स्मृतं ஸ்ம்ருதம் = அறியப்பட்டிருக்கிறது (வேதவாக்கியம்)
तु து = ஆனால்
भेदानां பேதாநாம் = ஸ்வப்நத்தில் ஜாக்கிறத்பதார்த்தங்கள்
अन्तस्थानात् அந்தஸ்தாநாத் = சரீரத்துக்குள் இருப்பதாலும்
संवृतत्वेन (च) ஸம்வ்ருதத்வேந (ச) = நாடிகளில் அடங்கியிருப்பதாலும்
भिद्यते பித்யதே = பேதப்படுகின்றன.

स्वप्नजागरितस्थाने ह्येकमाहु र्मनीषिणः ।
भेदानां हि समत्वेन प्रसिद्धेनैव हेतुना ॥ 46 ॥

𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌜𑌾𑌗𑌰𑌿𑌤𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌹𑍍𑌯𑍇𑌕𑌮𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃 ।
𑌭𑍇𑌦𑌾𑌨𑌾𑌂𑌹𑌿 𑌸𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌨𑍈𑌵 𑌹𑍇𑌤𑍁𑌨𑌾॥46

प्रसिद्धेन 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌨=பிரசித்தமான

हेतुना 𑌹𑍇𑌤𑍁𑌨𑌾=காரணத்திஞலே

भेदानां हि 𑌭𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌹𑌿=ஜாக்கிரத்ஸ்வப்ந பதார்த்தங்கள்

समत्वेन 𑌸𑌮𑌤𑍍𑌵𑍇𑌨=சமமாயிருப்பதால்

मनीषिणः 𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃=ஞானிகள் மனன சீலர்கள்

स्वप्नजागरितस्थाने 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌜𑌾𑌗𑌰𑌿𑌤𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 =ஸ்வப்ந ஜாக்கிரத்துக்களை

एकं हि 𑌏𑌕𑌂 𑌹𑌿=ஒன்ருகவே

आहुः 𑌆𑌹𑍁𑌃=சொல்லுகிருர்கள்

சபா:—பேதங்களான ஜாக்கிறத் ஸ்வப்நபதார்த்தங்கள் கிராஹ்யங்களான விஷயங்களாயும் கிராஹகங்களான இந்திரியங்களாயுமிருப்பதால் பார்க்கப்படுகின்றன என்னும் காரணத்தால் சமானமாயிருக்கின்றன. ஆகையால் விவேகிகள் இவ்விரண்டையும் ஒன்ருகச்சொல்லுகிருர்கள். முந்தின பிரமாணத்தால் கிடைத்ததையே இந்த சுலோகம் சொல்லுகிறது ॥ 46

आदावन्तेचयन्नास्ति वर्तमानेऽपि तत्तथा ।
वितथैः सदृशाः सन्तोऽवितथा इव लक्षिताः ॥ 47 ॥
𑌆𑌦𑌾𑌵𑌨𑍍𑌤𑍇𑌚 𑌯𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍇𑌽𑌪𑌿 𑌤𑌤𑍍𑌤𑌥𑌾 ।
𑌵𑌿𑌤𑌥𑍈𑌃 𑌸𑌦𑍃𑌶𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑍋𑌽𑌵𑌿𑌤𑌥𑌾 𑌇𑌵 𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃॥ 47 ॥

यत् 𑌯𑌤𑍍=எந்த வஸ்து

आदौ 𑌆𑌦𑍌=ஆதியிலும்

अन्तेच 𑌅𑌨𑍍𑌤𑍇𑌚=கடைசியிலும்

नास्ति 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 = இல்லையோ

तत् 𑌤𑌤𑍍 = அந்த வஸ்து

वर्तमानेपि 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍇𑌽𑌪𑌿 = மத்தியிலும்

तथा 𑌤𑌥𑌾=அப்படியே இல்லை

(जागृद्दश्याः भेदाः 𑌜𑌾𑌗𑍃𑌦𑍍𑌦𑍃𑌶𑍍𑌯𑌾𑌃𑌭𑍇𑌦𑌾𑌃=ஜாக்கிரதத்தில் காணப்படும் வெவ்வேறு பதார்த்தங்கள்)

वितथैः 𑌵𑌿𑌤𑌥𑍈𑌃 = மித்தையான கானல் ஜலம் போன்றவைகளுக்கு

सदृशाःसन्तः 𑌸𑌦𑍃𑌶𑌾𑌃𑌸𑌨𑍍𑌤𑌃 =சமானமாயிருக்கின்றன

अवितथाः इव 𑌅𑌵𑌿𑌤𑌥𑌾𑌃𑌇𑌵=சத்தியமானவைகள் போல்

लक्षिताः 𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃=பார்க்கப்படுகின்றன

ச-பா :—ஜாக்கிரதத்தில் காணப்படும் பதார்த்தங்கள் மித்தை யென்பதற்கு வேறு அனுமானத்தையும் காண்பிக்கிறார். எது ஆதியிலும் அந்தத்திலும் இல்லையோ அது மத்தியிலுமில்லை. கானல் ஜலம் போன்ற வஸ்துக்கள் ஆதியிலுமில்லை அந்தத்திலுமில்லை என்பது ஜகத் பிரசித்தம். இதுபோல் ஜாக்கிரத்தில் பலவிதங்களாய்க் காணப்படும் பதார்த்தங்கள் ஆதியிலும் அந்தத்திலுமில்லாதபடியாலும் கானல் ஜலம்போன்ற மித்தியா பதார்த்தங்களுக்குச் சமானமாயிருப்பதாலும் பொய்யாகவே இருக்கின்றன. இப்படியிருந்தும் அஞ்ஞானிகளுக்கு அவைகள் சத்தியம்போல் காணப்படுகின்றன. ॥ 47 ॥

सप्रयोजनता तेषां स्वप्ने विप्रतिपद्यते ।
तस्मादाद्यन्तवत्वेन मिथ्यैव खलु ते स्मृताः ॥ 48 ॥

ஸப்ரயோஜநதா தேஷாம் ஸ்வப்நே விப்ரதிபத்யதே । தஸ்மாதாத்யந்தவத்வேந மித்யைவ கலு தே ஸ்ம்ருதா: ॥ 48 ॥

तेषां தேஷாம்=அன்னபானாதிகளின்

सप्रयोजनता ஸப்ரயோஜநதா=பிரயோஜனத்துடன் கூடியிருக்குகை

स्वप्ने ஸ்வப்நே=ஸ்வப்னத்தில்

विप्रतिपद्यते விப்ரதிபத்யதே=விருத்தப்படுகிறது

तस्मात् தஸ்மாத்=ஆகையால்

आद्यन्तवत्वेन ஆத்யந்தவத்வேந=ஆதி அந்த சஹிதமாயிருப்பதால்

ते தே=ஜாக்கிறத் பதார்த்தங்கள்

मिथ्यैव மித்யைவ=மித்தையாகவே

स्मृताः ஸ்ம்ருதா:=பாவிக்கப்பட்டிருக்கின்றன

खलु கலு=நிச்சயம்.

ச-பா:—ஸ்வப்னத்தில் பார்க்கப்பட்ட பதார்த்தங்கள்போல் ஜாக்கிரத்தில் பார்க்கப்பட்டவைகளும் மித்தை யென்று சொன்னது சரியன்று. ஏனெனில் ஜாக்கிரத்தில் பார்க்கப்பட்ட அன்னம், ஜலம், வாஹனம் முதலியவை பசி தாபம் முதலியவை நிவிர்த்தி செய்கின்றன; போகவராசாதகங்களா யிருக்கின்றன. ஸ்வப்னத்தில் பார்க்கப்பட்ட அன்ன பானாதிகளோ யாதொரு பிரயோஜனத்துடனும் கூடியிருக்கவில்லை. ஆகையால் ஸ்வப்ன பதார்த்தங்கள் போல் ஜாக்கிரத் பதார்த்தங்களும் கற்பிதங்கள் என்று சொல்லுவது சரியன்று. இப்படி பூர்வபக்ஷி சொல்வதுபிசகு. ஏனெனில் ஜாக்கிரதத்தில் திருப்தி அடையும் வரையில் போஜனம் செய்து பானம் பண்ணியிருந்தாலும் ஸ்வப்னத்தில் பசிதாகங்களால் பீடிக்

கப்பட்டவனாக நினைக்கிறான். அப்படியே ஸ்வப்நத்தில் திருப்தி அடைந்திருந்தாலும விழித்துக்கொண்டவுடன் இவைகளால் பீடிக்கப்பட்டவனாக காணப்படுகிறான். ஆகையால் ஜாக்கிரத் பதார்த்தங்கள் ஸ்வப்நத்தில் விபரீதங்களாகக் காணப்படுகின்றன. ஆகையால் ஸ்வப்ந பதார்த்தங்கள் போல் ஜாக்கிறத் பதார்த்தங்களும் மித்தை என்று சொன்னது சரியே. ஆதி அந்தத்துடன் கூடியிருப்பது ஜக்கிர ஸ்வப்ந இரண்டின் பதார்த்தங்களுக்கும் சமானமாயிருப்பதால் ஜாக்கிரத் பதார்த்தங்கள் மித்தையே நிச்சயம் சந்தேகமில்லை. ॥ 48 ॥

अपूर्वं स्थानिधर्मो हि यथास्वर्गनिवासिनाम् ।
तानयं प्रेक्षतेगत्वा यथैवेह सुशिक्षितः ॥ 49 ॥
அபூர்வம் ஸ்தாநிதர்மோ ஹி யதா ஸ்வர்க்கநிவாஸிநாம்।
தாநயம் ப்ரேக்ஷதேகத்வா யதைவேஹ ஸுஶிக்ஷித:॥ 49 ॥

(स्वप्ने ஸ்வப்நே=ஸ்வப்நத்தில்)

(दृष्टं த்ருஷ்டம்=பார்க்கப்பட்ட)

अपूर्वं அபூர்வம்=அபூர்வ வஸ்து (ஜாக்கிரத்தில் பார்க்கப்படாதது.)

यथा யதா=எப்படி

स्वर्गनिवासिनां ஸ்வர்க்கநிவாஸிநாம்=ஸ்வர்க்கத்தில் வஸிக்கும் இந்திராதிகளின் ஸஹஸ்ராக்ஷம் முதலிய அபூர்வமோ அப்படி

स्थानिधर्मोहि ஸ்தாநிதர்மோஹி=ஸ்வப்ந திருஷ்டாவின் தர்மம்

इह एव இஹஏவ=இந்த லோகத்தில்தானே

सुशिक्षित: ஸுஶிக்ஷித:=நன்றாக சிக்ஷிக்கப்பட்டவன்

यथा யதா= எப்படியோ

(तथा ததா=அப்படி)

अयं அயம்=இவன் (ஸ்வப்நதிருஷ்டா)

गत्वा கத்வா= ஸ்வப்நமடைந்து

तान् தாந்=ஸ்வப்நத்திலுள்ள அபூர்வபதார்த்தங்களை

प्रेक्षते ப்ரேக்ஷதே=பார்க்கிறான்.

ச-பா:—ஸ்வப்நஜாக்கிரபதார்த்தம் சமமாயிருப்பதினால் ஜாக்கிரபதார்த்தமும் மித்தை என்று சொன்னது சரியன்று. ஏனெனின் திருஷ்டாந்தம் சித்திக்கவில்லை. எப்படியெனின் ஜாக்கிரத்தில் காணப்பட்டபதார்த்தங்களே ஸ்வப்நத்தில் காணப்படவில்லை. பின்னேயோவெனின் ஸ்வப்நத்தில் ஒருவன் 8 கைகளுடன் கூடினவனையும் 4 தந்தங்களுள்ள யானையின்பேரில் ஏறிக்கொண்டவனை

யும் நினைக்கிறான். இப்படியே வேறு அபூர்வமான வைகளையும் ஸ்வப்நத்தில் பார்க்கிறான். ஆகையால் ஸ்வப்ந பதார்த்தங்கள் பொய் போகிறாமல் சத்தியமாகவே யிருக்கின்றன. ஆகையால் ஜாக்கிறத் பதார்த்தங்கள்மித்தை யென்று நிரூபிக்க ஸ்வப்நதிருஷ்டாந்தம் சித்திக்கவில்லை. ஆகையால் ஸ்வப்நமேபோல் ஜாக்கிறத்தும் அசத்து என்று சொன்னது அயுக்தம்.

இப்படி பூர்வபக்ஷி சொல்லுவது யுக்தமன்று. எப்படியெனின் ஸ்வப்நத்தில் பார்க்கப்படும் அபூர்வபதார்த்தம் ஸ்வத: சித்தமாய் சத்தியமாயிருக்கவில்லை. ஸ்வர்க்கத்தில் வசிக்கும் இந்திராதிகளுடைய சஹஸ்ராக்ஷம் (1000 கண்கள்) முதலியவை அவர்களின் ஸ்வர்க்க வாசத்தால் ஏற்படுவதுபோல் ஸ்வப்நத்திலும்பார்க்கப்பட்டதாக நினைக்கப்பட்ட பதார்த்தங்களும் ஸ்வப்நதிருஷ்டாவின் அபூர்வதர்மமே. திருஷ்டாவின் ஸ்வரூபம்போல் ஸ்வத: சித்தமன்று.

எப்படி ஒரு ஊரைவிட்டு மற்றொரு ஊருக்குப்போகிறதற்காக மார்க்கத்தைச் செவ்வையாய்த் தெரிந்துகொண்டவன் அந்தமார்க்கத்தின் வழியாய்ச்சென்று அவ்வூரை அடைந்து அங்குள்ள அபூர்வ பதார்த்தங்களை பார்க்கிறானோ அப்படி இதை ஸ்வப்நதிர்ஷ்டாவும் ஸ்வப்நத்தை அடைந்து அந்த அவஸ்தையில் தன் மனதால் கற்பிக்கப்பட்ட அபூர்வபதார்த்தங்களைபார்க்கிறான் இரச்சுவில் சர்ப்பம் கானல் ஜலம் முதலியவை எப்படி வாஸ்தவத்தில் ப்ராமக திர்ஷ்டாவின் தர்ம்மாயிருக்கின்றனவோ ஆகையால் பொய்யோ? அப்படி ஸ்வப்நத்தால் பார்க்கப்படும் அபூர்வபதார்த்தங்களும் ஸ்வப்நதிர்ஷ்டாவின் தர்ம்மாயிருக்கின்றன. ஆகையால் அவைகள்பொய், ஆகையால் ஜாக்கிறத்பதார்த்தம் பொய் என்பதற்குஸ்வப்நதிர்ஷ்டாந்தம் சித்திக்காமலில்லை. ॥ 49 ॥

स्वप्नवृत्तावपि त्वन्तश्चेतसा कल्पितन्त्वसत् ।
बहिश्चेतोगृहीतं सद्दृष्टं वैतथ्यमेतयोः ॥ 50 ॥

ஸ்வப்நவ்ருத்தாவபி த்வந்தஶ்சேதஸா கல்பிதந்த்வஸத் ।
பஹிஶ்சேதோக்ருஹீதம் ஸத்த்ருஷ்டம் வைதத்யமேதயோ: ॥

स्वप्नवृत्तावपितु ஸ்வப்நவ்ருத்தாவபி து = ஸ்வப்நவிர்த்தியாகிறஸ்வப்நஸ்தானத்திலும்

अन्तश्चेतसा அந்தஶ்சேதஸா = உள்ளிருக்கும் மனதினால்

कल्पितन्तु கல்பிதந்து = கற்பிக்கப்பட்டது

असत् அஸத் = பொய்

बहिश्चेतोगृहीतं பஹிஶ்சேதோக்ருஹீதம் = சக்ஷுராதி இந்திரியங்கள் மூலமாக (பாஹியமனதால்) கிரகிக்கப்பட்டது, அறியப்பட்டது.

सत् ஸத் = சத்தியம்

एतयोः ஏதயோ꞉ = இவ்விரண்டின்

वैतथ्यं வைதத்²யம் = மித்தியாபாவம்

दृष्टं த்³ருஷ்டம் = பார்க்கப்படுகிறது.

ச-பா:— ஜாக்கிரத்தில் பார்க்கப்படும் பதார்த்தங்கள் சிலது சத்ரூபமாயும் சிலது அசத்ரூபமாயுமிருப்பதால் எல்லாம் மித்தையென்று சொல்லுவது சரியன்று. இப்படி ஆக்ஷேபிப்பது அயுக்தம். ஸ்வப்நாவஸ்தையிலுங்கூட மனதின் கற்பனைகள் அசத்தாயிருக்கின்றன. ஏனெனின் மனோகற்பனை கற்பனைக்கு அடுத்தக்ஷணத்தில் காணப்படுகின்றதில்லை. அதேஸ்வப்நத்தில் சக்ஷுராதி பாஹ்ய இந்திரியங்களால் அறியப்படும் கடாதிகள் சத்தியமாயிருக்கின்றன. ஸ்வப்ந பதார்த்தம் சர்வதாபொய் என்கிற நிச்சயமிருந்தாலும் அப்பதார்த்தங்களுக்குள்ளேயே சிலது சத்தியம்போலும் சிலது பொய்போலும் காணப்படுகின்றன. இப்படி ஸ்வப்நத்தில் இருவித கற்பனைகளும் பார்க்கப்படுகின்றன. உள்ளே கற்பிக்கப்பட்டதும் வெளியே கற்பிக்கப்பட்டதும் பொய் என்பது காணப்படுகின்றது ॥ 50 ॥

जाग्रद्वृत्तावपि त्वन्तश्चेतसा कल्पितन्त्वसत् ।
बहिश्चेतोगृहीतं सद्युक्तं वैतथ्यमेतयोः ॥ 51 ॥

ஜாக்³ரத்³வ்ருத்தாவபி த்வந்தஶ்சேதஸா கல்பிதந்த்வஸத் ।
ப³ஹிஶ்சேதோக்³ருஹீதம் ஸத்³யுக்தம் வைதத்²யமேதயோ꞉ ॥ 51

जाग्रद्वृत्तावपितु ஜாக்³ரத்³வ்ருத்தாவபிது = ஜாக்கிறத் விருத்தியாகிற ஜாக்கிராவஸ்தையிலும்

अन्तश्चेतसा அந்தஶ்சேதஸா = உள்ளேயிருக்கும் மனதினால்

कल्पितन्तु கல்பிதந்து = கற்பிக்கப்பட்ட வஸ்து

असत् அஸத் = அசத்

बहिश्चेतोगृहीतं ப³ஹிஶ்சேதோக்³ருஹீதம் = பாஹ்ய இந்திரியங்களால் அறியப்பட்டது

सत ஸத் = சத்தாக இருக்கிறது

एतयोः ஏதயோ꞉ = இவ்விரண்டின்

वैतथ्यं வைதத்²யம் = மித்தியாபாவம்

युक्तं யுக்தம் = யுக்தமே.

ச-பா:—ஜாக்கிரத்காலத்திலும் உள்ளே மனோ கற்பிதங்கள் அசத்தாயும் சக்ஷுராதி இந்திரியங்களால் வெளியில் அறியப்பட்டவை சத்தியமாயும் காணப்படுகின்றன. அசத்தியம் நிச்சயமாயினும்

சதசத் விபாகம் காணப்படுகிறது. இவைகள் மித்தை என்பது யுக்தம் ஸ்வப்நம் போலவே ஜாக்ரத்திலும் சதசத்துக்கள்பொய். ஏனெனின் உள் வெளிகற்பனை இரண்டுக்கும் சமம் ॥ 51 ॥

उभयोरपि वैतथ्यं भेदानां स्थानयोर्यदि ।
क एतानूबुध्यते भेदान्को वै तेषां विकल्पकः ॥ 52 ॥

உபயோரபி வைதத்யம் பேதாநாம் ஸ்தாநயோர்யதி । க
ஏதாநுபுத்யதே பேதாந்கோ வை தேஷாம் விகல்பக: ॥ 52 ॥

स्थानयोः ஸ்தாநயோ: = ஜாக்ர ஸ்வப்நங்களாகிற
उभयोः உபயோ: = இரண்டின்
भेदानां பேதாநாம் = பதார்த்தங்களின்
वैतथ्यं வைதத்யம் = மித்தியாபாவம்
यदि (स्यात्) யதி (ஸ்யாத்) இருந்தால்
कः க: = எவன்
एतान् ஏதாந் = இந்த
भेदान् பேதாந் = பதார்த்தங்களை
बुध्यते புத்யதே = அறிவான்
एतेषां ஏதேஷாம் = இவைகளை
वि कल्प कः விகல்பக: = சிருஷ்டிக்கிறவன்
कः वा க: வா = எவன்

ச-பா:—தா-ம்:—எல்லாம் மித்தையாய்விட்டால் பிரமாதா பிரமாணம் முதலிய வியவஹாரங்களுக்கு இடமில்லை. ஆகையால் பூர்வபக்ஷி அடியில் வருமாறு சங்கிக்கிறான். ஜாக்கிர ஸ்வப்நாவஸ்தைகளில் காணப்படும் பதார்த்தங்கள் எல்லாம் மித்தையானால், மனதினாலும் பாஹிய இந்திரியங்களாலும் கற்பிக்கப்படும் பதார்த்தங்களை அறிகிறவன் யார்? சிருஷ்டிக்கிறவன் யார்? கர்த்தாவானவன் முன் அனுபவிக்கப்பட்டதை ஸ்மரித்து, அதை அனுசரித்து மறுபடியும் சிருஷ்டி செய்கிறான். ஸ்மிருதி அனுபவங்களை உத்தேசித்து கர்த்தாவும் வேண்டியதாக இருக்கிறது. கர்த்தா இல்லாவிட்டால் சூன்னியவாதம்சம்பவிக்கும் ஆனால் இது சம்மதமன்று ஏனெனின் இப்படி இல்லை என்று சொல்லுகிறவனே ஆத்மாவாகையால் ஆத்மநிராகரணம் செய்யமுடியாது. ॥ 52 ॥

कल्पयत्यात्मनाऽऽत्मानमात्मादेवः स्वमायया ।
सएव बुध्यते भेदानीति वेदान्तनिश्चयः ॥ 53 ॥

கல்பயத்யாத்மநாऽऽத்மாநமாத்மாதேவ: ஸ்வமாயயா ।
ஸ ஏவ புத்யதே பேதாநிதி வேதாந்தநிஸ்சய: ॥ 53 ॥

देवः தேவ: = தேஜோரூபமான
आत्मा ஆத்மா = ஆத்மா
स्वमायया ஸ்வமாயயா = தன்னுடைய மாயா சக்தியால்
आत्मना ஆத்மநா = தன்னாலே
आत्मानं ஆத்மாநம் = தன்னை
कल्पयति கல்பயதி = கற்பிக்கிறது
सएव ஸஏவ = அந்த ஆத்மாவே
भेदान् பேதாந் = சிருஷ்டிக்கப்பட்ட பேதஜாதங்களை
बुध्यते புத்யதே = அறிகிறது
इति இதி = என்பதாய்
वेदान्तनिश्चयः வேதாந்தநிஶ்சய: = வேதாந்த நிச்சயம்

ச-பா:-कल्प...मायया கல்ப...மாயயா :-ஸ்வபிரகாசனை ஆத்மா தன்னுடைய மாயையால் தன்னிடத்திலேயே இரச்சுவினிடத்தில் சர்ப்பாதிகளைப்போல தன்னை தானே இனிசொல்லப் போகிறபடி கற்பிக்கிறான்.

स...निश्चयः ஸ...நிஶ்சய: அப்படியே தானே அந்த பேதங்களை அறிகிறான். இதுவே வேதாந்த நிச்சயம். ஞானம் ஸ்மிருதி இவைகளுக்கு இவனைத்தவிர வேறு ஆசிரயமில்லை, (ஞானத்துக்கும் ஸ்மிருதிக்கும் ஆசிரயம், எவன் ஜகத்சிர்ஷ்டாவோ எவன் பிரமாதாவோ, இவர்களைத்தவிர வேறில்லை. சேதனம் வெவ்வேறு என்பதற்குப் பிரமாணமில்லாதபடியாலும் அனுபவம் ஸ்மிருதி இவைகள் ஒன்றையே ஆசிரயிக்கிறதென்பது பிரசித்தமானதாலும் இவனே ஆசிரயம். இவனைத் தவிரவேறு ஆசிரயமில்லை. க்ஷணிகவிஞ்ஞானவாதிகள் சொல்லுவதுபோல் அனுபவஞானமும் ஸ்மிருதி ஞானமும் ஆசிரயமன்றியில் இருக்கமாட்டாது. ॥ 53 ॥

विकरोत्यपरान्भावा नन्तश्चित्ते व्यवस्थितान् ।
नियतांश्च बहिश्चित्त एवं कल्पयते प्रभुः ॥ 54 ॥

விகரோத்யபராந்பாவா நந்தஶ்சித்தே வ்யவஸ்திதாந் ।
நியதாம்ஶ்ச பஹிஶ்சித்த ஏவம் கல்பயதே ப்ரபு: ॥ 54 ॥

प्रभुः ப்ரபு: = ஈசுவரன், ஆத்மா
अन्तश्चित्ते அந்தஶ்சித்தே = உள்ளே சித்தத்தில்
व्यवस्थितान् வ்யவஸ்திதாந் = வாசனாரூபமாயிருக்கிற
अपरान् அபராந் = லோக பிரசித்தமான
भावान् பாவாந் = சப்தாதி பதார்த்தங்களையும்

नियतांश्च நியதாம்ஸ்ச=ஸ்திரமான பிருதிவியாதிகளையும் அஸ்திரங்களான மின்னல் முதலியவைகளையும்

विकरोति விகரோதி=அநேக விதமாகச் செய்து

बहिश्चेत्त பஹிஸ்சித்த=பாஹிய சித்தமுடையிருந்து கொண்டு

एवं ஏவம்= இந்தப் பிரகாரம்

कल्पयते கல்பயதே=கற்பிக்கிறார்.

ச-பா:—ஆத்மா எவ்விதமாக அனுபவங்களை கற்பிக்கிறான் என்பது இப்போது கூறப்படுகிறது. ஆத்மா பாஹிய சித்தமுடையிருந்துகொண்டு லோகப்பிரசித்தமான சப்தாதி பதார்த்தங்களையும் சாஸ்திரப் பிரசித்தமான வாசனு ரூபமாக மனதிற் றுள்ளடங்கிய ஸ்திரமான பிருதிவியாதிகள், அஸ்திரமான மின்னல் முதலியவைகள் இவைகளையும் கற்பிக்கிறான். அப்படியே அந்த: சித்தமுடையிருந்துகொண்டு இனி வியவஹாரத்துக்கு யோக்கியமாக்கும் பொருட்டு தன்னிடத்தில் மானசிக இராகாதிகளை கற்பிக்கிறான். பாஹிய சித்தமுள்ளவனாய் பாஹிய பதார்த்தங்களையும் அந்த: சித்த முள்ளவனாய் வாசனுரூப பதார்த்தங்களையும் கற்பிக்கிறான் என்பது கருத்து.

ஒரு குயவன் முதலில் வியவஹாரத்துக்கு யோக்கியமாகாத கட பாவனையை மனதில் சங்கற்பித்துக்கொண்டு, பிறகு அந்த பாவனையை நாமரூபங்களால் களிமண்ணில் வியக்தமாக்கி வியவஹாரத்துக்கு யோக்கிய மாகும்படி செய்கிறான். இதுபோல் ஆதி கர்த்தாவான ஈசுவரனும் மாயாரூபமான தன்னுடைய சித்தத்தில் சிருஷ்டிக்கும் இச்சையால், நாமரூபங்களன்றியிலும் இனி சிருஷ்டிக்கப்படப்போகிற பதார்த்தங்களை அவைகளின் ஆகாரத்துடன் மனதில் தரித்து, பிறகு எல்லாருக்கும் தெரியும்படி அவைகளுக்கு ஆகாரங்கள் கொடுத்துவிடுகிறார். இதுவே கற்பனையின் பிரகாரம்.

चित्तकाला हि येऽन्तस्तु द्वयकालाश्च ये बहिः ।
कल्पिता एव ते सर्वे विशेषो नान्यहेतुकः ॥ 55 ॥

சித்தகாலா ஹி யேऽந்தஸ்து த்வயகாலாஸ்ச யே பஹி: ।
கல்பிதா ஏவதே ஸர்வே விஸேஷோ நாந்யஹேதுக: ॥55॥

ये யே=எந்த பாவங்கள்.

अन्तस्तु அந்தஸ்து=உள்ளே, அதாவது ஸ்வப்னத்தில்

चित्तकाला: சித்தகாலா:= மனதிலை கற்பிக்கப்படும் காலத்தில் மட்டும் இருக்கின்றனவோ

ये யெ[illegible]வைகள்

बहिः பஹி꞉=வெளியே அதாவது ஜாக்கிரத்காலத்தில்

द्वयकालाश्च த்வயகாலாஶ்ச=மனதால் கற்பிக்கப்படும் காலத்திலும், இதரகாலத்திலும் இருக்கின்றனவோ

ते सर्वे தே ஸர்வே=அவைகள் எல்லாம்

कल्पिता: एव கல்பிதா꞉ ஏவ=கற்பிக்கப்பட்டவைகளே

विशेषः விஶேஷ꞉=இரண்டுகாலம் பந்தம் என்கிற விசேஷம்

अन्यहेतुकः न அந்யஹேதுக꞉ ந=கற்பனையைத் தவிர வேறு ஹேதுவையுடையதாயில்லை.

ச-பா:—ஸ்வப்நம் போல் சகலமும் கற்பிக்கப்பட்டதென்று சொல்லக்கூடாது. ஏனெனின் பரஸ்பரம் அறியும் பாஹிய பதார்த்தங்கள் மானஸிக கற்பனைகள் என்று சொல்லக்கூடாது. அவைகள் மனதினால் கிரகிக்கப்படுகின்றன.

இது யுக்தமன்று ஏனெனின்

चित्तकाला: சித்தகாலா꞉=மனதினால் கற்பிக்கப்படும் காலத்தில் தவிர இதரகாலத்தில் இராத மனோரத ரூபபாவங்கள் சித்த காலங்கள் எனப்படும். (அவைகள் அறியப்படுவதினால் இருக்கின்றன என்று சொல்லப்படுகின்றன.)

द्वयकाला: ...த்வயகாலா꞉...:=ஜாக்கிரத் காலத்தில் மனதினால் வெளியே பார்க்கப்படும் பதார்த்தங்கள் அப்படி கற்பிக்கப்படும் காலத்திலிருக்கிறது மன்றி பிரத்தியபிஞ்ஞாரூபமாய் அதாவது "முன்பார்த்ததே இது" என்கிற ஞானரூபமாய் கர்லாந்திரத்திலுமிருந்து வியவஹாரத்துக்கு யோக்கியமாயிருக்கின்றன. ஜாக்கிரத்பதார்த்தங்கள் அன்னியோன்னிய பரிச்சேதங்கள். "பால் கறக்கிறவரையில் அவள் இருந்தாள்" என்று சொன்னால் அவளிருக்கும்போது பால் கறக்கப்பட்டதென்றும் பால் கறக்கும்வரையில் அவளிருந்தாள் என்று அர்த்தம் விளங்குகிறது. "இது" இவ்வளவு "அவன் அப்படிப்பட்டவன்" இப்படி பாஹியபதார்த்தங்களுக்குள் ஒன்றை அபேக்ஷித்து ஒன்று கூறப்படுகிறது. இதுவே அன்னியோன்னிய பரிச்சேதம் எனப்படும்.

कल्पिता: கல்பிதா꞉=மனோகற்பிதகாலத்திலிருக்கப்பட்டவைகளும் இரண்டுகாலங்களிலுமிருக்கும் பாஹியபதாத்தங்களும் எல்லாம் கற்பிதங்களே. ஜாக்கிரத்பதார்த்தங்களில் பிரத்யபிஞ்ஞாரூபவிசேஷமிருப்பதால்கற்பனை இல்லை என்றுசொல்ல இடமில்லை. ஏனெனின் ஸ்வப்நத்தில் கற்பிக்கப்படும் பதார்த்தங்களிலும் இந்த விசேஷம் காணப்படுகின்றது. ஆகையால் ஸ்வப்நம்போல் ஜாக்கிரத்தும் மித்தை என்று சொன்னது சரியே. ‖ 55 ‖

नियतांश्च நியதாம்ஶ்ச=ஸ்திரமான பிருதிவியாதிகளையும் அஸ்திரங்களான மின்னல் முதலியவைகளையும்

विकरोति விகரோதி=அநேக விதமாகச் செய்து

बहिश्चित्त பஹிஶ்சித்த=பாஹிய சித்தனாயிருந்து கொண்டு

एवं ஏவம்= இந்தப் பிரகாரம்

कल्पयते கல்பயதே=கற்பிக்கிறார்.

ச-பா:—ஆத்மா எவ்விதமாக அனுபவங்களை கற்பிக்கிறான் என்பது இப்போது கூறப்படுகிறது. ஆத்மா பாஹிய சித்தனாயிருந்துகொண்டு லோகப்பிரசித்தமான சப்தாதி பதார்த்தங்களையும் சாஸ்திரப் பிரசித்தமான வாசனா ரூபமாக மனதில் அடங்கிய ஸ்திரமான பிருதிவியாதிகள், அஸ்திரமான மின்னல் முதலியவைகள் இவைகளையும் கற்பிக்கிறான். அப்படியே அந்த: சித்தனாயிருந்துகொண்டு இனி வியவஹாரத்துக்கு யோக்கியமாக்கும் பொருட்டு தன்னிடத்தில் மானசிக இராதிகளை கற்பிக்கிறான். பாஹிய சித்தமுள்ளவனாய் பாஹிய பதார்த்தங்களையும் அந்த: சித்த முள்ளவனாய் வாசனாரூப பதார்த்தங்களையும் கற்பிக்கிறான் என்பது கருத்து.

ஒரு குயவன் முதலில் வியவஹாரத்துக்கு யோக்கியமாகாத கட பாவனையை மனதில் சங்கற்பித்துக்கொண்டு, பிறகு அந்தபாவனையை நாமரூபங்களால் களிமண்ணில் வியக்தமாக்கி வியவஹாரத்துக்கு யோக்கிய மாகும்படி செய்கிறான். இதுபோல் ஆதிகர்த்தாவான ஈசுவரனும் மாயாரூபமான தன்னுடைய சித்தத்தில் சிருஷ்டிக்கும் இச்சையால், நாமரூபங்களன்றியிலும் இனி சிருஷ்டிக்கப்படப்போகிற பதார்த்தங்களை அவைகளின் ஆகாரத்துடன் மனதில் தரித்து, பிறகு எல்லாருக்கும் தெரியும்படி அவைகளுக்கு ஆகாரங்கள் கொடுத்துவிடுகிறார். இதுவே கற்பனையின் பிரகாரம்.

चित्तकाला हि येऽन्तस्तु द्वयकालाश्च ये बहिः ।
कल्पिता एव ते सर्वे विशेषो नान्यहेतुकः ॥ 55 ॥

சித்தகாலா ஹி யேऽந்தஸ்து த்வயகாலாஶ்ச யே பஹி: ।
கல்பிதா ஏவ தே ஸர்வே விஶேஷோ நாந்யஹேதுக: ॥55॥

ये யே=எந்த பாவங்கள்.

अन्तस्तु அந்தஸ்து=உள்ளே, அதாவது ஸ்வப்நத்தில்

चित्तकालाः சித்தகாலா:= மனதினால் கற்பிக்கப்படும் காலத்தில் மட்டும் இருக்கின்றனவோ

ये யே =எவைகள்

वहिः பஹி:=வெளியே அதாவது ஜாக்கிரத்காலத்தில்

द्वयकालाश्च த்வயகாலாஶ்ச=மனதால் கற்பிக்கப்படும் காலத்திலும், இதரகாலத்திலும் இருக்கின்றனவோ

ते सर्वे தே ஸர்வே=அவைகள் எல்லாம்

कल्पिताः एव கல்பிதா: ஏவ=கற்பிக்கப்பட்டவைகளே

विशेषः விஶேஷ:=இரண்டுகாலம் பந்தம் என்கிற விசேஷம்

अन्यहेतुकः न அந்யஹேதுக: ந=கற்பனையைத் தவிர வேறு ஹேதுவையுடையதா யில்லை.

ச-பா:—ஸ்வப்நம் போல் சகலமும் கற்பிக்கப்பட்டதென்று சொல்லக்கூடாது. ஏனெனின் பரஸ்பரம் அறியும் பாஹிய பதார்த்தங்கள் மானஸிக கற்பனைகள் என்று சொல்லக்கூடாது. அவைகள் மனதினால் கிரகிக்கப்படுகின்றன.

இது யுக்தமன்று ஏனெனின்

चित्तकालाः சித்தகாலா:=மனதினால் கற்பிக்கப்படும். காலத்தில் தவிர இதரகாலத்தில் இராத மனோரத ரூபபாவங்கள் சித்தகாலங்கள் எனப்படும். (அவைகள் அறியப்படுவதினால் இருக்கின்றன என்று சொல்லப்படுகின்றன.)

द्वयकालाः ...த்வயகாலா:...:=ஜாக்கிரத் காலத்தில் மனதினால் வெளியே பார்க்கப்படும் பதார்த்தங்கள் அப்படி கற்பிக்கப்படும் காலத்திலிருக்கிறது மன்றி பிரத்தியபிஞ்ஞாரூபமாய் அதாவது "முன்பார்த்ததே இது" என்கிற ஞானரூபமாய் காலாந்திரத்திலுமிருந்து வியவஹாரத்துக்கு யோக்கியமாயிருக்கின்றன. ஜாக்கிரத்பதார்த்தங்கள் அன்னியோன்னிய பரிச்சேதங்கள். "பால் கறக்கிறவரையில் அவன் இருந்தான்" என்று சொன்னால் அவனிருக்கும்போது பால் கறக்கப்பட்டதென்றும் பால் கறக்கும்வரையில் அவனிருந்தான் என்று அர்த்தம் விளங்குகிறது. "இது" இவ்வளவு "அவன் அப்படிப்பட்டவன்" இப்படி பாஹியபதார்த்தங்களுக்குள் ஒன்றை அபேக்ஷித்து ஒன்று கூறப்படுகிறது. இதுவே அன்னியோன்னிய பரிச்சேதம் எனப்படும்.

कल्पिताः கல்பிதா:=மனோகற்பிதகாலத்திலிருக்கப்பட்டவைகளும் இரண்டுகாலங்களிலுமிருக்கும் பாஹியபதார்த்தங்களும் எல்லாம் கற்பிதங்களே. ஜாக்கிரத்பதார்த்தங்களில் பிரத்யபிஞ்ஞாரூபவிசேஷமிருப்பதால்கற்பனை இல்லை என்றுசொல்ல இடமில்லை. ஏனெனின் ஸ்வப்நத்தில் கற்பிக்கப்படும் பதார்த்தங்களிலும் இந்த விசேஷம் காணப்படுகின்றது. ஆகையால் ஸ்வப்நம்போல் ஜாக்கிரத்தும் மித்தை என்று சொன்னது சரியே. ॥ 55 ॥

अव्यक्ता एव येऽन्तस्तु स्फुटा एव च ये बहिः ।
कल्पिता एव ते सर्वे विशेषस्त्विन्द्रियान्तरे ॥ 56 ॥
அவ்யக்தா ஏவ யேऽந்தஸ்து ஸ்புடா ஏவ ச யே பஹி: ।
கல்பிதா ஏவ தே ஸர்வே விசேஷஸ்த்விந்த்ரியாந்தரே ॥ 56 ॥

येतु யேது=எவைகள்

अन्तः அந்த:=உள்ளே பாவனுரூபமாயிருப்பதால்

अव्यक्ताः एव அவ்யக்தா: ஏவ= அஸ்பஷ்டங்களா யிருக்கின்றனவோ

येच யேச=எவைகள்

बहिः பஹி:=மனதுக்கு வெளியே தோன்றுவதால்

स्फुटाःएव ஸ்புடா: ஏவ=ஸ்பஷ்டங்களா யிருக்கின்றனவோ

ते सर्वे தே ஸர்வே=இவைகள் எல்லாம்

कल्पिताः एव கல்பிதா: ஏவ=கற்பிக்கப்பட்டவைகளே

विशेषस्तु விசேஷஸ்து=ஸ்பஷ்டமாயிருக்கிற விசேஷம்

इन्द्रियान्तरे இந்த்ரியாந்தரே=இந்திரியபேதத்தில்

भवति பவதி=இருக்கிறது

ச-பா:—ஸ்வப்ந ஜாகரணம் இரண்டும் மித்தையானுல், ஒன்று அஸ்பஷ்டமாயும் மற்றொன்று ஸ்பஷ்டமாயுமிருக்கக் காரணமில்லையே யென்னும் ஆக்ஷேபத்துக்கு உத்தரம் சொல்லுகிறார். வாசனுமாத்திர ரூபமாயிருக்கிற பதார்த்தங்கள் மனதுக்குள் பாவனுரூபமாய் மட்டுமிருந்து அஸ்பஷ்டங்களாயிருக்கின்றன. சக்ஷுவாதி இந்திரியங்களால் கிரகிக்கக்கூடிய பதார்த்தங்கள் மனதுக்கு வெளியேயிருந்துகொண்டு ஸ்பஷ்டங்களாயுமிருக்கின்றன. இவ்விரண்டுவித பதார்த்தங்களும் மனதினுல் தான் ஸ்புரிக்கும்படியாயிருப்பதால் கற்பனைகளே. அந்தரிந்திரியம் பஹிரிந்திரியங்கள் இவைகளால் உண்டாகும் அஸ்பஷ்டத்வஸ்பஷ்டத்வ விசேஷங்கள் மித்தையே. ஸ்வப்நத்திலும் ஸ்பஷ்ட அஸ்பஷ்ட விசேஷணங்கள் காணப்படுவதால், இந்தவிசேஷணங்கள் பதார்த்தத்தின் சத்தியத்தையைச்சொல்லவில்லை, ஆனுல் இந்திரியபேதத்தால் இந்த விசேஷணபேதங்கள் உண்டாவதாக ஏற்படுகிறது. ஆகையால் ஸ்வப்ந பாவங்கள் போல் ஜாக்கிரத்பாவங்களும் கற்பிதங்களே. ॥ 56 ॥

जीवं कल्पयते पूर्वं ततो भावान्पृथग्विधान् ।
बाह्यानाध्यात्मिकांश्चैव यथाविद्यस्तथास्मृतिः ॥ 57 ॥
ஜீவம் கல்பயதே பூர்வம் ததோ பாவாந்ப்ருதக்விதாந் ।
பாஹ்யாநாத்யாத்மிகாம்ச்சைவ யதாவித்யஸ்ததாஸ்ம்ருதி: ॥ 57 ॥

आत्मा ஆத்மா=ஆத்மா)

पूर्वं பூர்வம்=முதலில்
जीवं ஜீவம்=ஜீவனை
कल्पयते கல்பயதெ=கற்பிக்கிறது
ततः ததஃ=பிறகு
यथाविद्यः तथास्मृतिः யதாவித்யஃ-ததாஸ்ம்ருதிஃ=ஞான ஸ்மரணங்களை அனுசரித்து
बाह्यान् பாஹ்யாந்=வெளியி லிருக்கிறவையாயும்
आध्यात्मिकान्च ஆத்யாத்மிகாந்ச=உள்ளே யிருக்கிறவையாயுமிருக்கிற
पृथग्विधान् ப்ருதக்விதாந்=அநேக விதங்களான
भावान् பாவாந்=பாவங்களை பதார்த்தங்களை
कल्पयते கல்பயதெ=கற்பிக்கிறது

சபா:- எல்லாம் கற்பனை என்று முன்கூறப்பட்டது. எந்தக் கிரமமாக கற்பனைகள் ஏற்படுகின்றன என்பது இப்போது கூறப்படுகின்றது. வெளியிலும் உள்ளேயுமிருக்கிற பதார்த்தங்கள் பரஸ்பரம் காரியகாரணங்களாக சம்பந்தப்பட்டிருக்கின்றன என்று கற்பிப்பதில் என்ன காரணமிருக்கிறது. இதுவிவரிக்கப்படுகிறது, தன் மாயாசக்தியால் சர்வத்தையும் கற்பிக்கும் ஆத்மா, நான் கர்த்தா, நான் சுகி, நான் துக்கி, முதலிய லக்ஷணங்களுடைய ஜீவனை எப்படி ரச்சுவினிடத்தில் சர்ப்பம் கற்பிக்கப்படுகிறதோ, அப்படி சுத்தமான தன்னிடத்தில் முதலில் கற்பிக்கிறான், பிறகு இந்த ஜீவனுக்காக கிரியாகாரகபல பேதங்களுடன் கூடிய பிராணாதி நாநாவிதமான பாஹ்ய ஆந்தர பதார்த்தங்களை ஆத்மா கற்பிக்கிறான். இந்த கற்பனைக்கும் காரணமேது. கற்பிக்கப்பட்ட ஜீவன் சகலகற்பனைக்கும் அதிகாரியாயிருக்கிறான். (தன்னுடையகற்பனைக்கு தான் உருவைக்கொடுக்கிறான், இவனுடைய ஞானத்துக்குத்தக்கபடி ஸ்மரணை உண்டாகிறது. அதாவது காரணத்தின் ஞானத்தால் காரிய (பலத்தின் ஞானமுண்டாகிறது. பிறகு இவ்விரண்டின் ஸ்மரணை உண்டாகிறது. பிறகு ஞானமும் கிரியாகாரக பல பேதங்களின் ஞானமும் உண்டாகிறது. ஞானத்தினின்றும் ஸ்மரணை, ஸ்மரணையினின்றும் ஞானம் உண்டாகிறது. இப்படி பாஹ்ய ஆந்தர பதார்த்தங்களை பரஸ்பரம் நிமித்தமாகஅநேகவிதமாய் ஜீவன் கற்பிக்கிறான். திருஷ்டாந்தம்:- அன்னபானாதிகளிருந்தால் திருப்தி உண்டாயிறது. இவைகளில்லாவிட்டால் திருப்தி உண்டாகிறதில்லை, இந்த அன்வயவியதிரேகத்தால் போஜனம், வேறு என்றும் திருப்திபலன்வேறு என்றும் கற்பனை ஞானமுண்டாகிறது பிறகு மறுநாள் இந்த ஹேது பலன்களின் ஸ்மரணை உண்டாகி

றது. பிறகு சாதனங்களைத்தேடவேண்டும் என்கிற ஞானம் உண்டாகிறது பிறகு திருப்திமுதலிய பலனை அடையும்பொருட்டு சமயலாகிற கிரியை, அதற்கு காரகமான அரிசிமுதலியவை, அதின் பலனாகிற அன்னம் இவைகளின் ஞானம் உண்டாகிறது, பிறகு ஹேதுவானபோஜனத்தில் ஸ்மரணை உண்டாகிறது. பிறகு அதின் அநுஷ்டானம் பிறகு அதின் பலன். இவ்விதமாக ஞானத்தில் நின்றும் ஸ்மரணை, ஸ்மரணையினின்றும் ஞானம், மறுபடியும் ஸ்மரணை மருபடியும் ஞானம் இப்படி பரஸ்பரம் நிமித்தநைமித்திகங்களாக அநேகவிதமாய் பதார்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன. तत्सृष्ट्वातदेवानुप्राविशत् தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத் என்கிறசுருதிபடி ஆத்மாவே மாயாசக்தியில் ஜீவனாகி நாநாவித பாவங்களை கற்பிக்கிறது. ஞானஸ்மிருதிகளின் அநேகத்தால் கற்பிக்கப்படும் பாவங்களிலும் அநேகத்வம் ஏற்படுகிறது. ॥ 57 ॥

अनिश्चिता यथा रज्जुरन्धकारे विकल्पिता ।
सर्पधारादिभिर्भावैस्तद्वदात्मा विकल्पितः ॥ 58 ॥

அநிஸ்சிதா யதா ரஜ்ஜுரந்தகாரே விகல்பிதா ।
ஸர்ப்பதாராதிபிர்பாவைஸ்தத்வதாத்மா விகல்பித: ॥ 58 ॥

यथा யதா=எப்படி

अनिश्चिता அநிஸ்சிதா=இன்ன வஸ்துவென்று நிச்சயிக்கப்படாத

रज्जुः ரஜ்ஜு:=இரஜ்ஜுவானது, பழுதையானது

अन्धकारे அந்தகாரே=மந்தாந்தகாரத்தில்

सर्पधारादिभिः भावैः विकल्पिता ஸர்ப்பதாராதிபி: பாவை: விகல்பிதா=ஸர்பமோ, ஜலதாரையோ, தண்டமோ இவ்விதமான அநேக விதங்களாய் பாவிக்கப்படுகிறதோ

तद्वत् தத்வத்=அப்படியே

आत्मा ஆத்மா=ஆத்மா

विकल्पितः விகல்பித:=கற்பிக்கப்படுகிறது.

ச-பா :—முந்தின மந்திரத்தில் ஜீவகற்பனை சகல கற்பனைகளுக்கு மூலகாரணம் என்று சொல்லப்பட்டது. இதை இப்போது திருஷ்டாந்தத்தால் ஸ்திரப்படுத்துகிறார். லோகத்தில் இன்ன வஸ்துவென்று தெரியாமலிருக்கும் ஒரு இரச்சு மந்தாந்தகாரத்தில் சர்ப்பமாய் அல்லது ஜலதாரையாய் அல்லது தடிக்கம்பாய் இப்படி பலவிதமாய் கற்பிக்கப்பட்டு காணப்படுகிறது.

நம்முடைய கைவிரலைப்பார்த்து இது சர்பம் என்று ஒரு நாளும் பிராந்திஞானம் உண்டாகிறதில்லை. அது போல் இரச்

சுவை எதிரில் பார்த்து இரச்சுதான் என்று நிச்சயமாக தெரிந்து கொண்ட விடத்தில் அதில் சர்பப்பிராந்தி ஒருக்காலத்திலும் உண்டாகிறதில்லை. இந்த பிராந்தி உண்டாகிறபடியால் எதிரிலிருப்பது இரச்சுதான் என்கிற நிச்சயஞானமில்லை. இந்த அநிச்சியமே சர்ப பிராந்திக்குக்காரணமாயிருக்கிறது. இதுபோல் ஹேது பலம்முதலியசம்சார தர்மங்களாகிற அநர்த்தங்களுக்கு விலக்ஷணமாயிருக்கிற ஆத்மாவின் சுத்தம், ஞான ஸ்வரூபம், சத்ரூபம் அத்வைத ரூபம் முதலியவைகள் தெரியாததினால், ஆத்மா ஜீவன் பிராணன் முதலிய பாவங்களாக காணப்படுகிறது. இதுவே சர்வ உபநிஷத்துக்களின் சித்தாந்தம். ॥ 58 ॥

निश्चितायां यथा रज्ज्वां विकल्पो विनिवर्तते ।
रज्जुरेवेतिचा द्वैतं.तद्वदात्मविनिश्चयः ॥ 59 ॥

𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌯𑌥𑌾 𑌰𑌜𑍍𑌜𑍍𑌵𑌾𑌂 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑍋 𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌰𑌜𑍍𑌜𑍁𑌰𑍇𑌵𑍇𑌤𑌿𑌚𑌾 𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 𑌤𑌦𑍍𑌵𑌦𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 ॥ 59 ॥

यथा 𑌯𑌥𑌾=எப்படி

रज्जुःएव इति 𑌰𑌜𑍍𑌜𑍁𑌃 𑌏𑌵 𑌇𑌤𑌿=இது ரஜ்ஜுதான் என்று

रज्ज्वां 𑌰𑌜𑍍𑌜𑍍𑌵𑌾𑌂=இரஜ்ஜுவிடத்தில்

निश्चितायां 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌯𑌾𑌂=நிச்சயம் வந்தபோது

विकल्पः 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌃=சர்ப்பாதி விகல்பஞானம்

विनिवर्तते 𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇=நிவர்த்தியாய் விடுகிறதோ

तद्वत् 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍=அதுபோல்

आत्मविनिश्चयः 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 = ஆத்மா நிச்சயமாய் அறியப்பட்ட விடத்தில்

अद्वैतं 𑌅𑌦𑍍𑌵𑍈𑌤𑌂=அத்வைதம் (சித்திக்கிறது.)

சபா :—அவித்தையால் ஜீவன் கற்பிக்கப் பட்டான் என்று அன்வய ரூபமாய் காண்பித்ததுபோல் வியதிரேக ரூபமாய் காட்டுகிறார். இது இரச்சுதான் என்று நிச்சயமாய்த் தெரிந்த பிறகு அஞ்ஞானம் நிவர்த்தியாகி அந்த அஞ்ஞானத்தாலுண்டான சர்ப்பாதி பிராந்தி நிவிர்த்தியாய் விடுகிறது. இரச்சு மட்டும் மிச்சப்படுகிறது. இது போல் சுருதியிற் சொல்லியபடி. ஆத்மஸ்வரூபம் அறியப்பட்ட மாத்திரத்தில் ஆத்மாவின் அஞ்ஞானத்தால் கற்பிக்கப்பட்ட இராஜ்வாதிபாவங்கள் நிவிர்த்தியாகி ஆத்மதத்துவமாகிய அத்வைதமே மிச்சப்படுகிறது. இது சுலோகார்த்தம். இதின் பாவார்த்த மென்னவெனின் :—இது ரச்சுவென்று தெரிந்த மாத்திரத்தில் சகல விகற்பங்களும் நீங்கி அத்வைத ரச்சுவே இருக்கிறதுபோல் சம்சாரதர்மமற்ற வஸ்துவைப்

பிரதிபாதிக்கும் "नेति नेति நேதி நேதி" முதலிய சாஸ்திரத்தாலுண்டாகும் யாதொரு ஆத்மநிச்சய முண்டோ, அது "எல்லாம் ஆத்மா" ஆத்மாவே அபூர்வம் (பூர்வ காரண சம்பந்த மற்றது) அனபரம் (பின் உண்டான அதாவது காரிய சம்பந்த மற்றது) அநந்தரம் (சித்திரம் இல்லாதது, சிதாகாசமானது) அபாஹ்யம் (அதுவே பிரத்தியக் ரூபமாயிருக்கிறது.) உள்ளும் வெளியுமுள்ளது (சகலத்துக்கும் அதிஷ்டானம்) ஜன்மமற்றது, ஜரையற்றது, மரணமற்றது, ரோகமற்றது, பயமற்றது. இப்படிப்பட்ட ஆத்ம நிச்சயமே வேறில்லாததாக நிச்சயப்படுகிறது. அதற்கு வேறான துவைதமெல்லாம் நிவிர்த்தியாய் விடுகிறது. ॥ 59 ॥

प्राणादिभिरनन्तैश्च भावैरेतैर्विकल्पितः ।
मायैषा तस्य देवस्य यथा संमोहितः स्वयम् ॥ 60 ॥

𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌨𑌨𑍍𑌤𑍈𑌶𑍍𑌚 𑌭𑌾𑌵𑍈𑌰𑍇𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌃 ।
𑌮𑌾𑌯𑍈𑌷𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌸𑌂𑌮𑍋𑌹𑌿𑌤𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ॥ 60 ॥

एतैः 𑌏𑌤𑍈𑌃 = இந்த
प्राणादिभिः 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 = பிராணன் முதலிய
अनन्तैः 𑌅𑌨𑌨𑍍𑌤𑍈𑌃 = அநேகங்களான
भावैः 𑌭𑌾𑌵𑍈𑌃 = பாவங்களால்
(आत्मा 𑌆𑌤𑍍𑌮𑌾 = ஆத்மா)
विकल्पितः 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌃 = கற்பிக்கப்படுகிறது
एषा 𑌏𑌷𑌾 = இந்த
माया 𑌮𑌾𑌯𑌾 = மாயையானது
तस्य 𑌤𑌸𑍍𑌯 = அந்த
देवस्य 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 = பிரகாச ஸ்வரூபமான ஆத்மாவினது
यथा 𑌯𑌥𑌾 = அந்த மாயையால்
स्वयं 𑌸𑍍𑌵𑌯𑌂 = தானே
संमोहितः 𑌸𑌂𑌮𑍋𑌹𑌿𑌤𑌃 = நன்றாக மோகித்துப் போகிறான்

ச-பா:—ஆத்மா ஒன்று என்கிற நிச்சயமிருந்தால் சம்சார லக்ஷணங்களான பிராணாதி அநேக பாவங்களால் ஆத்மா விகற்பத்தை அடைவானேன். இந்திர ஜாலவித்தையைக் காட்டும் ஒருவன் மாயா பலத்தால் சுத்தமான ஆகாசத்தில் புஷ்பங்கள் இலைகள் செடிகள் மரங்கள் நிறைந்திருப்பதாக காட்டுகிறான். இதுபோல் ஆத்மாவின் மாயையுமிருக்கிறது. இந்திர ஜாலமாயையில் ஜனங்கள் மோஹத்தை அடைந்து பரவசமாகி வேடிக்கையைப்பார்ப்பது போல் ஸ்வப்பிரகாசமான ஆத்மா தன்மாயையால் தானே மறைப

டுகிறது. இந்த மோஹமிருக்கிறதினால் ஆத்மாவினிடத்தில் மாயை இருக்கிறதாக அறியப்படுகிறது. मम मायादुरत्यया மம மாயா துரத்யயா (VII-4) என்கிற கீதாவாக்கியத்தில் என்மாயைத் தாண்டுகிறது வருத்தம் என்றும் மோஹத்துக்குக் காரணம் மாயை என்றும் பகவான் சொல்லியிருக்கிறார். ॥ 60 ॥

प्राण इति प्राणविदो भूतानीति च तद्विदः ।
गुणा इति गुणविदस्तत्त्वानीति च तद्विदः ॥ 61 ॥

ப்ராண இதி ப்ராணவிதோ பூதாநீதி ச தத்விதஃ।
குணா இதி குணவிதஸ்தத்வாநீதி ச தத்விதஃ ॥ 61 ॥

प्राणविदः ப்ராணவிதஃ=பிராணத்தைத் தெரிந்து கொண்டவர்கள்

प्राणः ப்ராணஃ=பிராணன்
(जगद्धेतुः ஜகத்தேதுஃ=ஜகத்காரணம்)
इति இதி=என்று
(कल्पयन्ति கல்பயந்தி=கற்பிக்கிறார்கள்)
भूतानीति பூதாநீதி=பஞ்சபூதங்கள் என்று
तद्विदः தத்விதஃ=பஞ்சபூதங்களை அறிந்தவர்களும்
गुणाः குணாஃ=சத்வாதிகுணங்கள்
इति இதி=என்று
गुणविदः குணவிதஃ=குணங்களை அறிந்தவர்களும்
तत्त्वानीति தத்வாநீதி=தத்வங்கள் என்று
तद्विदश्च தத்விதஶ்ச=தத்வ வித்துக்களும்
कल्पयन्ति கல்பயந்தி=ஜகத்காரணம் என்று கற்பிக்கிறார்கள்.

ச-பா:—பிராணன் முதல் (69ல்) ஸ்திதிவரையில் சொல்லப்பட்டவைகள், இரஜ்ஜுவில் சர்ப்பாதிகள்போல் பிராணிகளால் கற்பிக்கப்பட்ட பேதங்கள் மாயையால் கற்பிக்கப்பட்ட பிராணாதி அறிந்த பாவங்கள் எவையெனில் சொல்லுகிறார்.

(a) ஹிரணியகர்ப உபாசகர்களும் வைசேஷிகாதிகளும் பிராணனே ஜகத்காரணம் என்று சொல்லுகிறார்கள். இது கற்பனையே எனெனில் ஸ்வதந்திரமான ஹிரணியகர்ப்பன் சர்வஜகத் ஹேது வென்பதற்கு அபௌருஷேயமான வேதத்தில் பிரமாணமில்லை.

(b) லோகாயதர்கள் பிருதிவி, அப், தேஜஸ், வாயு ஆகிய நான்கு பூதங்களே ஜகத்காரணங்கள் என்று சொல்லுகிறார்கள். இதுவும் கற்பனையே. அக்கினியின் உஷ்ணத்வத்துக்கு அக்கினி

விஷயமாக மாட்டாதுபோல் பிருதிவியாதி பூதங்களுக்கே ஜகத் விஷய மாகமாட்டாது.

(c) சாங்கியர்கள் சத்வ ரஜஸ் தமோகுணங்களின் சாமியா வஸ்தையே ஜகத் காரணமென்று சொல்லுகிறார்கள். இதுவும் கற்பனையே. இந்த சாம்மிய காரணத்தில் பிரளயம் அதாவது லயம் சம்பவிக்கிறதாகச் சொல்லப்படவில்லை.

(d) சைவர்கள், ஆத்மா, அவித்தை, ஜீவன், இம்மூன்றும் சர்வ ஜகத் காரணம் என்று சொல்லுவதும் கற்பனையே. ஆத்மாவுக்கு வேறாக ஜீவனிருந்தால், ஜீவன் கடம்போலாவான். ஆத்மாவுக்கு வேறாக இல்லாவிட்டால், மூன்றை சொல்லவேண்டியதில்லை. ||61||

पादा इति पादविदो विषया इति च तद्विदः ।
लोका इति लोकविदो देवा इति च तद्विदः ॥ 62 ॥

பாதா இதி பாதவிதோ விஷயா இதி ச தத்விதஃ ।
லோகா இதி லோகவிதோ தேவா இதி ச தத்விதஃ ॥ 62 ॥

पादविदः பாதவிதஃ = விசுவாதி பாதங்களை அறிந்தவர்கள்
पादाः इति பாதாஃ இதி = பாதங்கள் என்றும்
विषयाः इति விஷயாஃ இதி = விஷயங்களை அறிந்தவர்களும்
तद्विदः தத்விதஃ = சப்தாதி விஷயங்கள் என்றும்
लोकविदः லோகவிதஃ = லோக வித்துக்களும்
लोकाः इति லோகாஃ இதி = பிருதிவியாதி மூன்று லோகங்கள் என்று
देवाः इति தேவாஃ இதி = தேவர்களை அறிந்தவர்களும்
तद्विदः च தத்விதஃச = அக்கினியாதி தேவர்கள் என்று
(कल्पयन्ति கல்பயந்தி = கற்பிக்கிறார்கள்)
ச-பா:—கற்பனை பேதங்களையே சொல்லுகிறார்

(a) சிலர் ஆத்மாவின் ஒன்றான விசுவாதி பாதங்களே சர்வ வியவஹாரங்களுக்கும் காரணம் என்று கற்பிக்கிறார்கள். நிரம்ச மான ஆத்மாவுக்கு அம்சபேதம் கற்பனையே.

(b) வாத்ச்யாயனாதி காவிய கர்த்தர்கள் சப்தாதி விஷயங்கள் அடிக்கடி அநுபவிக்கப்படுவதால் அவைகளை தத்வம் என்கிறார் கள். விஷயானு சந்தானம் நிந்திக்கப்பட் டிருப்பதால் விஷயம் பாரமார்த்திக தத்வமாகமாட்டாது.

(c) பௌராணிகர்கள் பூ: புவ: ஸ்வ: என்றமூன்று லோகங்களை வாஸ்தவமாகச் சொல்லுகிறார்கள். இதுவும் கற்பனையே. மூன்று ஸ்தானங்கள் வாஸ்தவமாயிருந்தால் அனேகஸ்தானங்கள் இருக்கக்கூடும்:

(d) தேவதைகளை உபாசிக்கிறவர்கள் அக்கினி இந்திரன் முதலிய தேவதைகளே பலனைக் கொடுக்கிறவர்கள் என்றும் ஈசுவரன் கொடுக்கவில்லையென்றும் சொல்லுகிறார்கள். இதுவும் கற்பனையே. நம்முடைய பிரயத்தினத்துக்குத் தக்கபடி அவர்கள் தக்க பலனை கொடுக்கிறதாயிருந்தால் நமக்கும் அவர்களுக்கும் விசேஷமில்லை. அவர்களே ஸ்வயம் பலனை கொடுக்கிறதாயிருந்தாலவர்களை ஆராதிக்கவேண்டியது அனுவசியம். ॥62॥

वेदा इति च वेदविदो यज्ञा इति च तद्विदः ।
भोक्तेति च भोक्तृविदो भोज्यमितिच तद्विदः ॥ 63 ॥

வேதா இதி ச வேதவிதோ யஜ்ஞா இதி ச தத்விதஃ ।
போக்தேதி ச போக்த்ருவிதோ போஜ்யமிதிச தத்விதஃ ॥ 63॥

वेदाः வேதாஃ = ரிக்வேதாதிகள்
(तत्वानि தத்வாநி = தத்வங்கள்)
इति இதி = என்று
वेदविदः வேதவிதஃ = வேதவித்துக்களும்
यज्ञाः इति யஜ்ஞாஃ இதி = யக்ஞங்கள் என்று
तद्विदः च தத்விதஃ ச = யக்ஞவித்துக்களும்
भोक्तेति போக்தேதி = போக்தாவென்று
भोक्तृविदः போக்த்ருவிதஃ = சாங்கியர்களும்
भोज्यमिति போஜ்யமிதி = புஜிக்கும்படியான வஸ்துவென்று
तद्विदःच தத்விதஃ ச = போஜ்ஜியங்களை அறிந்தவர்களும்
वदन्ति வதந்தி = சொல்லுகிறார்கள்)

ச-பா :—(a) வேதபாடம் சொல்லுகிறவர்கள் நான்கு வேதங்களை தத்வங்கள் என்று சொல்லுகிறார்கள். இதுவும் கற்பனையே வேதங்களில் விளங்கும் அக்ஷரங்கள் லோகத்தில் விளங்கும் அக்ஷரங்களைவிட வேறு அன்று. அக்ஷரவர்ணங்களே வேதங்களிலும் வருகின்றன. உச்சரிக்கும் விதம் அக்ஷரங்களில் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஆரோபிக்கப்பட்டிருக்கிற வேதசப்தம் எப்படி பாரமார்த்திகமாகக்கூடும்.

(b) போதாயனர் முதலிய யாக்ஞிகர்கள் ஜ்யோதிஷ்டோமாதி யக்ஞங்கள் வாஸ்தவம் என்று நினைக்கிறார்கள். இதுவும் பிராக்

தியே. யஞ்ஞம் என்பதில் திரவியம் தேவதை, தியாகம் முதலிய வைசேர்ந்திருக்கின்றன. இவைகளில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே யஞ்ஞம் என்று பெயரில்லாதபடியால், இவைகள் கூடின சமுதாயம் வாஸ்தவமானது என்று சொல்ல ஹேதுவில்லை.

(c) சாங்கியர்கள் ஆத்மா போக்தாவே, கர்த்தாவன்று என்கிறார்கள். இதுவும் பிராந்தியே எப்படி எனின். போகமிருக்கால் அதுவிகாரத்தாலுண்டாகிறதா சுவபாவத்தாலுண்டாகிறதா. முதல் பக்ஷத்தில் ஆத்மா அநித்தியமாவான் இரண்டாவது பக்ஷத்தில் போகம்எப்போதும் இருக்கவேண்டும். இரண்டும் சம்பந்தமாகாமையால் பிராந்தியே.

(d) சமயல்காரன் புஜிக்கப்பட்டது எல்லாம் வாஸ்தவமான பதார்த்தம் என்று நினைக்கிறன். இதுவும் பொய்யே. ஷட்வித இரசங்களுடன் கூடிய பதார்த்தங்கள் எல்லாருக்கும் ஒரேவிதருசியைக்கொடுக்கிறதில்லை. ஒரேவஸ்து பலபேர்களுக்குப் பலவித ருசியைக் கொடுக்கிறது. ஆகையால் புஜிக்கப்பட்ட பதார்த்தம் பாரமார்த்திகவஸ்து வல்ல கற்பனையே.

सूक्ष्म इति सूक्ष्मविदः स्थूल इति च तद्विदः ।
मूर्त इति मूर्तविदो अमूर्त इति च तद्विदः ॥ 64 ॥

ஸூக்ஷ்ம இதி ஸூக்ஷ்மவித: ஸ்தூல இதி ச தத்வித: ।
மூர்த இதி மூர்தவிதோ அமூர்த இதி ச தத்வித: ॥ 64 ॥

(आत्मा ஆத்மா=ஆத்மா)
सूक्ष्मः इति ஸூக்ஷ்ம: இதி=அணுபரிமாணம் என்று
सूक्ष्मविदः ஸூக்ஷ்மவித:=சூட்சும வித்துக்களும்
स्थूलःइति ஸ்தூல:இதி=ஸ்தூலம் என்று
तद्विदः च தத்வித: ச=ஸ்தூல வித்துக்களும்
मूर्तः इति மூர்த்த: இதி=மூர்த்தி ரூபம் என்று
मूर्तविदः மூர்த்தவித:=மூர்த்திகளை அறிந்தவர்களும்
अमूर्त इति அமூர்த இதி=மூர்த்தியற்றது என்று
तद्विदः தத்வித:=மூர்த்தியை ஒப்புக்கொள்ளாதவர்களும்
(वदन्ति வதந்தி=சொல்லுகிறார்கள்)

ச-பா:— (a) சிலர் ஆத்மா பரமாணுரூபம் என்று சொல்லுகிறார்கள். இதுவும் பிசகு. அணுவானல் சர்வ சரீரத்திலும் (அதாவது தேகம் முழுமையும்) அறிவு இருக்கக்கூடாது. ஆனல்

அறிவு (உணர்ச்சி) எங்குமிருப்பதால் ஆத்மா அணுவாக மாட்டாது.

(b) சில சார்வாகர்கள் ஸ்தூலதேகமே நான் (அதாவது ஆத்மா) என்று சொல்லுகிறார்கள். அதுவும் கற்பனை. சரீரமே ஆத்மாவானால், இறந்தவன், தூங்குகிறவன், அவர்களுக்கு வித்தியாசமில்லாதபடியால், இறந்தவனும் ஆத்மாவாகவேண்டும். ஆனால் இறந்த சரீரத்தில் சைதன்னியம் இருப்பதாக ஒருவரும் சொல்லுகிறதில்லை. ஒவ்வொரு பூதத்திலும் சைதன்னியம் காணப்பட்டபடியால் பூதசமூகமான சரீரமும் பாரமார்த்திக வஸ்துவாக மாட்டாது.

(c). ஆகம சாஸ்திரங்களை அநுசரிக்கிறவர்கள் திரிசூலதாரியான ஈசுவரன் முதலிய மூர்த்தி விசேஷங்களை பாரமார்த்திகமாயிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதுவும் கற்பனை நம்முடைய சரீரம் போல் அவர்களுடைய சரீரம் பஞ்சபூதங்களால் செய்யப்பட்டிருப்பதாலும், லீலா விக்கிரகம் என்று சொல்லும் பக்ஷத்தில் விக்கிரகம் இல்லாமல் லீலை உண்டாகமாட்டாது, லீலையில்லாத காலத்தில் விக்கிரஹமுமில்லாதபடியாலும், விக்கிரஹமும் பாரமார்த்திகம் என்பது கற்பனையே.

(d) சூன்னிய வாதிகள் சர்வாகார சூன்னியமான நிஸ்வபாவமே பாரமார்த்திகம் என்று சொல்லுகிறார்கள். பாரமார்த்திகமும் நிஸ்வபாவமும் ஒன்றுக்கொன்று விரோதமானவை. ஆகையால் சூன்னியவாதமும் கற்பனையே, ||64||

काल इति कालविदो दिश इति च तद्विदः ।
वादाइति वादाविदो भुवनानीति तद्विदः ॥ 65 ॥

கால இதி காலவிதோ திஶ இதி ச தத்விதஃ ।
வாதா இதி வாதவிதோ புவநாநீதி தத்விதஃ ॥ 65 ॥

कालः इति காலஃ இதி = காலம் என்று
कालविदः காலவிதஃ = காலத்தை அறிந்தவர்களும்
दिशः इति திஶஃ இதி = திக்குகள் என்று
तद्विदः च தத்விதஃ ச = திக்குகளை அறிந்தவைகளும்
वादाः इति வாதாஃ இதி = வாதம் என்றும்
वादविदः வாதவிதஃ = வாதத்தில் சிறந்தவர்களும்
भुवनानि इति புவநாநி இதி = 14-லோகங்கள் என்று
तद्विदः தத்விதஃ = இவைகளை அறிந்தவர்களும்
(वदन्ति வதந்தி = சொல்லுகிறார்கள்.)

ச-பா:-ஜொதிஷ சாஸ்திரம் தெரிந்தவர்கள் காலமேபாரமார்த்தம் என்கிறார்கள். காலம் ஒன்றானால் முகூர்த்தாதி வியவஹாரங்கள் கூடாது. அநேகமானால் சுவாதந்திரியம் போய்விடும். முகூர்த்தாதிகளும் விஷய சம்பந்தமன்றியில் தானாகவே காணப்படுகிறதில்லை. உதய காலத்தில் இன்னகாரியம் செய்யவேண்டியது என்றும் இப்படியே ஒவ்வொரு காரியத்துடன் காலம்சேர்ந்திருப்பதால் காலம் தானாகவே ஸ்வதந்திரமாக காணப்படவில்லை.

(b) சப்த துவனியை அறிந்தவர்கள் இக்குரலை பாரமார்த்திகம் என்கிறார்கள். அவர்களும் அபஜயத்தை அடைவதால் அவர்கள் மதமும் கற்பனையே.

(c) சிலர் (இரச தாது) வாதம், மந்திரவாதம் முதலிய வாதங்களை பாரமார்த்திகம் என்று சொல்லுகிறார்கள். அதுவும் கற்பனை தாம்பிர ஸ்வபாவம் இருக்குமளவிலும் நஷ்டமான வளவிலும் ஸ்வர்ணம் உண்டாகிறதில்லை. காலத்தில் விஷ திருஷ்டி உண்டானால் மனிதன் பிழைக்கிறதில்லை. அகாலத்தில் உண்டானால் தானே பிழைத்துவிடுகிறான். ஆகையால் மந்திரப் பிராபல்லியம் அநிச்சயம் ஆகையால் வாதங்கள் கற்பனைகளே.

(d) பதினாலு லோகங்களை சத்தியம் என்று சிலர் சொல்லுகிறார்கள். அதுவும் கற்பனை. யார் பார்த்திருக்கிறார்கள்? ॥ 65 ॥

मनइति मनोविदो बुद्धिरिति च तद्विदः ।
चित्तमिति चित्तविदो धर्माधर्मौ च तद्विदः ॥ 66 ॥

மந இதி மநோவிதோ புத்திரிதி ச தத்விதஃ ।
சித்தமிதி சித்தவிதோ: தர்மாதர்மௌ ச தத்விதஃ ॥ 66 ॥

(आत्मा ஆத்மா=ஆத்மா)
मन:इति மநஃஇதி=மனதே என்று
मनोविद: மநோவிதஃ=மனதை அறிந்தவர்களும்
बुद्धिइति புத்தி இதி=புத்தியென்று
तद्विद: च தத்விதஃச=புத்தியை அறிந்தவர்களும்
चित्तमिति சித்தமிதி=சித்தமென்று
चित्तविद: சித்தவிதஃ=சித்தத்தை அறிந்தவர்களும்
धर्मा धर्मौ தர்மாதர்மௌ = தர்மா தர்மங்கள் என்று
ताद्विद: च தத்விதஃ ச = தர்மாதிகளை அறிந்தவர்களும்
(वदन्ति வதந்தி=சொல்லுகிறார்கள்.

ச.பா :—(a) சில லோகாயதர்கள் மனதே ஆத்மா வென்கிறார்கள். இதுவும் பிராந்தியே மனது ஸ்வதந்திரமானால் கிலேசம்

உண்டாகக்கூடாது. அஸ்வதந்திரமானால் கடம் போல அநாத்மாவாகும் காரணமாயுமாகும் அநாத்மா ஆத்மாவாகமாட்டாது.

(b) பௌத்தர்கள் புத்தியே ஆத்மாவென்கிறார்கள். இதுவும் கற்பிதமே சுஷுப்தியில் புத்தி காணப்படவில்லை; ஆனால் அநுபவமிருக்கிறது. ஆகையால் புத்தியே ஆத்மாவாகமாட்டாது.

(c) சிலர் சித்தமே ஆத்மாவென்கிறார்கள் முன்சொன்னது போல் இதுவும் பிராந்தியே.

(d) மீமாம்சகர்கள் விதி நிஷேதங்களால் கூறப்பட்ட தர்மாதர்மங்களே பரமார்த்தம் என்கிறார்கள். இதுவும்கற்பனையே. தேசகாலங்களுக்குத் தக்கபடி தர்மாதர்மங்கள் ஏற்படுவதாலும் தர்மாதர்மங்கள் கற்பனைகளே. ॥ 66 ॥

पञ्चविंशक इत्येके षड्विंशइति चापरे ।
एकत्रिंशक इत्याहुरनन्त इति चापरे ॥ 67 ॥

പഞ്ചവിംശക ഇത്യേകേ ഷഡ്വിംശ ഇതി ചാപരേ ।
ഏകത്രിംശക ഇത്യാഹുരനന്ത ഇതി ചാപരേ ॥ 67 ॥

पञ्चविंशकः പഞ്ചവിംശകഃ = 25 வஸ்துக்கள்
इति ഇതി = என்று
एके ഏകേ = சிலரும்
षड्विंशः इति ഷഡ്വിംശഃ ഇതി = இருபத்தி ஆறு என்று
अपरेच അപരേച = வேறு சிலரும்
एकत्रिंशकः ഏകത്രിംശകഃ = முப்பத்தி ஒன்று
इति ഇതി = என்று
(पाशुपताः പാശുപതാഃ = பாசுபதர்களும்)
अनन्त इति അനന്ത ഇതി = அநேகம் என்று
अपरेच അപരേച = வேறு சிலரும்
(वदन्ति വദന്തി = சொல்லுகிறார்கள்.)

சபா:—சாங்கியர்கள், பிரதானமாகிற மூலப்பிரகிருதி (1) மஹத், அஹங்காரம், பஞ்சதந்மாத்திரைகளாகிற 7 ப்ரகிருதி விகிருதிகள், ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, விஷயங்கள் ஐந்து, மனது ஒன்று ஆக 16 விகாரங்கள், திர்ஷ்டாவான புருஷன் 1 ஆக 26 தத்துவங்களுள்ள பிரபஞ்சம்தான் சத்தியம் என்று சொல்லுகிறார்கள். இதுவும் கற்பனை. ஏனெனில் 25 என்னும் லக்கத்தைக் குறிப்பிட்டால், அதற்குமேல் ஒப்புக்கொள்ளுகிறாயா இல்லையா? ஒப்புக்கொண்டால் இந்த லக்கம் சத்தியமாகமாட்டாது. ஒப்புக்கொள்ளாவிட்டால் 25 என்று சொல்லுவானேன்.

( ) பாதஞ்சலர்கள் இவ்விருவத்தி ஐந்துடன் ஈசுவரனையும் சேர்த்து தத்துவங்கள் 26 என்கிறார்கள். ஈசுவரன் புருஷனுக்குள் அந்தர்பாவமாகையால் அனுவசியம். அந்தர்பாவமாகாவிட்டால், கடம்போல் ஈசுவரனும் அனீசுவரனாகவேணும். ஆகையால் கற்பனையே.

(c) பாசுபதர்கள் ராகம் முதலிய 31 தத்வங்களை சொல்லுகிறார்கள். இதுவும் கற்பனையே.

(d) சிலர் பதார்த்தபேதம் அநந்தம் என்கிறார்கள். இதுவும் கற்பனையே அஞ்ஞானத்தால் பலவிதமாக சொல்லப் படுவதால் கற்பனை. ॥ 67 ॥

लोकान्लोकविदः प्राहुराश्रमा इति तद्विदः ।
स्त्रीपुंनपुंसकं लैङ्गाः परापरमथापरे ॥ 68 ॥

லோகாந்லோகவித³: ப்ராஹுராஶ்ரமா இதி தத்³வித³: ।
ஸ்த்ரீபும்நபும்ஸகம் லைங்கா³: பராபரமதா²பரே ॥ 68 ॥

लोकान् லோகாந்=லோகங்களை

(आत्मा ஆத்மா=ஆத்மாவாக)

लोकविदः லோகவித³:=லோகங்களை அறிந்தவர்களும்

प्राहुः ப்ராஹு:=சொல்லுகிறார்கள்

आश्रमा इति ஆஶ்ரமா இதி=ஆசிரமங்களாக

तद्विदः தத்³வித³:=ஆசிரமங்களை அறிந்தவர்களும்

स्त्रीपुंनपुंसकं ஸ்த்ரீபும்நபும்ஸகம் =புல்லிங்கம் ஸ்திரீ லிங்கம் நபும்ஸகலிங்கமாக

लैङ्गाः லைங்கா³:=லிங்கபேதங்களை அறிந்தவர்களும்

अथ अपरे அத² அபரே=வேறு சிலர்

परापरं பராபரம்=பரம் அபரமென்றும்

प्राहुः ப்ராஹு:=சொல்லுகிறார்கள்.

தா-ம் :—(a) லௌகிக ஜனங்கள் லோகத்தை சந்தோஷப் படுத்துவதே தத்வம் என்று சொல்லுகிறார்கள். இதுவும் கற்பனையே. லோகம் பின்னருசியுடன் கூடியிருப்பதால் எல்லாரையும் சந்தோஷிப்பிக்க ஈசுவரனாலும் முடியாது.

(b) தக்ஷன் முதலானவர்கள் ஆசிரமங்களே பரமார்த்தம் என்கிறார்கள் இதுவும் கற்பனையே. ஆசிரமம் என்பதற்கு தண்ட கமண்டலாதி வேஷம் அர்த்தமா. அல்லது சாதி அர்த்தமா. வேஷமானால் சூத்திராதிகளுக்கும் வரும். சாதி என்று அர்த்த

மானால் ஆசிரமத்தை குறிப்பிட முடியாது. வர்ணாசிரமமான சம்ஸ்காரம் தேகசம்பந்தியா அல்லவா? தேக சம்பந்தியானால், பரலோக சரீரத்துக்கு உபயோகப்பட மாட்டாது, ஆத்ம சம்பந்தியானால், ஆத்மா அசங்கள், அவனிடத்தில் சம்பந்திக்க மாட்டாது.

(c) வையாகரணிகள் சப்தங்களின் புல்லிங்கம் (ஆண்பால்) ஸ்திரீ லிங்கம் (பெண் பால்) நபும்சகலிங்கம் (அலிப்பால்) இவைகளுடன் கூடின சப்தமே தத்வம் என்று சொல்லுகிறார்கள். இதுவும் அயுக்தம். லிங்கபேதமற்ற ஆத்மாவான பரமாத்ம தத்வம் லிங்கபேதங்களுள்ள சப்தாதிகளாகா,

(d) சிலர் பரம் அபரம் என இரண்டு பிரம்மங்களை அறிய வேண்டியது என்கிறார்கள். பரிச்சேதமற்ற பிரம்மத்துக்கு இவ்வித விபாகம் ஒவ்வாது. ॥ 68 ॥

सृष्टिरिति सृष्टिविदो लय इति च ताद्विदः ।
स्थितिरिति स्थितिविदः सर्वे चेह तु सर्वदा ॥ 69 ॥

𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌿𑌤𑌿 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌵𑌿𑌦𑍋 𑌲𑌯 𑌇𑌤𑌿 𑌚 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌵𑌿𑌦𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌚𑍇𑌹 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 ॥ 69 ॥

सृष्टिः 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 = சிருஷ்டியே

(तत्वं 𑌤𑌤𑍍𑌵𑌂 = தத்வம்)

इति 𑌇𑌤𑌿 = என்று

सृष्टिविदः 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌵𑌿𑌦𑌃 = சிருஷ்டியை அறிந்தவர்களும்

लय:ईति 𑌲𑌯𑌃 𑌇𑌤𑌿 = லயமே தத்வம் என்று

तद्विदः च 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 𑌚 = லயத்தை அறிந்தவர்களும்

स्थितिः इति 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃𑌇𑌤𑌿 = ஸ்திதியே தத்வம் என்று

स्थितिविदः 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌵𑌿𑌦𑌃 = ஸ்திதியை அறிந்தவர்களும்

सर्वेच 𑌸𑌰𑍍𑌵𑍇𑌚 = சொல்லப் பட்டதும் சொல்லப் படாததுமான ஸமஸ்தமான கற்பனைகளும்

इहतु 𑌇𑌹 𑌤𑍁 = ஆத்மாவினிடத்தில்

सर्वदा 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 = கற்பனாவஸ்தையில்

(कल्प्यन्ते 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 = கற்பிக்கப்படுகிற தென்றும்)

वदन्ति 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 = சொல்லுகிறார்கள்.

ச-பா:—சில பௌராணிகர்கள் சிருஷ்டியே தத்வம் என்றும் சிலர் சம்ஹாரம் தத்வம் என்றும், சிலர் ஸ்திதியேதத்வம் என்றும் சொல்லுகிறார்கள். இதுவும் கற்பனையே. சத்துக்கும் அசத்துக்கும் உற்பத்தி முதலியவை இல்லை என்று மேல் சொல்லப்படப் போகிறது. மேற்சொல்லியதும், சொல்லாததுமான சமஸ்த

கற்பனைகளும் ஆத்மாவினிடத்திலேயே கற்பிக்கப்படும் காலத்தில் இருக்கின்றன. ஆத்மா கற்பிக்கப்படவில்லை. ஏனெனின் கற்பிதங்களுக்கு அது அதிஷ்டானமா யிருக்கிறது.

20 - 28 வரை சமுதாய தாற்பரியம் என்னவெனில் பிராணன் அதாவது சகலத்துக்கும் பீஜமாயிருக்கிற பிராஞ்ஞன் இந்த பிராணன் முதல் 28 ல் स्थिति ஸ்திதி=வரையில் இருக்கும் சகலமும் பிராணத்தின் காரியங்கள். இவைகளும் லௌகிக ஜனங்களால் கற்பிக்கப்படும் சகல பதார்த்தங்களும் ஈசுவரனிடத்தில் சர்ப்பம் போல, ஆத்மாவினிடத்தில், ஆத்மஸ்வரூபத்தை நிச்சயிக்கமுடியாததற்குக் காரணமான அவித்தையால் கற்பிக்கப்படுகின்றன.

यं भावं दर्शयेद्यस्य तं भावं स तु पश्यति ।
तं चावति स भूत्वाऽसौ तद्ग्रहः समुपैति तम् ॥ 70 ॥

യം ഭാവം ദർശയേദ്യസ്യ തം ഭാവം സ തു പശ്യതി ।
തം ചാവതി സ ഭൂത്വാഽസൗ തദ്ഗ്രഹഃ സമുപൈതി തം ॥ 70 ॥

यं யം=எந்த

भावं ഭാവം=பாவத்தை

यस्य യസ്യ=எவனுக்கு

(आचार्यः ആചാര്യഃ=ஆசாரியர்)

दर्शयेत् ദർശയേത്=காண்பிவிக்கிறாரோ

तं തം=அந்த

भावं ഭാവം=பாவத்தை

स तु സ തു=அவன்

पश्यति പശ്യതി=பார்க்கிறான்

तं തം=அவனை

सः സഃ=அந்த பதார்த்தம்

असौ भूत्वा അസൗ ഭൂത്വാ=குருவால்காண்பிவிக்கப்பட்ட பாவமாக ஆகி

अवति അവതി=இரக்ஷிக்கிறது

तद्ग्रहः തദ്ഗ്രഹഃ=அந்த பதார்த்தத்திலிருக்கப்பட்ட அபிநிவேசம் (அபிப்பிராயம்)

तं തം=அவனை

समुपैति സമുപൈതി=அடைகிறது.

ச-பா :—यं... पश्यति 𑌯𑌂...𑌪𑌶𑍍𑌯𑌤𑌿=அதிகதிருஷ்டாந்தங்களை கொடுப்பதில் விசேஷமென்ன. பிராணாதிகளில் சொன்னதையாவது சொல்லாததையாவது ஒன்றை இது தான் தத்துவம் என்று ஆசாரியார் அல்லது ஆப்த புருஷன் சொல்லுகிறானோ அவன் அந்த பதார்த்தத்தையே ஆத்மாவாக அறிகிறான்.

तं...तं 𑌤𑌂...𑌤𑌂=அப்படி அறிந்தவனை அந்த பதார்த்தம் ஆசாரியரால் கூறப்பட்ட ரூபமாகி இரக்ஷிக்கிறது. அதாவது அதின் நிஷ்டையிலேயே அந்த புருஷனிருக்கும்படிக்கும் இதர விஷயத்தில் பிரவிர்த்திக்காமலிருக்கும்படிக்கும் செய்கிறது. இந்த பதார்த்தமே தத்துவம் என்கிற அபிப்பிராயம் கொண்ட அந்த புருஷன் அதையே ஆத்மாவாக பாவிக்கிறான். ॥ 70 ॥

एतैरेषोऽपृथग्भावैः पृथगेवेति लाक्षितः ।
एवं यो वेद तत्वेन कल्पयेत्सोऽविशांकितः ॥ 71 ॥

𑌏𑌤𑍈𑌰𑍇𑌷𑍋𑌽𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑌾𑌵𑍈𑌃 𑌪𑍃𑌥𑌗𑍇𑌵𑍇𑌤𑌿 𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌃।
𑌏𑌵𑌂 𑌯𑍋 𑌵𑍇𑌦 𑌤𑌤𑍍𑌵𑍇𑌨 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍𑌸𑍋𑌽𑌵𑌿𑌶𑌂𑌕𑌿𑌤𑌃 ॥ 71 ॥

अपृथग्भावैः 𑌅𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑌾𑌵𑍈𑌃=ஆத்மாவுக்கு வேறாகாத
एतैः 𑌏𑌤𑍈𑌃=இந்த பிராணாதிகளால்
एषः 𑌏𑌷𑌃=இந்த ஆத்மா
पृथगेवेति 𑌪𑍃𑌥𑌗𑍇𑌵𑍇𑌤𑌿=பின்னம் போல்
लाक्षितः 𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌃=மூடர்களுக்கு காணப்படுகிறது
एवं 𑌏𑌵𑌂=இந்த பிரகாரம்
यः 𑌯𑌃=எவன்
तत्वेन 𑌤𑌤𑍍𑌵𑍇𑌨=சுருதியாலும் யுக்தியாலும்
वेद 𑌵𑍇𑌦=அறிகிறானோ
सः 𑌸𑌃=அவன்
अविशांकितः 𑌅𑌵𑌿𑌶𑌂𑌕𑌿𑌤𑌃=யாதொரு சங்கையன்றியில்

कल्पयेत् 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍= வேதாந்தத்தை அறிய சமர்த்தனாகிறான் கற்பிக்கிறான்.

ச-பா :—பிராணாதி பதார்த்தங்களுக்கு பின்னமாய் ஆத்மா ஒருக் காலத்திலுமில்லை. ஆயினும் மூட ஜனங்கள், ரச்சுபோல் பார்க் கப்பட்டவைகளுக்கு வேறாக ஆத்மா இருப்பதுபோல் பாவிக்கி றார்கள். விவேகிகளோ, ரச்சுவினிடத்தில் கற்பிக்கப்பட்ட சர்ப் பம்போல, பிராணாதிகள் ஆத்மாவுக்கு வேறென்று அபிப்பி ராயப்படுகிறார்கள். इदंसर्वंयदयमात्मा 𑌇𑌦𑌂𑌸𑌰𑍍𑌵𑌂𑌯𑌦𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 "இது

எல்லாம் ஆத்மா" (வ்ருஹ ப்ராஹ) வென்று சுருதி சொல்லுகிறது. ரச்சுவில் கற்பிக்கப்பட்ட சர்ப்பம் ரச்சுவன்றியில் மித்தைபோல், ஆத்மாவில் கற்பிக்கப்பட்ட சமஸ்த பாவங்களும், ஆத்மாவுக்கு வேறன்று என்றும், ஆத்மாவின்றியில் மித்தையென்றும் வேதத்தில் சொல்லிய பிரகாரத்தாலும் யுக்தியாலும் யாதொரு சங்கையன்றியில் அறிகிறானோ, அவன் வேதவாக்கியத்துக்கு இதுதான் அர்த்தம் என்றும் இது அர்த்தமல்லவென்றும் அறிகிறான்.

स्वप्न माये यथादृष्टे गन्धर्वनगरं यथा ।
तथा विश्वमिदं दृष्टं वेदान्तेषु विचक्षणैः ॥ 72 ॥

ஸ்வப்ந மாயே யதா த்ருஷ்டே கந்தர்வநகரம் யதா ।
ததா விஶ்வமிதம் த்ருஷ்டம் வேதாந்தேஷு விசக்ஷணை: ॥ 72 ॥

यथा யதா=எப்படி
स्वप्नमाये ஸ்வப்நமாயே=ஸ்வப்நமும் மாயையும்
दृष्टे த்ருஷ்டே=பார்க்கப்படுகின்றனவோ
यथा யதா=எப்படி
गन्धर्वनगरं கந்தர்வநகரம்=கந்தர்வபட்டணம்
(दृष्टं த்ருஷ்டம்=பார்க்கப்படுகிறதோ
तथा ததா=அப்படி
इदं இதம்=இந்த
विश्वं விஶ்வம்=சமஸ்தமான ஜகத்தும்
वेदान्तेषु வேதாந்தேஷு=வேதாந்தங்களில்
विचक्षणैः விசக்ஷணை:=நிபுணபார்வையுள்ளவர்களால்
दृष्टं த்ருஷ்டம்=பார்க்கப்படுகிறது

ச-பா:—துவைதம் மித்தை என்பதை எந்த யுக்திகளால் நிரூபித்தோமோ அவைகள் பிரமாணங்களுக்குச் சாதகமாயிருப்பதால் சரியானவை என்று நிரூபிக்கிறார். ஸ்வப்நமும் மாயையும் வாஸ்தவத்தில் அசத்தியமாயிருக்கின்றன. அப்படியிருந்தும் அவிவேகிகளால் சத்தியம்போல் பார்க்கப்படுகின்றன. ஆகாசத்தில் ஒரு கந்தர்வபட்டணம் இருக்கிறதுபோலும், அதில் அநேக வீதிகள், வீடுகள் உள்ளிருப்பதுபோலும், ஜனங்கள் தங்கள் தங்கள் வியவஹாரங்களில் பிரவிர்த்தித்திருப்பதுபோலும் காணப்பட்டு ஒரு க்ஷணத்தில் ஒன்றும் இல்லாமல் போய்விடுகிறது. எப்படி ஸ்வப்நமும் மாயையும் வாஸ்தவத்தில் பார்க்கப்பட்டாலும், பூராவாக மித்தையாய் இருக்கின்றனவோ, அப்படி இந்த சமஸ்த ஜகத்தும் சத்தியம்போல் அனுபவிக்கப்பட்டாலும், வாஸ்தவத்தில் மித்தையே

என்று, உபநிஷத்தின் சூட்சமார்த்தத்தை அறிய சக்தியுள்ள ஞானிகள் பார்க்கிறார்கள். சில உபநிஷத் பிரமாணங்கள் :—

(1) नेहनानास्ति किंचन (बृह -IV-4-19)
நேஹநாநாஸ்திகிஞ்சந (ப்ருஹ-IV-4-19)

இவ்விடத்தில் அநேகமில்லை.

(2) इन्द्रोमायाभि:
இந்த்ரோமாயாபி:

இந்திரன் (பரமாத்மா) மாயையால் வெகு ரூபத்தை அடைகிறான்.

(3) आत्मैवेदमग्रआसीत्
ஆத்மைவேதமக்ர ஆஸீத்

இது முதலில் ஆத்மாவாகவே இருந்தது.

(4) ब्रह्मैवेदमग्रआसीत् (मु-II-2-11)
ப்ரஹ்மைவேதமக்ரஆஸீத் (மு-II-2-11)

இது முதலில் பிரம்மமாகவே இருந்தது.

(5) द्वितीयाद्वैभयंभवति (बृह -I-4-2)
த்விதீயாத்வைபயம்பவதி (ப்ருஹ-I-4-2)

துவைதத்தினின்றும் பயமே உண்டாகிறது.

(6) नतुतद्वितीयमस्ति (बृह -IV-3-23)
நதுதத்விதீயமஸ்தி (ப்ருஹ-IV-3-23)

இந்த துவைதமில்லை.

(7) यत्रत्वस्यसर्वमात्मैवाभूत्
யத்ரத்வஸ்யஸர்வமாத்மைவாபூத்

எல்லாம் ஆத்மாவாகும்போது

எவன் எதை எதினால் பார்க்கமுடியும். வியாசஸ்மிருதியில்

तमः श्वभ्रनिभं दृष्टं वर्षबुद्बुदसन्निभम् ।
नाशप्रायं सुखाद्धीनं नाशोत्तरमभावगम् ॥

தம: ச்வப்ரநிபம் த்ருஷ்டம் வர்ஷபுத்புதஸந்நிபம் ।
நாசப்ராயம் ஸுகாத்தீநம் நாசோத்தரமபாவகம் ॥

மந்தாந்தகாரத்தில் ரச்சுவில் பூமியின் பிளப்புபோலும், நொரைபோலும், நாசத்துடன் கூடியும், சுகமற்றதாயும், நாசமடைந்தபின் அத்தமாயில்லாததாயும இந்த ஜகத்தை விவேகிகள் அறிகிறார்கள். ॥ 72 ॥

न निरोधो नचोत्पत्तिर्न बद्धो न च साधकः।
न मुमुक्षुर्न वै मुक्त इत्येषा परमार्थता ॥ 73 ॥

ந நிரோதோ நசோத்பத்திர்ந பத்தோ ந ச ஸாதக: ।
ந முமுக்ஷுர்ந வை முக்த இத்யேஷா பரமார்த்ததா॥73

निरोधः நிரோத:=பிரளயம்
न ந=இல்லை.
उत्पत्तिः உத்பத்தி:=உற்பத்தி
न ந= இல்லை.
बद्धः பத்த:=பந்தம்
न ந= இல்லை.
साधकः ஸாதக:=மோக்ஷசாதன முள்ளவன்
न ந=இல்லை
मुमुक्षुः முமுக்ஷு:=மோக்ஷ இச்சையுள்ளவன்
न ந=இல்லை
मुक्तः முக்த:=முக்தியடைந்தவன்
नवै நவை=இல்லை
इत्येषापरमार्थता இத்யேஷா பரமார்த்ததா=இதுவே பாரமார்த்திக சத்தியம்

ச-பா:—முன் சொன்ன அர்த்தத்தையே இந்த சுலோகத்தில் முடிவாய்ச் சொல்லுகிறார். த்வைதம் மித்தையாயும் ஆத்மாவே பாரமார்த்திக சத்தியமாயுமிருந்தால் என்ன சித்திக்கிறதெனில் லௌகிக வைதிக சமஸ்த வியவஹாரங்களும் அவித்தியா விஷயங்கள் இல்லை பிரளயமில்லை; உற்பத்தியில்லை; சம்சாரியான ஜீவனில்லை; மோக்ஷசாதன சம்பன்னனில்லை; பந்தத்தில் நின்றும் விடுபட இச்சிக்கிறவனில்லை; பந்தத்தில் நின்றும் விடுபட்டவனில்லை; உற்பத்திப்பிரளயவைகளில்லாதபடியால் பந்தம் முதலியவைகள் இல்லவேயில்லை என்பது பாரமார்த்திக சத்தியம்.

உற்பத்தி பிரளயங்கள் எப்படியில்லை? "எல்லாம் ஆத்மாவே;" "எல்லாம் பிரம்மமே" என்பவை முதலிய சுருதிகளால் த்வைதம் அசித்தமாகிறது. சத்தான வஸ்துவுக்கு உற்பத்தி பிரளயங்களைச் சொல்லலாம். முயல் கொம்புபோன்ற அசத் வஸ்துவுக்கு உற்பத்தி பிரளயங்களிரா. அத்வைதத்துக்கு உற்பத்தியுமில்லை; பிரளயமுமில்லை. அத்வைதத்துக்கு உற்பத்தி பிரளயங்கள் சொல்லுவது விருத்தம். பிராணன் முதலிய த்வைதங்களெல் இராஜ்ஜுவில் சர்ப்பம்போல் ஆத்மாவினிடத்தில் கற்பிதங்களே என்று சொல்லப்பட்டது. இராஜ்ஜுவில் சர்ப்பம் மனதின் கற்பனையே இந்த கற்பனைக்கு இரச்சுவினிடத்தில் உற்பத்திப் பிரளயங்களில்லை. ஏனெனின் இராஜ்ஜுவைப்பார்க்கிறவர்கள் எல்லாருக்கும் சர்ப்பஞானம் உண்டாகட்டுமே. அனுபவத்தில் அப்படியில்லை

இது அர்த்தமல்லவென்றும் கற்பிக்கச் சமர்த்தனுகிறான். ஏனெனில் ஆத்ம தத்வத்தை பூர்ணமாக அறிந்தவன்தான் வேதவாக்கியத்துக்கு இன்ன அர்த்தம் என்று நிச்சந்தேகமாய் சொல்லக் கூடும். மனு சொல்லியிருக்கிறதாவது ஆத்மஞானத்தை அடையாதவன் வேதார்த்தத்தை உள்ளபடி அறிய சமர்த்தனுகமாட்டான். ஆத்ம ஞானமில்லாதவன் தத்வஞானமாகிற பலத்தை அடையமாட்டான். ॥ 71 ॥

அப்படியே இந்த கற்பனைக்கு மனதிலும் உற்பத்தி பிரளயங்களில்லை. ஏனெனில் வெளியே சர்ப்பஞானம் உண்டாகிறபடியால் உள்ளே உற்பத்தி பிரளயங்களைச் சொல்லுவது விருத்தம். அப்படியே மனதிலும் ரச்சுவிலும் உற்பத்தி பிரளயங்களைச் சொல்லுவதும் பிசகு. ஏனெனில் இரண்டு ஆதாரங்கள் ஏற்படும். இரச்சு சர்ப்பம்போல் த்வைதமும் மானசிகமாயிருப்பதால், த்வைதத்துக்கும் உற்பத்தி பிரளயங்களைச் சொல்ல முடியாது. மனதை நிரோதம் செய்த காலத்திலாவது சுஷுப்தியிலாவது த்வைதம் காணப்படவில்லை. ஆகையால் த்வைதம் மனோகற்பனையே யென்று சித்திக்கிறது. ஆகையால் த்வைதமில்லாதபடியால், உற்பத்தி பிரளயங்களில்லை என்று சொல்லப்பட்டதும் பாரமார்த்திகமே இது யுக்தமே.

அப்படியானால், சாஸ்திரத்தின் கருத்தாவது த்வைத பாஷ்யத்தை பிரதிபாதிப்பதி லிருக்கவேண்டுமே தவிர அத்வைதத்தை ஸ்தாபிப்பதி லிருக்கமாட்டாது. ஏனெனின் அபாவத்தை பிரதிபாதிக்கிற சாஸ்திரம் பாவத்தைப் பிரதிபாதிப்பதாக சொல்லுவதில் விருத்தமுண்டு. அப்படியானால் அத்வைதம் வாஸ்தவம் என்பதற்கு பிரமாணமில்லாதபடியால் சூன்னியவாதமே மிச்சப்படும். ஏனெனின், த்வைதம் இல்லை என்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

(இ) இந்த ஆக்ஷேபம் யுக்தமன்று. ரச்சுவாகிற ஆஸ்பதமன்றியில் சர்ப்பம் இருக்கமாட்டாதென்று முன்னேயே (ஓங்கார பிரகரணத்தில்) சொன்னதை மறுபடியும் கவனிப்பதில் பிரயோசனமில்லை.

(ஆ) இப்படி சொல்லுவது சரியன்று. சர்பகற்பனைக்கு ஆசிரயமான ரச்சுவே உங்கள் மதத்தில் கற்பனையாயிருப்பதால் இந்த திருஷ்டாந்தம் ஒவ்வாது

(இ) இது யுக்தமன்று. கற்பிதங்கள் நாசமடைந்த வளவில் கற்பிக்கப்படாமல் மிஞ்சுகிற வஸ்து அப்படி மிச்சப்படுகிறதினுலேயே சத்தியமாயிருக்கிறது. சர்ப்பம்போல் அதுவும் கற்பனை

என்று சொல்லுவாயோ அதுவும் யுக்தமன்று. ஏனெனின் சர்ப்பப்பிராப்தி என்னும் ஞானத்திற்கு முன்னும் அது சத்தியமாக இருக்கிறதே தவிர ஒருக்காலும் கற்பித ரச்சு என்பதாக இல்லை. மேலும் கற்பனைக்குமுன் கற்பிக்கும் மனிதன் இருக்கவேண்டியதாகையால் அவன் சத்தியம். ஆகவே அதிஷ்டானம் அசத்தியம் என்னும் பக்ஷம் ஒவ்வாது,

(ஆ) சாஸ்திரம் (ஆத்ம) ஸ்வரூபத்தை நிரூபிக்காத பக்ஷத்தில் அது எப்படி துவைதஞானத்தை நாசம் செய்யும்.

(சி) இது பாதகமன்று ரச்சுவில் சர்ப்பாதிபோல் ஆத்மாவில் துவைதம் அவித்தையால் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) அது எப்படி ?

(சி) நான் சுகீ, நான் துக்கி நான் மூடன், நான் பிறந்தவன், நான் இறந்தவன், கிழவன், தேகமுள்ளவன், பார்க்கிறேன் ஸ்தூலமாயிருக்கிறேன். சூட்சுமமாயிருக்கிறேன், கர்த்தா, போக்தா, சேர்ந்திருக்கிறேன், பிறந்திருக்கிறேன், க்ஷீணகதியை அடைந்திருக்கிறேன், இது என்னுடையது இவை முதலியவைகள் ஆத்மாவில் ஆரோபிக்கப்பட்டிருக்கின்றன, இவைகளில் ஒவ்வொன்றிலும் ஆத்மா தோன்றிக்கொண்டேயிருக்கிறது. சர்ப்பம், ஜலதாரை முதலியவைகளில் இரச்சுவானது இருந்துகொண்டேயிருப்பதுபோலும்.

(ஆ) அப்படியானல் ஆத்மாவின் விசேஷஞானமிருக்கிறதே. சாஸ்திரத்தால் ஆகவேண்டியதென்ன ? சாஸ்திரம் சித்திக்காததை சித்திக்கச்செய்ய வேண்டியது. சித்தித்ததையே சொல்லும் பக்ஷத்தில் அது உபயோகமற்றது.

(சி) அவித்தையால் கற்பிக்கப்பட்ட சுகம் முதலிய கற்பனைகளால் உண்டான பிரதிபந்தத்தால் ஆத்மாவின் ஸ்வரூபம் தெரியவில்லை. ஸ்வரூபாவஸ்தானமே மோக்ஷம் என்பது பிரசித்தம். சுருதிகள் नेतिनेति நேதிநேதிஎன்று போதிக்கிறபடி ஆத்மாவின் சுகி முதலியவையல்ல என்னும் அபாவத்தை போதிக்கிறதி ஞல் துவைதத்தை சாஸ்திரம் நிவர்த்திசெய்து, ஆத்மாவின் ஸ்வரூபஞானத்தைக் கொடுக்கிறது.

சுகித்வாதி தர்மங்கள் இல்லை என்று போதிக்கிற சாஸ்திரம் ஆத்மாவில் அசுகித்வாதி தர்மங்களை போதிக்கிறதில்லை नेतिनेति நேதி நேதி முதலிய வாக்கியங்களால் ஆத்மஸ்வரூபத்தை போதிக்கிறதுபோல் அசுகித்வாதி தர்மங்களும் ஆத்மாவில் சேர்ந்திருக்கவில்லை, உஷ்ணஸ்வரூபமான அக்கினியில் குளிர்ச்சி யென்னும்

தர்மம் சேர்ந்திராதது போலும். ஆகையால் நிர்விசேஷமான ஆத்மாவினிடத்தில் ஜகம் முதலியவைகள் கற்பிதங்களே. ஆத்மா அசுகி என்பதால் எந்த சாஸ்திரம் பிரதிபாதிக்கிறதோ அதின் கருத்தானது ஆத்மா சுகி என்னும் விசேஷத்தை நிவிர்த்தி செய்வதிலேயே இருக்கிறது. வேதவேத்தாவான திராவிடாசாரியாருடைய சூத்திரம் இதற்குப் பிரமாணம். ॥73॥

भावैरसद्भिरेवायमद्वयेन च कल्पितः ।
भावा अप्यद्वयेनैव तस्मादद्वयता शिवा ॥ 74 ॥

பாவைரஸத்பிரேவாயமத்வயேந ச கல்பித:।
பாவா அப்யத்வயேநைவ தஸ்மாதத்வயதா ஶிவா ॥ 74 ॥

असद्भिः அஸத்பி:=அசத்துக்களான
भावैः பாவை:=பாவங்களால்
अद्वयेनच அத்வயேந ச=அத்வைதத்தாலும்
अयं அயம்=இந்த ஆத்மா
कल्पितः கல்பித:=கற்பிக்கப்படுகிறான்
भावाः अपि பாவா: அபி=பாவங்களும்
अद्वयेनैव அத்வயேநைவ=அத்வயமான சத்தால்தான்
(विकल्पिता: விகல்பிதா:=கற்பிக்கப்படுகின்றன
तस्मात् தஸ்மாத்=ஆகையால்
अद्वयता அத்வயதா=அத்வயமே
शिवा ஶிவா=கல்யாணம்

ச-பா:—பிராணம் முதலிய சகல விசேஷணங்களின் அபாவத்தால் உபலக்ஷிதமான யாதொரு வஸ்து உண்டோ, அதுவே வாஸ்தவரூபம் என்பது முந்தின சுலோகத்தின் அர்த்தம். இந்த அர்த்தத்துக்கு ஹேது சொல்லுகிறார். ரஜ்ஜு திருஷ்டாந்தத்தில் ரஜ்ஜுவில் சர்ப்பாதிகள் அசத்து. இந்த ரஜ்ஜுவே சர்பத்தை கற்பிக்கிறது. இதுபோல் ஆத்மாவும் பிராணாதி அநேக அசத்பதார்த்தங்களை கற்பிக்கிறது. வாஸ்தவத்தில் அவைகளுக்கு சத்தை இல்லை. மனதின் வியாபாரமன்றியில் எந்த பதார்த்தமும் எவனாலும் அறியப்படமாட்டாது. ஆத்மாவோ யாதொரு வியாபாரமுமில்லாதது. மனதின் வியாபாரத்தால் மட்டும் அறியக்கூடிய பதார்த்தங்கள் வாஸ்தவத்தில் சத்தியமாக இருக்கமாட்டா. ஆகையால் அசத்தான பிராணாதி பாவங்களால் சத்தான ஆத்மா, அநேக விதமாய் இருப்பதாக பாவிக்கிறான். சமஸ்த கற்பனைகளும் ஆசிரய பூதமான ஒரே சத்ரூபமாய்த்தான் இருக்

தும், ஆத்மா அநேகமாக பாவிக்கிறான். பிராகிருதி பாவங்களும் சத்ரூப அத்வைத ஆத்மாவால்தான் கற்பிக்கப்படுகின்றன. எந்த கற்பனையும் அதிஷ்டான மன்றியில் நிற்கமாட்டாது. ஏதாவது அதிஷ்டானம் இருக்கவேண்டியது. சர்வ கற்பனைகளுக்கும் அதிஷ்டானமாயிருப்பதாலும், தான் ஸ்வயம் எப்போதும் ஒன்றாயும் அவ்வியபிசாரியாக இருப்பதாலும், ஆத்மாவேகத்வமுள்ளஸ்வதை யிலும் கல்யாண ஸ்வரூபம். ரஜ்ஜு சர்ப்பாதிகள் போல் கற்பனை களே பயகாரணமாயிருப்பதால், துக்கரூபங்கள். அத்வயத்துக்கு எதனாலும் பயமில்லை. ஆகையால் அதுவே சுகரூபம். ॥74॥

नात्मभावेन नानेदं न स्वेनापि कथंचन ।
न पृथङ्नापृथक्किंचिदिति तत्वविदो विदुः ॥ 75 ॥

நாத்மபாவேந நாநேதம் ந ஸ்வேநாபி கதம்சந ।
ந ப்ருதங்நாப்ருதக்கிம்சிதிதி தத்வவிதோ விது: ॥ 75 ॥

इदं இதம்=இந்த ஜகத்து

आत्मभावेन ஆத்மபாவேந=பாரமார்த்திக ரூபத்தால்

नाना நாநா = ஆத்மாவைவிட வேறான அன்னிய வஸ்துவான து

न ந = இல்லை

स्वेनापि ஸ்வேநாபி=தன்னுடைய பிராகிருதி ஸ்வரூபத்தால்

कथंचन கதம்சந=ஒரு காலத்திலும்

(इदं இதம்=ஜகத்து)

न ந=இருக்கவில்லை

किंचित् கிம்சித்=யாதொன்றும்

न पृथक् ந ப்ருதக்=பரஸ்பரம் பின்னமாயுமில்லை

न अपृथक् ந அப்ருதக்=ஒன்றோடொன்று சேர்ந்துமில்லை

इति இதி=இவ்விதமாய்

तत्वविदः தத்வவித:=ஞானிகள்

विदुः விது:=அறிகிறார்கள்.

ச-பா:—அத்வைதம் கல்யாணம் என்று ஏன் சொல்லப் பட்டதெனில் :—கற்பனைகள் ஆத்மாவைவிட வெவ்வேறாக கா ணப்படுமிடத்தில்தான் துக்கம் சம்பவிக்கிறது. அத்வய பரமார் த்தரூப ஆத்மாவினிடத்தில் பிராகிருதி சமூகமான ஜகத்தானது பரமார்த்த ஸ்வரூபமாக இருக்கிறதாக நிரூபணம் பண்ணமுடி யாது. பிரகாசத்தால் இரஜ்ஜு என்று ஸ்பஷ்டமாய் தெரியும்போது அதை சர்ப்பமாக கற்பிக்க முடியாதது போலும், தீபபிரகாசத்தால்

ரச்சுவினிடத்தில் கற்பித சர்ப்பாதிகள் இல்லாமல் போகிறதுபோல், ஆத்மபிரகாசத்தால் பார்க்குமளவில் பிராணாதிகளும் பாரமார்த்திக ஆத்மாவுக்கு அன்னியமாக காணப்படவில்லை. ரச்சுவில் கற்பிக்கப்பட்ட சர்ப்பம் ஸ்வதந்திரமாயிராததுபோல் பிராணாதிகள் கற்பனை ஸ்வதந்திரமாயிருக்கவில்லை. குதிரை எருமை பரஸ்பரம் வெவ்வேறாயிருப்பதுபோல் பிராணாதிகள் பரஸ்பரம் பின்னமாயில்லை. எல்லாம் அசத்தாயிருப்பதால் தனித்தனியாகவாவது, ஒன்றுக்குள் ஒன்றாகவாவது யாதொன்றுமில்லை. இப்படி பாரமார்த்திக தத்வத்தை அறிந்த பிராமணர்கள் அறிகிறார்கள். த்வைதம் அசத்தாயிருப்பதால் ஸ்வதந்திரமாயாவது, ஆத்ம தாதாத்மிய ரூபமாயாவது இராது. த்வைதமே பயரூபம். பயஹேதுவான அத்வைதம் சிவரூபம், சுகரூபம். ॥ 75 ॥

वीतरागभयक्रोधैर्मुनिभिर्वेदपारगैः।
निर्विकल्पो ह्ययं दृष्टः प्रपञ्चोपशमोऽद्वयः ॥ 76 ॥

வீதராகபயக்ரோதைர்முநிபிர்வேதபாரகை: । நிர்விகல்போ ஹ்யயம் த்ருஷ்ட: ப்ரபஞ்சோபசமோऽத்வய: ॥ 76 ॥

वीतरागभयक्रोधैः: வீதராகபயக்ரோதை: = அநுராகம் பயம் கோபம் இவைகளில்லாமலும்

वेदपारगैः: வேதபாரகை: = வேதாந்தத்தை அறிந்த

मुनिभिः: முநிபி: = மனன சீலர்களான முனிகளால்

निर्विकल्पः: நிர்விகல்ப: = சர்வ விகல்ப ரஹிதமாயும்

प्रपञ्चोपशमः: ப்ரபஞ்சோபசம: = த்வைதப் பிரபஞ்சமில்லாமலும்

अद्वयः: அத்வய: = அத்வயமாயிருக்கிற

अयं: அயம் = இந்த ஆத்மா

दृष्टः: த்ருஷ்ட: = பார்க்கப்படுகிறது

டீகா:—தத்வஞானிகளின் ஸ்துதி சொல்லப்படுகிறது. அநுராகம், பயம், த்வேஷம் கோபம் முதலிய தோஷங்களில்லாமலும் எப்போதும் மனனம் செய்து கொண்டும், வேதாந்த தத்வத்தை அறிந்திருக்கிற முனிகள் ஆத்மாவை யாதொரு விகல்பமுமில்லாததாயும், பிரபஞ்ச அபாவரூபமாயும், அறிகிறார்கள். அபிப்பிராயம் என்னவெனில் ராகாதி தோஷங்களில்லாமலும், எப்போதும் வேதாந்த விசாரத்தில் முழுகியுமிருக்கிற சன்னியாசிகளால்தான் ஆத்மா அறியப்படுமே தவிர, இராகாதி தோஷங்களால் மலினசித்தத்தை யுடையவர்களாலும், தங்கள் அபிப்பிராயத்திலேயே

பக்ஷபாதமான அபிமானத்தை யுடையவர்களாகிய தார்க்கிகாதிக ளால் ஆத்மா அறியப்படமாட்டாது. ॥ 76 ॥

तस्मादेवं विदित्वैनमद्वैते योजयेत्स्मृतिं ।
अद्वैतं समनुप्राप्य जडवल्लोकमाचरेत् ॥ 77 ॥

தஸ்மாதேவம் விதித்வைநமத்வைதே யோஜயேத்ஸ்ம்ருதிம் ।
அத்வைதம் ஸமநுப்ராப்ய ஜடவல்லோகமாசரேத் ॥ 77 ॥

तस्मात् தஸ்மாத்=ஆகையால்
एनं ஏநம்=இந்த ஆத்மாவை
एवं ஏவம்=இவ்விதமாக
विदित्वा விதித்வா=அறிந்து
अद्वैते அத்வைதே=அத்வைதத்தில்
स्मृतिं ஸ்ம்ருதிம்=ஞாபகத்தை
योजयेत् யோஜயேத்=சேர்ப்பிக்க வேண்டியது
अद्वैतं அத்வைதம்=அத்வைதத்தை
समनुप्राप्य ஸமநுப்ராப்ய=செவ்வையாக அடைந்து
जडवत् ஜடவத்=ஜடன்போல்
लोकं லோகம்=லோகத்தை
आचरेत् ஆசரேத்=அனுசரிக்க வேண்டியது.

ச-பா:—சகல அனர்த்தங்களுமில்லாத அத்வைதம் சுகரூப மாயும் அபயரூபமாயு மிருக்கிறது. ஆகையால் ஞானி இவ்வித மாக அறிந்து எப்போதும் அத்வைதத்திலேயே ஞாபகம் வைக்க வேண்டியது. பசிதாகம் முதலியவைகளில்லாத, ஜனனமரண தர்மமற்ற சாக்ஷாத் பரப்பிரம்மமே நான் என்று செவ்வையாக அறிந்து, யாதொரு வியவஹாரமுமில்லாத ஜடன்போல் லோகத் தில் இருக்கவேண்டியது. தன்னுடைய ஞானம், முதலியவை களை பிரசித்தப்படுத்தாமலே ஞானி லோகத்தில் சஞ்சரிக்கவேண்டி யது என்பது கருத்து. ॥77॥

निस्तुतिर्निर्नमस्कारो निः स्वधाकार एव च ।
चलाचलनिकेतश्च यतिर्यादृच्छिकोभवेत् ॥ 78 ॥

நிஸ்துதிர்நிர்நமஸ்காரோ நிஸ்ஸ்வதாகார ஏவ ச ।
சலாசலநிகேதஶ்ச யதிர்யாத்ருச்சிகோபவேத் ॥ 78 ॥

निस्तुतिः நிஸ்துதி:=ஸ்தோத்திரம் செய்யாமல் இருக்கவேண் டியது.

निर्नमस्कारः நிர்நமஸ்கார:=நமஸ்காரம் செய்யாமல் இருக்க வேண்டியது.

निः स्वधाकार एव च 𑌨𑌿𑌃𑌸𑍍𑌵𑌧𑌾𑌕𑌾𑌰 𑌏𑌵 𑌚=ஸ்வதாகார மில்லா திருக்கவேண்டியது

चलाचल निकेतश्च 𑌚𑌲𑌾𑌚𑌲𑌨𑌿𑌕𑍇𑌤𑌶𑍍𑌚=சலமாகிற சரீரத்துக்கும் அசலமான ஆத்மாவுக்கும் இருப்பிடமாக இருக்கவேண்டியது

यतिः 𑌯𑌤𑌿𑌃=யதியானவன்

यदृच्छिकः 𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌿𑌕𑌃=இச்சையுக்கு உட்பட்டவனாக

भवेत् 𑌭𑌵𑍇𑌤𑍍=இருக்கவேண்டியது.

ச - பா:—எப்படி லோகத்தில் சஞ்சரிக்கவேண்டியது எனில் அவன் தேவதைகளையுடைய ஸ்தோத்திரத்தையாவது, நமஸ்காராதி கிரியையாவது செய்யக்கூடாது. பிதிர்களுக்கு சிராத்தாதிகளைச் செய்யவேண்டுமென்கிற இச்சையையாவது யாதொன்றையும் எதிர்பார்க்கக்கூடாது. சர்வ கர்மத்தையும் தள்ளி இச்சா ரகிதனாய் பரமஹம்சனாயே யிருக்கவேண்டியது. போஜனாதி வியாபாரங்களில் ஆகாசம்போல் அசல ஸ்வபாவமான ஆத்மாவை மறைந்து நான் என்று வித்வான் அபிமானம் கொள்ளுகிறான், மற்ற சமயங்களில் தன்னுடைய யதார்த்தஸ்வரூபத்தை மறைந்துபோகிறதில்லை. இவ்விதமாக ஞானி க்ஷணக்ஷணத்தில் மாறுதல் அடையும் சரீரம் எப்போதும் மாறாத ஆத்மா இவைகளுக்கு இருப்பிடமாகிறான். ஆனால் பாஹ்ய விஷயங்களுக்கு எப்போதும் ஆச்ரயமாகிறதில்லை, ஆகையால் சரீர தாரணையைமட்டும் உத்தேசித்து அன்னாதி விஷயங்களில் அந்த அந்த காலங்களில் எவை எவை கிடைக்குமோ அவையவைமட்டும் ஸ்வீகரிக்கவேண்டியது. 78

तत्त्वमाध्यात्मिकं दृष्ट्वा तत्त्वं दृष्ट्वा तु बाह्यतः ।
तत्त्वीभूतस्तदाराम स्तत्त्वादप्रच्युतो भवेत् ॥ 79 ॥
इति गौडपादीयकारिकायां वैतथ्याख्यं
द्वितीयप्रकरणम् ओं तत्सत् ॥

𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌬𑌾𑌹𑍍𑌯𑌤𑌃 ।
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍀𑌭𑍂𑌤𑌸𑍍𑌤𑌦𑌾𑌰𑌾𑌮 𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌪𑍍𑌰𑌚𑍍𑌯𑍁𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ 79 ॥
𑌇𑌤𑌿 𑌗𑍌𑌡𑌪𑌾𑌦𑍀𑌯𑌕𑌾𑌰𑌿𑌕𑌾𑌯𑌾𑌂 𑌵𑍈𑌤𑌥𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌂
𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌮𑍍 𑌓𑌂 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍 ॥

आध्यात्मिकं 𑌆𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌂=அத்யாத்மமான

तत्त्वं 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂=தத்வத்தை

दृष्ट्वा 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾=பார்த்து

बाह्यतः 𑌬𑌾𑌹𑍍𑌯𑌤𑌃=வெளியேயுள்ள

तत 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂𑌚=தத்வத்தையும்

दृष्ट्वा த்ருஷ்ட்வா = பார்த்து
तत्त्वीभूतः தத்வீபூதஃ = தத்வாகாரமாகி
तदारामः தாராமஃ = அதிலேயே ரமிக்கவேண்டியது
तत्त्वात् தத்வாத் = தத்வத்திலின்றும்
अप्रच्युतः भवेत् அப்ரச்யுதஃ பவேத் = நழுவக்கூடாது.

ச — பா:—விகாரங்கள் எல்லாம் நாமம் என்று சுருதியில் சொல்லியபடி ரஜ்ஜுஸர்பாதிகள் போலவும் ஸ்வப்னமாயாதிகள் போலவும் அசத்தாயிருக்கிறஇந்த ஆத்தியாத்மிகமான சரீரத்துக்கு सबाह्य ஸபாஹ்ய=ஆத்மா அதிஷ்டானம் என்று பார்த்து ஆத்மாவே சத்தியம், ஆத்மாவெ நான் என்று அறிகிறவன் பாஹ்ய விஷயங்களில் பிரீதி அடையாமல் ஆத்மாவிலேயே ரமிக்கிறான். தன்னிடத்தில் ஆசக்தசித்தருய் வெளி விஷயங்களினின்றும், திரும்பின புத்தியுடையவனுய் பாமாத்மதத்வத்தி லிருக்குமெல்லாமு அதினின்றும் நழுவாமலே ஞானி யிருப்பான். அஞ்ஞானி ஒரு சமயத்தில் தான் சரீரம் என்றும் ஒரு சமயத்தில் தான் சரீரமல்ல ஆத்மாவென்றும் ஆகிறுன். ஞானிக்கு இப்படிப்பட்ட சஞ்சல புத்தியில்லை. இவனுக்கு ஆத்மா எப்போதும் சஞ்சலிக்காத ஒரே ஸ்வரூபம். "நானே பிரம்மம்" என்று ஞானி எப்போதும் நிச்சய மான ஞாபகத்தை யுடையவன். 79

2-வது காரிகை முற்றிற்று.

हरिः ओम् ।
ஹரி ஓம்.

अथ गौडपादीयकारिकायाः
अद्वैताख्यं तृतीयप्रकरणम् ॥

ओं॥ उपासनाश्रितो धर्मो जाते ब्रह्मणि वर्तते ।
प्रागुत्पत्तेरजं सर्वं तेनासौ कृपणः स्मृतः ॥

அத கௌடபாதீயகாரிகாயாஃ
அத்வைதாக்யம் த்ருதீயப்ரகரணம் ॥

ஓம்॥ உபாஸநாச்ரிதோ தர்மோ ஜாதே ப்ரஹ்மணி வர்த்ததே । ப்ராகுத்பத்தேரஜம் ஸர்வம் தேநாஸௌ க்ருபணஃ ஸ்ம்ருதஃ ॥

அவதாரிகை

முந்தின பிரகரணத்தில் யுக்தியால் த்வைதம் மித்தை அதாவது பொய்யென்று நிரூபித்ததால் அத்வைதம் ஸித்தித்தது. அந்த அத்வைதத்தை தர்க்கத்தாலும் நிரூபிக்க இந்த பிரகரணம் ஆரம்பிக்கப் படுகிறது.

முதலில் உபாஸ்ய, உபாஸக பேதஞானத்தை நிராகரிக்கிறார்.

उपासनाश्रित: உபாஸநாச்ரித:=உபாஸனையை அடைந்த
धर्म: தர்ம:=ஜீவன்
जाते ஜாதே=உண்டான
ब्रह्मणि ப்ரஹ்மணி=பிரம்மத்தினிடத்தில்
वर्तते வர்த்ததே=இருக்கிறான்
(स: ஸ: =அவன்)
उत्पत्ते: प्राक् உத்பத்தே: ப்ராக்=உற்பத்திக்கு முந்தி
सर्वं ஸர்வம்=எல்லா ஜகத்தும்
अजं அஜம்=பிரம்ம ஸ்வரூபமென்று
(मन्यते மந்யதே=நினைக்கிறான்.)
तेन தேன=அந்தக் காரணத்தால்
असौ அஸௌ=இந்த உபாஸகன்
कृपण: க்ருபண:=அல்பனென்று
स्मृत: ஸ்ம்ருத:=மகாத்மாக்களால் சொல்லப்பட்டான்.

[illegible]—முதல் பிரகரணத்தில் ஓங்காரத்தை நிர்ணயம் செய்யுமிடத்தில் ஆத்மா प्रपञ्चोपशम: शिव:अद्वैत: ப்ரபஞ்சோபசம: சிவ: அத்வைத: (பிரபஞ்ச மற்றது, சுகம், இரண்டற்றது) என்று சொல்லப்பட்டது. அந்தப்பிரகரணத்தில் ज्ञाते द्वैतं न विद्यते ஜ்ஞாதே த்வைதம் ந வித்யதே (அறியப்பட்டவுடனே த்வைதம் நீங்கிவிடுகிறதென்பதும் சொல்லியிருக்கிறது.

இந்த [illegible] வைதத்தியம் என்கிற இரண்டாவது பிரகரணத்தில் ஸ்வப்னம், மாயை, ஆகாசபட்டணம் முதலிய திருஷ்டாந்தங்களாலும் [illegible], அத்துடன் கூடியிருத்தல் முதலிய யுக்திகளால் [illegible] பிரதிபாதிக்கப்பட்டது. அத்வைதம் சாஸ்திரத்தால் மட்டுமே பிரதிபாதிக்கத்தக்கதா? அல்லது யுக்தியாலும் கூடுமா? இந்த மூன்றாவது பிரகரணத்தில் சாஸ்திரத்தால் அறியக்கூடிய அத்வைதத்தை யுக்தியாலும் அறியக்கூடும் என்பதைச் சொல்லுகிறார். (शक्यते तर्केणापि ज्ञातुम् [illegible]) என்கிற [illegible] கேவல தர்க்கத்தால் அறியக்கூடாவிட்டாலும் சருதியை அனுசரித்த தர்க்கத்தால் அறியலாம் என்றார். இரண்டாவது பிரகரணத்தில் உபாஸ்ய உபாஸகாதி பேதங்கள் எல்லாம் மித்யையென்றும், கேவலம் ஆத்மாவே அத்வைதமான பரமார்த்தமென்றும் சொல்லப்பட்டது. (இப்போது ஆசாரியர் முதலில் உபாஸ்ய உபாஸக பேத திருஷ்டியை நிந்திக்கிறார்.) உபாஸனையை ஆசிரித்தவன் அதாவது உபாஸனை தன்னுடைய மோக்ஷ சாதகத்

தின்பொருட்டு அடையத்தக்கது. "நான் உபாஸகன் பிரம்மம். என்ஞல் உபாஸிக்கத்தக்கது. அப்படி உபாஸனை செய்வதால் பஞ்சபூதங்களின் ஆகாரமாய் விளங்கும் பிரம்மத்தில் நான் இருக்கிறேன், அதாவது நானும் பிரம்மாகாரமாகிறேன்; சரீரம் போனபிறகு ஜன்மமில்லாத பிரம்மத்தை அடைகிறேன். உற்பத்திக்கு முன் அவஸ்தையில் எல்லாம் அஜன்மாவாயிருந்தது, நானும் அப்படியே இருக்கிறேன். உற்பத்திக்கு முன் பிரம்மரூபமாயிருந்த நான் இப்போது ஜன்மத்தை அடைந்திருக்கிறேன், பிரம்மத்தில்தானிருக்கிறேன்; உற்பத்திக்கு முன்னிருந்த ஸ்திதியையே பிரளயத்திலும் உபாஸனையின் பலத்தால் அடைவேன்" என்று உபாஸனையை ஆரம்பிக்த ஜீவன் பிரம்மத்தை அற்பமாய் அறிகிறபடியால் அற்பன் என்று நித்யமாயும் அஜமாயுமிருக்கிற பிரம்மத்தை அறிகிற மகான்கள் சொல்லுகிறார்கள். தளவகார சாகையில் यद्वाचानभ्युदितं யத்வாசாநப்யுதிதம் என்கிறசுருதியில் (கேன I-4) * உபாஸனை நிந்திக்கப்பட்டிருக்கிறது. ॥ 80 ॥

III - 2 - வது சுலோகம்.

अतो वक्ष्याम्यकार्पण्य मजाति समतांगतम् ।
यथा न जायते किंचिज्जायमानं समन्ततः ॥ 81 ॥

அதோவக்ஷ்யாம்யகார்பண்யமஜாதி ஸமதாம்கதம் ।
யதா ந ஜாயதே கிஞ்சிஜ்ஜாயமானம் ஸமந்தத: ॥ 81 ॥

अत: அத:=ஆகையால்

अजाति அஜாதி=உற்பத்தியற்றதாயும்

समतांगतम् ஸமதாம்கதம் = நிரவயவமாயிருப்பதால் எங்கும் சமமாயும்

अकार्पण्यं அகார்பண்யம்=புமானென்னும் பெயருள்ள பிரம்மத்தை

वक्ष्यामि வக்ஷ்யாமி = சொல்லுகிறேன்

यथा யதா=எப்படி

समन्तत: ஸமந்தத: = நாலு பக்கங்களிலும்

जायमानं ஜாயமானம் = உண்டாகிறதாகத் தோன்றும்

किंचित् கிஞ்சித்=யாதொன்றும்

नजायते ந ஜாயதே=உண்டாகவில்லையோ

(तथा ததா=அந்தப் பிரகாரத்தை)

शृणु ஶ்ருணு=கேள்.

---

*எது வாக்கினால் கூறப்பட்டில்லையோ எதினால் வாக்கு பிரகாசிக்கிறதோ அதுவே பிரம்மம்; நீ பார்க்கிறது பிரம்ம மல்லவென்பதாய் (வாக்கு விஷயமாக்குவதே உபாஸனை.

ச-பா :—अतो...அதோ...:—பிறப்பில்லாததும், உள்ளும் வெளியிலுமிருக்கிற ஆத்மாவை அறிய சாமர்த்தியமில்லாதவன் அவித்தையால் ஆத்மாவை ஜீவனாக அறிகிறவனும் நான் பிறக்கிறேன், காரியப்பிரம்மத்தினிடத்தில் இருக்கிறேன் அதை உபாஸிக்கிறவனும் பிரம்மத்தை அறிகிறேன் என்று அறிந்து கிருபணனாக அதாவது அற்பபுத்தியுள்ளவனாக ஆகிறான். ஆகையால் கிருபணமற்ற வியாபகமானதும் உற்பத்தியற்றதுமாயிருக்கிற பிரம்மத்தைச் சொல்லுகிறேன். यत्रान्योऽन्यत्पश्यत्यन्यच्छृणोत्यन्यद्विजानाति तदल्पं मर्त्यमसद्वाचारंभणंविकारोनामधेयं யத்ராந்யோऽந்யத்பஶ்யத்யந்யச்ச்ருணோத்யந்யத்விஜாநாதி ததல்பம் மர்த்யமஸத்வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் முதலிய சுருதிகளில் எவன் எவ்விடத்தில் வேறு ஒன்றைப்பார்க்கிறானோ கேட்கிறானோ அறிகிறானோ அது அற்பம், நாசமுள்ளது, அசத்து வாக்கினால் சொல்லப்பட்டதெல்லாம் நாம மாத்திரமே. இந்த சுருதிகளால் முன் சொன்ன பிரம்மம் கிருபணபாவத்துக்கு ஆச்ரயமாயிருக்கிறது (அதாவது அதைத் தொழுதால் அற்ப புத்தி சித்திக்கிறது. பூமா என்கிற பிரம்மம் இப்படிப்பட்டதல்ல. எதை அறிந்தால் அவித்தையால் உண்டான சகல கார்ப்பண்யமும் நிவிர்த்தியாய் விடுகிறதோ அந்த அகார்ப்பண்யத்தைச் சொல்லுகிறேன்]

अजाति அஜாதி—அது உற்பத்தியற்றது

समतांगतं ஸமதாம் கதம் எங்கும் சமமாயிருக்கிறது. ஏனெனின், அவயவ வித்தியாசங்களில்லை. அவயவத்துடன் கூடினவஸ்து அவயவ பேதங்களை அடைந்து பிறக்கிறது என்று சொல்லப்படுகின்றது. இதுவோ அவயவமற்றதாகையால் சமமாயிருக்கிறது. எந்த அவயவத்தாலும் விசேஷமாய்ப் பிரகாசிக்கிறதில்லை. ஆகவே, அது ஜன்மமற்றது; கார்ப்பண்யமற்றது.

यथा न...யதா ந...—எப்படி ரஜ்ஜுவில் சர்ப்பம் பிராந்தியால் உண்டாகிறதோ, அப்படி சகலமும் அவித்தையாலுண்டான பிராந்தி திருஷ்டியால் உண்டாகிறதுபோல் காணப்படுகிறது. வாஸ்தவத்தில் எந்தப் பிரகாரமாக ஏதாவதும் ஜன்மத்தை அடையவில்லையோ, ஆனால் எல்லாம் சேதநாசேதந வஸ்துக்களால் பூர்ணமாயிருக்கிற கூடஸ்தமாகவே இருக்கிறதோ அந்தப் பிரகாரத்தைச் சொல்லுகிறேன், கேள் என்பது கருத்து. ॥ 81 ॥

आत्मा ह्याकाशवज्जीवैर्घटाकाशैरिवोदितः ।
घटादिवच्च संघातैर्जातावेतन्निदर्शनम् ॥ ८२ ॥

ஆத்மா ஹ்யாகாஶவஜ்ஜீவைர்கடாகாஶைரிவோதித꞉ ।
கடாதிவச்ச ஸங்காதைர்ஜாதாவேதந்நிதர்ஶநம் ॥ 82 ॥

आत्मा हि ஆத்மா ஹி=பரப்பிரம்மம்

आकाशवत् ஆகாஶவத்=ஸூக்ஷ்மமாயும் நிரவயவமாயும் ஸர்வகத மாயு மிருக்கிற ஆகாசம்போல் சொல்லப்பட்டிருக்கிறது.

घटाकाशैः इव கடாகாஶை: இவ=கடாகாசங்கள் போல்

जीवैः ஜீவை:=ஜீவர்கள்

उदितः உதித:=சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

घटादिवत् च கடாதிவச்ச=கடாதிகள்போல்

संघातैः ஸம்காதை:=சங்காதங்களும்

(उदितः உதித:=உண்டானதாக சொல்லப்பட்டிருக்கிறது,

जातौ ஜாதௌ ஆகையால் சிருஷ்டி விஷயத்தில்

एतत् ஏதத்=இது

निदर्शनम् நிதர்ஶநம்=திருஷ்டாந்தம்

ச-பா:—ஜன்ம மற்றதாயும் இருபமையாமற்றதாயு மிருக்கிற பிரம்மத்தைச் சொல்லுகிறேன் என்று பிரதிக்ஞை செய்யப்பட்டது. இது சித்திக்கும் பொருட்டு யுக்தியையும் திருஷ்டாந்தத்தையும் சொல்லுகிறேன் என்று சொல்லுகிறார்.

ஆத்மாவாகிற பிரம்மம் ஆகாசம்போல் சூக்ஷ்மமாயும் நிரவயவ மாயும் ஸர்வ வியாபியாயும் இருப்பதால் ஆகாசம்போல் சொல்லப் படுகின்றது. கடாகாசத்துக்குச் சமானமாக ஜீவர்கள் சொல்லப்படு கிறார்கள். அந்த ஜீவர்களே ஆகாச சதிர்சமான பரமாத்மா. (இது उदितः உதித:=என்னும் பதத்திற்குச் சொல்லப்பட்டது என்னும் அர்த்தத்தின்பேரில் ஏற்படுகின்றது. இனி உண்டாகிறது என் னும் அர்த்தத்தைக்கொண்டு சொல்லுகிறார்.)

அல்லது கடாகாசங்களால் எப்படி ஆகாசம் உண்டாகிறதோ அப்படி பரமாத்மா ஜீவாத்மாக்களால் உண்டாகிறார். அதாவது நாநாவித ஜீவர்களாகக் காணப்படுகிறார் என்பது கருத்து. ஜீவாத் மாக்கள் பரமாத்மாவினின்றும் உண்டானதாக வேதாந்தத்தில் சொல்லியதை மகாகாசத்தினின்றும் கடாகாசங்களுண்டானதற்குச் சமானமாக அறியவேண்டியதேதவிர வாஸ்தவமன்று என்பது கருத்து.

மேலும் ஆகாசத்தினின்றும் எல்லா கடங்களும் உண்டானது போல் பரப்பிரம்மத்தினின்றும் பிருதிவீ முதலிய சமஸ்தமான பூதங் களும் சரீர இந்திரியாதிகளும் ரஜ்ஜுவில் சர்ப்பம்போல் கேவலம் கற்பனையாக உண்டாகின்றன! மகாகாசத்தில் கடாகாசங்களும் கடங்களும் அடங்கியிருப்பதுபோல் பரமாத்மாவில் ஜீவர்களும் தேகாதிகளும் அடங்கியிருக்கின்றன. [மந்தபுத்தி யுள்ளவர்களின்

ஞானத்தின் பொருட்டு ஆத்மாவினின்றும் ஜீவர்கள் உண்டானதாக சுருதிசொல்லுகிறது. அதில் மகாகாசத்தினின்றும் கடங்களும் கடாகாசங்களும் உண்டானதுபோல் என்று அறியத்தக்கது. ஸ்ருஷ்டி விஷயத்தில் இதுவே த்ருஷ்டாந்தம். ॥82॥

घटादिषु प्रलीनेषु घटाकाशादयो यथा ।
आकाशे संप्रलीयन्ते तद्वज्जीवा इहात्मनि ॥ 83 ॥

கடாதிஷு ப்ரலீநேஷு கடாகாசாதயோ யதா ।
ஆகாசே ஸம்ப்ரலீயந்தே தத்வஜ்ஜீவா இஹாத்மநி ॥ 83 ॥

यथा யதா=எப்படி.
घटादिषु கடாதிஷு=கடாதிகள்
प्रलीनेषु ப்ரலீநேஷு=லயமானபோது
घटाकाशादयः கடாகாசாதய꞉=கடாகாசாதிகள்
आकाशे ஆகாசே=மஹாகாசத்தில்
सम्प्रलीयन्ते ஸம்ப்ரலீயந்தே= லயமடைந்து விடுகின்றனவோ
तद्वत् தத்வத்=அப்படி.
इह இஹ=இங்கு
आत्मनि ஆத்மநி=பரமாத்மாவில்
जीवः ஜீவ꞉=ஜீவன்
(प्रलीयते ப்ரலீயதே= லயமடைந்து விடுகிறான்.)

ஸ-பா :—கடாதிகளின் உற்பத்தியால் கடாகாசாதிகளின் உற்பத்தியும் கடாதிகளின் நாசத்தால் கடாகாசாதிகளின் நாசமும் உண்டாவதுபோல், தேகாதிகளின் உற்பத்தியால் ஜீவ உற்பத்தியையும் அவைகளின் நாசத்தால் ஜீவநாசமும் உண்டாகின்றன. ஜீவனுடைய உற்பத்தி நாசங்கள் உபாதியைப் பொருத்திருக்கின்றன. ஸ்வதஃ இவனுக்கில்லை. ஆகையால் உற்பத்தி சுருதியாலும் பிரளய சுருதியாலும் அத்வைதத்துக்கு விரோதமில்லை. ॥ 83 ॥

यथैकस्मिन्घटाकाशे रजोधूमादिभिर्युते ।
न सर्वे संप्रयुज्यन्ते तद्वज्जीवाः सुखादिभिः ॥ 84 ॥

யதைகஸ்மிந்கடாகாசே ரஜோதூமாதிபிர்யுதே ।
ந ஸர்வே ஸம்ப்ரயுஜ்யந்தே தத்வஜ்ஜீவா꞉ ஸுகாதிபி꞉ ॥84॥

यथा யதா=எப்படி.
एकस्मिन् ஏகஸ்மிந்=ஒன்றான
घटाकाशे கடாகாசே=கடாகாசம்
रजोधूमादिभिः ரஜோதூமாதிபி꞉= தூளி புகை முதலியவைக ளால்

युते யுதே=கூடினபோது

सर्वे ஸர்வே=சமஸ்த கடாகாசங்களும்

नसंप्रयुज्यन्ते ந ஸம்ப்ரயுஜ்யந்தே=அந்த தூளி புகை முதலிய வைகளுடன் சம்பந்தத்தை அடையவில்லையோ

तद्वत् தத்வத்=அப்படி

जीवा: ஜீவா:=ஜீவர்கள்

सुखादिभि: ஸுகாதிபி:=பிறருடைய சுகதுக்காதிகளால்

न संप्रयुज्यन्ते ந ஸம்ப்ரயுஜ்யந்தே=சம்பந்தப்படுகிறதில்லை.

ச-பா:—சகல தேகங்களிலும் ஒரே ஆத்மா இருந்தால் ஒருஜீவனுடைய ஜன்மமரண சுகதுக்காதிகள் சகல ஜீவர்களுக்கும் இருக்க வேண்டுமே. ஒருவன் கர்த்தாவாக இருந்தால் எல்லாரும் கர்த்தாவாக இருக்கவேண்டும். ஒருவன் பலபோக்தாவாக இருந்தால் எல்லாரும் அப்படியே யிருக்கவேண்டும். இப்படிச்சொல்லும் த்வைதவாதிக்கு உத்தரம் சொல்லப்படுகிறது. புகை முதலியவைகளால் ஒரு கடாகாசம் சம்பந்தப்படுவதால் எல்லா கடாகாசங்களும் சம்பந்தப்படாததுபோல் ஒரு ஜீவன் சுகதுக்காதிகளை அடைந்தனுல் சகல ஜீவர்களும் சுகாதிகளை அடைகிறதில்லை.

ஆக்ஷேபம்:—ஆத்மா ஒன்று என்று சொல்லுகிறாயோ?

சமாதானம்:—ஆம். ஆகாசம்போல் சர்வ சரீரங்களிலும் ஒன்று. ஆத்மா யிருக்கிறான் என்று சுருதியிற் சொல்லியதைக் கேட்கவில்லையோ?

ஆ:—சர்வசரீரங்களிலும் ஆத்மா ஒன்றுதான் என்று சொன்னுல் மேற்சொன்ன தோஷம் சம்பவிக்குமே.

ச:—இது சாங்கியனுடைய கேள்வியாக இருக்கவேண்டும். அப்படி அவன் கேட்டது சரியல்ல. ஏனெனின் அவன் ஆத்மாவினிடத்தில் சுகதுக்காதிகளை ஒப்புக்கொள்ளவில்லை. புத்தியினிடத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறான். ஆகவே, சுகதுக்கங்களின் வியவஸ்தையின் பொருட்டு ஆத்மபேதத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதில்லை. மேலும் ஞானஸ்வரூபமான ஆத்மாவுக்கு பேதம் கற்பிக்கிறதில் பிரமாணமில்லை.

ஆ:—ஆத்மாவுக்குப் பேதம் ஒப்புக்கொள்ளாதபக்ஷத்தில் ப்ரகிருதியானது ஒருவனுடைய போகார்த்தமாகவும், ஒருவனுடைய மோக்ஷார்த்தமாகவும் பிரவிர்த்தித்தல் ஒவ்வாது. அதற்காக பேதத்தை ஒப்புக்கொள்ளவேண்டும்.

ச:—நீ சொன்னது சரியன்று. ஏனெனின், பிரகிருதியால் உண்டுபண்ணப்பட்ட பந்த மோக்ஷங்கள் புருஷனிடத்தில் சம்பந்தப்படுகிறதில்லை. ஆத்மாவை நிர்விசேஷமாகவும் சேதனமாத்திரமாக

வும் சாங்கியன் ஒப்புக்கொண்டிருக்கிறான். ஆகையால் பிரகிருதியானது புருஷனுடைய பந்த மோக்ஷார்த்தமாக பிரவிர்த்திக்கவில்லை. மேலும், புருஷபேத கற்பனையில் வேறு பிரமாணமில்லை. புருஷனுடைய சத்தாமாத்திரத்தை நிமித்தமாக வைத்துக்கொண்டு பிரகிருதியானது தானே கட்டுப்படுகிறது, விடுபடுகிறது.

ஆ:— (யோகியின்):—பிரகிருதியானது ஈசுவரனால் பிரேரேபணை செய்யப்பட்டு பிரவிர்த்திக்கிறது.

ச:— அதுவும் சரியன்று. அந்த ஈசுவரனும் புருஷ விசேஷனாகையால் உதாஸீனனாக மாத்திரம் இருக்கிறான். ஆகவே, ஈசுவரன் பிரவர்த்தகனாகமாட்டான். புருஷபேத கற்பனையில் சாங்கியர்களுக்கு மூடத்தன்மை உண்டாகிறதும் தவிர வேதார்த்தத்தையும் அவர்கள் விட்டுவிடுகிறார்கள்.

ஆ:—(தார்க்கிகர்கள்) இச்சாதிகள் ஆத்மாவினிடத்தில் இருக்கின்றன.

ச:— இதுவும் சரியன்று, ஏனெனின், ஆத்மாவில் ஸ்மரணை உண்டாகிறது. அந்த ஸ்மரணைக்குக் காரணம் பாவனை என்னும் பெயருள்ள ஸம்ஸ்காரம். அது அவயவமற்ற ஆத்மாவில் சம்பந்தப்படமாட்டாது.

ஆ:— ஆத்மாவுக்கும் மனதிற்கும் உண்டான சேர்க்கையால் ஸ்மரணம் உண்டாகிறது.

ச:— அப்பொழுது ஸ்மரண நியமம் சம்பவிக்கமாட்டாது. அதாவது அநுபவகாலத்தில் ஸ்மரணை உண்டாகமாட்டாது என்கிற நியமம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அநுபவஞானத்துக்குக் காரணமான ஆத்மமனஸ் ஸம்யோகத்தினாலேயே ஸ்மரணம் உண்டாகும் பக்ஷத்தில் மேற்சொன்ன நியமம் சம்பவிக்கமாட்டாது. அல்லது ஒரே காலத்தில் அநேக ஸ்மரணங்கள் உண்டாகும். மேலும் சமான ஜாதிகளாகவும், ஸ்பர்சாதி குணமுள்ளவைகளாகவு மிருக்கிற மல்லர், ஆட்டுக்கடா முதலானவைகளிடத்தில் ஒன்றோடொன்று சம்பந்தம் காண்கிறோம். கடம், ஆத்மா, மனது இவைகள் அப்படிப்பட்டவையல்ல. ஆகவே ஆத்மாவுக்கும் மனதிற்கும் சம்பந்தம் சம்பவிக்கமாட்டாது.

ஆ:— விஜாதீயமான குணம் முதலியவைகளுக்கு திரவியத்தோடு சம்பந்தமிருக்கிறதுபோல் ஆத்மாவுக்கும் மனதுடன் சம்பந்தமிருக்கட்டுமே.

ச:— அது சரியன்று; ஏனெனின் திருஷ்டாந்தம் வாதிப்பிரதிவாதிகளுக்கு சம்மதமாக இருக்கவேண்டும். வேதாந்தியின் மதத்தில் திரவியத்தைவிட குணங்களாவது, கர்மம், சாமான்னியம், விசே

ஷம், சமவாயம் இவைகளெவ்வது வேறாக இல்லை. ஆகவே, இரண்டு வாதிகளுக்கும் சம்மதமான திருஷ்டாந்தம் சித்திக்கவில்லை.

ஆ:—திருவியத்தைவிட குணமுதலியவைகளும், ஆத்மாவைவிட இச்சை முதலியவைகளும் அத்தியந்தம் வேறுதான் என்று சொன்னால்

ச:—அப்போது ஹிமாசலத்தோடு விந்திய பர்வதத்துக்கும் போல, திருவியத்தோடு அவைகளுக்குச் சம்பந்தம் சித்திக்கமாட்டாது.

ஆ:—குணம் முதலியவைகள் திருவியத்தைவிட வேறாக இருந்தாலும் அயுதசித்தங்கள் அதாவது விட்டுப்பிரியாத பதார்த்தங்கள். அவைகளுக்குச் சமவாயம் என்னும் பெயருள்ள நித்தியமான சம்பந்தம் சித்திக்கிறது. அதில் யாதொரு விரோதமில்லை.

ச:—இது சரியன்று. பூர்வசித்தமாகவும் நித்தியமாகவும் இருக்கிற ஆத்மாவும் அநித்தியமான இச்சாதிகளும் அயுதசித்தங்களல்ல. இச்சாதிகள் ஆத்மாவுடன் அயுதசித்தங்களாகிறதில்லை என்று சொன்னால், அப்போது ஆத்மாவில் இருக்கிற பருத்தன்மைபோல் இச்சாதிகள் நித்தியமாய்விடும். அப்படி ஒப்புக்கொண்டால் ஆத்மாவுக்கு இச்சாதி பந்தங்களினின்றும் மோக்ஷம் சித்திக்கமாட்டாது. மேலும் சமவாயம் என்னும் சம்பந்தம் திரவியத்தைவிட வேறு. திரவியத்துக்கும் அந்த சமவாயத்துக்கும் திரவிய குணங்களுக்குப்போல் வேறு சம்பந்தம் சொல்லவேண்டும். அப்போது அவஸ்தை ஏற்படுகிறது. சமவாயமானது நித்திய சம்பந்தமானதால் அதற்கு வேறு சம்பந்தம் வேண்டாம் என்று சொன்னால் அப்போதும் சமவாய சம்பந்தத்தோடு கூடின வஸ்துக்கள் நித்திய சம்பந்தத்தோடு கூடியிருப்பதால் பேதம் சித்திக்கமாட்டாது. திரவிய குணாதிகளுக்கு அத்தியந்தபேதம் சொல்லும் பக்ஷத்தில் ஸம்யோகாதி கூடின திரவியத்துக்கும் ஸ்பர்சமன்றியிலிருக்கிற திரவியத்துக்கும் போல் திரவியகுணங்களுக்கு சம்பந்தம் ஏற்படாது. மேலும் உற்பத்தி விநாசமுள்ள இச்சை முதலிய குணங்கள் ஆத்மாவினிடத்திலிருக்கும் பக்ஷத்தில் தேகாதிகளுக்குப்போல் ஆத்மாவுக்கு அநித்யத்துவம் வரும். மேலும் அவயவத்தோடுகூடின தன்மையுடன் விகாரமும் தேகாதிகளுக்குப்போல் பரிகரிக்கமுடியாத தோஷங்கள் ஏற்படும். ஆகவே; இச்சாதிகள் ஆத்மகுணங்களல்ல.

ஆகாசம் புகை முதலியவைகளால் அழுக்கடைந்ததாகச் சொல்லப்படுவதுபோல், ஆத்மாவினிடத்தில் அஞ்ஞானத்தால் கற்பிக்கப்படும் புத்தி முதலிய உபாதியிலுண்டாகும் சுகதுக்காதி தோஷங்கள் இருக்கும்போது வியாவஹாரிகமானபந்த மோக்ஷங்கள் சம்பவிக்

கலாம்; அதில் யாதொரு விரோதமுமில்லை. சர்வவாதிகளும் வியவஹாரங்கள் அஞ்ஞானத்தால் கற்பிக்கப்பட்டனவென்றும் பரமார்த்தமல்லவென்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தார்க்கிகர்களால் கற்பிக்கப்பட்ட ஆத்மபேத கற்பனை வியர்த்தம். ॥84॥

रूपकार्यसमाख्याश्च भिद्यन्ते तत्रतत्रवै ।
आकाशस्य नभेदोऽस्ति तद्वज्जीवेषु निर्णयः ॥ 85 ॥

ரூபகார்ய ஸமாக்²யாஶ்ச பி⁴த்³யந்தே தத்ரதத்ரவை ।
ஆகாஶஸ்ய ந பே⁴தோ³ऽஸ்தி தத்³வஜ்ஜீவேஷு நிர்ணய꞉ ॥85॥

रूपकार्यसमाख्याः च ரூபகார்யஸமாக்²யா꞉ ச = ஒரே ஆகாசத்தில் கடாகாசம், சட்டி ஆகாசம் பானை ஆகாசம் முதலியவைகளின் சிறிய பெரிய ரூபங்கள், ஜலத்தைக்கொண்டு வருதல் தரித்தல் முதலிய காரியங்கள், கடாகாசம் சட்டி ஆகாசம் முதலிய உபாதிகளால் உண்டான நாமங்கள், இவைகள்.

तत्रतत्रैव தத்ரதத்ரைவ = ஒவ்வொரு வியவஹார விஷயத்திலும்

भिद्यते பி⁴த்³யதே = வெவ்வேறாகக் காணப்படுகிறது,
आकाशस्य ஆகாஶஸ்ய = ஆகாசத்துக்கு
भेदः பே⁴த³꞉ = பேதம்
न अस्ति ந அஸ்தி = இல்லை
तद्वत् தத்³வத் = அப்படியே
जीवेषु ஜீவேஷு = ஜீவர்களுக்குள்
निर्णयः நிர்ணய꞉ = நிச்சயம்.

தாத்: — ஆத்மாவுக்குக் கருதி விரோதமின்றியிருப்பதானாலும், கடம் மடம்போல் நாமம், காரியம் ரூபம் இவைகள் தனித் தனியே இருப்பதால் ஜீவர்கள் வாஸ்தவத்திலும் வேறாக இருக்கிறார்கள் என்று அனுமானத்தால் விரோதம் வருகிறபடியால் ஆத்மா ஒன்றேயாயினும் அவித்யாபேதத்தால் ஆத்மாக்கள் அநேகம் என்கிற வியவஹாரம் சம்பவிக்கலாம் என்று எப்படிச்சொல்லலாமெனின், உத்தரம் கூறுகிறார்.

ஒரே ஆகாசத்தில் கடாகாசம், மடாகாசம் முதலிய ரூபபேதங்கள், ஜலத்தைக் கொண்டுவருதல், மூடுதல் முதலிய காரியபேதங்கள், கடாகாசம், மடாகாசம் முதலிய நாமங்கள், இப்பேற்பட்ட பேதங்கள் இங்கும் அங்கும் எங்கும் காணப்படுகின்றன. ஆகாசத்தின் பேதங்களால் உண்டான வியவஹாரங்கள் வாஸ்தவங்களல்ல. வாஸ்தவத்தில் ஆகாசத்தில் யாதொரு பேதமுமில்லை. எப்படி ஆகாச திருஷ்டாந்தத்தில் வியவஹார பேதம் ஆகாச பேதத்தை

காண்பிக்காமல் உபாதி பேதங்களை மட்டும் குறிப்பிடுகிறதோ, அப்படி கடாகாசத்துக்குச் சமானமான ஜீவன் விஷயத்திலும், தேகாதி உபாதிகளால் பேதம் சம்பவிக்கிறதே தவிர, வாஸ்தவத்திலில்லையென்பது ஞானிகளின் நிர்மாணம். 85

नाऽऽकाशस्य घटाकाशो विकारावयवौ यथा ।
नैवात्मनः सदाजीवो विकारावयवौ तथा ॥ 86 ॥

நா஽஽காஶஸ்ய கடாகாஶோ விகாராவயவௌ யதா ।
நைவாத்மந꞉ ஸதாஜீவோ விகாராவயவௌ ததா ॥ 86 ॥

यथा யதா=எப்படி

घटाकाशः கடாகாஶ꞉=கடாகாசம்

आकाशस्य ஆகாஶஸ்ய=மஹாகாசத்தின்

न विकारावयवौ ந விகாராவயவௌ=விகாரமுமல்ல அவயவமுமல்லவோ

तथा ததா=அப்படி

जीवः ஜீவ꞉=ஜீவன்

आत्मनः ஆத்மந꞉=பரமாத்மாவின்

सदा न विकारावयवौ ஸதா நவிகாராவயவௌ எப்போதும் விகாரமுமல்ல அவயவமுமல்ல.

ச-பா:—கடாகாசாதி பேதத்தால் ஆகாசத்திலும் வாஸ்தவத்தில் பேதம் உண்டாகட்டுமே எனின் அது சரியன்று. ஏனெனில் தங்கத்திலிருந்து மோதிரம் போலும் ஜலத்திலிருந்து நுரை குமிழ் முதலியவைகள் போலும் கடாகாசம் மகாகாசத்தினின்றும் செய்யப்பட்டதல்ல. விருக்ஷத்துக்கு கொம்பு அவயவமாயிருப்பதுபோல் ஆகாசத்துக்கு கடாகாசம் அவயவமல்ல, ஆகையால் கடாகாசாதிகளின் பேத வியவஹாரங்கள் ஆகாசத்துக்கு ஏற்படவில்லை. இதுபோல் கடகாசஸ்தானத்திலிருக்கிற ஜீவனும் மகாகாசஸ்தானத்திலிருக்கிற பரமாத்மாவின் விகாரமுமல்ல, அவயவமுமல்ல. ஆகையால் அதாவது, அனுமானத்துக்கு இடமில்லாதபடியால் ஆத்மாக்கள் அநேகம் என்கிற வியவஹாரம் மித்யையே. 86 ॥

यथा भवति बालानां गगनं मलिनंमलैः ।
तथाभवत्यबुद्धानामात्माऽपि मलिनोमलैः ॥ 87 ॥

யதாபவதி பாலாநாம் ககநம் மலிநம்மலை꞉ ।
ததாபவத்யபுத்தாநாமாத்மாऽபி மலிநோமலை꞉ ॥ 87 ॥

बालानां பாலாநாம்=பாலர்களுக்கு

गगनं ககநம்=ஆகாசமானது

मलैः மலை: = தூளி முதலானதுகளால்
मलिनं மலிநம் = அழுக்கடைந்ததாக
यथा யதா = எப்படி
भवति பவதி = ஆகிறதோ
तथा ததா = அப்படி
अबुद्धानां அபுத்தாநாம் = அஞ்ஞானிகளுக்கும்
आत्मापि ஆத்மாபி = ஆத்மாவும்
मलैः மலை: = தோஷங்களால்
मलिनः மலிந: = மலினமாக
भवति பவதி = இருக்கிறது.

தா - ம்:—ஜீவன் பரப்பிரம்மத்தின் அம்சமுமல்ல வென்றும் விகாரமுமல்ல வென்றும், உபாதியில் பிரவேசித்தபிரம்மமே ஜீவ சப்த வாச்சியமென்று சித்தாந்தி சொல்லுவது யுக்தமல்ல. ஏனெனில், பிரம்மமயம் ஒன்றாயும் சுத்தமாயு மிருக்கிறது. ஜீவன் இராகாதி தோஷங்களோடு கூடியும், அநேகமாயு மிருக்கிறது. ஆகையால் ஜீவனும் பிரம்மமும் ஒன்றாகாது என்கிற சங்கைக்கு (வாஸ்தவத்தில் ஜீவனுக்கு யாதொரு தோஷமுமில்லை யென்று இந்த மந்திரத்தில் சொல்லுகிறார்.) கடாகாசம் என்கிற பேதயுக்தியால் ரூபாதிகளின் வியவஹாரம் உண்டாகிறது. இதுபோல் தேகாதி பேதயுக்தியால் ஜனனம் மரணம் முதலிய வியவஹாரங்களும், ராகாதிதோஷங்களும் சம்பவிக்கின்றன. பரமார்த்திகத்தில் பேதமுமில்லை தோஷமுமில்லை என்பதை திருஷ்டாந்தத்தால் காட்டுகிறார்:—லோகத்தில் அவிவேகிகளான பாலர்கள் ஆகாசத்தைப்பார்த்து அது மேகத்தாலும், தூளிகளாலும், புகைகளாலும் சம்பந்தப்பட்டு மலினமானதாக பாவிக்கிறார்கள். ஆனால் விவேகிகள் இவைகளுடன் ஆகாச சம்பந்தப்படுகிறதாக நினைக்கிறதேயில்லை. இதுபோல் சுத்தஞான ஸ்வரூபமான பரப்பிரம்மமும் அஞ்ஞானிகளுக்கு ராகாதிகளுடன் கூடினதாக காணப்படுகிறது. ஊஷரப்பிரதேசம் தாகமுள்ளவனுக்கு ஜலசகிதமாயிருப்பதாக பாவிக்கப்பட்ட போதிலும், எப்படி வாஸ்தவத்தில் அப்படியில்லையோ, அப்படி அஞ்ஞானிகள் ஆத்மாவிடத்தில ராகாதி மலங்களை ஆரோபித்தபோதிலும் ஆத்மா மலினமாகிறதில்லை. 87

मरणे संभवे चैव गत्यागमनयोरपि ।
स्थितौ सर्वशरीरेषु आकाशेनाविलक्षणः ॥ 88 ॥

மரணே ஸம்பவே சைவ கத்யாகமநயோரபி ।
ஸ்திதௌ ஸர்வசரீரேஷு ஆகாசேநாவிலக்ஷண: ॥ 88 ॥

मरणे மரணே=மரணத்திலும்

संभवेचैव ஸம்ப⁴வேசைவ=உற்பத்தியிலும்

गत्यागमनयोरपि க³த்யாக³மநயோரபி =போகுதல் வருதல் இவைகளிலும்

स्थितौ ஸ்தி²தௌ=இருப்பிலும்

सर्वशरीरेषु ஸர்வஶரீரேஷு=சர்வ சரீரங்களிலும்

(आत्मा ஆத்மா=ஆத்மா)

आकाशेनाविलक्षणः ஆகாஶேநாவிலக்ஷண꞉=ஆகாசத்துக்கு விலக்ஷணமாயில்லை.

தா-ம் :—ஜீவன் மரணத்துக்குப் பிறகு தர்மத்தை அனுசரித்து ஸ்வர்க்கத்துக்கும், அதர்மத்தை அனுசரித்து நரகத்துக்கும் போகிறான். புண்ணிய பாபயோகம் முடிந்தபின் மறுபடியும் பூலோகத்துக்கு வந்து ஜனிக்கிறான். போகம் உள்ள வரையில் பூமியிலிருந்து மறுபடியும் பரலோகத்துக்குப் போகிறான். இவ்விதமாய் இந்த லோகத்துக்கும் பரலோகத்துக்கும் ஜீவன் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கிறான் என்கிற வியவஹாரத்துக்கு அத்வைதம் விருத்தமாயிருக்கிறதே எனில் :—முந்தின மந்திரத்தில் சொல்லிய அர்த்தத்தையே விவரிக்கிறார். கடாகாசத்தின் ஜன்மம், மரணம், கமனம், ஆகமனம் ஸ்திதி இவைகள்போல் சர்வ சரீரங்களிலுமிருக்கிற ஆத்மாவின் ஜனனாதிகளும் ஆகாச விஷயத்தில் ஜனனாதிகள் எப்படி பிராந்தி மாத்திரமோ, அப்படி ஆத்மா விஷயத்திலும் ஜனனாதிகள் பிராந்தியே. ஆகாசத்துக்கும் ஆத்மாவுக்கும் விலக்ஷணத்வமில்லை. ॥ 88 ॥

संघाताः स्वप्नवत्सर्वे आत्ममायाविसर्जिताः ।
आधिक्येसर्वसाम्ये वा नोपपत्तिर्हि विद्यते ॥ 89 ॥

ஸங்கா⁴தா꞉ ஸ்வப்நவத்ஸர்வே ஆத்மமாயாவிஸர்ஜிதா꞉ ।
ஆதி⁴க்யே ஸர்வஸாம்யே வா நோபபத்திர்ஹி வித்³யதே ॥89

सर्वे ஸர்வே=சமஸ்தமான

संघाताः ஸங்கா⁴தா꞉=தேகாதி சங்காதங்களும்

स्वप्नवत् ஸ்வப்நவத்=ஸ்வப்நம் போல்

आत्ममायाविसर्जिताः ஆத்மமாயாவிஸர்ஜிதா꞉=ஆத்மாவின் மாயா பலத்தால் உண்டுபண்ணப்பட்டவைகள்

आधिक्ये ஆதி⁴க்யே=ஆதிக்கியத்திலாவது

सर्वसाम्ये वा ஸர்வஸாம்யே வா=எல்லாம் சமம் என்பதிலாவது

उत्पत्तिः உத்பத்தி:=யுக்தியானது
न विद्यते हि நவித்யதே ஹி=இருக்கவில்லை.

ச-பா :—கடஸ்தானங்களிலிருக்கிற சமஸ்தமான தேகாதி சங்காதங்களும் ஸ்வப்நத்திற் பார்க்கப்பட்ட தேகாதிகள் போலும், மாயாவி புருஷனால் உண்டுபண்ணப்பட்ட தேகாதிகள் போலும், ஆத்மாவின் மாயையால் உண்டாகின்றனவே தவிர வாஸ்தவத்தில் அவைகளிருக்கவில்லை.

தேவதைகள் உத்தமர்களாகையால் அவர்களின் சரீரங்கள் உத்தமமென்று அவிவேகிகளின் திருஷ்டியால் கற்பிக்கப்பட்டிருந்தாலும், சர்வ சரீரங்களும் பஞ்சபூத காரியங்களானதால் சமமென்று விவேகியின் திருஷ்டியால் கற்பிக்கப்பட்டிருந்தாலும், சரீரங்கள் சத்தியமென்று சொல்ல ஒருவித யுக்தியுமில்லை. ஆகையால் அவித்தையால் ஆத்மபேதம் காணப்படுகிறதே தவிர வாஸ்தவத்திலில்லை. ॥90॥

रसादयो हि ये कोशा व्याख्यातास्तैत्तिरीयके ।
तेषामात्मापरोजीवः खं यथासंप्रकाशितः ॥ 90 ॥

ரஸாதயோ ஹி யே கோஶா வ்யாக்யாதாஸ்தைத்திரீயகே ।
தேஷாமாத்மாபரோஜீவ: ஖ம் யதா ஸம்ப்ரகாஶித: ॥90॥

रसादयः ரஸாதய:=அன்ன(ரஸ) மய, முதலிய
ये யே=எந்த
कोशाः கோஶா:=கோசங்கள்
तैत्तिरीयके தைத்திரீயகே=தைத்திரீய உபநிஷத்தில்
व्याख्याताः வ்யாக்யாதா:=சொல்லப்பட்டிருக்கின்றனவோ
तेषां தேஷாம்=அவைகளுக்கு
परः பர:=பிரம்மரூபமான
आत्मा ஆத்மா=ஆத்மாவே
जीवः ஜீவ:=ஜீவன்
यथा யதா=எப்படி
खं ஖ம்=ஆகாசமோ
(तथा ததா=அப்படி.)
संप्रकाशितः ஸம்ப்ரகாஶித:=செவ்வையாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறான்.

தா-ம்:—ஆத்மா உற்பத்தி முதலியவையில்லாத அத்வைதரூபம் என்பதற்கு சுருதிப்பிரமாணம் கொடுக்கிறார். தைத்திரீய உபநிஷத்தில் அன்னமயம் பிராணமயம் முதலிய கோசங்கள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. உறையில் வைக்கப்பட்ட கத்திக்கு உறை

வெளிகோசமாயிருப்பதுபோல் பிராணமயகோசத்துக்கு அன்னமய கோசம் உறைபோல் வெளியாயிருக்கிறது. எல்லா கோசங்களுக்கும் உள் ஆத்மா இருக்கிறது, சகல கோசங்களும் ஜீவிக்க ஆத்மா காரணமாயிருக்கிறபடியால் ஆத்மாவே எல்லாவற்றிற்கும் ஜீவன். இந்த ஜீவன் சத்தியஞான அநந்த ரூபமாயின் பிரம்மமே ஸ்வரூபதார்த்தம், மாயாவின் சிருஷ்டி, இவைகள்போல் ஆத்மாவின் மாயாபலத்தால் அன்னமயாதி கோசங்கள் உண்டாகின்றன. முன் 3-வது மந்திரத்தில் இந்த ஆத்மா ஆகாச திருஷ்டாந்தத்தால் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தார்க்கிகளால் சொல்லப்பட்ட ஆத்மாவைப் போல் புருஷபுத்தியால் அறியத்தகுந்ததல்லவென்பது கருத்து. 90.

द्वयोर्द्वयोर्मधुज्ञाने परंब्रह्मप्रकाशितम् ।
पृथिव्यामुदरेचैव यथाऽऽकाशः प्रकाशितः ॥ 91 ॥

த்வயோர்த்வயோர்மதுஜ்ஞாநே பரம்ப்ரஹ்மப்ரகாஶிதம் ।
ப்ருதிவ்யாமுதரேசைவ யதாऽऽகாஶ: ப்ரகாஶித: ॥ 91 ॥

मधुज्ञाने மதுஜ்ஞாநே=மது பிராம்மணத்தில்
द्वयो:द्वयो: த்வயோ:த்வயோ:=இரண்டு இரண்டு ஸ்தானங்களில்
परंब्रह्म பரம்ப்ரஹ்ம=பரமமான பிரம்மம்
प्रकाशितम् ப்ரகாஶிதம்= பிரகாசமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

यथा யதா=எப்படி
पृथिव्यां ப்ருதிவ்யாம்=பூமியிலும்
उदरेच உதரேச=உதரத்திலும்
आकाशः एव ஆகாஶ:ஏவ=ஆகாசமே
प्रकाशितः ப்ரகாஶித:=(அப்படி) அனுமானத்தால் பிரகாசம் பண்ணப்பட்டிருக்கிறது.

ச-பா :—முந்தின மந்திரத்தில் தைத்தரீயத்தின் தாற்பரியம் சொல்லப்பட்டது. இப்போது பிரஹதாரணியத்தின் தாற்பரியம் கூறப்படுகின்றது. இந்த உபநிஷத்தில் மதுப்பிராமணத்தில் அதிதெய்வம் அத்தியாத்மம் என்று பிரிக்கப்பட்ட இரண்டு ஸ்தானங்களிருக்கின்றன. அதிதெய்வமாகிய பிருதிவி முதலியதும் அத்தியாத்மமாகிய சரீரத்திலும் ஜொதிர்மயனும் மரணமற்றவனும், பூர்ணனும் எந்த ஆத்மா இருக்கிறானே அவனே பிரம்மம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (பிரம்ம வித்தைக்குப்பெயர் மது அதாவது அமிருதம், பரமாநந்தத்துக்கு ஹேதுவாக இருப்பதால், அந்த மதுவைக்கூறும் கிரந்தம் மதுப்பிராமணம் எனப்படும். ॥ 91 ॥

जीवात्मनोरनन्यत्वमभेदेन प्रशस्यते ।
नानात्वं निन्द्यते यच्च तदेवं हि समञ्जसम् ॥ 92 ॥

ஜீவாத்மநோரநந்யத்வமபேதேந ப்ரஶஸ்யதே ।
நாநாத்வம் நிந்த்யதே யச்ச ததேவம் ஹி ஸமஞ்ஜஸம் ॥ 92 ॥

जीवात्मनोः ஜீவாத்மநோ: = ஜீவனுடையவும் ஆத்மாவினுடையவும்

अनन्यत्वं அநந்யத்வம் = ஒன்றாயிருத்தல்

अभेदेन அபேதேந = அபேதத்தால்

प्रशस्यते ப்ரஶஸ்யதே = ஸ்துதிக்கப்படுகிறது

नानात्वं நாநாத்வம் = நானாவாயிருத்தல்

निन्द्यते நிந்த்யதே = நிந்திக்கப்பட்டிருக்கிறது

यच्च யச்ச = என்கிறது யாதொன்று உண்டோ

तत् தத் = அது

एवं ஏவம் = இப்படியானால்

समञ्जसम् ஸமஞ்ஜஸம் = சயுக்திகமாயிருக்கிறது.

ச - பா:—சுருதி யுக்திகளால் நிச்சயிக்கப்பட்ட ஜீவப்பிரம்ம ஐக்கியம் வியாசர் முதலான ரிஷிகளாலும் சாஸ்திரத்தாலும் ஸ்துதிக்கப்பட்டிருக்கிறது. பிரபஞ்ச வியவஹாரத்தில் ஜீவர்கள் அநேகமாய்க் காணப்படுவதால் ஜீவர்கள் அநேகர் என்று சாஸ்திரவிருத்தமாய் குதார்க்கிகர்களால் கற்பிக்கப்பட்ட பேதஞானமானது.

(1) नतुतद्द्वितीयमस्ति (बृ-IV-3-23)
நதுதத்த்விதீயமஸ்தி (ப்ரு-IV-3-23)

(2) द्वितीयाद्वैभयमस्ति (बृ-I-4-2)
த்விதீயாத்வைபயமஸ்தி (ப்ரு-I-4-2)

(3) उदरमन्तरंकुरुते अथ तस्य भयंभवति
உதரமந்தரம்குருதே அத தஸ்ய பயம்பவதி

(4) इदं सर्वंयदयमात्मा
இதம் ஸர்வம்யதயமாத்மா

(5) मृत्योःसमृत्युमाप्नोति य इहनानेवपश्यति(कठ-II-1-10) ம்ருத்யோ: ஸம்ருத்யுமாப்நோதி ய இஹ நாநேவ பஶ்யதி (கட-II-1-10)

முதலிய சுருதி வாக்கியங்களாலும் இதர பிரம்ம ஞானிகளாலும் நிந்திக்கப்பட்டிருக்கிறது. வேதாந்த சித்தாந்தமே யுக்தி சகிதமாயிருக்கிறதே தவிர தார்க்கிகர்களுடைய கொள்கை அப்படியில்லை. என்பது கருத்து. 92.

जीवात्मनोः पृथक्त्वं यत्प्रागुत्पत्तेः प्रकीर्तितम् ।
भविष्यद्वृत्या गौणं तन्मुख्यत्वं हि न युज्यते ॥ 93 ॥
ஜீவாத்மநோ: ப்ருதக்த்வம் யத்ப்ராகுத்பத்தே: ப்ரகீர்திதம் ।
பவிஷ்யத்வ்ருத்யா கௌணம் தந்முக்யத்வம் ஹி நயுஜ்யதே ॥ 93

उत्पत्तेः प्राक् உத்பத்தே: ப்ராக்=உற்பத்திக்கு (சிருஷ்டிக்கு) முன்

यत् யத்=யாதொரு

जीवात्मनोः ஜீவாத்மநோ:=ஜீவாத்மாக்களின்

पृथक्त्वं ப்ருதக்த்வம்=பிரதக்பாவம்

प्रकीर्तितम् ப்ரகீர்திதம்=சொல்லப்பட்டதோ

तत् தத்=அது

भविष्यद्वृत्या பவிஷ்யத்வ்ருத்யா=மேல் ஏற்படுகிற விருத்தியால்

गौणं கௌணம்=முக்கியமல்லை

तन्मुख्यत्वं தந்முக்யத்வம்=அது முக்கியம் என்பது

न हि युज्यते நஹியுஜ்யதே=கூடாது

ச-பா :—சிருஷ்டிக்குமுன் என்பது சிருஷ்டியைப்பற்றி பிரஸ்தாபிக்கும் உபநிஷத் வாக்கியத்துக்கு முந்திய வாக்கியம் அதாவது கர்ம காண்டத்தில் என்று அர்த்தம். கர்ம காண்டத்தில் ஜீவன் ஆத்மா இவைகளின் பேதமும் ஞானகாண்டத்தில் இவைகளின் அபேதமும் சொல்லியிருப்பதால், ஞானகாண்டத்திற் சொல்லிய அபேதம் யுக்தமென்று எப்படிச் சொல்லலாம்.

(1) यतो वा इमानि भूतानि जायन्ते
யதோவா இமாநி பூதாநிஜாயந்தே

(2) यथाग्नेः क्षुद्रा विस्फुलिंगाः
யதாக்நே: க்ஷுத்ராவிஸ்புலிங்கா

(3) तस्माद्वा एतस्मादात्मन आकाशः संभूतः
தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாச: ஸம்பூத:

(4) तदैक्षत तत्तेजोऽसृजत
ததைக்ஷத தத்தேஜோஸ்ருஜத

முதலிய அபேதத்தைக்கூறும் உபநிஷத் வாக்கியங்களால் கர்ம காண்டத்திற் சொல்லிய பேதம் வாஸ்தவமல்ல, கௌணமே. மகாகாசத்துக்கும் கடாகாசத்துக்கு மிருக்கும் பேதம் போலும். இனி மேல் சாதம் ஆகப்போகிறதென்கிற உத்தேசத்தால் சாதம் சமைக்கிறுன் என்பதுபோலும். பேதத்தைக்கூறும் கர்மகாண்டத்தின் அர்த்தம் முக்கியமென்று சொன்னல் அஞ்ஞானிகளின் பேத ஞானத்தை அது அனுவதிக்கிறபடியால் முக்கியமாகமாட்டாது. உற்பத்தி

பிரளயங்களைக் கூறும் உபநிஷத் வாக்கியங்கள் லோகத்தால் அறியக் கூடாத அபேத ரூபமான அர்த்தத்தைச் சொல்லுகிறபடியாலும் तत्त्वमसि തത്ത്വമസി अन्योसावन्योहमस्मि അന്യോസാവന്യോഹമസ്മി नसवेद നസവേദ என்கிற சுருதிகளாலும் அந்த அபேதரூபமான அர்த்தம் முக்கியமே. ஆகையால் கர்ம காண்டத்திற் சொல்லிய பேதம் வாஸ்தவமல்லவென்பது கருத்து ॥ 93 ॥

मृल्लोहविस्फुलिंगाद्यैः सृष्टिर्या चोदिताऽन्यथा ।
उपायः सोऽवतारार्य नास्ति भेदः कथंचन ॥ 94 ॥

മൃല്ലോഹവിസ്ഫുലിംഗാദ്യൈഃ സൃഷ്ടിര്യാചോദിതാഽന്യഥാ
ഉപായസ്സോഽവതാരായ നാസ്തിഭേദഃകഥംചന ॥ 94 ॥

मृल्लोहविस्फुलिंगाद्यैः മൃല്ലോഹവിസ്ഫുലിംഗാദ്യൈഃ=மண், இரும்பு, பொறி முதலியவைகளாலும்

अन्यथा അന്യഥാ=வேறு பிரகாரத்திலும்

या യാ=யாதொரு

सृष्टिः സൃഷ്ടിഃ=சிருஷ்டியானது

चोदिता ചോദിതാ=சொல்லப்பட்டதோ

सः സഃ=அது

अवताराय അവതാരായ=பிரம்மத்தை அறியும்பொருட்டு

उपायः ഉപായഃ=உபாயம்

कथंचन കഥംചന=ஆகையால் கொஞ்சங்கூட

भेदः ഭേദഃ=பேதம்

नास्ति നാസ്തി=இல்லை.

ப - ரை :—சிருஷ்டிக்குமுன் எல்லாமொன்றா யிருந்தாலும் சிருஷ்டிக்குப்பின் பேதமிருக்கிறதே என்கிற ஆக்ஷேபம் சரியன்று. ஏனெனின் சிருஷ்டி வாக்கியங்களுக்கு அர்த்தம் வேறு. மஹாகாசம் கடாகாசம்போல் ஆத்மாவும் ஜீவர்களும் அபேதம் என்று முன்னமேயே நிரூபித்திருக்கிறோம். (ஆக்ஷேபம்) சிருஷ்டி சுருதிகள் ஸ்வப்ந மாயாதி சிருஷ்டிகள்போல் பொய்யான சிருஷ்டியைக் கூறுவதால் அதில் அவைகளுக்குத் தாற்பரியமில்லையென்று முன்னமேயே சொல்லியிருக்க திரும்பவும் இங்கு அதைச் சொல்வது வீண். (சமாதானம்) அவ்விடத்தில் சுருதிகளுக்கு சிருஷ்டியில் தாற்பரியமில்லை என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் ஐக்கியத்திற் தாற்பரியத்தைப் பிரதிபாதனம் பண்ணுவதற்காக திரும்பியும் சொல்லுவது வீணல்ல.

மண் முதலிய திருஷ்டாந்தங்களால் எந்த சிருஷ்டி சொல்லப் பட்டிருக்கிறதோ அது ஆத்மாவை அறியச் சாதகமாயிருக்கிறது.

பிராணனுக்கும் இந்திரியங்களுக்கும் நடந்த சம்வாதத்தில் பிராணனுடைய சிரேஷ்டத்தன்மையைச் சொல்லும்பொருட்டு தேவாசுர யுத்தம் முதலிய கதையை கற்பித்திருப்பதுபோல் ஜீவப்பிரம்ம ஐக்கிய ஞானம் உண்டாவதற்காக சிருஷ்டிகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆ:—பிராண சம்பவத்தில் வாக்காதிகளை தேவதைகளாகச் சொல்லியிருப்பதால் அந்தக்கதை வாஸ்தவமே. ஆனதால் நீ சொன்ன உதாரணம் சரியல்ல.

ச:—பிராண இந்திரிய சம்வாதத்தை வெவ்வேறு சாகைகளில் வெவ்வேறுவிதமாய்ச் சொல்லியிருப்பதால் ஒவ்வொரு இடத்திலும் தோன்றும் வெளிப்படையான அர்த்தமே வாஸ்தவமாகாது. அவைகளின் கருத்து மட்டும் ஒன்ருக இருக்கவேண்டும். மற்ற கற்பனைகளெல்லாம் அந்தக் கருத்தை அறியச் சாதகங்களாக இருக்கவேண்டும். ஆகையால் சிருஷ்டியைப்பற்றிச் சொல்லிய சுருதி வாக்கியங்களையும் அப்படியே அறியவேண்டியது. ஆத்மாவை அறிய அவைகள் சாதனங்களென்றே அறியத்தக்கது. சிருஷ்டி சுருதிகள் ஒன்றுக்கொன்று பேதமாயிருந்தாலும் கற்பபேதத்தாலாவது உபாசனு பேதத்தாலாவது தாற்பரியத்தைக் கற்பிப்பது பிசகு. கல்பத்துக்குக் கல்பம் சிருஷ்டி வேருக இருக்கிறதென்று தெரிந்து கொள்வதில் ஒரு பிரயோஜனமுமில்லை. அந்தப்படி உபாசனை செய்யச்சொல்லவுமில்லை. பிராணுதிகளுடைய கலகத்தை உபாசிக்கிறதினல் அனர்த்தமும் உண்டாகும். ஆகவே உற்பத்தி முதலியவைகளால் ஆத்மபேம் சித்திக்கமாட்டாது. ||94||

आश्रमास्त्रिविधा हीनमध्यमोत्कृष्टदृष्टयः ।
उपासनोपदिष्टेयं तदर्थमनुकम्पया ॥ 95 ॥

ஆஶ்ரமாஸ்த்ரிவிதா⁴ ஹீநமத்⁴யமோத்க்ருஷ்டத்³ருஷ்டய: ।
உபாஸநோபதி³ஷ்டேயம் தத³ர்த²மநுகம்பயா ॥ 95 ॥

हीनमध्यमोत्कृष्टदृष्टयः ஹீநமத்⁴யமோத்க்ருஷ்டத்³ருஷ்டய:=மந்த மத்தியம உத்தம திருஷ்டிகளுடன் கூடின
आश्रमाः ஆஶ்ரமா:= ஆசிரமிகள்
त्रिविधाः த்ரிவிதா⁴:= மூன்று விதங்கள்
तदर्थं தத³ர்த²ம்= மந்தமத்தியம திருஷ்டி உள்ளவர்களின் பொருட்டு
अनुकंपया அநுகம்பயா= கிருபையால்
इयं இயம்= இந்த
उपासना உபாஸநா= உபாசனை

उपदिष्टा உபதிஷ்டா = உபதேசிக்கப்பட்டது.

தா-ம் :...நித்திய சுத்த புத்த முக்த ஸ்வபாவமான பரப்பிரம்மமாகிற ஆத்மா சத் என்றும் மற்றவையெல்லாம் அசத் என்றும் சுருதியால் பிரதிபாதிக்கப்பட்டால், வேறு சில சுருதிகளால் ஆத்மா பார்க்கத்தக்கது, தியானிக்கத்தக்கது, உபாசிக்கத்தக்கது, இவ்விதமாய் ஏன் உபதேசம் செய்யவேண்டும்; ஏன் அக்கினி ஹோத்திர முதலான கர்மங்கள் செய்யவேண்டும்; இதற்கு சித்தாந்தி உத்தரம் சொல்லுகிறதாவது. மூன்றுவித ஆசிரமிகளிருக்கிறார்கள்.

(1) காரிய பிர்ம்மத்தைப் பார்க்கும் மந்தபுத்தி சாமர்த்தியத்துடன் கூடினவர்கள் (2) காரணப்பிர்ம்மத்தை பார்க்கும் மத்திய புத்தி சாமர்த்தியத்துடன் கூடினவர்கள் (3) அத்வைதத்தை பார்க்கும் உத்தமபுத்தி சாமர்த்தியத்துடன் கூடினவர்கள். இவைகளில் மந்த மத்திய புத்தி சாமர்த்தியத்துடன் கூடினவர்களின் பொருட்டு இவர்கள் சன்மார்க்கத்தில் செல்லும் பொருட்டு பரம தயாளுவான வேதம் உபாசனையையும் கர்மத்தையும் உபதேசிக்கிறது. வேதத்தால் செய்யப்படும் இந்த உபதேசம் "ஆத்மா ஒன்றே. அத்விதீயம்" என்கிற நிச்சயமுடைய உத்தம புத்தியுடன் கூடினவர்களுக்கு ஏற்படவில்லை. அவர்களுக்கு வர்ணாசிரம பேதங்களில்லாதபடியால் உபாசனையும் இல்லை கர்மமுமில்லை. ॥ 95 ॥

स्वसिद्धान्तव्यवस्थासु द्वैतिनो निश्चिता दृढम् ।
परस्परं विरुध्यन्ते तैरयं न विरुध्यते ॥ 96 ॥

𑌸𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌸𑍁 𑌦𑍍𑌵𑍈𑌤𑌿𑌨𑍋 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾 𑌦𑍃𑌢𑌮𑍍 ।
𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌂 𑌵𑌿𑌰𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍈𑌰𑌯𑌂 𑌨 𑌵𑌿𑌰𑍁𑌧𑍍𑌯𑌤𑍇 ॥ 96 ॥

द्वैतिनः 𑌦𑍍𑌵𑍈𑌤𑌿𑌨𑌃 = த்வைதிகள்

स्वसिद्धान्तव्यवस्थासु 𑌸𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌸𑍁 = தங்களுடைய சித்தாந்தங்களை ஸ்தாபிக்கிற விஷயங்களில்

दृढम् निश्चिताः 𑌦𑍃𑌢𑌮𑍍 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌃 = பலமான நிச்சயத்தை யுடையவர்களா யிருக்கிறார்கள்

परस्परं 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌂 = பரஸ்பரம்

विरुध्यन्ते 𑌵𑌿𑌰𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 = விரோதப்படுகிறார்கள்

अयं 𑌅𑌯𑌂 = இந்த அத்வைத பக்ஷமானது

तैः 𑌤𑍈𑌃 = அவர்களுடன்

न विरुध्यते 𑌨 𑌵𑌿𑌰𑍁𑌧𑍍𑌯𑌤𑍇 = விரோதப்படுகிறதில்லை

சாஸ்திரத்தாலும் யுக்தியாலும் நிச்சயமாய் அறியப்பட்ட ஆத்மஞானந்தான் சரியான ஞானம். சாஸ்திரத்துக்கும் யுக்திக்கும் விருத்தமாய் அறியப்பட்டது மித்தியா ஞானம். இத்துவைதம் மித்தை என்பதற்கு ஒரு காரணமுண்டு. கபிலர் (சாங்கியகர்த்தா)

கணாதர் (வைசேஷிக கர்த்தா) பௌத்தர் இவர்களாகிற த்வைதிகள் தாங்கள் தங்களுடைய சித்தாந்தங்களே சத்தியம் என்றும் மற்றவை அசத்தியமென்றும் பாவித்து தங்களுடைய சித்தாந்தத்தை ஒப்புக்கொள்ளாதவர்களிடம் கோபங்கொள்ளுகிறார்கள். இவர்களுக்குள்ளேயே பரஸ்பரம் விரோதங்களுண்டு. தங்களுக்கு விரோதியாயிருப்பவர்களை அவர்கள் வெறுக்கிறார்கள். சரீரத்தின் கை கால் முதலியவைகள் சரீரத்துக்கு விரோதமா யிராததுபோல், இந்த அத்வைதம் அவைகளுக்கு விருத்தமாயில்லை. இது எல்லாவற்றையும் அடக்கிக்கொள்ளுகிறது. இராகத்வேஷாதிகள் இல்லாதபடியால் அத்வைதமே சத்தியம். 196॥

अद्वैतं परमार्थो हि द्वैतं तद्भेद उच्यते ।
तेषामुभयथा द्वैतं तेनायं नविरुध्यते ॥ 97 ॥

அத்3வைதம் பரமார்த்தோ2 ஹி த்3வைதம் தத்3பே4த3 உச்யதே ।
தேஷாமுப4யதா2 த்3வைதம் தேநாயம் நவிருத்4யதே ॥97 ॥

अद्वैतं அத்3வைதம் = அத்வைதம்
परमार्थोहि பரமார்த்தோ2ஹி = பரமார்த்த சத்தியம்
द्वैतं த்3வைதம் = த்வைதம்
तद्भेदः தத்3பே4த3: = அத்வைதத்தின் காரியம் என்று
उच्यते உச்யதே = சொல்லப்படுகிறது
तेषां தேஷாம் = த்வைதிகளுக்கு
उभयथा உப4யதா2 = பாரமார்த்திகத்திலும் வியாவஹாரிகத்திலும்
द्वैतं த்3வைதம் = த்வைதமே
तेन தேந = அந்தக் காரணத்தால்
अयं அயம் = இந்த அத்வைதம்
नविरुध्यते நவிருத்4யதே = விருத்தப்படுகிறதில்லை.

தா-ம் :—அத்வைதம் எப்படி த்வைதத்துக்கு விருத்தமல்லவென்பது இப்போது சொல்லப்படுகிறது. அத்வைதமோ பாரமார்த்திகசத்தியம் த்வைதமோ அநேகம்; அத்வைதத்தின் காரியம். "ஒரே அத்விதீயம் இருந்தது, அதுதேஜஸை சிருஷ்டித்தது" இது முதலிய சுருதிகளாலும், சுஷுப்தி மூர்ச்சை சமாதி இவைகளில் த்வைதம் காணப்படாததினாலும், அத்வைதம் சித்திக்கிறது, ஆகையால் த்வைதம் காரியமாக சொல்லப்படுகிறது. த்வைதங்களின் சித்தாந்தத்தின்படி வியாவஹாரிகத்திலும் பரமார்த்திகத்திலும் த்வைதமே சத்தியம். த்வைதியை பிராந்தி திருஷ்டியை யுடையவர்கள். அத்வைதிகள் பிராந்திதிருஷ்டி யில்லாதவர்கள். ஆகையால் " இந்

திரன் மாயையால் வெகு ரூபங்களை அடைகிறான். இரண்டாவது இல்லை" இது முதலிய சுருதிகளால் அத்வைதம் த்வைதபாவனைக்கு விருத்தப்படுகிறதில்லை. திருஷ்டாந்தம்:—மதம்பிடித்த யானையின்பேரில் ஏறினவன் ஒருவன் பூமியிலிருந்து கொண்டே மதம்பிடித்தயானையின் பேரில் ஏறியிருப்பதாக நினைக்கிற பைத்தியக்காரன் ஒருவன். அவனைப்பார்த்து இவன் என்பேரில் யானையை செலுத்து என்று சொன்னதினால் அவன் செலுத்துகிறதில்லை. ஏனெனில், அவனுடைய புத்தி விருத்தமாயில்லை, அதாவது ஸ்வாதீனத்தி வில்லாமலில்லை. இதுபோல் அத்வைதியும் த்வைதியுடன் விருத்தப்படுகிறதில்லை. பரமார்த்தமான பிரம்ம சேதனமே த்வைதவாதிகளின் ஆத்மாவாயிருப்பதால் அத்வைத பக்ஷம் யாதொரு விரோதத்தையும் அடைகிறதில்லை. ॥ 97 ॥

मायया भिद्यते ह्येतन्नान्यथाऽजं कथंचन ।
तत्वतो भिद्यमाने हि मर्त्यताममृतं व्रजेत् ॥ 98 ॥

மாயயா பித்யதே ஹ்யேதந்நாந்யதாऽஜம் கதஞ்சந ।
தத்வதோ பித்யமாநே ஹி மர்த்யதாமம்ருதம் வ்ரஜேத் ॥ 98 ॥

एतत् ஏதத் = இந்த
अजं அஜம் = அத்வைதமானது
मायया மாயயா = மாயையால்
भिद्यते பித்யதே = பேதத்தை அடைகிறது
अन्यथाकथंचन அந்யதாகதஞ்சந = வேறொரு பிரகாரத்தாலும்
न ந = பேதத்தை அடைகிறதில்லை
तत्वत: தத்வத: = வாஸ்தவத்தில்
भिद्यमाने பித்யமாநே = பேதத்தை அடைந்தால்
अमृतं அம்ருதம் = மரணமற்ற அத்வைதமானது
मर्त्यतां மர்த்யதாம் = மரணதர்மத்தை
व्रजेत् வ்ரஜேத் = அடையும்.

தா - ம்—த்வைதம் அத்வைதத்தின் காரியமானால் த்வைதமும் அதின் காரணமான அத்வைதம்போல் சத்தியமாக இருக்கவேண்டுமே. இந்த ஆக்ஷேபத்துக்கு உத்தரம். மந்த திருஷ்டியுள்ளவன் கண்ணுக்கு ஒரே சந்திரன் அநேக சந்திரன்கள் போலும் ரஜ்ஜு சர்ப்பாதிகள் போலும் ஒரே அத்வைதம் மாயையால் பலவிதமாகத் தோன்றுகிறது. வாஸ்தவத்தில் ஆத்மாவுக்கு அவயவமில்லாதபடியால் பேதத்துக்கு இடமில்லை. மண் கடம் முதலிய பல ரூபங்களை அடைவதுபோல் எதற்கு அவயவம் உண்டோ அது தான் அவயவபேதத்தால் வெவ்வேறு பேதங்களை அடையக்கூடும். அவயவங்களில்லாமலும் ஜனனமில்லாமலு மிருக்கிற ஆத்மா எந்த

விதத்திலும் பேதத்தை அடையமாட்டாது என்பது கருத்து. தோற்றும் பேதங்கள் எல்லாம் மாயா பலத்தால்தான். ஆத்மாவிடத்தில் பேதம் சம்பவிக்குமானால் மரணதர்மமில்லாதது அதற்கு விருத்தமான மரணதர்மத்துடன் கூடினதாக ஆகும். இது அக்கினி சீதளமாயிற்று என்று சொல்லுவதற்கு சமமாயிருக்கும். ஸ்வபாவம் விபரீதபாவத்தை அடைவது எந்த பிரமாணத்துக்கும் பொருந்தாது. ஆகையால் ஜனனமில்லாமலும் நாசமில்லாமலுமிருக்கிற ஆத்ம தத்வம் மாயையால் பேதத்தை அடைகிறதே தவிர வாஸ்தவத்திலில்லை. த்வைதம் அசத்தியமே. ॥98॥

अजातस्यैव भावस्य जातिमिच्छन्तिवादिनः ।
अजातोह्यमृतोभावो मर्त्यतां कथमेष्यति ॥ 99 ॥

அஜாதஸ்யைவ பாவஸ்ய ஜாதிமிச்சந்திவாதிந꞉ ।
அஜாதோஹ்யம்ருதோபாவோ மர்த்யதாம் கதமேஷ்யதி ॥ 99 ॥

वादिनः வாதிந꞉=பிரம்மவாதிகள்
अजातस्य அஜாதஸ்ய=பிறப்பற்ற
भावस्यएव பாவஸ்யைவ=பதார்த்துக்கே, தத்துவத்துக்கே
जातिं ஜாதிம்=பிறப்பை
इच्छन्ति இச்சந்தி=இச்சித்துச் சொல்லுகிறார்கள்
अजातः அஜாத꞉=ஜனனமில்லாமலும்
अमृतः அம்ருத꞉=மரணமில்லாமலுமிருக்கிற
भावः பாவ꞉=தத்வம்
कथं கதம்=எப்படி
मर्त्यतां மர்த்யதாம்=மரணஸ்வபாவத்தை
एष्यति ஏஷ்யதி=அடையும்

தா-ம் :—உபநிஷத்துக்களை வியாக்கியானம் செய்திருக்கிற சில பிரம்மவாதிகளான உபாசகர்கள் வாஸ்தவத்தில் ஜனனமரண தர்மங்களற்றதான ஆத்மதத்வத்துக்கு, வாஸ்தவத்தில் உற்பத்தியிருப்பதாக பாவிக்கிறார்கள். ஜன்ம மரணமில்லாதது எப்படி மரணத்தை அடையக்கூடும். தன்ஸ்வபாவத்துக்கு விபரீதமான ஸ்வபாவத்தை ஒன்றும் ஒருக்காலத்திலும் அடையமாட்டாது. ॥ 99 ॥

न भवत्यमृतं मर्त्यं न मर्त्यममृतं तथा ।
प्रकृतेरन्यथाभावो नकथंचिद्भविष्यति ॥ 100 ॥

ந பவத்யம்ருதம் மர்த்யம் ந மர்த்யமம்ருதம் ததா ।
ப்ரக்ருதேரந்யதாபாவோ நகதஞ்சித்பவிஷ்யதி ॥ 100 ॥

अमृतं அம்ருதம்=மரணதர்மமில்லாதது
मर्त्यं மர்த்யம்=மரணதர்மமுள்ளதாக

नभवति நபவதி=ஆகிறதில்லை
तथा ததா=அப்படியே
मर्त्यं மர்த்யம்=மரண தர்மமுள்ளது
नअमृतं நாம்ருதம்=மரணமில்லாததாக ஆகிறதில்லை
प्रकृते: ப்ரக்ருதே:=ஸ்வபாவத்திற்கு
अन्यथाभाव: அந்யதாபாவ:=வேறுபாடும்
कथंचित् கதஞ்சித்=எவ்விதத்திலும்
नभविष्यति நபவிஷ்யதி=உண்டாகமாட்டாது.

ஈ-பா :—உலகத்தில் மரிக்கும்படி பிரகிருதி மரணத்தை அடைகிறதில்லை. அப்படியே மரிக்கும்படியானது மரிக்காமலிருக்கிறதில்லை. ஸ்வபாவம் விபரீதபாவத்தை அடைந்ததால் ஸ்வரூபமே நாசமாய் விடும். ஆகையால் அக்கினி சீதமாகாததுபோல் ஸ்வபாவம் வேறு விதமாக ஆகமாட்டாது. ॥ 100 ॥

स्वभावेनामृतो यस्य भावो गच्छतिमर्त्यतां ।
कृतकेनामृतस्तस्य कथं स्थास्यति निश्चल: ॥ 101 ॥

ஸ்வபாவேநாம்ருதோ யஸ்ய பாவோ கச்சதி மர்த்யதாம் ।
க்ருதகேநாம்ருதஸ்தஸ்ய கதம் ஸ்தாஸ்யதி நிச்சல: ॥ 101 ॥

यस्य யஸ்ய=எந்த வஸ்துவுக்கு
स्वभावेन ஸ்வபாவேந=ஸ்வபாவத்தில்
अमृत: அம்ருத:=மரணதர்மமில்லாத
भाव: பாவ:=பாவம்
मर्त्यतां மர்த்யதாம்=மரணதர்மத்தை
गच्छति கச்சதி=அடைகிறதோ
तस्य தஸ்ய=அந்த வஸ்துக்கு
अमृत: அம்ருத:=மரணதர்மமில்லாதது
कृतकेन க்ருதகேந=ஜனனம் செய்கையால்
कथं கதம்=எப்படி
निश्चल: நிச்சல:=சலனமில்லாததாக
स्थास्यति ஸ்தாஸ்யதி=இருக்கும்

தா-ம் :—பிரபஞ்சம் உற்பத்திக்குமுன் காரண ரூபத்தால் மரணதர்மமில்லாததாயிருந்தாலும், உற்பத்திக்குப் பிறகு காரிய ரூபமாய் மரண தர்மத்தை அடையக்கூடும். அப்போது ரூபபேதங்களை அடையக்கூடும். அப்போது முக்தனுக்கும் பிந்தினவைகளுக்கும் இருக்கவில்லையே என்று சொல்லப்படும் ஆக்ஷேபத்துக்கு உத்தரம் : ஸ்வபாவத்தில் மரணமில்லாதது ஜனிக்கிறது மூலமாக மரணத்தை

அடைகிறதாக சொல்லும் பக்ஷத்தில், உற்பத்திக்கு முன் பிரமாணமில்லாதது என்று சொல்லுவது வியர்த்தம். எதற்கு ஜனனமுண்டோ அது சலனமற்றது என்று எப்படி சொல்லக்கூடும். ஆத்மாவுக்கு உற்பத்தி உண்டென்று சொல்லுகிறவர்களின் மதத்தில் ஜனனமில்லாத வஸ்து யாதொன்றுமில்லை. எல்லாம் மரணதர்மத்துக்குள்பட்டது. ஆகையால் மோக்ஷத்துக்கே இடமில்லை. ॥ 101 ॥

भूततोऽभूततो वाऽपि सृज्यमाने समा श्रुतिः ।
निश्चितं युक्तियुक्तं च यत्तद्भवति नेतरम् ॥ 102 ॥

஭ூததோऽ஭ூததோ வாऽபி ஸ்ருஜ்யமாநே ஸமா ஶ்ருதி: ।
நிஶ்சிதம் யுக்தியுக்தஞ்ச யத்தத்பவதி நேதரம் ॥ 102 ॥

भूततः ஭ூதத:=வாஸ்தவத்திலாவது
अभूततःवाऽपि அ஭ூதத:வாऽபி=மாயையாலாவது
सृज्यमाने ஸ்ருஜ்யமாநே=ஸிருஷ்டிக்கத்தகுந்த வஸ்துவில்
श्रुतिः ஶ்ருதி:=சுருதியானது
समा ஸமா=ஒரேகருத்துள்ளதாயிருக்கிறது
निश्चितं நிஶ்சிதம்=சுருதியால் நிச்சயிக்கப்பட்டதாயும்
युक्तियुक्तञ्च யுக்தியுக்தஞ்ச=யுக்தியுடன் கூடினதாயும்
यत् யத்=எது இருக்கிறதோ
तत् தத்=அதுவே
भवति ஭வதி=சுருதியின் அர்த்தமாக இருக்கிறது
नेतरत् நேதரத்=வேறொன்றும் சுருதியின் அர்த்தமல்ல.

ச-பா:—ஆத்மகாரிய ரூபமாக உண்டாகாத பக்ஷத்தில் ஸிருஷ்டியைப் பிரதிபாதிக்கும் சுருதிகள் பிரமாணங்களாகமாட்டா வென்று நீ சொன்னது வாஸ்தவந்தான். ஆயினும் அதின் கருத்து வேறு என்பதை 94-வது மந்திரத்தில் முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ஆனல் இப்போது தாற்பரியார்த்தத்தைக் குறித்து ஸிருஷ்டி சுருதிகளிலிருக்கிற பதங்களுக்கு முக்கியார்த்தம் விரோதப்படுகிறதென்கிற சங்கைக்கு உத்தரம் இந்த மந்திரத்தில் சொல்லப்படுகிறது. வாஸ்தவத்திலாவது மாயையாலாவது ஸிருஷ்டிக்கப்பட்ட வஸ்துவில் சுருதிக்கு ஒருவித கருத்தேதவிர வேறில்லை. தாற்பரியத்தை உத்தேசித்து சுருதிகளுக்கு அர்த்தம் சொல்லும் பக்ஷத்தில் முக்கியார்த்தம் தவறிப்போய் விடுகிறது. இப்படி ஆக்ஷேபிப்பது சரியல்லவே எனின் லோகத்தில் சத்திய ஸிருஷ்டியே பிரஸித்தமாக இருக்கவில்லை. அப்படி பிரஸித்தமாக இருந்தாலும் அதைப் பிரதிபாதிக்கிறதில் பிரயோசனமுமில்லை. ஆகவேஸிருஷ்டியால் சுருதிக்குத்

தாற்பரியமில்லை. எல்லாம் அவித்யையால் உண்டாகிறதே தவிர सबाह्याभ्यन्तरो ह्यजः ஸபாஹ்யாப்யந்தரோ ஹ்யஜ: என்கிற சுருதிப்படி வாஸ்தவமல்ல. ஆகையால் சுருதியால் நிச்சயிக்கப்பட்டும் யுக்தியுடனும் ஏது இருக்கிறதோ அதுவே சுருதியின் அர்த்தமே தவிர மற்றதல்ல வென்பது கருத்து. ॥102॥

नेह नानेति चाम्नायादिन्द्रो मायाभिरित्यपि ।
अजायमानो बहुधा मायया जायते तु सः ॥ 103 ॥

நேஹ நாநேதி சாம்நாயாதிந்த்ரோ மாயாபிரித்யபி ।
அஜாயமாநோ பஹுதா மாயயா ஜாயதே து ஸ: ॥ 103 ॥

इह இஹ = இந்த ஆத்மாவில்
नाना நாநா = அநேகம்
नेति ந இதி = இல்லை என்று
अम्नायात् ஆம்நாயாத் = வேதத்தினாலும்
इन्द्रः இந்த்ர: = பரமேச்வரன்
मायाभिः इत्यपि மாயாபி: இத்யபி = மாயையால் என்கிற சுருதி வாக்யத்தாலும்
अजायमानः அஜாயமாந: = பிறவாததாயும் ஜநநமில்லாத
सः ஸ: = பரமேச்வரன்
मायया तु மாயயா து = மாயையினாலேயே
बहुधा பஹுதா = அநேக விதமாய்
जायते ஜாயதே = உண்டாகிறான்

தாத்பர்யம்:— சுருதியால் ஸ்ருஷ்டி ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லுகிறார். ஸ்ருஷ்டி வாஸ்தவமாயிருக்கும் பக்ஷத்தில், பேதங்கள் எல்லாம் ஸத்யமாயிருக்கவேண்டும். அவைகள் இல்லை என்று சொல்லும் [illegible] வேதவாக்யங்கள் ஏற்பட்டிருக்கக் கூடாது. ஆனால் "அநேக பின்னம்" என்கிற சுருதியைப்போல் த்வைதத்தைக் காட்டும் [illegible] அநேகமாயிருக்கின்றன. ப்ராணாதிகளைச் சொல்லும் [illegible] ஆத்மாவை அறியும் பொருட்டு ஸ்ருஷ்டி சொல்லப்பட்டிருக்கிறதே தவிர வாஸ்தவமல்ல. மேலும் இந்திரன் மாயையால் பலவிதமாய் உண்டாகிறான், வாஸ்தவமானது அத்வைதம் என்பதே ஸ்பஷ்டமாகிறது. மாயா சப்தமானது பிறத்தலையைக் குறிப்பதே தவிர வாஸ்தவத்தைக் குறிக்கவில்லை. ஆகவே, மாயையால் இந்திரன் பலவிதமாய்ப் பிறக்கிறான் என்று சொன்னது தாத்பர்யமே.

இந்த்ரியங்களால் காணப்படுகிற ஜகத்தெல்லாம் அவித்யா மயமானதை யால் மாயை என்று கூறப்பட்டிருக்கிறதும், ஆனதால் நீ சொ

ன்னது சரியல்ல மேலும் "ஜன்மமில்லாதது வெகு விதமாய் ஜனிக்கிறது." என்கிற சுருதியாலும் மாயையால்தான் உற்பத்தி என்பது நிச்சம். அக்கினிபாண்டத்தில் உஷ்ணத்வமும் சீதலத்வமும் பொருந்தாததுபோல், ஒரே ஆத்மாவினிடத்தில் ஜன்மமில்லாமையும், வெகு விதமான ஜன்மமும் பொருந்தா. ஆகையால் மாயையால் தான் ஜனனம் என்று செல்லுவது யுக்தமே. ஆத்மா ஒன்றுஎன்று அறிகிறவர்களுக்கு மோகமுமில்லை, துக்கமுமில்லை என்றும், த்வைதி மிருத்யுவை அடைகிறான் என்றும் வெகு சுருதிகளில் பலன் சொல்லப் பட்டிருக்கிறது. இப்படி சிருஷ்டி பேதம் நிந்திக்கப்படுகிறது. 1(3

संभूतेरपवादाच्च संभवः प्रतिषिध्यते ।
कोन्वेनं जनयेदिति कारणंप्रतिषिध्यते ॥ 104 ॥

ஸம்பூதேரபவாதாச்சஸம்பவ: ப்ரதிஷித்யதே ।
கொந்வேநம் ஜநயேதிதி காரணம் ப்ரதிஷித்யதே ॥ 104 ॥

संभूतेः ஸம்பூதே:=ஹிரணிய கர்ப்பனை
अपवादात्च அபவாதாச்ச=நிஷேதிக்கப்பட்டிருப்பதாலும்
संभवः ஸம்பவ:=காரியங்கள்
प्रति षिध्यते ப்ரதிஷித்யதே=பிரதிஷேதிக்கப்படுகின்றன
एनं ஏநம்=இந்த ஜீவனை
कः க:=எவன்
जनयेत् ஜநயேத்=உண்டு பண்ணுவான்
इति இதி=என்பதினால்
कारणं காரணம்=காரணம்
प्रतिषिध्यते ப்ரதிஷித்யதே=பிரதிஷேதிக்கப்படுகிறது ॥103॥

தா-ம் :—ஈசாவாசியத்தில் சம்பூதி அதாவது ஹிரணிய கர்ப்பத்தை உபாசிக்கிறவர்கள் காடாந்தகாரத்தை பிரவேசிக்கிறதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் சம்பூதி உபாசனை நிந்திக்கப்படுவதால் அதன் காரியமான சகலமும் நிஷேதிக்கப்பட்டதாக ஆகிறது. சம்பூதி வாஸ்தவத்திலிருந்தால் அது நிந்திக்கப்பட்டிருப்பதால் வாஸ்தவத்தில் அது இல்லை என்பது சித்தம். மேலும் அவித்தியாகாரியமான ஜீவன் அவித்தை நீங்கினவுடன் தன் ஸ்வபாவத்தைச் சேர்ந்து விடுகிறது. அவித்தையால் ரஜ்ஜுவினிடத்தில் சர்ப்பம் தோன்றுகிறது. ரச்சு அறியப்பட்ட மாத்திரத்தில் சர்ப்பம் நீங்கி விடுகிறது. இதை மறுபடியும் உண்டுபண்ணயாரால் முடியும். இது போல் ஜீவனை உண்டு பண்ண யாரால் முடியும். இந்த கேள்வியால் காரணமே யில்லை என்று ஊஹிக்கப்படுகிறது. ॥ 104 ॥

सएष नेति नेतीति व्याख्यातं निह्नुते यतः ।
सर्वमग्राह्यभावेन हेतुनाऽजं प्रकाशते ॥ 105 ॥

സഏഷ നേതി നേതീതി വ്യാഖ്യാതം നിഹ്നുതേ യതഃ ।
സർവമഗ്രാഹ്യഭാവേന ഹേതുനാഽജം പ്രകാശതേ ॥10॥

यतः யதः = யாதொரு காரணத்தால்

एषः ஸஏஷः = இந்த ஆத்மா

इति न इति न இதி நஇதி ந = இது அன்று இது அன்று

इति இதி = என்று

व्याख्यातं வ்யாக்யாதம் = விரித்து சொல்லப்பட்ட

सर्वं ஸர்வம் = எல்லாவற்றையும்

निह्नुते நிஹ்நுதே = நிஷேதிக்கிறதோ

अतः அதः = ஆனதால்

अग्राह्यभावेन हेतुना அக்ராஹ்யபாவேந ஹேதுநா = கிரகிக்க முடியாது என்கிற காரணத்தால்

अजं அஜம் = உற்பத்தியில்லாத பிரம்மம்

प्रकाशते ப்ரகாசதே = பிரகாசிக்கிறது.

ச - பா:—இப்போது சொல்லப்போகிற காரணத்தாலும் அவை தம் இல்லை என்று கூறுகிறார். சமஸ்த விசேஷங்களின் நிஷேதத்தால் பிரதிபாதிக்கப்படும் ஆத்மா பிரயாசத்தால் அறியத்தகுந்தது என்று எண்ணும் சுருதியானது, அந்தப் பிரம்மத்தை அறிய வேறு உபாயம் சொல்லவேண்டுமென்கிற இச்சையால் வியாக்கியானம் செய்ததையெல்லாம் நிஷேதிக்கிறது. நேதி நேதி என்கிற சுருதியானது ஆத்மாவை அதிருசியம் என்று காண்பித்து, உபாசியம் போல் திருசியமாக ஆய்விடும் என்கிற சங்கை உண்டாகாமல் நிஷேதிக்கிறது, உபாசியம் பிரம்மம்தான் திருசியமென்று தெரிந்துகொண்டவனுக்கு நித்தியசுத்தமாகிய ஆத்மதத்துவம் தானே பிரகாசிக்கிறது. ॥105॥

सतो हि मायया जन्म युज्यते नतुतत्वतः ।
तत्वतो जायते यस्य,जात तस्य हि जायते ॥ 106 ॥

സതോ ഹിമായയാ ജന്മ യുജ്യതേ നതു തത്വതഃ ।
തത്വതോ ജായതേ യസ്യ ജാതം തസ്യ ഹി ജായതേ ॥ 106 ॥

सतः हि ஸதः ஹி = சத்தான பரமாத்மாவுக்கு

जन्म ஜந்ம = ஜன்மம்

मायया மாயயா = மாயையால்

युज्यते யுஜ்யதே=கூடும்
तत्वतः தத்வத:=வாஸ்தவத்தில்
न तु நது=கூடாது
यस्य யஸ்ய=எவனுடைய மதத்தில்
तत्वतः தத்வத:=வாஸ்தவத்தில்
जायते ஜாயதே=ஜனிக்கிறதோ
तस्य தஸ்ய=அவனுடைய மதத்தில்
जातं ஜாதம்=ஜனித்ததானது
जायते ஜாயதே=மறுபடியும் ஜனிக்கும்

தா-ம்:—அநேக சுருதிகளால் ஆத்மதத்துவம் ஒன்றைத்தவிர வேறொன்றுமில்லையென்று நிச்சயிக்கப்பட்ட ஆத்மதத்துவத்தையே யுக்திபாலும் நிச்சயிக்கிறார். ஆத்மா அக்கிராஹ்யமானால் அஸத்தாயிருக்கக்கூடுமேயெனில் அது சரியன்று. ஆத்மாவின் காரியங்களை நாம் நன்றாய்ப் பார்க்கிறோம். ஒரு மாயாவியின் மாயா காரியங்களைப்பார்த்து அவைகளைச் செய்கிற மாயாவி ஒருவன் இருக்கவேண்டும் என்று நாம் ஊஹிக்கிறதுபோல் ப்ருத்வியாதிகளைப்பார்த்து அவைகளுக்கு அதிர்ஷ்டானமாய் சத்தியமானது ஒன்று இருக்கவேண்டும் என்று நாம் ஊஹிக்கலாம். ஒரு வித்தையாடி இருந்துதான் மாயையில் யானை முதலியவைகளைக் காட்டவேண்டும். இதுபோலவே மாயையால்தான் இந்தஜகத்துண்டாயிருக்கவேண்டும். இதற்கு யாதொரு காரணமுமிராது என்று சொல்லக்கூடாது காரணமன்றியில் யாதொன்றும் உண்டாகமாட்டாது. ஆத்மாவினிடத்தினின்றும் வாஸ்தவத்தில் யாதொன்றும் உண்டாகிறதில்லை. ரஜ்ஜு ஸர்ப்பாகாரத்தை தரிக்கிறதுபோல் சத்தே மாயையால் அநேக ரூபங்களை தரிக்கிறதுபோல் காணப்படுகிறது. வாஸ்தவத்தில் அது கிரஹிக்கக்கூடிய வஸ்துவல்ல மேலும் அஜன்மாவான ஆத்மா ஜனிக்கிறதாக சொல்லுவது பூர்வோத்திர விருத்தம். ஆத்மாவுக்கு ஜன்மம் இருக்கிறதாகச் சொல்லும் பக்ஷத்தில் மறுபடியும் ஜனிக்கிறதாகச் சொல்லவேண்டும். அப்போது அனவஸ்தா தோஷம் சம்பவிக்கும் ஆகையால் ஜனனமில்லாத ஆத்மதத்துவமே சித்தியாகிறது. ||106||

असतो मायया जन्म तत्वतो नैव युज्यते ।
वंध्यापुत्रो न तत्वेन मायया वाऽपि जायते ॥ 107 ॥

அஸதோ மாயயா ஜந்ம தத்வதோ நைவ யுஜ்யதே ।
வந்த்யாபுத்ரோ ந தத்வேந மாயயா வாऽபி ஜாயதே ॥107

असतः அஸத꞉ = அசத்தானதற்கு
मायया மாயயா = மாயையாலும்
तत्वतः தத்வத꞉ = வாஸ்தவத்திலும்
जन्म ஜந்ம = உற்பத்தி
नैवयुज्यते நைவயுஜ்யதே = கூடாது
वंध्यापुत्रः வந்த்யாபுத்ர꞉ = மலடிமகன்
तत्वेन தத்வேந = வாஸ்தவத்திலாவது
माययावापि மாயயா வாபி = மாயையாலாவது
नजायते நஜாயதே = பிறக்கிறதில்லை.

தா-ம்:—சிலர் சகலத்துக்கும் அசத்துத்தான் காரணம் என்று சொல்லுகிறார்கள். வாஸ்தவத்திலாவது மாயையாலாவது அசத்தினின்றும் சத் உண்டாகும் என்று காட்ட அவர்களால் முடியாது. மலடிமகன் என்பது பாவனையே தவிர வாஸ்தவத்தில் ஜனிக்கமாட்டான் மாயையாலும் உண்டாகமாட்டான், ஆகையால் இந்த அசத்வாதம் சுத்த பிசகு. ॥ 107 ॥

यथा स्वप्ने द्वयाभासं स्पन्दतेमाययामनः ।
तथाजाग्रद्द्वयाभासं स्पन्दतेमाययामनः ॥ 108 ॥

யதா ஸ்வப்நே த்வயாபாஸம் ஸ்பந்ததே மாயயா மந꞉ ।
ததா ஜாக்ரத் த்வயாபாஸம் ஸ்பந்ததே மாயயா மந꞉ ॥ 108 ॥

मनः மந꞉ = மனது
यथा யதா = எப்படி
स्वप्ने ஸ்வப்நே = சொப்பனத்தில்
मायया மாயயா = மாயையால்
द्वयाभासं த்வயாபாஸம் = த்வைதாபாஸ ரூபமாய்
स्पन्दते ஸ்பந்ததே = ஸ்புரிக்கிறதோ
तथा ததா = அப்படி
जाग्रत् ஜாக்ரத் = ஜாக்கிரத் காலத்தில்
मनः மந꞉ = மனது
मायया மாயயா = மாயையால்
द्वयाभासं த்வயாபாஸம் = கிராஹிய கிராஹகங்களாய்
स्पन्दते ஸ்பந்ததே = ஸ்புரிக்கிறது.

தா-ம்:—சத்வஸ்துவுக்கே மாயையால் உற்பத்தி உண்டாகும் என்பதைக் காட்டுகிறார். ரஜ்ஜுவினிடத்தில் கற்பிக்கப்பட்ட சர்ப்பம் ரஜ்ஜுரூபமாய்ப் பார்க்கப்படும்போது சத்தாகவே இருக்கிறதுபோல மனதும் ஞானத்தால் ஆத்மரூபமாய்ப் பார்க்கப்படும்போது

சத்தாகவே யிருக்கிறது. ஸ்வபாவத்தில் மனது ஒன்றுனாலும் கிரகிக்கப்பட்ட விஷயங்களாகவும் கிரகிக்கிறவனாயும் காணப்படுகிறது. இதுபோல் ஜாக்கிராவஸ்தையிலும் இதே காரணத்தால் மனது இரண்டுவிதமாக காணப்படுகிறது. ॥108॥

अद्वयंचद्वयाभासं मनः स्वप्ने नसंशयः ।
अद्वयंचद्वयाभासं तथाजाग्रन्नसंशयः ॥ 109 ॥

അദ്വയംചദ്വയാഭാസം മനഃസ്വപ്നേ നസംശയഃ ।
അദ്വയംചദ്വയാഭാസം തഥാജാഗ്രന്നസംശയഃ ॥ 109 ॥

अद्वयञ्च അദ്വയഞ്ച=அத்வயமான
मनः മനഃ=மனது
स्वप्ने സ്വപ്നേ=ஸ்வப்நத்தில்
द्वयाभासं ദ്വയാഭാസം=இரண்டு விதமாக காணப்படுகிறது
न संशयः നസംശയഃ=சந்தேகமில்லை
तथा തഥാ=அப்படியே
जाग्रत् ജാഗ്രത്=ஜாக்கிராவஸ்தையிலும்
मनः മനഃ=மனது
अद्वयञ्च അദ്വയഞ്ച=அத்வைதமானாலும்
द्वयाभासं ദ്വയാഭാസം=இரண்டு விதமாக காணப்படுகிறது
न संशयः നസംശയഃ=ஸந்தேகமில்லை

தாம்:—ஆனால் த்வைதம் ஸ்வீகரிக்கப்படுகிறதே வெனில் இல்லை என்று நிஷேதிக்கிறார். ரஜ்ஜு ரூபமாக சர்ப்பம் காணப்படுவதுபோல், வாஸ்தவத்தில் அத்வைத ஆத்ம ரூபாமாயிருக்கிற மனது ஸ்வப்நத்தில் அனேக ரூபங்களை தரிக்கிறது. ஸ்வப்நத்தில் பார்க்கப்பட்ட யானை முதலிய விஷயங்களும், அவைகளை அறியும் சக்ஷுராதிகளும் மனதைத்தவிர வேறல்ல வென்பதில் சந்தேகமில்லை. இதுபோல், ஜாக்கிராவஸ்தையிலும் அத்வைத ரூபமனதே அநேக ஆகாரங்களை தரிக்கிறது. இதில் யாதொரு சந்தேகமில்லை. பாரமார்த்திகமான ஞானமாத்திரமே எப்போதும் நிச்சயமாக இருக்கிறது. ॥ 109 ॥

मनोदृश्यमिदं द्वैतं यत्किंचित्सचराचरम् ।
मनसोह्यमनीभावे द्वैतंनैवोपलभ्यते ॥ 110 ॥

മനോദൃശ്യമിദം ദ്വൈതം യത്കിംചിത്സചരാചരമ് ।
മനസോഹ്യമനീഭാവേ ദ്വൈതംനൈവോപലഭ്യതേ ॥ 110

मनोदृश्यं 𑌮𑌨𑍋𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 = மனதால் பார்க்கக்கூடிய
यत् किंचित् 𑌯𑌤𑍍𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍 = யாதொரு
सचराचरम् 𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌂 = சராசர ஸஹிதமான
इदं 𑌇𑌦𑌂 = இந்த
द्वैतं 𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 = த்வைதம் உண்டோ
(सर्वं मन इति प्रतिज्ञा 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑌨 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾 = எல்லாம் மனது என்று பிரதிஜ்ஞை)
मनः 𑌮𑌨𑌃 = மனது
अमनीभावे 𑌅𑌮𑌨𑍀𑌭𑌾𑌵𑍇 = நிரோதமான வளவில்
द्वैतं 𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 = த்வைதம்
नैवोपलभ्यते 𑌨𑍈𑌵𑍋𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 = பார்க்கப்படுகிறதில்லை

ரஜ்ஜுவினிடத்தில் ஸர்ப்பம் கற்பிக்கப்படுவதுபோல் த்வைதமெல்லாம் மனதின் கற்பனையே என்பதற்குப் பிரமாணம் அன்வய வியதிரேகமான அனுமானத்தைச் சொல்லுகிறார். மனது இருக்கும்போது ஸ்தாவரஜங்கமாத்மகமான பிரபஞ்சமெல்லாம் பார்க்கப்படுகிறது. மனதில்லாதபோது ஒன்றும் பார்க்கப்படுகிறதில்லை; த்வைதமும் இருக்கிறதில்லை. ரஜ்ஜுவில் லயமடைந்த ஸர்ப்பம் பார்க்கப்படாததுபோல், விவேகத்தாலும் வைராக்கியத்தாலும் ஸமாதியிலும் ஸுஷுப்தியிலும் மனது நிரோதமடைந்தவுடன் த்வைதம் பார்க்கப்படாமல் போகிறது. ஸமாதி ஸுஷுப்திகளில் த்வைதம் இல்லாதபடியால் த்வைதம் அஸத் என்பது ஸித்தம். ॥ 110 ॥

आत्मसत्यानुबोधेन नसंकल्पयतेयदा ।
अमनस्तांतदायाति ग्राह्याभावेतदग्रहम् ॥ 111 ॥

𑌆𑌤𑍍𑌮𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑍁𑌬𑍋𑌧𑍇𑌨 𑌨𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍇 𑌯𑌦𑌾 ।
𑌅𑌮𑌨𑌸𑍍𑌤𑌾𑌂 𑌤𑌦𑌾𑌯𑌾𑌤𑌿 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑍇 𑌤𑌦𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥ 111 ॥

आत्मसत्यानुबोधेन 𑌆𑌤𑍍𑌮𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑍁𑌬𑍋𑌧𑍇𑌨 = மிருத்திகை போல் ஆத்மாவே ஸத்தியம் என்பதாய் சாஸ்திர ஆசாரிய உபதேசத்துக்குப் பிறகு யாதொரு அறிவுண்டாகிறதோ அந்த அறிவினால்.

यदा 𑌯𑌦𑌾 = எப்போது.
(मनः 𑌮𑌨𑌃 = மனது)
न संकल्पयते 𑌨 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍇 = ஸங்கற்பிக்க வில்லையோ
तदा 𑌤𑌦𑌾 = அப்போது காஷ்டம் முதலியவைகள் இல்லாததினால் அக்கினி ஜ்வலிக்காதது போல்

ग्राह्याभावे க்ராஹ்யாபாவே=கிரகிக்கப்படும் வஸ்துக்களில்லாவிடத்தில்

तदग्रहं தத்க்ரஹம்=கிரகிக்கும் கற்பனையுமற்ற மனது
अमनस्तां அமநஸ்தாம்=மனமில்லை என்கிற பாவத்தை
याति யாதி=அடைகிறது.

தாம் :—மனது எப்படி இல்லாமல் போகிறது என்பதைச் சொல்லுகிறார். ஆத்மதத்வம் அறிந்த மாத்திரத்தில் மனது யாதொன்றையும் சங்கற்பிக்கிறதில்லை. கிரகிக்கும்படியான விஷயங்களை உத்தேசித்து கிரகிக்கிற மனது ஏற்படுகிறது. விஷயங்களெல்லாம் போனால் கிரகிக்கும் மனதுதான் எப்படியிருக்கும். கட்டையில்லாவிட்டால் அக்கினி எப்படி ஜ்வலிக்கும்.

अकल्पकमजं ज्ञानं ज्ञेयाभिन्नं प्रचक्षते ।
ब्रह्म ज्ञेयमजं नित्यमजेनाजं विबुध्यते ॥ 112 ॥

அகல்பகமஜம்ஜ்ஞானம் ஜ்ஞேயாபிந்நம் ப்ரசக்ஷதே ।
ப்ரஹ்மஜ்ஞேயமஜம் நித்யமஜேநாஜம் விபுத்யதே ॥ 112 ॥

(ब्रह्मविदः ப்ரஹ்மவித:=பிர்ம்மவித்துக்கள்)
अकल्पकं அகல்பகம்=சர்வ கற்பனையற்றதாயும்
अजं அஜம்=ஜன்மரகிதமாயு மிருக்கிற
ज्ञानं ஜ்ஞானம்=சேதனமாத்திரத்தை
ज्ञेयाभिन्नं ஜ்ஞேயாபிந்நம்=பாரமார்த்திக சத்பிர்ம்ம ரூபமான ஞேயத்துக்கு அபின்னமாக
प्रचक्षते ப்ரசக்ஷதே=சொல்லுகிறார்கள்
ब्रह्म ப்ரஹ்ம=பிரம்மம்
ज्ञेयं ஜ்ஞேயம்=அறியத்தக்க வஸ்து
अजं அஜம்=பிறப்பில்லாதது
नित्यं நித்யம்=நித்தியமானது
अजेन அஜேந=ஜனனமில்லாத ஞானத்தால்
अजं அஜம்=ஜனனமில்லாத ஞேயத்தை அதாவது ஆத்மதத்வத்தை
विबुध्यते விபுத்யதே=அறிகிறான்.

மனது முதலிய த்வைதம் இல்லாதபக்ஷத்தில் எதனால் ஆத்மதத்வத்தை அறியக்கூடும் ? "சத்திய ஞானம் அநந்தம் பிரம்மம்" என்கிற சுருதிப்படி சகல கற்பனைகளுமற்றும், ஜனனமில்லா

மனுமிருக்கிற ஞானமே பாரமார்த்திக சத்தாகிய பிரம்மரூப ஞேயத்துக்கு அன்னியமன்றென்று பிரம்மவேத்தாக்கள் சொல்லுகிறார்கள். அக்கினியும் உஷ்ணமும் அபின்னமாயிருப்பதுபோல் ஞேயமான பிரம்மமும் ஞானமும் அபின்னம். சூரியன் தன்னை அறிவதற்கு வேறு பிரகாசத்தை அபேக்ஷிக்காததுபோல், பிரம்மம் தன்னை அறிவதற்கு ஞானாந்தரத்தை அபேக்ஷிக்கிறதில்லை. பிரம்மமே ஞானஸ்வரூபம்.

निगृहीतस्य मनसो निर्विकल्पस्य धीमतः ।
प्रचारः स तु विज्ञेयः सुषुप्तेऽन्यो न तत्समः ॥ 113 ॥

நிக்ருஹீதஸ்ய மனஸோ நிர்விகல்பஸ்ய தீமத꞉ ।
ப்ரசார꞉ ஸ து விஜ்ஞேய꞉ ஸுஷுப்தே(அ)ந்யோ ந தத்ஸம꞉ ॥ 113॥

निगृहीतस्य நிக்ருஹீதஸ்ய = நிக்ரகிக்கப்பட்டதாயும்
निर्विकल्पस्य நிர்விகல்பஸ்ய = கற்பனைகளற்றதாயுமிருக்கிற
धीमतः தீமத꞉ = விவேகியினுடைய
मनसः மனஸ꞉ = மனதின்
प्रचारः ப்ரசார꞉ = பிரசாரமென்பது
सः ஸ꞉ = அது
विज्ञेयः விஜ்ஞேய꞉ = அறியத்தக்கது
सुषुप्ते ஸுஷுப்தே = சுஷுப்தியிலிருக்கிற பிரசாரத்துக்கு
अन्यः அந்ய꞉ = இந்த மனதின் பிரசாரம் வேறு
न तत्समः ந தத்ஸம꞉ = அதற்குச் சமானமாயில்லை.

தாத்பர்யம் :— ஆத்மதத்வ விசாரம்பட்ட மாத்திரத்தில் சகல சங்கற்பங்களும் அற்றுப் போயின விஷயங்களில்லாமற் போய் கட்டையில்லாத நெருப்பைப்போல் மனதும் சாந்தமாய் அடங்கிப் போகிறது என்றும், அப்படிப் போனதால் த்வைதமும் இல்லாமற் போகிறதென்றும் சொல்லப்பட்டது. இப்படி சங்கற்பமற்றதாயும், அடங்கிப்போனதாயுமிருக்கிற மனதின் ஸ்திதி யோகாப்பியாஸிகளால் வெகு ஜாக்கிரதையாய் அறியத்தக்கது. சுஷுப்தியிலும் மனதின் விருத்திகளும் அடங்கியிருப்பதால் இந்த அவஸ்தைக்கும் சுஷுப்தி அவஸ்தைக்கும் வித்தியாஸமில்லையே யெனில் சுஷுப்தியில் துக்கபலத்துக்கு பீஜமான அவித்தையும் அநேக துக்க காரண பீஜங்களும் ஸூக்ஷ்மமாயடங்கியிருந்தாலும் நாசமாகாமலிருக்கின்றன. ஞானவஸ்தையிலோ சகல துக்க பீஜங்களும் நாசமடைந்து, ஞானஸ்வரூபத்திலேயே மனது லயமடைந்திருக்கிறது.

ஆகையால் ஞாநாவஸ்தையிலும் சுஷுப்தியிலும் மனதின் செயல் வெவ்வாறு யிருக்கிறதே தவிர சமமாயிருக்கவில்லை. ॥113॥

लीयते हि सुषुप्ते तन्निगृहीतं न लीयते ।
तदेव निर्भयं ब्रह्मज्ञानालोकं समन्ततः ॥ 114 ॥

லீயதே ஹி ஸுஷுப்தே தந்நிக்ருஹீதம் ந லீயதே ।
ததேவ நிர்பயம் ப்ரஹ்ம ஜ்ஞாநாலோகம் ஸமந்தத: ॥ 114 ॥

तत् தத் = மனது
सुषुप्ते ஸுஷுப்தே = சுஷுப்தியில்
लीयते हि லீயதே ஹி = அஞ்ஞானத்தில் லயமடைந்து விடுகிறது.
निगृहीतं நிக்ருஹீதம் = நிக்கிரகிக்கப்பட்ட மனது
न लीयते ந லீயதே = லயமடைகிறதில்லை
तदेव ததேவ = அந்த மனமே
निर्भयं நிர்பயம் = பயமற்ற
ब्रह्म ப்ரஹ்ம = பிரம்மம்
समन्ततः ஸமந்தத: = எங்கும்
ज्ञानालोकं ஜ்ஞாநாலோகம் = ஞானமாகிற பிரகாசஸ்வரூபம்.

தா - ம்:—சுஷுப்தியிலும் சமாதியிலும் மனதின் வித்தியாஸம் சொல்லப்பட்டது. அதற்குக் காரணமென்னவெனில், சுஷுப்தியில் மனது அஞ்ஞானமாகிற பீஜத்தில் அடங்கிப்போகிறது. சமாதியில் அஞ்ஞானத்தை மனது அடைகிறதில்லை. சமாதியில் மனதுக்கு விஷய பாவங்களில்லாதபடியால் பரபிரம்மத்தையே அடைகிறது. ஆகையால் மனது நிர்ப்பயமான பிரம்மமாயிருக்கிறது. ஏனெனில், பயத்துக்குக் காரணமானதொன்றுமில்லை. மேலும் எங்கும் ஏகரசமான ஸ்வரூபமாயிருக்கிறது. ॥114

अजमनिद्रमस्वप्नमनामकमरूपकम् ।
सकृद्विभातं सर्वज्ञं नोपचारः कथंचन ॥ 115 ॥

அஜமநித்ரமஸ்வப்நமநாமகமரூபகம் ।
ஸக்ருத்விபாதம் ஸர்வஜ்ஞம் நோபசார: கதஞ்சந ॥ 115 ॥

(ब्रह्म ப்ரஹ்ம = பிரம்மம்)
अज அஜம் = ஜன்மகாரணமில்லாதபடியால் அஜமாயிருக்கிறது
अनिद्रं அநித்ரம் = நித்திரையில்லாதது

अस्वप्नं அஸ்வப்நம் = ஸ்வப்நமில்லாதது
अनामकं அநாமகம் = நாமமில்லாதது
अरूपकं அரூபகம் = ரூபமில்லாதது
सकृत् विभातं ஸக்ருத்விபாதம் = எப்போதும் பிரகாசரூபம்
सर्वज्ञं ஸர்வஜ்ஞம் = ஸர்வஜ்ஞரூபமானது
कथंचन கதஞ்சந = எவ்விதப்பிரகாரத்திலும்
उपचारः न உபசார: ந = செய்ய வேண்டியது யாதொன்றுமில்லை.

தாத்பர்யம்:—பிரம்மத்தைவேறு விதமாய் நிரூபிக்கிறார். ரஜ்ஜுவில் சர்ப்பம் தோன்றுவதற்குக் காரணம் அவித்தை ஆகையால் அவித்தையாகிற பீஜத்தினின்றும் சர்ப்பம்ஜனிக்கிறதாக சொல்லுகிறோம். ஆத்ம தத்துவத்தை அறிந்த மாத்திரத்தில் அவித்தை நீங்கிப்போகிறது. இவ்விதமாய் ஜன்மத்துக்குக் காரணமாயிருக்கிற அவித்தையில்லாமலிருப்பதால் பிரம்மம் அஜன்மாவாயிருக்கிறது. அவித்யா ரூபமான மாயாநித்திரை யில்லாதபடியாலும் அத்வைத ஞானமாகிற விழிப்பிலேயே யிருப்பதாலும் பிரம்மம் நித்திரையற்றதாகச் சொல்லப்படுகிறது. அப்படியே ஸ்வப்நமற்றதாயுமிருக்கிறது. ரஜ்ஜுவை அறியாத காலத்தில் சர்ப்பத்தின் நாமரூபங்கள் விளங்குகின்றன. ரஜ்ஜுவை அறிந்த மாத்திரத்தில் இவைகள் நீங்கிப்போகின்றன. இதுபோல், பிரம்மத்தை அறிந்த மாத்திரத்தில் நாமரூபங்கள் அற்றுப்போவதால் பிரம்மம் நாமரூபமற்றதாயிருக்கிறது. அவித்தையாகிற அந்தகாரம் இல்லாதபடியால் பிரம்மம் எப்போதும் சர்வரூபமாயும் ஞானஸ்வரூபமாயும் இருக்கிறது. இப்படிப்பட்ட பிரம்மத்தை அறிய சமாதி முதலிய வியவஹாரங்கள் யாதொன்றும் வேண்டியதில்லை. அஞ்ஞானிகள் ஆத்மஸ்வரூபத்துக்கு வேறான சித்தைகாக்கிரியம் முதலியவைகளை அநுஷ்டிக்கிறார்கள். அவித்தை நீங்கின விடத்தில் செய்யவேண்டியது யாதொன்றுமில்லை. வியவஹாரங்கள் எல்லாம் அவித்யா தசையில் ஏற்படுகின்றன. ஞானம் ஜனித்த தசையில் ஒரு வியவஹாரத்துக்கும் இடமில்லை. ஆனால் அத்தசையில் காணப்படும் வியவஹாரங்கள் எல்லாம் ஆபாசரூபங்களே. 115

सर्वाभिलापविगतः सर्वचिन्तासमुत्थितः ।
सुप्रशान्तः सकृज्ज्योतिः समाधि रचलोऽभयः ॥ 116 ॥
സര്വാഭിലാപവിഗതഃ സര്വചിന്താസമുത്ഥിതഃ ।
സുപ്രശാന്തഃ സകൃജ്ജ്യോതിഃ സമാധിരചലോഽഭയഃ ॥ 116

सर्वाभिलापविगत: ஸர்வாபிலாபவிகத: = சமஸ்தமான வசனங்களும் அதீதமானது

सर्वचिन्तासमुत्थित: ஸர்வசிந்தாஸமுத்தித: = சிந்தனைகளினின்றும் வெளிப்பட்டது

सुप्रशान्त: ஸுப்ரசாந்த: = வெகுசாந்தமானது

सकृज्ज्योति: ஸக்ருஜ்ஜ்யோதி: = எப்போதும் பிரகாச ஸ்வரூபமானது

समाधि: ஸமாதி: = சமாதியால் அறியத்தகுந்தது

अचल: அசல: = கிரியாரஹிதம்

अभय: அபய: = பயமற்றது.

ச-பா :—நாமமற்றதாகச் சொன்ன விஷயம் இன்னும் தெளிவாக்கப்படுகின்றது. பிரம்மரூபவித்துவான்வாக்கு முதலிய சகல பாஹ்யகரணங்களில்லாதவன்; அப்பிராண: அமனா: என்கிற சுருதிப்படி அவன் அந்தக்கரணமில்லாதவன்; விஷயங்களில்லாதபடியால் எப்போதும் சாந்தமானவன். ஆத்ம சைதன்னிய ஸ்வரூபமாக இருப்பதால் எப்போதும் பிரகாசஸ்வரூபம். சமாதியிலுண்டான ஞானத்தால் அறியத்தகுந்ததாயிருப்பதால் சமாதிரூபம். அல்லது இந்த பிரம்மத்தினிடத்தில் ஜீவனும் அவனுடைய உபாதியுமிருப்பதால் அது சமாதி என்று சொல்லப்படுகின்றது. யாதொரு விகாரமுமில்லாதது. கிரியையில்லாதபடியால் பயமற்றது. ॥116॥

ग्रहोनतत्र नोत्सर्गश्चिन्ता यत्र न विद्यते ।
आत्मसंस्थं तदा ज्ञानमजाति समतांगतम् ॥ 117 ॥

க்ரஹோ ந தத்ர நோத்ஸர்க³ஸ்சிந்தா யத்ர ந வித்³யதே ।
ஆத்மஸம்ஸ்த²ம் ததா³ ஜ்ஞாநமஜாதி ஸமதாம் க³தம் ॥ 117 ॥

यत्र யத்ர = எந்த பிரம்மத்தினிடத்தில்

चिन्ता சிந்தா = யாதொரு சிந்தையும்

नविद्यते நவித்³யதே = இல்லையோ

तत्र தத்ர = அந்த பிரம்மத்தினிடத்தில்

ग्रह: க்³ரஹ: = கிரகணமும்

न ந = இல்லை

उत्सर्ग: உத்ஸர்க³: = உத்ஸர்ச்சனமும்

न ந = இல்லை

(यदा யதா³ = எப்போ)

आत्मसत्यानुबोधः ஆத்மஸத்யாநுபோத:= அப்படிப்பட்ட ஆத்மாவே சத்தியமென்று ஞானம் உண்டாகிறதோ

तदा ததா= அப்போது

आत्मसंस्थं ஆத்மஸம்ஸ்தம்= ஆத்மாவிலேயிருக்கிற

ज्ञानं ஜ்ஞாநம்= ஞானஸ்வரூபனாகவும்

अजाति அஜாதி= ஜன்ம மற்றவனாகவும்

समतांगतं ஸமதாம் கதம்= ஸமத்துவத்தை அடைந்தவனாகவும்

भवति பவதி= ஆகிவிடுகிறான்.

த-பா :—பிரம்மம் விகாரமற்றதாயும் நிரவயவமாயு மிருப்பதால் எடுத்துக்கொள்ளும்படியானது ஒன்றுமில்லை. கொடுத்துவிடும்படியானதும் ஒன்றுமில்லை. மனோ வியாபாரத்துக்கே இடமில்லை. ஏகாமையான ஞானமட்டு மிருக்கிறதே தவிர வேறாயாதொன்று மில்லை. எப்போது ஆத்மஞான முண்டாகிறதோ அப்போது விஷயமிராதபடியால் அக்கினியாயிருக்கிற உஷ்ணம் போல் ஆத்மாவிலேயே இருக்கிற ஞானஸ்வரூபனாகவும் ஜன்மமற்றவனாகவும் பரமசாமியத்தை அடைந்தவனாகவும் ஆகிறான் ஆத்மஞானமடைந்தவனுக்கு மற்ற எல்லாஞானமும் அற்பமாய் விடுகிறது. தத்துவஞானத்தை அறிந்தவன் கிருதகிருத்தியப் பிராமணனாய் விடுகிறான் என்பது கருத்து.

இந்த பிரகரணத்தில் முதலில் अतोवक्ष्यामि அதோவக்ஷ்யாமி= என்று சொன்னதை அனுசரித்து அந்த அர்த்தமே இப்போது சொல்லி முடிக்கப்பட்டது. ॥117॥

अस्पर्शयोगो वै नाम दुर्दर्शः सर्वयोगिभिः ।
योगिनो बिभ्यति ह्यस्मादभये भयदर्शिनः ॥ 118 ॥

அஸ்பர்சயோகோ வை நாம துர்தர்ச: ஸர்வயோகிபி: ।
யோகிநோ பிப்யதி ஹ்யஸ்மாதபயே பயதர்சிந: ॥ 118 ॥

अस्पर्शयोगो वै नाम அஸ்பர்சயோகோ வை நாம= வர்ணாசிரமாதி சம்பந்தமற்ற யோகமே பிரசித்தம்

सर्वयोगिभिः ஸர்வயோகிபி:= சகல யோகிகளாலும்

दुर्दर्शः துர்தர்ச:= வெகு வருத்தத்துடன் பார்க்கத்தகுந்தது.

अभये அபயே= பயமற்ற ஆத்மஞானத்தில்

भयदर्शिनः பயதர்சிந:= பயத்தைப்பார்க்கும்

योगिनः யோகிந:= யோகிகள்

अस्मात् அஸ்மாத்=மேற் சொன்ன ஆத்மஞானத்தி னின்றும்
बिभ्यति பிப்யதி=பயப்படுகிறார்கள்.

தா - ம்:—சச்சிதாநந்த ரூபமான பிரம்மம் தத்வஞானத்தால் அடையப்படு மானாலும் மூடர்கள் அதற்கு ஏற்பட்ட யோகத்தில் பிரவேசிக்கிறதில்லை. வர்ணாசிரமாதிகளின் தர்மா தர்மங்களாகிற மலசம்பந்த மன்றியில் கேவலம் பிரம்மமாகப் பாவித்துக் கொண்டிருக்கும் யோகமே உபநிஷத்தில் பிரசித்தமாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது. வேதாந்த ஞானமில்லாமல் கர்ம நிஷ்டையில் தத்பரர்களான யோகிகளால் சிரவண மனன நிதித்யாசன முதலிய சிரமத்தால் வருத்தத்துடன் இந்த பிரம்மம் அடையத்தக்கது. யாதொரு பயத்துக்கு மிடமில்லாமலிருக்க இப்படிப்பட்ட யோகிகள் இந்த யோகத்தால் தங்கள் ஸ்வரூபத்துக்கு ஹானிவருமென்று இந்த யோகத்தில் பிரவேசிக்க பின் வாங்குகிறார்கள். ஆகையால்தான் இவர்கள் பிரம்மத்தை அடைவது வெகு வருத்தமான விஷயம். ॥118॥

मनसोनिग्रहायत्त मभयं सर्वयोगिनाम् ।
दुःखक्षयः प्रबोधश्चाप्यक्षयाशान्तिरेवच ॥ 119 ॥
மநஸோநிக்ரஹாயத்த மபயம் ஸர்வயோகிநாம் ।
து:க்க்ஷய: ப்ரபோதஸ்சாப்யக்ஷயா ஶாந்திரேவச ॥ 119 ॥

सर्वयोगिनां ஸர்வயோகிநாம்=சகல யோகிகளுக்கும்
अभयं அபயம்=பயமில்லாமல் (தத்வஞானம்)
दुःखक्षयः து:க்க்ஷய: = துக்கநாசம்
प्रबोधश्च ப்ரபோதஸ்ச=ஞானம்
अक्षया அக்ஷயா=நாசமற்ற
शान्तिरेवच ஶாந்திரேவச=சாந்தி இவைகள்
मनसः மநஸ: = மனதில்
निग्रहायत्तं நிக்ரஹாயத்தம் = மனோநிக்கிரகத்தைப்பொருந்தனவாயிருக்கின்றன.

தா - ம்:—மனது முதலானதுகள் ரச்சுசர்ப்பம்போல் எவர்களுக்குகற்பிதமாகிறதோ நிஜத்தில் இல்லையோ அப்பேர்க்கொத்த பிரம்மஸ்வரூபத்தை அடைந்த உத்தம புருஷனுக்கு தத்வஞானமும் மோக்ஷமாகிய சாந்தியும் ஸ்வத: சித்தமாகின்றன. அப்படியில்லாத மந்த மத்தியம திருஷ்டியுள்ள யோகிகள் மனோ நிக்கிரகத்தால்தான் தத்வஞானம், துக்கநாசம், பரமசாந்தி, இவைகளை

அடையலாம். ஆத்மாவும் மனதும் வெவ்வேறு என்றும், மனது ஆத்மாவுடன் சம்பந்தப்பட்டதென்றும் இவர்கள் நினைப்பதால், இந்தமனதை அவர்கள் அடக்கினால்தான் சாந்தி முதலியவைகளை அவர்கள் அடையலாம். 119

उत्सेक उदधेर्यद्वत् कुशाग्रेणैकबिन्दुना ।
मनसो निग्रहस्तद्वद्भवेदपरिखेदतः ॥ 120 ॥

உத்ஸேக உததேர்யத்வத் குசாக்ரேணைகபிந்துநா ।
மநஸோ நிக்ரஹஸ்தத்வத் பவேதபரிகேதத: ॥ 120 ॥

कुशाग्रेण குசாக்ரேண = தர்ப்பைப் புல்லின் நுனியிலுள்ள
एकबिन्दुना ஏகபிந்துநா = ஒரு துளியால்
उदधेः உததே: = சமுத்திரத்தின்
उत्सेकः உத்ஸேக: = இறைத்தல்
यद्वत् யத்வத் = எப்படி சாத்தியமோ
तद्वत् தத்வத் = அப்படி
अपरिखेदतः அபரிகேதத: = சிரமத்தைப் பாராத விடாத முயற்சியால்
मनसः மநஸ: = மனதின்
निग्रहः நிக்ரஹ: = நிக்ரஹம்
भवेत् பவேத் = உண்டாகும்

தாத்ப: — மனதை எப்படி அடக்கமுடியும் என்றால் சொல்லுகிறார்: — ஒருவன் எப்படி தர்ப்பைப் புல்லின் நுனியால் சமுத்திர ஜலத்தை ஒவ்வொரு துளியாக எடுத்து சமுத்திரத்தை வற்றவைத்துவிடலாம் என்று நினைக்கிறது. இதுபோல பரபரப்பில்லாமல் சாவதானத்துடன் ஒரு விடாத முயற்சி எடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் மனதை நிச்சயமாய் அடக்கிவிடலாம். 120

उपायेन निगृह्णीयाद्विक्षिप्तं कामभोगयोः ।
सुप्रसन्नं लये चैव यथा कामो लयस्तथा ॥ 121 ॥

உபாயேந நிக்ருஹ்ணீயாத் விக்ஷிப்தம் காமபோகயோ: ।
ஸுப்ரஸந்நம் லயே சைவ யதா காமோ லயஸ்ததா ॥ 121 ॥

कामभोगयोः காமபோகயோ: = காமத்திலும் போகத்திலும்
विक्षिप्तं விக்ஷிப்தம் = விக்ஷேபத்தை அடைந்த
मनः மந: = மனதை
उपायेन உபாயேந = உபாயத்தால்

निगृह्णीयात् நிக்ருஹ்ணீயாத் = நிக்கிரகிக்கவேண்டும்
यथा யதா = எப்படி
कामः காம: = காமமோ
तथा ததா = அப்படி
लयः லய: = லயம்

தா-ம்:—மனதை அடக்கவிடாத முயற்சியேபோதாது. இனி சொல்லப்போகிற உபாயங்களாலும் காமபோகங்களில் விக்ஷேபத்தை அடைந்த மனதை திருப்பி ஆத்மாவிடத்திலேயே செல்லும்படிச் செய்யவேண்டியது. அப்படியே சுஷுப்தியாகிற நித்திரையில் லயமடைந்த மனது யாதொரு துக்கத்தை அறியாவிட்டாலும் அதை திருப்பி ஆத்மாவிடத்தில் செலுத்தவேண்டியது. எப்படி இச்சை அனர்த்த காரணமோ அப்படி நித்திரையும் அனர்த்தகாரணம். ஆகையால் காமத்தினின்றும் மனதை நிக்கிரகிக்கிறது போல் லயத்தில் நின்றும் மனதைத் திருப்பவேண்டியது யென்று அர்த்தம் ॥121॥

दुःखं सर्वमनुस्मृत्य कामभोगान्निवर्तयेत् ।
अजं सर्वमनुस्मृत्य जातंनैवतुपश्यति ॥ 122 ॥

துக்கம் ஸர்வமநுஸ்ம்ருத்ய காமபோகாந்நிவர்த்தயேத் ।
அஜம் ஸர்வமநுஸ்ம்ருத்ய ஜாதம் நைவ து பச்யதி ॥122॥

सर्वं ஸர்வம் = சமஸ்தமும்
दुःखं துக்கம் = துக்கம் என்று
अनुस्मृत्य அநுஸ்ம்ருத்ய = பாவித்து
कामभोगान् காமபோகாந் = இச்சாபோகத்தினின்றும்
निवर्तयेत् நிவர்த்தயேத் = மனதைத்திருப்பவேண்டும்
सर्वं ஸர்வம் = சமஸ்தமும்
अजं அஜம் = பிரம்மமென்று
अनुस्मृत्य அநுஸ்ம்ருத்ய = பாவித்து
जातं ஜாதம் = உண்டாயிருக்கும் சமஸ்த த்வைதத்தையும்
नैवतुपश्यति நைவ து பச்யதி = பார்க்கிறதில்லை.

தா-ம்:—மனதை நிக்கிரகம் செய்யும் உபாயம் என்னவெனில், ஞானப்பியாசமும் வைராக்கியமுமே என்கிறார். அவித்தையால் உண்டான சர்வத்வைதமும் துக்கமே என்றுபாவித்து விஷயங்களில் பற்றுதலடைந்த மனதை வைராக்கியத்தால் திருப்பவேண்டும். ஜனனமற்ற பிரம்ம ரூபமே சமஸ்தமும் என்று

சாஸ்திரத்தாலும் ஆசாரியருடைய உபதேசத்தால் தெரிந்துகொண்டவன் த்வைதத்தையே பார்க்கிறதில்லை. அது இல்லவேயில்லை. ॥122॥

लयेसंबोधयेच्चित्तं विक्षिप्तं शमयेत्पुनः ।
सकषायं विजानीयात्समप्राप्तं नचालयेत् ॥ 123 ॥

லயே ஸம்போதயேச்சித்தம் விக்ஷிப்தம் சமயேத்புந: ।
ஸகஷாயம் விஜாநீயாத்ஸமப்ராப்தம் நசாலயேத் ॥ 123 ॥

लये லயே = சுஷுப்தியில்
(लीने லீநே = லயமடைந்த)
चित्तं சித்தம் = மனதை
संबोधयेत् ஸம்போதயேத் = விழிப்பு மூட்டிவிட வேண்டியது.
पुनः புந: = மறுபடியும்
विक्षिप्तं விக்ஷிப்தம் = விக்ஷேபத்தை அடைந்த மனதை
शमयेत् சமயேத் = சாந்தமாகும்படிச் செய்யவேண்டும்.
सकषायं ஸகஷாயம் = கஷாய தோஷத்துடன் கூடினதாக
विजानीयात् விஜாநீயாத் = அறியத்தக்கது
समप्राप्तं ஸமப்ராப்தம் = சமானபாவத்தை அடைந்த மனதை
नचालयेत् நசாலயேத் = சலிக்கும்படிச் செய்யக்கூடாது.

தா - ம்:—ஞானாப்பியாஸம், வைராக்கியம் இந்த இரண்டு உபாயங்களால் சுஷுப்தியில் லயமடைந்த மனதை விவேகத்தால் ஆத்மாவை சேரும்படிச் செய்யவேண்டும். கர்ம யோகங்களில் மனது விக்ஷேபம் அடைந்திருந்தால் அதை சமனம் செய்து ஆத்மாவினிடத்தில் சேர்ப்பிக்கவேண்டும். இப்படி அடிக்கடி அப்பியாசம் செய்யும் யோகியின் சித்தம் சுஷுப்தியையும் அடையாமல் விஷயத்திலிருந்து திரும்பியும், சமான பாவத்தை எப்போது அடைகிறதில்லையோ அப்போது அது கஷாய தோஷத்துடன் கூடியிருப்பதாக அறியப்படுகிறது. இந்த மத்திமஸ்திதியில் அதை விடாமல் நிர்விகல்ப சமாதிக்கு அதைக் கொண்டுபோகவேண்டும். அந்த ஸ்திதியில் மனது சமபாவத்தை அடைந்தபிறகு மறுபடியும் அது விஷயத்தில் பிரவேசிக்கும்படி செய்யக்கூடாது.

नास्वादयेत्सुखंतत्र निःसगः प्रज्ञयाभवेत् ।
निश्चलं निश्चरच्चित्तमेकीकुर्यात्प्रयत्नतः ॥ 124 ॥

நாஸ்வாதயேத்ஸுகம் தத்ர நி:ஸங்க: ப்ரஜ்ஞயாபவேத் ।
நிச்சலம் நிச்சரச்சித்தமேகீகுர்யாத்ப்ரயத்நத: ॥ 124 ॥

सुखं ஸுகம்=சமாதி சுகத்தை
नास्वादयेत् நாஸ்வாதயேத்=ஆசைபடக்கூடாது
तत्र தத்ர=அந்த சுகத்தில்
प्रज्ञया ப்ரஜ்ஞயா=புத்தியுடன்
निःसंगः நிஸ்ஸங்கஃ=பற்றுதலன்றியில்
भवेत् பவேத்=இருக்கவேண்டும்
निश्चलं நிஶ்சலம்=நிச்சலஸ்வபாவத்தை யடைந்த
चित्तं சித்தம்=மனது
निश्चरत् நிஶ்சரத்=வெளியே விஷயத்தில் சஞ்சரித்தால்
प्रयत्नतः ப்ரயத்நதஃ=பிரயத்தினத்துடன்
एकीकुर्यात् ஏகீகுர்யாத்=ஒன்றுக்கவேண்டும்.

தா - ம்:—சமாதியில் அடையக்கூடிய சுகத்திற்கூட யோகி ஆசைவைக்கக் கூடாது. ஆனால் அந்த சுகமும் அவித்தியா கற்பிதமானதால் மித்தையே விவேக ஞானத்துடன் அதினின்றும் மனதைத் திருப்பவேண்டியது. அப்படித் திருப்பப்பட்டு ஒரு யிடத்தில் நிலை நிறுத்தப்பட்டும் மறுபடியும் மனது விஷயங்களில் பிரவேசித்தால், ஞானப்பியாசத்தில் முன் சொன்ன உபாயங்களால் அதை தகைத்து ஆத்மாவிடத்தில் திருப்பி ஆத்மாவுடன் ஒன்றுகும்படி செய்யவேண்டியது.

यदा न लीयते चित्तं न च विक्षिप्यते पुनः ।
अनिङ्गनमनाभासं निष्पन्नं ब्रह्म तत्तदा ॥ 125 ॥

யதா நலீயதே சித்தம் நச விக்ஷிப்யதே புநஃ ।
அநிங்கநமநாபாஸம் நிஷ்பந்நம் ப்ரஹ்ம தத்ததா ॥ 125 ॥

चित्तं சித்தம்=மனது
यदा யதா=எப்போது
नलीयते நலீயதே=சுஷுப்தியில் லயப்படவில்லையோ
पुनश्च புநஶ்ச=மறுபடியும்
नविक्षिप्यते நவிக்ஷிப்யதே=விக்ஷேபத்தை அடையவில்லையே ஆனால்,
अनिङ्गनं அநிங்கநம்=நிச்சலமாயும், அதாவது
अनाभासं அநாபாஸம்=கற்பித விஷயங்களால் பிரகாசிப்பிக்கப்படாமலும்
(यदाभवति யதாபவதி=எப்போது ஆகிறதோ)
तदा ததா=அப்போது

तत् தத்=அந்த சித்தம்

ब्रह्म निष्पन्नं ப்ரஹ்மநிஷ்பந்நம்=பிரம்மரூபமாகிறது.

தா-ம் :—நிரோதம் செய்யப்பட்ட மனது சுஷுப்தியில் லீனமாகாமலும், விஷயங்களில் பிரவிர்த்திக்காமலும் எப்போது இருக்கிறதோ, மேலும் காற்று யில்லாதவிடத்திலிருக்கும் தீபம் போல் எப்போது சித்தம் ஙாகாதிசனை காரணங்களில்லாமலும் இதர பதார்த்தங்களால் பிரகாசிக்கப்படாமல் எப்போது இருக்கிறதோ அப்போது தான் மனது பிரம்மரூபமாகிறது. ॥125॥

स्वस्थं शान्तं सनिर्वाणमकथ्यं सुखमुत्तमम् ।
अजमजेन ज्ञेयेन सर्वज्ञं परिचक्षते ॥ 126 ॥

ஸ்வஸ்தம் ஶாந்தம் ஸநிர்வாணமகத்யம் ஸுகமுத்தமம் ।
அஜமஜேந ஜ்ஞேயேந ஸர்வஜ்ஞம் பரிசக்ஷதே ॥ 126 ॥

(ब्रह्मविदः ப்ரஹ்மவித:=பிரம்மவேத்தாக்கள்)

उत्तमं உத்தமம்=உத்தமமான பாரமார்த்திக

सुखं ஸுகம்=சுகத்தை

स्वस्थं ஸ்வஸ்தம்=தன் ஸ்வரூபத்திலேயே யிருப்பதாயும்

शान्तं ஶாந்தம்=சகல அநர்த்த நிவிர்த்தி ரூபமாயும்

सनिर्वाणं ஸநிர்வாணம்=மோக்ஷத்துடன் கூடியிருப்பதாயும்

अकथ्यं அகத்யம்=சொல்ல முடியாததாயும்

अजं அஜம்=விஷயங்கள் ஜனிக்கிறது போல ஜனிக்காமலும்

अजेन அஜேந=உற்பத்தியற்ற

ज्ञेयेन ஜ்ஞேயேந=ஜ்ஞேயவஸ்துவுடன்

(अभिन्नं அபிந்நம்=ஒன்றாயிருக்கிற)

सर्वज्ञं ஸர்வஜ்ஞம்=ஸர்வஜ்ஞனை பிரம்மமாக

परिचक्षते பரிசக்ஷதே=சொல்லுகிறார்கள்.

ச-ப :—அசம்பிரஜ்ஞாத சமாதியில் எந்தரூபமாக சித்தமாகிறதோ அந்த பிரம்ம ஸ்வரூபத்தை விளங்கும்படிச் சொல்லுகிறார். மேற்சொன்ன பாரமார்த்திகசுகமான ஆத்மஞானம் தன்னிடத்தில் இருக்கிறதாகவும் அநேகசகல அநர்த்த மற்றதாகவும் கைவல்யத்துடன் கூடினதாகவும், சொல்ல முடியாததாகவும், உத்தம சுகமாகவும், யோகிகளுக்கு மாத்திரம் பிரத்தியக்ஷமாகவும் விஷயசுகத்தாலுண்டாகிற ஞானம்போலிராமல் உற்பத்தி யற்றதாயும் ஜ்ஞேயவஸ்துவுக்கு வேறாகாமலும், எல்லாவற்றையும் அறிந்ததாயும் இருக்கிற பிரம்மமே சுகம் என்று பிரம்மஞானிகள் சொல்லுகிறார்கள். ॥126॥

न कश्चिज्जायते जीवः संभवोऽस्य न विद्यते ।
एतत्तदुत्तमं सत्यं यत्र किंचिन्नजायते ॥ 127 ॥
इति गौडपादीय कारिकायामद्वैताख्यम्
तृतीयप्रकरणम् ॥ ओंतत्सत् ॥

ந கஶ்சிஜ்ஜாயதே ஜீவ: ஸம்பவோऽஸ்ய நவித்யதே ।
ஏதத்தது³த்தமம் ஸத்யம் யத்ர கிஞ்சிந்நஜாயதே ॥ 127 ॥
இதி கௌடபாதீயகாரிகாயா மத்வைதாக்யம்
த்ருதீயம்ப்ரகரணம் ॥ ஓம்தத்ஸத் ॥

कश्चित् கஶ்சித் = யாதொரு
जीवः ஜீவ: = ஜீவனும்
न जायते நஜாயதே = உண்டாகிறதில்லை
अस्य அஸ்ய = இந்த ஜீவனுக்கு
संभवः ஸம்பவ: = காரணம்
न विद्यते நவித்யதே = இருக்கவில்லை
यत्रकिंचिन्नजायते யத்ரகிஞ்சிந்நஜாயதே = எந்த பிரம்மத்தினிடத்தில் யாதொன்றும் உண்டாகிறதில்லையோ
एतत् ஏதத் = அந்த பிரம்மமானது
उत्तमम् உத்தமம் = உத்தமமான
सत्यं ஸத்யம் = சத்தியமாக இருக்கிறது.

தா - ம்:—மனதின் நிக்கிரகம் முதலிய உபாயங்கள், மண், தங்கம் முதலியவைகள் போல் சிருஷ்டி, உபாசனை, இவைகள் எல்லாம் பாரமார்த்திக ஸ்வரூபத்தை அடைய உபாயங்களே தவிர வாஸ்தவமல்லவென்று பிரஸ்தாபிக்கப்படுகின்றன. பாரமார்த்திகத்தில் அவைகள் சத்தியமல்ல. பாரமார்த்திகத்தில் கர்த்தா போக்தாரூபமான எந்த ஜீவனும் எந்த விதத்திலும் உற்பத்தியாகிறதில்லை. ஆகையால் ஸ்வபாவத்திலேயே ஜனனமில்லாத ஆத்மாவுக்குக் காரணமில்லை. காரணமில்லாததினால்தான் ஜீவன் காரியமன்று. எந்த பிரம்மத்தினிடமிருந்து அணுமாத்திரமும் உண்டாகிறதில்லையோ அந்த பிரம்மமானது இதற்கு முன்சொன்ன வியாவஹாரிக சத்தியமான உபாயங்களுக்குள் உத்தமமான சத்தியம்.

உபாயங்கள் சத்தியமானால் அத்வைதத்துக்கு ஹானி வருமே, சத்தியமாகாவிட்டால் அவைகள் உபயோகப் படமாட்டாதே என்று ஆசங்கித்து இந்த கடைசிமந்திரம் சொல்லப்பட்டது. ॥129॥

அத்வைத பிரகரணம் முற்றிற்று.

|| हरिः ओं ||

|| ஹரி: ஓம் ||

अथ गौडपादीयकारिकायाः

अलातशान्त्याख्यं चतुर्थप्रकरणम् ||

அத கௌடபாதீய காரிகாயா:

அலாதசாந்த்யாக்யம் சதுர்த்தப்ரகரணம் ||

ओं || ज्ञानेनाऽऽकाशकल्पेन धर्मान्यो गगनोपमान् |
ज्ञेयाभिन्नेन संबुद्धस्तं वन्दे द्विपदांवरम् || 128 ||

